தேவாரத் திரட்டு

Q23:417x
.No6
118936

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

அகத்தியமகாமுனிவர்

திரட்டியருளிய

# தேவாரத்திரட்டு

மூலமும்,

மகாவித்வான்

கா. இராமஸ்வாமி நாயுடு அவர்கள்

இயற்றிய

உரையும்.

இவை

சைவசமயாசாரியர்களாகிய

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர்,

சுந்தரமூர்த்திகள்

இம்மூவர் சரித்திரத்துடனும்,

கால நிர்ணயத்துடனும்,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

1906

[Copyright Registered.]

விலை அணா 12.

MADRAS

Q23:417x
N06

118936

894.811
180

# உ ள் ளு றை.

| தொகை. | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1. | அகத்தியர்தேவாரத்திரட்டின் விஷய அட்டவணை ... ... ... | ... |
| 2. | அகத்தியர் தேவாரத்திரட்டின் குசிபத்திரம் ... ... ... | ... |
| 3. | திருஞானசம்பந்தசுவாமிகள் சரித்திரம்... | க-கச |
| 4. | திருநாவுக்கரசுசுவாமிகள் சரித்திரம் ... | கரு-உக |
| 5. | சுந்தரமூர்த்திசுவாமிகள் சரித்திரம் ... | உஉ-சo |
| 6. | அகத்தியர்தேவாரத்திரட்டின் வரலாறு... | சக-சச |
| 7. | அகத்தியர் தேவாரத்திரட்டு மூலமும் உரையும் ... ... | 1-158 |
| 8. | அகத்தியர் தேவாரத்திரட்டின் செய்யுள் முதற்குறிப்பகராதி ... | 159-163 |

# அகத்தியர் தேவாரத்திரட்டின் விஷய அட்டவணை.


| எண். | விஷயம். | பாடியவர். | பதிக முதற்குறிப்பு. | பாடியதலம். | பண்விவரம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | தேவாரதலயபொருள் | ——— | குருவருளும் | ——— | ——— | 1 | 1-2 |
| 2 | திருப்பதிக்கக்கருத் துரை | ——— | தோடு | ——— | ——— | 1 | 2-4 |
| 3 | குருவருள் | திருஞானசம்பந்தர் | தோடுடைய | திருப்பிரமபுரம் | நட்டபாடை | 11 | 4-11 |
| 4 | ஷெ | திருநாவுக்கரசர் | கூற்றாயினவா | திருவதிகைவீரட்டானம் | கொல்லி | 10 | 11-18 |
| 5 | ஷெ | சுந்தரர் | பித்தா | திருவெண்ணெய்நல்லூர் | இந்தளம் | 10 | 18-23 |
| 6 | திருநீற்றுப்பதிகம் | திருஞானசம்பந்தர் | மந்திரமாவது | திருஆலவாய் | காந்தாரம் | 11 | 24-29 |
| 7 | பஞ்சாக்கரத் திருப்பதிகம், அஞ்செழுத் துண்மை | ஷெ | துஞ்சலுந் | ——— | காந்தாரபஞ்சமம் | 11 | 29-33 |
| 8 | நமச்சிவாயத் திருப்பதிகம், அஞ்செழுத் துண்மை | ஷெ | காதலாகிக் | ——— | கௌசிகம் | 11 | 34-38 |
| 9 | ஷெ | திருநாவுக்கரசர் | சொற்றுணை | ——— | காந்தாரபஞ்சமம் | 10 | 38-42 |
| 10 | அஞ்செழுத் துண்மை | சுந்தரர் | மற்றுப்பற் | ——— | பழம்பஞ்சுரம் | 10 | 43-48 |
| 11 | திருக்ஷேத்திரக்கோவை கோயிற்றிறம் | திருஞானசம்பந்தர் | ஆரூர் தில்லை | ——— | இந்தளம் | 11 | 48-54 |
| 12 | ஷெ | திருநாவுக்கரசர் | தில்லைச்சிற்றம் | ——— | திருத்தாண்டகம் | 11 | 55-60 |
| 13-14 | ஊர்த்தொகை - கோயிற் றிறம் | சுந்தரர் | காட்டூர் | ——— | பழம்பஞ்சுரம் | 10 | 60-64 |
| 15 | திருவெழுகூற்றிருக்கை சிவத்துருவம் | திருஞானசம்பந்தர் | ஓருருவாயினை | ——— | ——— | 1 | 65-74 |
| 16 | சிவனுருவம் | ஷெ | வரியமறை | திருக்கடவூர்மயானம் | சாந்தாரம் | 11 | 74-79 |
| 17 | கோயிற்றிருவிருத்தம் - சிவனுருவம் | திருநாவுக்கரசர் | பாளையுடைக் | ——— | கொல்லி | 10 | 79-84 |
| 18 | சிவனுருவம் | [illegible] | வடிவேறு | ——— | திருத்தாண்டகம் | 11 | 84-92 |
| 19 | ஷெ | [illegible] | மருவார் | திருக்கடவூர்மயானம் | பழம்பஞ்சுரம் | 10 | 92-97 |
| 20 | திருவடி[illegible] | திருஞா[illegible] | பொடியுடை | திருவாழ்கொளிபுத்தூர் | தக்கராகம் | 11 | 97-103 |
| 21 | ஷெ | திருநாவுக்கரசர் | அரவணையான் | திருவதிகைவீரட்டானம் | திருத்தாண்டகம் | 10 | 103-110 |
| 22 | ஷெ | சுந்தரர் | அந்தணாளன் | திருப்புன்கூர் | தக்கேசி | 10 | 110-117 |
| 23 | அருச்[illegible] | திருஞானசம்பந்தர் | பந்தார் | திருப்பூந்தராய் | காந்தாரபஞ்சமம் | 11 | 117-124 |
| 24 | ஷெ | திருநாவுக்கரசர் | வேற்றாகி | ஸ்ரீகயிலாயம் | திருத்தாண்டகம் | 11 | 124-131 |
| 25 | ஷெ | சுந்தரர் | கொன்று செய் | திருக்கழுக்குன்றம் | நட்டபாடை | 10 | 132-136 |
| 26 | கோணத்திருத்திருப்பதிகம் - அடிமை | திருஞானசம்பந்தர் | வேயுறுதோளி | ——— | பியந்தைக்காந்தாரம் | 11 | 137-144 |
| 27 | திருவாரூர்த் திருவிருத்தம் - அடிமை | திருநாவுக்கரசர் | குலம்பலம்பா | திருவாரூர் | கொல்லி | 10 | 144-154 |
| | திருத்தொண்டத் தொகை - அடிமை | சுந்தரர் | தில்லைவா | ——— | கொல்லிக்கௌவாணம் | 11 | 150-158 |
| | | | | | | ஆ 250 | |


118936

# அகத்தியர் தேவாரத்திரட்டின்

# சூசிபத்திரம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

[சரித்திரம்: க-கச]


| பதிகம். | பக்கம். | பதிகம். | பக்கம். |
|---|---|---|---|
| திருப்பிரமபுரம் | 4 | திருவெழுகூற்றிருக்கை | 65 |
| திருநீற்றுப்பதிகம் | 24 | திருக்கடவூர்மயானம் | 74 |
| பஞ்சாக்கரத் திருப்பதிகம் | 29 | திருவாழ்கொளிபுத்தூர் | 97 |
| நமச்சிவாயத் திருப்பதிகம் | 34 | திருப்பூந்தராய் | 117 |
| திருநேரிசைத் திருக்கோவை | 48 | கோளறு திருப்பதிகம் | 137 |


## திருநாவுக்கரசு நாயனார்.

[சரித்திரம்: கரு-உக]


| பதிகம். | பக்கம். | பதிகம். | பக்கம். |
|---|---|---|---|
| திருவதிகைவீரட்டானம் | 11 | திருப்பூவணம் | 84 |
| நமச்சிவாயத் திருப்பதிகம் | 38 | திருவதிகைவீரட்டானம் | 103 |
| திருநேரிசைத் திருக்கோவை | 55 | ஸ்ரீகயிலாயம் | 124 |
| கோயிற்றிருவிருத்தம் | 79 | திருவாரூர்த் திருவிருத்தம் | 144 |


## சுந்தரமூர்த்தி நாயனார்.

[சரித்திரம்: உச-சஉ]


| பதிகம். | பக்கம். | பதிகம். | பக்கம். |
|---|---|---|---|
| திருவெண்ணெய்நல்லூர் | 18 | திருப்புன்கூர் | 110 |
| திருப்பாண்டிக்கொடுமுடி | 43 | திருக்கழுக்குன்றம் | 132 |
| ஊர்த்தொகை | 60 | திருத்தொண்டத்தொகை | 150 |
| திருக்கடவூர்மயானம் | 92 | | |


திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவசமயாசாரியராகிய

# திருஞானசம்பந்தசுவாமிகள்

# திவ்விய சரித்திரம்.

சந்தானசாரியராகிய

## உமாபதிசிவாசாரியர்

திருவாய்மலர்ந்தருளிய

## புராணசாரம்.

காழிநகர்ச் சிவபாத விருதயர் தந்த
கவுணியர்கோன் மூவாண்டிற் கருதி யூட்டு
மேழிசையி னமுதுண்டு தாளம் வாங்கி
யிலங்கியசித் திலச்சிவிகை யிசைய வேறி
வாழுமுய லகனகற்றிப் பந்த ரெய்தி
வளர்கிழிபெற் றரவின்விட மருகற் றீர்த்து
வீழிநகர்க் காசெய்தி மறைக்கதவம் பிணித்து
மீனவன்மே னியின்வெப்பு விடுவித் தாரே.

ஆரெரியிட் டெடுத்தவே டனலுமன் னேற்றி
யாற்றிலிடு மேடெதிர்போ யணையவேற்றி
யோரமண ரொழியாமே கழுவி லேற்றி
யோது திருப் பதிகத்தா லோட மேற்றிச்
சாருதவ மிடிபுத்தன் றலையி லேற்றிக்
காயாத பனையின்முது கனிக ளேற்றி
பீரமிலா வங்கமுயி ரெய்த வேற்றி
யிலங்குபெரு மணத்தாரை யெய்தி னாரே.

# திவ்விய சரித்திரம்.

சோழவளநாட்டில் சிறப்புற்றோங்கும் சீகாழியில், பிராமண குலத்தில் கவுணிய கோத்திரத்தில் பிறந்த சிவபாத விருதயரும், அவர் மனைவியாராகிய பகவதியாரும் செய்த அரிய தவப்பேற்றால், பகவதியாருடைய திருவயிற்றில், தோணியப்பர் திருவருளால், திருவாதிரை நட்சத்திரத்தில், ஆளுடையபிள்ளையார் அவதரித்தனர். அவர் மூன்று வயதில் தம் பிதாவாகிய சிவபாதவிருதயர் நீராடச்சென்றபோது உடன்சென்றனர். தந்தையார், ஆளுடைய பிள்ளையாரைப் பொய்கைக் கரையில் உட்காரவைத்துத் தாம் தீர்த்தத்துள் மூழ்கி, அகமருஷண மந்திரஞ் செபித்தபொழுது, பிள்ளையார் தம் பரமபிதாவாகிய சிவபெருமானை விட்டுத் தனித்திருந்தோமென்று கருதி, தோணியப்பர் வீற்றிருக்கும் ஆலயத்தை நோக்கிக் கண்களில் நீர் பெருகும்படி அழாநிற்க, அதுகண்டு தோணியப்பர் திருவுளமிரங்கித் தரும வடிவாகிய இடபவாகனத்தின்மேல் பார்வதி சமேதராய் எழுந்தருளி, திருமுலைப்பால் தருகவெனப் பார்வதியாருக்குக் கட்டளையிட்டருள, பார்வதியாரும் அவ்வாறே திருமுலைப்பாலொடு ஞானாமிர்தமுங் கலந்துகொடுக்க, பிள்ளையார் உண்டு அழுகை நீங்கி யிருக்கையில், தந்தையார் ஸ்நானஞ் செய்துவந்து பார்த்து, உனக்குப் பால்கொடுத்தவர் யார் என்று பயமுறுத்தும்போது, இவர் கொடுத்தாரென்று விரலாற்சுட்டி, "தோடுடைய செவியன்" என்னுந் திருப்பதிகம் பாடிப் பரம ஆப்தராகிய சிவபெருமானைக் காட்டக் கண்டு, அவர் ஆநந்த பரவசராயினர்.

அன்றுமுதல், ஆளுடையபிள்ளையார் திருஞானசம்பந்த சுவாமிகள் என்னுந் திருநாமம் பெற்றுத் தினந்தோறும் சிவாலயத்திற் சென்று பரமகுருவாகிய சிவபெருமானைத் தரிசித்துத் தம் பிதாவாகிய சிவபாத விருதயர் தோளிற் றூக்கிவரத் திருமாளிகைக்கு எழுந்தருளுவாராயினர். பின்பு ஒருநாள் அவர் திருக்கோலக்காவென்னுந் தலத்துக்குப்போய்த் திருக்கரங்களை யொத்தித் திருப்பதிகம் பாடுகையில், எம்பெருமான் இரங்கியருளிப் பொற்றாளங் கொடுத்தருளப் பெற்று, முன்போலத் திருமாளிகைக் கெழுந்தருளிக் காலந்தோறும் தோணியப்பர் திருமுன்னர்ச் சென்று திருப்பதிகம் பாடித் தோத்திரஞ் செய்து வாழுநாளில், தம்முடைய தாயாராகிய பகவதியார் ஜனனதேசமாகிய திருநனிபள்ளியில் வாழும் பிராமணர்கள் வந்து தம்மூர்க் கெழுந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்கத் தோணியப்பர் சந்நிதியில் விடைபெற்றுக்கொண்டு, அத்தலத்



திற்கேயன்றி மற்றைத் தலங்களுக்குஞ் சென்று சுவாமிதரிசனஞ் பண்ணிக்கொண்டு மீண்டு திருநனிபள்ளியில் எழுந்தருளியிருக்கையில், திருத்தலைச் செங்காட்டிலுள்ள பிராமணர்கள் வந்து வணங்கித் தம்முடைய தலத்திற் கெழுந்தருள வேண்டுமென்ன, அங்குச் சென்று சிவதரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடியருளி, அங்கிருந்து புறப்பட்டுத் திருவலம்புரம் முதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, பின்பு சீகாழிக்குவந்து, அங்கிருந்து புறப்பட்டுத் திருமயேந்திரப்பள்ளி முதலிய ஸ்தலங்கட்குச் சென்று, சுவாமிதரிசனஞ் செய்து திருப்பதிகம்பாடித் துதித்து மீளவும் சீகாழிக் கெழுந்தருளித் தோணியப்பரைத் தரிசனஞ்செய்து வாழும்போது, திருநீலகண்டப் பெரும்பாணர் பத்தினியாருடன் வந்தது கேட்டுச் சென்று அவரை அழைத்து வந்து தோணியப்பர் ஆலயத்துக் கோபுரவாயிற்றுக்குச் சமீபத்தில் நிறுத்தித் தரிசனஞ்செய்வித்து, அவர்க்கோர் இடங்கொடுத்து விருந்திட்டு உபசரித்தனர். திருநீலகண்டப்பெரும்பாணர், திருஞானசம்பந்த சுவாமிகளை நோக்கித் தேவரீர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்களை அடியேன் யாழிலிசைத்து வாசிக்கக் கட்டளையிட்டருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையார் திருவுளமகிழ்ச்சியோடு உடன்பட, அக்காலமுதல் திருநீலகண்டப் பெரும்பாணர் அவ்வாறே திருப்பதிகங்களை யாழிலிசைத்துப் பாடித் தம்மைவிட்டுப் பிரியாதிருந்தனர். பின் ஆளுடைய பிள்ளையார் நடேசரைத் தரிசிக்க வேண்டுமென்னும் அன்பு மென்மேலும் பெருகச் சிதம்பரத்துக் கெழுந்தருளி எழுநிலைக் கோபுரத்தைக்கண்டு அளவில் பூமியில் விழுந்து பலமுறை பணிந்தெழுந்து, சந்நிதியிற் சென்று, பிரதக்ஷிணஞ்செய்து, பொன்னம்பலத்தின்கண் ஆநந்தத் தாண்டவஞ் செய்தருளும் நடராஜரைத் தரிசித்துத் திருப்பதிகம் பாடித் துதித்துக் கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருகப் பரவசம் அடைந்து, சற்றுத்தெளிந்து, விடைபெற்றுச் சந்நிதியைவிட்டு வெளிப் போந்து அங்கிருந்து திருவேட்களத்துக் கெழுந்தருளிச் சிவதரிசனஞ்செய்து திருப்பதிகம்பாடித் துதித்து அத்தலத்திலேயே வீற்றிருந்து நடேசரைத் தரிசனஞ் செய்துகொண்டிருந்தனர்.

அங்கு வாழுநாளில் ஓர்நாள், தில்லைவாழந்தணர் நடேசரை அருச்சிக்கத்தக்க பேறுபெற்றார்களென்னுங் கருத்தோடு சிதம்பரத்துக் கெழுந்தருளியபோது, அவ்வந்தணர்கள் சிவகணங்களாக இருக்கக்கண்டு வணங்கி, அவ்வற்புதத்தைத் திருநீலகண்டப் பெரும்பாணருக்குங் காட்டியருளிச் சிறப்பித்தென்று, சபாநாதரைத் தரிசித்துத் திருப்பதிகம் பாடித் துதித்து, விடை பெற்றுக்கொண்டு

புறம்போந்து பாணர் வேண்டுகோளால் திருவெருக்கத்தம்புலியூர் முதலிய சிவஸ்தலங்கட்குச் சென்று, சிவதரிசனஞ் செய்துகொண்டு ஆங்காங்குத் திருப்பதிகம்பாடித் துதித்துப் பின்னர் விருத்தாசலத்திற் கெழுந்தருளிச் சுவாமிதரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடி அங்குச் சிலநாள் வீற்றிருந்தனர். அங்கிருந்து புறப்பட்டுத் திருப்பெண்ணாகடமென்னுந் தலத்திலே தூங்கானைமாடமென்னும் ஆலயத்துட்சென்று சிவபெருமானை வணங்கித் திருப்பதிகம்பாடித் துதித்து, அங்கிருந்து புறப்பட்டுத் திருவடிவருந்த மெல்ல மெல்லச் சென்று, திருமாறன்பாடியென்னுஞ் சிவஸ்தலத்திற்சேரப் பொழுதுபட்டதனால் அங்குத் திருக்கூட்டத்துடன் வீற்றிருக்கையில், திருவரத்துறையில் எழுந்தருளிய தம்பிரானார், திருஞானசம்பந்தசுவாமிகள் சேவடி வருந்த நடந்தமை பொறாது, முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னம் முதலியவற்றைக் கொடுத்தருளவேண்டுமென்று திருவுளங்கொண்டு, அப்பதியின்கணுள்ள அந்தணர் முதலிய சிவனடியார்களுக்குச் சொப்பனத்தி லெழுந்தருளிக் கட்டளையிட்டருளினர். அவர்களனைவரும் ஒருங்குகூடி ஆலயத்துட்சென்று பார்த்தபொழுது, எம்பிரானார் அருளியபடி இருக்கக்கண்டு மகிழ்ந்து அவற்றை எடுப்பித்துத் திருஞானசம்பந்த சுவாமிகள் திருமுன்பு கொண்டுபோய் வைத்து, சுவாமி திருவாய்மலர்ந்தருளியதை விண்ணப்பஞ்செய்யக் கேட்டு, தம்பிரானார் கட்டளையை மறுக்க அஞ்சித் தொழுது முத்துச் சிவிகையி லெழுந்தருளித் திருவரத்துறைக்குச் சமீபத்திற்சென்று சிவிகையை விட்டிறங்கித் தெண்டனிட்டுப்போய்ச் சுவாமியை வணங்கித் திருப்பதிகமோதித் துதித்துச் சிலநாள் அங்கிருந்து மீண்டும் சீகாழிக் கெழுந்தருளும்போது, திருப்பழுவூர் முதலிய பல சிவஸ்தலங்களை வணங்கித் திருப்பதிகம்பாடியருளிச் சீகாழியிற் சென்று, தோணியப்பரைத் தரிசித்து வணங்கித் திருப்பதிகமோதிச் சாத்தி அங்குப்பிதாவானவர் அழைக்க உபநயனஞ் செய்விக்கப்பெற்று, வேதாகம முதலியவைகளனைத்தும் ஓதாதுணர்ந்து பஞ்சாட்சரப் பதிகந் திருவாய்மலர்ந்தருளி வாழுநாளில், திருநாவுக்கரசுசுவாமிகள் எழுந்தருளுவதுகேட்டு எதிர்கொண்டு சென்றபோது, அவர் பூமியில் விழுந்து வணங்க, அப்பரே! எழுந்திருமென்று தம்திருக்கரங்களாலும் எடுத்து, உபசாரத்தோடு அழைத்துக்கொண்டு சந்நிதியிற் சென்று தோணியப்பரை இருவரும் தொழுது துதித்து அங்கெழுந்தருளி யிருந்தனர்.

திருநாவுக்கரசுசுவாமிகள் அப்போது சிலநாளிருந்து நீங்கியபின்னர்த் திருஞானசம்பந்தப் பிள்ளையார் காலந்தோறும் தவறாது தோணி



யப்பரைத் தரிசனஞ்செய்து, திருமொழிமாற்று முதலிய சித்திரக்கவிப் பதிகங்கள் ஓதித் துதித்து வாழுநாளில், இன்னுமுள்ள மற்றைச் சிவஸ்தலங்கட்குச்சென்று சிவபெருமானைத் தரிசிக்கவேண்டுமென்று திருவுளங்கொண்டு தந்தை தாயார்க் கறிவித்தனர். தந்தையாராகிய சிவபாதவிருதயர் பிள்ளையாரைநோக்கி, வேள்விசெய்யப் பொருள் வேண்டுமாகையால் நானுங்கூட வருகிறேனென்ன, சம்மதித்துப் புறப்பட்டுத் திருக்கண்ணார்கோயில் முதலிய பற்பல சிவஸ்தலங்கட்குச் சென்று சிவதரிசனஞ் செய்து திருப்பதிகமோதித் துதித்துத் திருப்பாச்சிலாச்சிராமத்துக் கெழுந்தருளும்போது, அங்குக் கொல்லிமழவனென்னு மொருவன் தன் புதல்விக்குற்ற முயலகனென்னு நோய் எவ்வகையினுந் தீராமையால் மனவருத்தமுற்று, அவன் சைவசமயப்பற்றுள்ள சந்ததியானாகையால், அக்கன்னிகையைச் சிவசந்நிதானத்திற் கொண்டுவந்து கிடத்திவைத்து அங்கிருந்தபோது; தன்னூர்க்குள் திருஞானசம்பந்தசுவாமிகள் எழுந்தருளுவதைத் திருச்சின்னவோசையா லுணர்ந்து நகரத்தை யலங்கரிக்க வுத்தரவுசெய்து, தான் எதிர்கொண்டுசென்று வணங்கினன். ஆளுடையபிள்ளையார் அவனை அழைத்துக்கொண்டு, அவன் நகருக்குளெழுந்தருளிக் கோபுரவாயிலின் புறத்து முத்துச்சிவிகையை விட்டிழிந்து பணிந்து ஆலயத்துட்சென்று பிரதக்ஷிணஞ்செய்து சந்நிதானத்துட் செல்லுகையில், அக்கன்னிகை பிரேதம்போற் கிடத்தலைநோக்கி, இஃதியாதென வினவ, அவ்வரசன் ஆளுடையபிள்ளையாரைத் தொழுது, இவள் அடியேனுடைய புத்திரி, இவளுக்குண்டாய முயலகனென்னு நோய் தீராமையால் சிவபெருமான் திருவுளமெப்படியோ அப்படியே யாகட்டுமென்று இங்குக் கிடத்தினேனென்றான். அங்ஙனங் கூறியது கேட்டுத் திருவுளமகிழ்ந்து திருக்கைகூப்பி, “துணிவளர் திங்கள் துளங்க” என்னும் திருப்பதிகமோதித் துதித்த அளவில், அக்கன்னிகை அந்நோய் நீங்கி யெழுந்து, தன் பிதாவினருகிற்சென்று நின்றனள். அவ்வரசன் கண்டு பரமானந்த மடைந்து, தன் புதல்வியோடு தானும் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவடிகளை வணங்கி நிற்கக் கண்டு திருவருள்புரிந்து, பின்னர்ச் சந்நிதியிற்சென்று பணிந்து பதிகமோதித் துதித்துச் சிலநாளங்கிருந்து விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுத் திருப்பைஞ்ஞீலி, திருவீங்கோய்மலை, திருக்கொடிமாடச் செங்குன்றூர், திருநணா முதலிய பல சிவஸ்தலங்கட்குச் சென்று, சிவதரிசனம் பண்ணித் திருப்பதிகமோதித் துதித்து, மீண்டும் திருக்கொடிமாடச் செங்குன்றூர்க் கெழுந்தருளி யிருக்கையில், குளிர்காலம் வர, அக்காலத் தங்கிருப்போர்க்கு ஆங்கேதாநும் உண்டாகும் நளிர்சுரந் தமது திருக்கூட்டத்தார்க்கும் எய்தியது நோக்கி, “அவ்வினைக்

இவ்வினை" என்னும் திருநீலகண்டப் பதிகம் பாடிய மாத்திரத்தில் அச்சுரநோய் தம் திருக்கூட்டத்தாரை விட்டொழிந்ததன்றி அந்நாட்டு அனைவரையும் விட்டொழிந்தது. சிலநாள் அங்கிருந்து, பின்பு புறப்பட்டுத் திருப்பாண்டிக் கொடுமுடி, திருக்கருவூர் முதலிய தலங்கள் பலவற்றிலுஞ்சென்று, சுவாமிதரிசனம்பண்ணிப் பதிகமோதித் துதித்து, விடைபெற்றுக்கொண்டு, திருவலஞ்சுழிக் கெழுந்தருளிச் சிவதரிசனஞ்செய்து பதிகமோதித் துதித்து, அங்கு வீற்றிருக்குங் காலில் முதிர்வேனிற்காலம் வந்தது. அங்ஙனமாக, திருஞானசம்பந்தசுவாமிகள் திருச்சத்திமுற்றத் தெழுந்தருளிய சிவபெருமானைத் தரிசிக்கவேண்டுமென்னும் அன்புமிகுதியால் அங்குச்சென்று கைவா சந்நிதியைத் தொழுது பதிகமோதித் துதித்து விடைபெற்றுக்கொண்டு திருப்பட்டீச்சரத்துக் கெழுந்தருளினார். அத்தலத்தி லெழுந்தருளிய தம்பிரானார் ஆஞ்ஞையினால் திருஞானசம்பந்த சுவாமிகளுக்குத் தோன்றாவடி பூதகணங்கள் முத்துப்பந்தர் கொண்டுபோய், இந்த வெயில் வெப்பந் தணிப்பதற்குச் சிவபெருமானால் கொடுக்கப்பட்டதென்று சொல்லுமொலியும் பந்தரும் ஆகாயத்தில் தோன்றக்கண்டு, இஃதும் நங்கடவுள் ஆஞ்ஞையாயின் ஏற்றுக்கொள்ளத் தக்கதே யென்றுரைத்து, மகிழ்ந்து, சிவிகையை விட்டிழிந்து, பணிந்து அவ்வில் அம்முத்துப்பந்தரின் காவுகளைப் பரிசனம் தாங்கிவரத் திருப்பட்டீச்சரத்துக் கெழுந்தருளி ஆலயத்திற்சென்று, சிவபெருமானைத் தரிசித்துப் பதிகமோதித் துதித்து அங்குச் சிலநாள் இருந்தனர். பின்பு திருவாறை வடதளி முதலாயுள்ள பல சிவஸ்தலங்கட்குச் சென்று சிவபெருமானைத் தொழுது பதிகமோதித் துதித்துத் திருவாவடுதுறைக் கெழுந்தருளிச் சிவதரிசனஞ்செய்து பதிகமோதித் துதித்து அங்கு வீற்றிருந்தனர்.

அப்பொழுது சிவபாதவிருதயர் பிள்ளையாரை நோக்கி, வேள்வி செய்வதற்கு ஆரும் சமீபித்தது, ஆதலால் அதற்குப் பொருள்வேண்டும் என்று கூற, திருஞானசம்பந்த சுவாமிகள் ஆலயத்துட்சென்று சிவபெருமானைத் திருப்பதிகமோதித் துதித்த அளவில், சிவாக்ஞையினால் ஆயிரம் பொன்னடங்கிய பொற்கிழியை யோர்பூதங்கொண்டு வந்து பலிபீடத்தின்கண் வைத்துத் திருஞானசம்பந்த சுவாமிகளுக்கெதிரில் நின்று, இப்பொற்கிழி எடுக்குந்தோறும் குறைவுபடாது; இதைச் சிவபெருமானார் தேவரீருக்குக் கொடுக்கும்படி கட்டளையிட்டதனால் கொண்டுவந்து வைத்தேனென்று சொல்ல, பிள்ளையார் அதைப் பலமுறை பணிந்தெடுத்துத் [illegible] கையிற் கொடுத்து நீர் செய்யும் வேள்விக்கேயன்றிச் [illegible] அத



ளர் செய்யும் வேள்விகளைத்திற்கு முதலுமென்று கொடுத்துப் போக்கித் தாம் அங்குச் சிலநாளிருந்து புறப்பட்டுத் திருக்கோழம்பம் முதலிய சில தலங்கட்குச் சென்று சிவதரிசனஞ் செய்து தருமபுரத் துக்கெழுந்தருளினார். அப்போது திருநீலகண்டப் பெரும்பாணர் தம் முறவினர் எதிர்கொண்டு வந்து வணங்க அவர்களை நோக்கி, பிள்ளையார் திருவாய் மலர்ந்தருளுந் திருப்பதிகங்களை யாழிலமைத்து வாசிக்கும் அரிய பேறு பெற்றேனென்று கூறக்கேட்டு, நீர் யாழொடு பொருந்தி வாசிப்பதினால் அப்பதிகங்கள் உலகமெங்கும் விளக்கமுற்று இருக்கின்றனவென்று அவர்களுரைக்க, பாணர் அச்சமுற்று, உடனே சுவாமிகள் சந்நிதானத்தில் விண்ணப்பஞ்செய்து, யாழிற் பொருந்தா வண்ணமோர் திருப்பதிகம் கட்டளையிட்டருள வேண்டுமென, அவ்வாறே ஆளுடைய பிள்ளையார், "மாதர் மடப்பிடி" என்னும் திருப்பதிகம் பாடியருளினார். அதைப் பாணர் யாழிலமைத்துப்பாட இசையாமல் மனமிடைந்து, இந்த யாழினன்றோ சுவாமிகளருளிச்செய்த திருப்பதிகத்தி னிசையைப் பொருந்தப் பாடவேன் என்றுசொல்ல காவிகை ந்தோதென்று அதைச் சிதைக்க வோங்கியபோது, பிள்ளையார் தடுத்தருளி, பெரும்பாணரே! நீர் திருப்பதிக விசையை உம்மாலியன்ற மட்டும் இதிலமைத்துப் பாடுமென்று யாழை வாங்கி வாசித்துக்காட்டிக் கொடுத்தருள, பாணர் பிள்ளையாரைத்தொழுது யாழை வாங்கிச் சிரமேற்கொண்டனர். பிறகு திருஞானசம்பந்தப்பிள்ளையார் தருமபுரத்தைவிட்டுப் புறப்பட்டுச் சில சிவஸ்தலங்கட்குச் சென்று சிவதரிசனஞ் செய்துகொண்டு திருச்சாத்தமங்கைக்கு எழுந்தருளினபொழுது, அந்தத் திருப்பதியினின்று வந்து தம்மை வணங்கிய திருநீலநக்கநாயனாரோடு அயவந்தி என்னும் ஆலயத்திற்சென்று சிவதரிசனஞ் செய்துகொண்டு அந்நாயனார் திருமாளிகைக்குப்போய்த் திருவமுது செய்து அங்குச் சிலநாளிருந்து புறப்பட்டுத் திருநாகைக்காரோண முதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண் டெழுந்தருளும்போது, திருச்செங்காட்டங்குடியி லிருக்குஞ் சிறுத்தொண்ட நாயனார் எதிர்கொண்டு வந்து வணங்கி அழைத்துக்கொண்டுபோகப் போய்க் கணபதீச்சரத்திற் சிவதரிசனஞ் செய்துகொண்டு அங்கிருந்தார்.

இருக்கும்பொழுது, ஒருவணிகன் வழிச்செல்வோனும் ஒரு கன்னிகையுடன்கொண்டு போந்து கோயிலுக்குப் புறத்திலே ஒரு மடத்திலே நித்திரைசெய்யும்போது அவன் பாம்புகடித் திறந்தான். அதுகண்டு அக்கன்னிகை பூமியில் விழுந்து புலம்பியழுதுகொண் டிருப்பதைச் சிவதரிசனத்துக் கெழுந்தருளிய ஆளுடைய பிள்ளையார் கேட்டுத் திருவுளமிரங்கி, அவனுக்கு அருள் செய்யும்பொருட்டு அடி

யதியர்களோ டெழுந்தருளி வந்து நின்று, அவளை நோக்கி, "பயப்படாதே, நிகழ்ந்த சமாசாரத்தைச்சொல்" என்றருளிச்செய்தார். கன்னிகை, கண்ணீர்பெருகப் பிள்ளையார் திருவடியில் விழுந்து, எழுந்து நின்று, "வைப்பூரிலிருக்கும் என்பிதாவாகிய தாமனென்பவனுக்குப் புத்திரிகள் எழுவர். அவர்களில் யான்நீங்கலாக மூத்தோர் அறுவரையும் தன் சகோதரியின் புத்திரனாகிய இவனுக்கே விவாகஞ் செய்து கொடுக்கிறேனென்று பலமுறை சொல்லிப் பின் திரவிய அபேட்சையால் பிறருக்கு விவாகஞ் செய்துவிட்டார். அது கண்டு வருத்தமுற்று இவருக்கே மனைவியாக வேண்டுமென்று கருதித் தாய் தந்தையர்க்குத் தெரியாது இவருடன் புறப்பட்டு வந்தேன். இவர் இங்குப் பாம்பு கடித்திறந்தார். அடியேன் ஆதரவற்றிருக்கின்றேன். தேவரீர் எழுந்தருளப்பெற்றதினால் அடியேன் சஞ்சலந்தீர்ந்தது." என்றாள். ஆளுடைய பிள்ளையார் கிருபைகூர்ந்து விஷம் நீங்கும்பொருட்டுச் "சடையா யெனுமால்" என்னுந் திருப்பதிகமோதி அவனைப் பிழைப்பித்து அவனுக்கு அக்கன்னிகையை மணஞ்செய்வித்துப்போக்கி, அங்கு வீற்றிருக்கு நாளில், சிறுத்தொண்ட நாயனார் வந்து பிரார்த்திக்க, மீண்டும் திருச்செங்காட்டங்குடிக் கெழுந்தருள விருப்புற்றுத் திருமருகற் கோயிலிற் சென்று வணங்கிச் சிவபெருமானார் தாம் திருச்செங்காட்டங்குடியி லிருக்கின்ற திருக்கோலத்தை அவருக்கு அங்கே காட்டியருள மனமகிழ்ந்து, "அங்கமும் வேதமுமோது நாவர்" என்னுந் திருப்பதிகம்பாடி, அங்குச் சிலநாளிருந்து, புறப்பட்டுப் பற்பல சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருப்புகலூருக்குச் சமீபித்து, அப்பதியினின்று வந்து தம்மை எதிர்கொண்டு வணங்கிய முருகநாயனார் முதலிய அடியார்களோடு திருக்கோயிலுட் சென்று சிவதரிசனஞ் செய்து முருகநாயனார் திருமடத்துக் கெழுந்தருளி அங்கு வீற்றிருக்கு நாளில், திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாரூரை வணங்கித் திருப்புகலூருக் கெழுந்தருளுகின்றார் என்னும் செய்தி கேட்டு எதிர்கொண்டுவர, திருநாவுக்கரசு சுவாமிகளும் எதிர்கொண்டு வந்தனர். இருவரும் ஒருவரை யொருவர் வணங்கி மகிழ்ந்தனர். அப்பொழுது ஆளுடையபிள்ளையார் மருணீக்கியாரை நோக்கி, "அப்பரே! நீர் வருநாளில் திருவாரூரிலே நிகழ்ந்த சிறப்பைச் சொல்லும்" என, வாகீசர் திருவாதிரைச் சிறப்பைத் திருப்பதிகத்தாற் சொல்லியருளப் பிள்ளையார் அதுகேட்டு, "நானங்குச் சென்று சிவதரிசனஞ்செய்து மீண்டுவந்து உம்முடன் இருப்பேனென்று" சொல்லிப்புறப்பட்டுத் திருவிற்குடி வீரட்டத்தை வணங்கித் திருவாரூரைச் சேர்ந்து, புற்றிடங்கொண்டாரை வணங்கித் திருப்பதிகம்பாடி, அங்கெழுந்தருளியிருக்குநாளில், திருவலிவலம், திருக்கோளிலி முதலிய சிவஸ்தலங்



களுக்குச்சென்று, சிவதரிசனஞ் செய்துகொண்டு, மீண்டும் திருவாரூரில் வந்திருந்து பிறகு திருப்புகலூர்க் கெழுந்தருளும்போது, அந்தலத்தினின்று எதிர்கொண்டு வந்த திருநாவுக்கரசு சுவாமிகள் முருக நாயனார் முதலிய திருத்தொண்டர்களோடு சென்று சிவதரிசனஞ் செய்துகொண்டு, அங்கிருக்குநாளில், திருநீலநக்க நாயனாரும், சிறுத்தொண்ட நாயனாரும் வந்துடனிருந்தனர். சிலநாள் சென்றபின்பு ஆளுடையபிள்ளையார், திருநாவுக்கரசு சுவாமிகளோடு புறப்பட்டுத் திருவம்பர் திருக்கடவூர் முதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, திருவீழிமிழலையிற் சென்று, சிவதரிசனஞ்செய்து அங்கு வீற்றிருக்கும்போது, மழையின்மையால் பஞ்சமுண்டாக உயிர்கள் வருந்தின. சிவனடியார்களும் பசியால் மெலிந்து வாடினர். அது கண்டு பிள்ளையாரும், அப்பரும், திருநீறு தரித்த சிவனடியார்களுக்கும் இந்த ஹானதாமேயெனத் திருவுளமிரங்கிச் சிவபெருமான் திருவடிகளைத் தியானித்துக்கொண்டு, அன்றிரவு நித்திரை செய்கையில் சிவபெருமான் அவர்களுக்குச் சொப்பனத்தில் எழுந்தருளிக் "காலபேதத்தால் நீங்கள் வருந்தினீர்கள். ஆயினும் உங்களை வழிபடும் அடியார்கள் வருத்தத்தை நீக்கும்பொருட்டு, இப் பஞ்சம் நீங்குமட்டும் தினந்தோறும் திருக்கோயிலின் கிழக்குப்பீடத்திலும் மேற்குப் பீடத்திலும் ஒவ்வொரு காசு வைத்தருளுகிறோம்" என்று கூறி மறைந்தருளினர். பிள்ளையார் விழித்தெழுந்து, மருணீக்கியாரோடு ஆலயத்திற் சென்று அங்[illegible] மகிழ்ந்தெடுத்துச் சிவனடியார்கட்கு அமுதுபடைத்து, ஆனந்தமடைந்து, இருக்குங்காலத்தில் மழைபெய்து, பஞ்சம் நீங்கியது. உடனே புறப்பட்டு மார்க்கத்திலுள்ள சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, திருமறைக்காட்டிற் சென்று, ஆலயத்துட் புகுந்து வலஞ்செய்து, வேதங்கள் பூசித்துத் திருக்காப்பிட்ட அந்நாள் முதல் இந்நாள்மட்டும் அடைக்கப்பட்டிருக்கும் திருவாயிலுக்கு முன்போய் திருநாவுக்கரசு சுவாமிகளால் திறப்பித்துச் சிவதரிசனஞ்செய்து, பின்னர்த் திறக்கவும் மூடவுமாயிருக்கத் தாம் திருப்பதிகம்பாடி அங்கிருந்தனர்.

அப்பொழுது பாண்டி நாட்டிலே பாண்டியராஜன் தான் முற்பிறப்பிற் செய்த தீவினையால் சமணர்களுடைய துர்ப்போதனைக்குட்பட்டு மெய்ச்சமயமாகிய சைவசமயத்தைக் கைவிட்டுப் பொய்ச்சமயமாகிய சமணமதத்திலே பிரவேசித்தான், "அரசனெவ்வழி அவ்வழியக்குடி," என்னும் பழமொழிப்படி குடிகளும் அவ்வாறாயினர். இங்ஙனம் சமணசமயம் பெருகவும், அப்பாண்டியன் மனைவியாராகிய மங்கையர்க்கரசியாரும், அவ்வரசன் முதன் மந்திரியாராகிய குலச்சிறை நாயனா

ருங் ஆகிய இருவரும் சைவசமயப் பற்றுவிடாதவர்களாய் ஒழுகுநாளில், அளவிறந்த அற்புதங்களைச் செய்துவரும் திருஞானசம்பந்தப் பிள்ளையார் வேதாரணியத்தில் எழுந்தருளியிருப்பதைக் கேள்வியுற்றுச் சிலரை ஏவ, அவர்கள் அங்குச்சென்று, அவருடைய பிள்ளையாரைக்கண்டு வணங்கித் தாம் வந்த செய்தி சொல்லக்கேட்டுப் பாண்டிநாட்டுக்கு எழுந்தருளி, அங்கோர் மடத்தில் வீற்றிருந்தனர். அன்று இராத்திரி, படுபாவிகளாகிய சமணர்கள் தாம் தங்கிய திருமடத்தில் தீயிட்டதைக் கண்டு, "செய்யனே திருவாலவாய்" என்னுந் திருப்பதிகத்தை "அம்மண் கொளுவுஞ்சுடர் பையவே சென்று பாண்டியற்காகவே" என்று பாடியருளவே, அவ்வக்கினியின் வெப்பும் பாண்டியனை யடைந்து வருத்த, அவன் வருந்தும்பொழுது தாம் எழுந்தருளித் திருநீற்றுப் பதிகம் பாடியருளி, விபூதியைப் பாண்டியனுடலில் பூசிய அளவில் அப்பிணி நீங்க, அரசன் எழுந்து சமணர்களை நோக்கி, நீங்கள் தோற்றீர்களே என்ன, அவர்கள் 'இவ்வொரு விஷயத்திலேயே தோல்வியும் வெற்றியும் சொல்லக் கூடுமோ? எங்க ளிருவருடைய சமயக் கருத்தையும் ஏட்டில் வரைந்து, அக்கினியிலிட்டு, வேகாமலிருப்பது யாதோ அஃதே உண்மைச் சமயமா' மென்று சொல்லி, அவ்வாறே தங்கள் சமயக் கருத்தை ஏட்டிலெழுதித் தீயிலிட்டனர். திருஞானசம்பந்த சுவாமிகள், "போகமார்த்த பூண்முலையாள்" என்னும் திருநள்ளாற்றுப் பதிகமெழுதிய ஏட்டை அத் தீயிலிட்டனர். அவ்வேடுகளிரண்டில் சமணர்களிட்ட ஏடு அவ்வக்கினியால் தகிக்கப்பட்டது. அவருடைய பிள்ளையாரிட்ட ஏடு வேகாமல் முன்னிலும் பசுமையும், புதுமையுமாய் விளங்கிற்று. அதைச் சபை முன் எடுத்துவைத்தனர். பாண்டியன் சமணரை நோக்கி, 'இப்போதாவது தோற்றீர்களோ' என்ன, 'தோற்றவர்கள் மூன்றிலும் தோற்கார்கள். முன்னே இரண்டுதரம் வாதுசெய்தோம்; இன்னும் ஒருதரம் செய்யவேண்டும். ஆதலால் முன்போல, எங்க ளிருவோருடைய சமய வுண்மையை ஏட்டிற்றீட்டி வைகைநதியி லிட்டால் எது எதிரேறிச் செல்கிறதோ அதுவே உண்மைச் சமய' மென்று சொன்னமாத்திரத்தில் குலச்சிறை நாயனார் சமயத்தில் வந்து, இம்முறை தோற்றீர்களானால் செய்வது யாதென்ன, அவர்கள் வாய் தவறிக் கழுவேறுகிறோ மென்றனர். உடனே யாவரும் வைகைக்கரைக்குச் சென்றனர். அரசன் தங்கள் தங்கள் சமய வுண்மையை வரைந்த ஏட்டை வைகையி லிடக்கடவர்களென்றனன். சமணர், "அத்திநாத்தி" என்று எழுதியதோட்டை வைகையி லிடுதலும், அது விரைந்து கடலைநோக்கிச் சென்றது. திருஞானசம்பந்தசுவாமி



கள், "வாழ்க அந்தணர்" என்னுந் திருப்பதிகம்பாடி ஏட்டில் வரைந்து வைகையில் இட்டனர். அத் திருவேடு எதிர்த்து மேலேக் கிழித்துச்சென்றது. சிவபெருமான் எல்லாப்பொருளும் என்றெழுதிய திருவேட்டிலே, "வேந்தனுமோங்குக" என்றருளியபடியால் அரசன் கூன் நிமிர்ந்தது. குலச்சிறைநாயனார் திருவேட்டைப் பிடிக்கும்பொருட்டுக் குதிரை ஏறிச்சென்று, பிள்ளையார் அவ் வேடு தங்கும்படி, "வன்னியுமத்தமும்" என்னுந் திருப்பதிகம் பாடினதினால் திருவேடகமென்னுந் தலத்தில் தங்க, நோக்கி எடுத்துவந்த அளவில், சமணர்கள் தாங்கள் கூறியபடி கழுவேறினர். அரசன் முதலிய அடியவர்களனைவரும் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவடியில் விழுந்து வணங்கித் துதிசெய்து மகிழ்ந்தனர். கழுவேறினொழிய ஏனை மற்றையோர் விபூதிசாதனந்தரித்துச் சைவராயினர்.

அதன் பின்பு பிள்ளையார் பாண்டியன் முதலாயினாரோடு சென்று சொக்கநாதரைத் தரிசித்து வணங்கி, இன்னும் பாண்டிநாட்டிலுள்ள சிவஸ்தலங்கள் பலவற்றையும் வணங்கி, அவ்விடம் விட்டுச் சோழநாட்டிலுள்ள ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, திருத்தெளிச்சேரியை யடைந்து, சிவதரிசனஞ் செய்துவருகையில், "பரசமய கோளரி வந்தார்" என்னுந் திருச்சின்னவோசையைப் போதிமங்கையிலிருக்கும் பௌத்தரில் புத்தநந்தி என்பவன் கேட்டு, மனம் பொறாது பௌத்தர்கூட்டம் சூழச்சென்று தடுத்தனன். அதைக் கேட்டுத் தேவாரத்திருமுறை எழுதும் சம்பந்த சரணாலயர் பொறுமை தேவாரத்திலே,

"புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன அஞ்செ ழுத்துமே."

என்னுந் திருப்பாடலை யோதி, "இப் புத்தனுடைய சிரம் உருண்டு வீழ்ந்திட இடிவீழ்ந்து விழக்கடவது" என்று சொல்லிய உடனே அவன் தலையில் இடிவிழுந் திறந்தனன். மற்றைப் பௌத்தர்கள் எல்லாம் அஞ்சியோடினர். மீண்டும் அவர்கள் ஒருங்கு கூடித் தம்மில் சாரிபுத்தனைத் தலைவனாக்கிக்கொண்டு, நீங்கள் எங்களோடு மந்திரவாதமின்றித் தருக்கஞ்செய்ய வாருமென்ன, திருஞானசம்பந்தசுவாமிகள், திருக்கூட்டத்துடன் அங்கோர் மண்டபத்தில் எழுந்தருள, சம்பந்த சரணாலயர் சுவாமிகளுக்கதாக பெற்றுச் சாரிபுத்தனோடு வாதுசெய்து, அவனை வென்று, அவர்களனைவரையுஞ் சைவர்க

வைத்தனர். பிள்ளையார் அங்கிருந்து புறப்பட்டு, மற்றைச் சிவஸ்தலங்கட்குச் சென்று, சிவதரிசனஞ் செய்துகொண்டு தொண்டை மண்டலத்துக்கு வந்து அங்குள்ள காஞ்சீபுர முதலிய ஸ்தலங்களை வணங்கி, ஸ்ரீகாளத்திக் கெழுந்தருளிச் சிவதரிசனஞ் செய்துகொண்டு, திருவொற்றியூர்க் கெழுந்தருளிச் சுவாமி தரிசனஞ்செய்து அங்கு வீற்றிருக்கையில், திருமயிலையில் வைசியகுல திலகராகிய சிவநேசரென்பவருக்குக் கபாலீசர் திருவருளால் ஒரு புத்திரியார் பிறந்து வளருநாளில், ஒரு நாள் மலர்பறிக்கப் பாங்கிமாரோடு நந்தவனத்திற்சென்று பூப்பறிக்கையில், அரவம் தீண்டி இறக்க, மணிமந்திர ஔஷதங்களாலும் தீராமை கண்டு, இவளைத் திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கென்று வைத்திருந்ததனால் தகனஞ் செய்து என்பையும் சாம்பலையும் அவர் வருமளவுஞ் சேமஞ் செய்து வைப்பேனென்று துணிந்து, அங்ஙனமே தகனஞ் செய்து, என்பையுஞ் சாம்பலையும் ஓர் குடத்திலிட்டு, வஸ்திராபரணங்க ளணிந்து, கன்னிமாடத்தில் பஞ்சணைமேல்வைத்து முன்போல உபசரித்து வந்தனர். இவ்வாறு செய்துகொண் டிருக்கையில், ஆளுடையபிள்ளையார் திருவொற்றியூரில் எழுந்தருளி யிருப்பதைக் கேள்வியுற்றுப் பரமானந்த மடைந்து அங்குச் சென்று "சுவாமிகளைக் கண்டு வணங்கித் திருமயிலைக் கெழுந்தருளும்படி விண்ணப்பஞ் செய்ய, அப்படியே பிள்ளையார் திருமயிலைக் கெழுந்தருளிக் கபாலீசரைத் தரிசித்து வணங்கிச், சிவநேசரை நோக்கி, என்பும் சாம்பருமிட்ட குடத்தைக் கொண்டுவரக் கட்டளையிட்டு, அவ்வங்கத்தை "மட்டிட்ட புன்னையங் கானல்மடமயிலை" என்னும் பதிகமோதிப் பெண்ணுருவாக்கிக் கபாலீசர் சந்நிதானத்தில் விடைபெற்றுக்கொண்டு, திருவான்மியூர் முதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, சீகாழிக் கெழுந்தருளித் தோணியப்பரைத் தரிசனஞ் செய்துகொண்டிருக்கையில், சிவபாதவிருதயரும் அவர் சுற்றத்தாரும் பிள்ளையார் திருமுன்புவந்து, தேவரீர் வைதிகநெறியை விளக்கும்பொருட்டு ஓர் கன்னிகையைத் திருக்கலியாணஞ் செய்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, உடன்பட்டுத் திருநல்லூரிலிருக்கும் நம்பியாண்டார்நம்பி என்பவருடைய புதல்வியை வேதவிதிப்படி திருமணஞ்செய்து, தீயை வலம்வரும் பொருட்டு எழுந்து, அக்கினி சிவபெருமானே என்று திருவுளங்கொண்டு ஆலயத்துட் சென்று, "கல்லூர்ப்பெருமணம்" என்னுந் திருப்பதிகம் பாடியருள, சிவபெருமான் திருவுள மகிழ்ந்து, "நீயும் உன் மனைவியும் உன்னுடைய விவாகத்தைக் காண வந்தவர்க ளியாவரும், இச் சோதிக்குள்வந்து நம்மையடையுங்கள்"



என்றருளி அவ்வாலயமுழுதுஞ் சோதியாக்கி, அச் சோதிக்குள் ஓர் வாயிலை வகுத்துக்காட்ட, திருஞானசம்பந்தசுவாமிகள், "காதலாகிக் கசிந்து" என்னும் நமச்சிவாயத் திருப்பதிகம் பாடியருளிக் கல்யாணத்துக்கு வந்தவர்களையெல்லாம் "இச்சோதிக்குள் செல்லுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளி, பின்பு தம்முடைய பத்தினியார் கையைப் பற்றிக்கொண்டு அச்சோதியை வலம்வந்து அதனுட்சென்று கலந்தனர்; பின்பு அந்தச்சோதி மறைந்து பழையபடி ஆலயமாகக் கண்டு மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் வணங்கித் தோத்திரஞ்செய்தார்கள். சுபம்! சுபம்!!

## திருஞானசம்பந்தசுவாமிகள் காலம்.

தற்காலத்துத் தமிழ் வல்லவர்க்கெல்லாம் திருஞான சம்பந்தர் காலவிஷயத்தில் சிறிது ஐயமுமில்லை. ஏட்டு முன்னரே அவர் காலம் ஏழாம் நூற்றாண்டென் றுரைப்பர். அஃதெவ்வாறென்று எழக்கூடிய கேள்விக்குத் தமிழ்ப் பிரமாணங்களில் விடைகாணுதல் அரிதாயிருத்தலின், அதனை யிவ்விடத்துச் சுருக்கிக் கூறுதல் நலந்தருவதே.

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரையர் சிறுத்தொண்டர் என்னும் மூவரும் ஒருகாலத்தவரென்பது இதுகாறுங் கூறப்பட்ட திவ்விய சரித்திரத்தால் அறியக்கிடக்கும். சிறுத்தொண்டர் திருஞான சம்பந்தர் காலத்திருந்தாரென்றற்குச் சரித்திரமேயன்றி,

செந்தண்பூம் புனல்பரந்த செங்காட்டங் குடிமேய
வெந்தநீ றணிமார்பன் சிறுத்தொண்ட னவன்வேண்ட
வந்தண்பூங் கலிக்காழி யடிகளையே யடிபரவுஞ்
சந்தங்கொள் சம்பந்தன் றமிழுரைப்போர் தக்கோரே.

என்னுந் திருச்செங்காட்டங்குடித் தேவாரமும் சான்று பகரும். மற்றும் பெரியபுராணத்துக் காணப்படும் சிறுத்தொண்டர் சரித்திரத்தால் அவர் தம்நாட்டரசனிடத்து அணுக்கராகி அவன் பொருட்டு யானை செலுத்திக்கொண்டு சென்று, அவனொடு மாறுபட்ட பல அரசர்களை வென்று, அவர்கள் தேசங்களைக் கைப்பற்றி, அவனால் நன்குமதிக்கப்பட்டவரென்றும், ஒருமுறை உத்தரதேசத்திலே வாதாவி யென்னும் நகரத்திற்சென்று அதனை வென்றனரென்றும் அறிகின்றோம்.

"ஈசனடி யார்க்கென்று மியல்பான பணிசெய்தே
பாரில்புகழ் மன்னவன்பா லணுக்கரா யவர்காகப்

பூசன்றனைக் கவிழுகைத்துப் பொய்யென்று பொருமாரர்
தேசங்கள் பலகொண்டு தேர்வேந்தன் பாற்சிறந்தார்."

மன்னவற்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன் மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையு
மின்னனவெண் ணிலகவர்ந்திக லரசன் முன்கொணர்ந்தார்.

என்பன பெரியபுராணச் செய்யுள்கள்.

தற்காலத்துப் பாதாமியாகிய வாதாவியில் அகப்பட்ட சிலை யெற்ற சாஸனமொன்றை வைத்து அந்த சளுக்கிய ராஜதானியைப் பல்லவ அரசன் கைப்பற்றிய விஷயம் வெளியாகின்றது. வேறுவழி யாலும் நரஸிம்ஹவர்மன் முதலாவான் என்னும் பல்லவ வேந்தன் புலிகேசி இரண்டாவனோ டெதிர்த்துப் போர்செய்து வாதாவியைப் பொடி படுத்தினனென் றுணர்கின்றோம். புலிகேசியினுடைய காலம் ஏறக்குறைய கி.பி. 609 முதல் கி.பி. 642 வரை என்று சொல்லும்படி யால் நரஸிம்ஹவர்மப் பல்லவன் காலமும் அது தானே யாகல்வேண் டும். அவனுக்காக வாதாவியை வென்ற சிறுத்தொண்டர் காலமும் அவரோ டுடனிருந்தவராகிய திருஞான சம்பந்தர் காலமும் ஏறக் குறைய அதுவே யென்பது தேற்றம். சிறுத்தொண்டர் தம் போர்த் தொழில் நீங்கி வீட்டிலிருந்து அறம்பயின்ற காலம் கி. பி. 642-க்குப் பிற்பட்டதாகல் வேண்டுமென்றெண்ண இடமுண்மையின் திருஞான சம்பந்தர் காலம் கிறிஸ்தாப்தம் ஏழாம் நூற்றாண்டின் நடுவென்பர்.

**திருஞானசம்பந்தசுவாமிகளுக்கு வயது கசு.**

**அவர் முத்தியடைந்த நாள் வைகாசிமூலநட்சத்திரம்.**

## திருஞானசம்பந்தசுவாமிகள்

## திவ்ய சரித்திரம்

## முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவசமயாசாரியராகிய

# திருநாவுக்கரசுசுவாமிகள்

# திவ்விய சரித்திரம்.

சந்தானாசாரியராகிய

## உமாபதிசிவாசாரியர்

திருவாய்மலர்ந்தருளிய

## புராணசாரம்.

போற்றுதிரு வாமூரில் வேளாண் டொன்மைப்
பொருவில்குறுக் கையர்குடியிற் புகழ னார்பால்
மாற்றருமன் பினிற்றிலக வதியா ராக
வந்துதித்த பின்புமரு ணீக்கி யாருந்
தோற்றியமண் சமயமுற துயர நீங்கத்
துணைவருட லவந்தசூலை நோயாற்
பாற்றருசீ ரடியெய்திப் பாடலிபுத் திரத்திற்
பாழியொழித் தானதிகைப் பதியில் வந்தார்.

வந்தமணக் கையருரை யீற சாத்தி
வண்டமிழ்பா ஞேய்நீங்கு வாக்கின் மன்னாய்
வெந்தபொடி விடம்வேழம் வேலை நீந்தி
வியன்சூலங் கொடியிடபம் விளங்கச் சாத்தி
யந்தமிலப் பூதிமக னரவு மாற்றி
படிக்காசு பெற்றுமறை யடைப்பு நீக்கிப்
பந்திமகிழ் ஐயாற்றிற் கயிலை கண்டு
பூம்புகலூ ரரன்பாதம் பொருந்தி னாரே.

திருமுனைப்பாடி நாட்டில் சிறப்புற்றோங்கிய திருவாமூரில் வேளாளர்குலத்தில் குறுக்கையர் குடியில் தோன்றிய புகழனார்செய்த அருந்தவத்தால் அவர் மனைவியாராகிய மாதினியார் திருவயிற்றில் திலகவதியார் அவதரித்தனர். பின்னர் மருணீக்கியாரென்னும் பின்னைத் திருநாமமுடைய திருநாவுக்கரசு சுவாமிகள் அவதரித்தனர். இவர்களிருவரில் மருணீக்கியார் சைவாகமமுதலிய கலைபயின்று வருநாளில், சில முதியோர் புகழனாரிடத்திலவந்து கலிப்பகையாரென்பவருக்குத் திலகவதியாரைத் திருமணஞ் செய்விக்கத் தரவேண்டும் என்றார்கள். அவர் அதற்கு உடன்பட்டனர். இச்செய்தியை அம்முதியோர் கலிப்பகையார்க் கறிவிக்க, அவரும் மணஞ்செய்துகொள்ள விருப்பமுற்றிருக்கும் போழ்து, சோழமகாராஜன் சேனாதிபதியாகிய கலிப்பகையாரை வடதேசத்துப் பகைமன்னரோடு போர்செய்யும்படி ஏவ; அவர் சேனையுடன்சென்று, பகைவரோடு நெடுநாள் யுத்தஞ்செய்துகொண்டிருந்தனர். அவர் அங்ஙனமிருக்க, இங்குப்புகழனாரும் மாதினியாரும் சிவபதம் அடைந்தனர். திலகவதியாரும் மருணீக்கியாரும் தாய்தந்தையர் தேகவியோக மடைந்தது கண்டு துன்புற்று, உற்றவர் தேற்றத் தெளிந்தும், மருணீக்கியார் தாய்தந்தைகட்குச் செய்யவேண்டுங் கருமாதிகளைச்செய்து முடித்தும் இருந்தனர். அங்கு அமர் செய்திருந்த கலிப்பகையார் பகைவரை வென்று புகழ்கொண்டு வீரசுவர்க்கம் எய்தியதைக் கேள்வியுற்று, திலகவதியார் உயிர் துறக்கக் கருதியபோது, மருணீக்கியார் வேண்ட அக்கருத்தை யொழித்து, சிவபெருமான் திருவடிக்க ணன்பு பூண்டு, அந்நெறிக்கண்ணே யிடையறாது தொழுது நின்றனர். தம் இளவலாகிய மருணீக்கியார் வீட்டு நெறியையடையக் கருதியும் சிவபெருமான் திருவருளின்மையின் மெய்ச்சமயமாகிய சைவசமயத்தை விட்டுப் பொய்ச்சமயமாகிய சமண சமயத்தைக் கைக்கொண்டு, அச்சமய நூல்களைக் கற்றுணர்ந்து, அவரின் மேம்பட்டுத் தருமசேனரென்னும் பெயர்பெற்று ஒழுகுவதைத் திருவதிகையிற் சென்று சிவவேடம் பூண்டு சிவாலயத்தில் திருவலகிடுதல், திருமெழுகிடுதல், திருமாலை தொடுத்தல் முதலிய திருத்தொண்டுசெய்து வாழுந் திலகவதியார் அறிந்து, தம்முடன் பிறந்தவராகிய மருணீக்கியார் பரசமயப்படுகுழியில் வீழ்ந்து கெடுவதை வீரட்டானேசுவரர் சந்நிதியில் நாடோறும் விண்ணப்பஞ் செய்யாநிற்க, ஒருநாள் வீரட்டானேசுவரர் திலகவதியார் சொப்பனத் தெழுந்தருளி, 'உன்னுடன் பிறந்தவனுக்குச் சூலைநோயை உண்டாக்கி, அதனை



ஆட்கொள்ளுகிறோம்; நீ துன்பப்பட வேண்டுவதில்லை'யென்று கட்டளையிட்டருளி, அவ்வாறே அவர்க்கு அந்நோயை உண்டாக்கிய வளவில், அவர்பொறாது தமக்குத்தெரிந்த மந்திரங்களாலும், சமணமுனிவர் மந்திரங்களாலும் தணிக்கவும், அது மேன்மேலுமுதிர்வது கண்டு, இனி யாதுசெய்வோமென்று வருந்தித் திலகவதியாருக் கறிவிக்க, அவர் நான் அங்குவாரேனென்றதை ஓர் ஏவலாளால் உணர்ந்து, அவரையே துணைப்பற்றிக்கொண்டு ஒருவர்க்குந் தெரியாது இராவழிக்கொண்டு சென்று, திருவதிகையென்னுஞ் சிவதலத்திற் சேர்ந்து திலகவதியாரைக் கண்டு வணங்கி, தாயே! இச்சூலைநோயால் யான் படுந் துயரத்திற்கோரளவில்லை; இது நீங்கும்படி நீர் அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, திலகவதியார் மனமிரங்கிச் சிவபெருமான் திருவருளைப் பலமுறை சிந்தித்துத் தொழுது, சகோதரராகிய மருணீக்கியாரைநோக்கி, நீர் கடைத்தேறும்பொருட்டு வீரட்டானேசுவரர் திருவருளால் உமக்கு இந்நோய் நேரிட்டது. ஆதலால் அவரைத் தொழுது துதித்தாலன்றித் தீராதென்று திருநீறளித்து, அணிந்துகொள்ளச் சொல்லிச் சுவாமி சந்நிதானத்திற்கு அழைத்துக்கொண்டுபோக, அவரும் உடன் சென்று, ஆலயத்தைப் பிரதக்ஷிணஞ்செய்து வணங்கிப் பரமபிதாவாகிய சிவபெருமான் திருவருளால் பதிகம்பாடவேண்டுமென்னும் பேரன்பு தம்முள்ளத்தின்கண் உதிக்க, அவ்வாறே "கூற்றாயினவாறு" என்னுந் திருப்பதிகம் பாடினர். அங்ஙனம் பாடியமாத்திரத்தில் அந்நோய் நீங்கப் பேரானந்த மடைந்து சிவபெருமான் திருவருள் இருந்தபடியைக் கருதிப் பரவசமுற்றிருக்கும்போது, நீ இனிமையாகப் பதிகமோதிய தன்மையால் உனக்கினி நாவுக்கரசு என வோர் பெயர் வழங்கக் கடவதென்று அசரீரிவாக்கு உண்டாக, அதுகேட்டு மிகுதியு மகிழ்வுற்றுப் பசுபதியைப் பலமுறை பணிந்து, அன்றுதொட்டுச் சிவவேடம் பூண்டு, திருத்தொண்டு செய்திருந்தனர்.

சமணர்கள் இஃதறிந்து, இனி நம்முடைய சமயம் பொய்த்தது, அரசன் இஃதுணர்ந்தால் அவனுஞ் சைவனாவான்; ஆதலால், அவன் அறிவதற்கு முன்னே நாம்போய் வேறுவகையாகத் தெரிவிக்கவேண்டுமென்று தம்முள் ஆலோசித்து அரசனிடத்துச்சென்று, தருமசேனர் சைவசமய விருப்பத்தால் அதிற் சேரக்கருதிக் கபடமாகத் தமக்குச் சூலைநோய் கண்டதென்றும், அது நம் மந்திரங்களாலுந் தீரவில்லையென்றும் கற்பித்து, நம்முடைய சமயத்தை இழிவுபடுத்தித் தம்முடைய தமக்கையினிடத்திற் சென்று, சைவராயினரென்று சொல்லினர். அரசனு மதுகேட்டு, வெகுண்டு, இங்ஙனஞ் சமயத்துரோகஞ்

செய்தவினை யாதுசெய்ய வேண்டுமென, அவர்கள் நீற்றறையி லிட வேண்டுமென்ன, அரசனுணையால் அவ்வண்ணமே செய்யத் திருநாவுக்கரசு சுவாமிகள், "மாசில்வீணையு மாலைமதியமும்" என்னும் திருப்பதிகம்பாடிச் சிவபெருமானைத் துதித்து, அதனுற் சிறிதும் இடையூறின்றி யிருக்க, சமணர்கள் ஏழாநாள் நீற்றறையைத்திறந்து பார்க்கும்போது, அவர் தமது திருமேனியில் யாதொரு துன்பமு மின்றி யிருக்கக்கண்டு அதிசயித்து, மீண்டும் பாலில் விடங்கலந்து கொடுக்க, அதையுமுண்டு உயிர் வாழ்ந்திருந்தனர். பின்னர் அவரை மிதிக்கும்படி யானையை யேவினர். அப்போது "சுண்ணவெண் சந்தனச்சாந்து" என்னும் பதிகம் பாடியருள, அவ்யானை திருநாவுக்கரசு சுவாமிகளை வணங்கித் தன்மேல் ஏறியிருந்த பாகனையுஞ் சமணரையுங் கொன்று சென்றது. பிறகு கற்றூணிற் கட்டிக் கடலில் விட்டனர். அப்பொழுது மருணீக்கியார் பஞ்சாக்ஷரத்தைத் தியானித்து, "சொற்றுணை வேதியன்" என்னும் பதிகம் பாடத் தொடங்கக் கட்டுகளெல்லாம் நீங்கி அக் கற்றூண் தெப்பம்போல் மிதக்க அதன்மேலிருந்து திருப்பதிகமுற்றும் பாடியருளி, திருப்பாதிரிப்புலியூருக்கடுத்த திருக்கெடிலநதி முகத்துவாரக் கரையிற் சேர்ந்து, திருப்பாதிரிப்புலியூர்க் கெழுந்தருளி, அங்குச் சிவபெருமானை வணங்கித் திருப்பதிகம்பாடித் துதித்து, மறுநாள் திருவதிகை வீரட்டானேசுவரஞ் சென்று, வணங்கித் திருப்பதிகம்பாடிக் கைத்தொண்டு முதலிய திருத்தொண்டு செய்தொழுகுநாளில் சமணராசனுகிய பல்லவனென்பவன் திருநாவுக்கரசு சுவாமிகளது உண்மையை உணர்ந்து, தானுஞ் சைவனாகிச் சமணர் மடம் ஆலயம் முதலியவற்றை இடித்து ஓர் சிவாலயப் பிரதிட்டை செய்து வாழ்ந்தனன்.

பின்பு திருநாவுக்கரசு சுவாமிகள் திருவதிகை வீரட்டானத்தினின்றும் புறப்பட்டு அருகிலுள்ள சிவாலயங்களனைத்தையுந் தரிசித்துத் திருப்பதிகம்பாடித் துதித்துத் திருத்தூங்கானை மாடத்திற் சென்று, சிவபெருமானைத் தரிசித்து வணங்கி நின்று, ஐயனே! சமணசமயச் சார்பிலிருந்த இவ்வுடலைப் பொறுத்திருக்க அருவருக்கின்றேன்; ஆதலால், தேவரீருடைய இலச்சினையை அடியேனுடலில் தரித்தருளவேண்டுமெனப் பதிகம்பாடித் துதிக்க, அவ்வாறே சிவபெருமான் திருவருளால் ஒருவர்க்குந் தெரியாமல் ஓர் பூதம் வந்து சூலக்குறியோடு இடபக்குறியையுந் தமது திருத்தோளில் பொறிக்க, மகிழ்ந்து, துதித்து, அங்கிருந்து புறப்பட்டு மற்றைச் சிவஸ்தலங்களையும் வணங்கிக்கொண்டு, அளவிலா அன்பு மேன்மேலும் பெருகச் சிதம்பரத்திற்சென்று, சிற்சபையில் ஆநந்தத் தாண்டவஞ் செய்த



ருளும் நடேசனைத்தொழுது, திருப்பதிகமோதித் துதித்து, விடைபெற்றுக்கொண்டு, திருஞானசம்பந்தசுவாமிகளைத் தரிசிக்கவேண்டுமென்னும் பேராசையோடு செல்லும்போது, அவர் தமது திருக்கூட்டத்துடன் எதிர்வரக் கண்டு வணங்கத் திருஞானசம்பந்தசுவாமிகள் அப்பரே! எழுந்திருமென்று தமது திருக்கரத்தாலெடுக்க, எழுந்திருந்து, அவருடன் சீகாழியிற் சென்று, சிவபெருமானைத் தரிசித்துத் திருப்பதிகம்பாடித் துதித்துத் திருஞானசம்பந்தசுவாமிகள் திருமாளிகையில் திருவமுது செய்து வீற்றிருந்து, சோழநாட்டிலுள்ள ஏனைய சிவாலயங்களைச் சென்று தரிசிக்கவேண்டுமென்னும் ஆவலோடு திருஞானசம்பந்த சுவாமிகளுடன் எழுந்தருளித் திருக்கோலக்காவிற் சென்று, சிவபெருமானைத்தொழுது பதிகம்பாடி அங்கிருந்து தனித்துச்சென்று, மற்றைச் சிவஸ்தலங்களையும் வணங்கிக்கொண்டு பிறகு திருச்சத்தி முற்றத்திற்சென்று, சிவபெருமானை பலமுறை பணிந்து, கூற்றன்வருமுன்னமே அடியேன் முடியில் தேவரீர் திருவடி சூட்டவேண்டுமெனத் திருப்பதிகம் பாடியருள, சுவாமி திருநல்லூர்க்கு வருகவென, அவ்வாறே யங்குச்சென்று ஆலயத்தில் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து நின்றுதொழுது, எம்பெருமான் திருவடி சூட்ட, திருப்பதிகம்பாடித் துதித்து, அங்கிருந்து புறப்பட்டுத் திங்களூரிற்சென்று, தம்மிடத் தன்புள்ள அப்பூதி நாயனாரைக்கண்டு மகிழ்ந்து, அவரது வேண்டுகோளால் அவர் திருமனையில் திருவமுது செய்ய உடன்பட்டமையால், அந்நாயனார் மனைவியார் திருவமுது சமைத்து மூத்த திருநாவுக்கரசென்னும் புதல்வனை நோக்கி, நீ சென்று வாழையிலை கொய்து வருகவென்று ஏவ, அப்புதல்வன் சென்று வாழையிலை யறுக்கும்பொழுது, சர்ப்பந்தீண்டிற்று. அவன் கொய்த இலையைக்கொண்டு வந்து தாய்கையிற் கொடுத்திறந்தனன். அவர்கள் கண்டு விஷந்தீண்டி யிருக்கலாமென்று தமக்குள் குறிப்பாலறிந்து இவ்வுயிர் நீங்கிய வுடலை மறைத்துத் திருநாவுக்கரசு சுவாமிகளிடத்துச் சென்று, திருவமுது கொள்ள எழுந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, இவர் இஃதுணர்ந்து தேவாரமோதிப் புத்திரனைப் பிழைப்பித்து, அப்பூதி நாயனருடன் திருவமுதுசெய்து அங்கிருந்து புறப்பட்டுத் திருவாரூரிற் சென்று, திருக்கோயிலுட் புகுந்து வன்மீகநாதரைப் பதிகம்பாடித் துதித்துத் திருப்புகலூர்க்கு வருகையில் அங்கு முன்னமே எழுந்தருளியிருந்த திருஞானசம்பந்தசுவாமிகள் கேள்வியுற்று, எதிர்கொண்டு வர, இருவருங்கண்டு வணங்கித் திருப்புகலூரைச் சேர்ந்து, சிவதரிசனஞ்செய்து, திருப்பதிகமோதி முருகநாயனர் திருமடத்தில் எழுந்தருளித் திருவமுதுசெய்து, திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாரூர்க் கெழுந்தருள, திருநாவுக்கரசு

சுவாமிகள் அங்குள்ள மற்ற சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, மீண்டும் திருப்புகலூரில் முருகநாயனர் திருமடத்தில் வீற்றிருக்கத் திருஞானசம்பந்தசுவாமிகளும் அங்கெழுந்தருளினர். பின்னர் இவ்விருவர்களும் திருவீழிமிழலையிற்சென்று, சிவதரிசனம்பண்ணித் தேவாரமோதித் துதித்து அங்கிருக்கும்பொழுது. காலமழையின்றிப் பஞ்சமதிகரிக்கச் சிவபெருமான் திருவுளமிரங்கித் தம்மடியாருக்குப் படிக்காசு கொடுத்தருள, அதனால் இடைவிடாது வருகின்ற சிவனடியார்கள் யாவர்க்கும் அமுதுபடைத்துக்கொண்டிருந்து, பிறகு திருமறைக்காடென்னுந் தலத்திற்சென்று தேவர்பூசித்துச் சாத்திய திருக்கதவம் திறக்கும்படி, "பண்ணினேர்மொழியா ளுமைபங்கரோ" என்னுந் திருப்பதிகமோதிப் பின்னர்ச் சோழநாட்டின் கண்ணும் நடுநாட்டின் கண்ணுமுள்ள சிவஸ்தலங்க ளனைத்தையுந் தரிசித்து வணங்கித் தொண்டைநாட்டிற் கெழுந்தருளி, அங்குள்ள காஞ்சீபுரமுதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, திருக்காளத்திமலைக் கெழுந்தருளிச் சிவபெருமானைத் தரிசிக்கும்பொழுது ஸ்ரீ கைலாசம் தரிசனமாக, அங்கிருந்து புறப்பட்டு ஸ்ரீ மல்லிகார்ச்சுன மென்னுந் தலத்திற் சேர்ந்து, சிவபெருமானைத் தரிசித்துத் திருப்பதிக மோதித் துதித்து, விடைபெற்றுக்கொண்டு, வடக்கு நோக்கிச்சென்று, கங்கைக்கரை சேர்ந்து, காசி விசுவநாதனைத் தரிசித்துவணங்கி, அங்குத் தம்பரிசனங்களை நிறுத்தித் தாந்தனியே இரவும் பகலும் இடைவிடாமல் நடந்து, காடுமலை நாடு யாவுங் கடந்து பாலைவனத்திற் செல்லும்பொழுது அதன்வெப்பத்தாற் கால்கள் பரடுவரையிலும் கைகள் மணிக்கட்டு வரையிலுந் தேய, நடக்கச் சத்தியற்றுப் பின்னர் மார்பால் தவழ்ந்தும் புரண்டும் சென்று, அதற்குஞ் சத்தியின்மையால் மூர்ச்சித்துக்கிடக்க, சிவபெருமான் திருவுளமிரங்கி, இவ்வுலகத்தின்கணுள்ள ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுத் திருப்பதிகம்பாடியருளவேண்டுமென்னும் கருத்தால் திருக்கைலாயத்திற்குவரக் கட்டளையிட்டருளாது, ஓர் பிராமண வடிவங்கொண்டு திருநாவுக்கரசு சுவாமிகளுக்குமுன் னெழுந்தருளி, நீரிங்ஙனம் வருந்துவதென்னையென்றார். அப்பொழுது சிவபெருமான் கிருபா நோக்க வீக்ஷண்ய விசேஷத்தால் திருநாவுக்கரசு சுவாமிகள் சற்றுணர்வுற்று, அம்மறையவரை நோக்கித் திருக்கைலாச தரிசனஞ் செய்யவேண்டுமென்னும் பேராசையால், இங்ஙனம் வந்தேனென்ன, அதற்கு அவ்வந்தணர் திருக்கைலாச தரிசனம் மானிடர்களுக்குக் கிடைக்கத்தக்கதோவென, இவ்வுடல் எவ்வகையானுமழிவது ஆகையால், கைலாசதரிசனஞ் செய்தாலொழிய மீளேனென்றனர். அவரது மனவுறுதியை நன்குணர்ந்த சிவபெருமான் அப்பிராமணவுருக் கரந்து



அறவடிவாகிய இடபவாகனத்தின் மேல் பார்வதி சமேதராய்த் தோன்றி, நாவுக்கரசு! எழுந்திரு வென்று அருளிய அளவில் திருநாவுக்கரசு சுவாமிகள் திருமேனி முன்போலப் பழுதின்றி விளங்க, உணர்வுற்றுச் சிவபெருமானை, அடிமைக்குத் திருக்கைலாச தரிசனந் தந்தருள வேண்டுமென்று பலவாறுகத் தோத்திரஞ் செய்தனர். சுவாமி எழுந்தருளியபோது உண்டாகிய தடாகத்தைக் காட்டி, இதில்முழுகித் திருவையாற்றிற்சென்றால், அங்குக் கைலாச தரிசனஞ் செய்வாயென்றார். அவ்வண்ணமே அத்தடாகத்தில் அவர் மூழ்கித் திருவையாற்றில் ஓர் தடாகக் கரையிலேறிச் சிவபெருமான் சந்நிதானத்திற்சென்று, நந்திதேவர் முதலிய பிரதமகணங்களும், முனிவர்களும், இந்திராதிதேவர்களும் வந்து நெருங்கி யிருக்கவும் தேவதுந்துபி முழங்கவும் நான்கு வேதங்களும் கோஷிக்கவும், பார்வதி சமேதராய் எழுந்தருளியிருக்கும் கைலாசபதியைக்கண்டு தரிசித்து வணங்கி ஆனந்தபரவசராய்த் திருப்பதிகம் பாடித் துதித்துப் பின்பு அக்காட்சியொழிய்ப் பழையபடி ஆலயமாயிருக்கக்கண்டு மனவருத்தமடைந்து, இன்னுமுள்ள சிவஸ்தலங்களனைத்தையுஞ்சென்று தரிசிக்கவேண்டுமென்னும் பேரன்பினால் திருப்பூந்துருத்தி என்னும் சிவஸ்தலத்திற் கெழுந்தருளிச் சிவதரிசனம் பண்ணித் திருப்பதிகம்பாடித் துதித்துக் கைத்தொண்டுசெய்து அங்கோர் மடாலயம் கட்டுவித்து அதில் வீற்றிருந்து காலங்கள் தோறுந் தவறாது சிவதரிசனஞ் செய்து கொண்டிருக்கையில், திருஞானசம்பந்த சுவாமிகள் மதுரைக்கெழுந்தருளிச் சமணரை வாதில்வென்று மீண்டும் சோழவளநாட்டிற்கு வரும்போது திருநாவுக்கரசு சுவாமிகளை காணவேண்டுமென்னும் ஆசையால் திருப்பூந்துருத்திக் கெழுந்தருள, அதைத் திருநாவுக்கரசு சுவாமிகளுணர்ந்து ஒருவரு மறியாது சென்று, திருஞான சம்பந்த சுவாமிகள் எழுந்தருளிய முத்துச் சிவிகையைத் தமது அருமைத் திருத்தோளால் தாங்க அதைத் திருஞானசம்பந்த சுவாமிகள் அறியாமையால் அப்பர் எங்கு என்ன, அடியேன் தேவரீர் முத்துச் சிவிகையைத் தாங்கும் பெருவாழ்வு பெற்றுளேனென்றார். அம்மொழி தம் திருச்செவியில் புகுமுன் திருஞானசம்பந்த சுவாமிகள் விரைவிற் சிவிகையை விட்டிறங்கித் திருநாவுக்கரசு சுவாமிகளைப் பணிய, அவரதற்கு முன்னமே வணங்கக் கண்ட சிவனடியார்களெவரும் அவ்விருவர்களையும் தொழுது அடங்கா மகிழ்ச்சியுற ஆரவாரித்தனர். பிறகு திருஞானசம்பந்த சுவாமிகளும் திருநாவுக்கரசு சுவாமிகளும் ஆலயத்திற் கெழுந்தருளிச் சுவாமி தரிசனஞ் செய்து திருமடத்திற் போய், இருவரும் அளவளாவி யுரைத்திருக்கையில் மதுரையில் நடந்த செய்திகளெல்லாவற்றையுந் திருக்கூட்டத்தார் கூறக்கேட்டு, ஆனந்த

முடைந்ததுமன்றிக் குலச்சிறை நாயனார் மங்கையர்க்கரசியார் ஆகிய இவர்களுடைய சிவநேச மிகுதியைத் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளக் கேட்டுப் பரவசமுடைந்து உடனே தாமும் மதுரைக் கெழுந்தருளிச் சொக்கநாதரையும் அங்கயற்கண்ணம்மையையும் தரிசித்துத் திருப்பதிகம் பாடித் துதித்திருக்கையில் மந்திரியாராகிய குலச்சிறை நாயனாரும் பாண்டியராசராகிய நின்றசீர் நெடுமாறநாயனாரும் வந்து வணங்க, மகிழ்ந்து, அவர்க்கினிய வசனங்கள் சொல்லிப் போக்கி, அங்கிருந்து புறப்பட்டு இடையிலுள்ள சிவஸ்தலங்களைத் தரிசித்து இராமேச்சுரத்துக் கெழுந்தருளி இராமேச்சுரரைத் தரிசித்துப் பதிகம்பாடிச் சாத்தி, அங்குச் சில நாள் வரையில் இருந்து மீண்டும் சோழவளநாட்டிற் கெழுந்தருளித் திருப்புகலூரிற் சென்று, சிவபெருமானைத் தரிசித்து வணங்கி, அங்குழவாரத்தாற் கைத்தொண்டு செய்து வாழுநாளில் பரமகாருண்யராகிய சிவபெருமானார் திருநாவுக்கரசு சுவாமிகளது பக்தி மிகுதியை உலகத்தின் கண்ணுள்ள ஆன்மகோடிகளுக் கறிவிக்கும்பொருட்டு அவர் உழவாரப்படையாற் செதுக்குமிடங்களி லெல்லாம் பொற்குவையும் நவமணிக்குவையுமாகச் செய்தருள அவற்றை ஓடுங் கற்களுமாக மதித்துத் திருவலகிட்டெறியப் பின்பு அவரை மயக்கும்படி அரமகளிரை ஏவ அவர்களங்ஙனம் மெய்தி மயக்க, அது கண்டு திருநாவுக்கரசு சுவாமிகள் வினையை முன்னிலைப்படுத்தி "பொய்மாயப் பெருங்கடலில்" என்னுந் திருத்தாண்டக மோதியருள, அம்மாதர்கள் இவரை மயக்குவது நம்மாலாவதன்றென்று கருதிப் போயினர். பின்பு திருநாவுக்கரசு சுவாமிகள் அத்தலத்திலேயே சிவபெருமானை இடையறாது தரிசனஞ்செய்து பதிகம்பாடிச் சாத்தி வாழுநாளில் ஓர்நாள் "எண்ணுகேனென்சொல்லி யெண்ணுகேனே" என்னுந் திருத்தாண்டக மோதிச் சிவானந்தாதீதராய்ச் சிவபெருமான் திருவடி நீழலில் சேர்ந்தருளினர். சுபம்! சுபம்!!

## திருநாவுக்கரசுசுவாமிகள் காலம்.

திருஞானசம்பந்தசுவாமிகள் சரித்திர விறுதியிற் கூறியவாறே இவரும் திருநாவுக்கரசுசுவாமிகளும் ஒரே காலத்தின ரென்றுரைத்தலை இப்பொழுது கூறிமுடித்த சரித்திரமும் நிலைபெறுத்தும். அதனாலேயே திருநாவுக்கரசுசுவாமிகளுந் திருஞானசம்பந்தசுவாமிகளைப் போலவே கிறிஸ்தாப்தம் ஏழாம் நூற்றாண்டின் நடுவிற் றிகழ்ந்தவரென்று தடையின்றி யுரைக்கலாம். ஆயினுஞ் சம்பந்தர் பதினாறாண்டே யுலகிலிருந் திலரென்று கூறும் ஐதிகம். அப்பர் எண்பத்தொன்



றாண்டிருந்தன ரென்று கூறும். ஆகலின் அப்பர் சம்பந்தர்க்கு முன்னே பிறந்தே முன்னும் பின்னுமே நெடுங்காலஞ் சீவித்திருந்தவராதல்வேண்டும். மற்றுந் திரிசிராப்பள்ளிக் குகையிற்கண்ட சாஸனங்களையும், அப்பர் சரிதையினையும் ஒப்பு நோக்குவமாயின் அவர் குணபரனென்னும் பல்லவ மன்னன் காலத்தவரென்று கூற விடமுண்டு. குணபரன் முற்குறித்த நரசிம்மவர்மப்பல்லவன் தந்தையாகிய மஹேந்திரவர்மனேயாதலும். இதனால் அப்பர் ஞானசம்பந்தர் பிறக்கு முன்னமே புகழ்பெற்றிருத்தல் கூடுமென வறிதல் தவறாகாது. ஆகவே அப்பர் காலம் ஏழாம் நூற்றாண்டு முதலும் நடுவுமாதல்வேண்டும்.

திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு வயது ௮௧.

அவர் முத்தியடைந்தநாள் சித்திரைமாசம் சதய நக்ஷத்திரம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்

திவ்ய சரித்திரம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவசமயாசாரியராகிய

# சுந்தரமூர்த்திசுவாமிகள்

# திவ்வியசரித்திரம்.

சந்தானாசாரியாராகிய

உமாபதிசிவாசாரியார்

திருவாய்மலர்ந்தருளிய

## புராணசாரம்.

தண்கயிலை யதுநீங்கி நாவ லூர்வாழ்
சைவனார் சடையனார் தனய னாய்
மண்புகழ வருட்டுறையா னோலை காட்டி
மணம்விலக்க வன்றொண்டா யதிகை சேர்ந்து
நண்பினுட னருள்புரிய வாரூர் மேவி
நலங்கிளரும் பரவைதோ ளணைந்து வைகித்
திண்ணுலவும் விறன்மிண்டர் திறல்கண் டேத்துந்
திருத்தொண்டத் தொகையருளாற் செப்பி னாரே.

செப்பலருங் குண்டையூர் நெல்ல ழைத்துத்
திருப்புகலூர்ச் செங்கல்செழும் பொன்னாச் செய்து
தப்பின்முது குன்றர்தரும் பொருளாற் றிட்டுத்
தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்து நாத
னொப்பிறனித் தூதுவந்தா ருடனே நீதி
யுறுமுதலை சிறுமதலை யுமிழ நல்கி
மெய்ப்பெரிய களிறேறி யருளாற் சேர
வேந்தருடன் கயிலை மேவி னாரே.

## திவ்விய சரித்திரம்.

திருக்கைலாசமலையில் பார்வதியாரோடு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய மெய்த்தொண்டர் அறுபத்துமூவரில் ஒருவராகிய ஆலாலசுந்தர ரென்பவர், ஒருநாள் அப் பரமபதிக்குப் பூமாலை தொடுத்து அணிதற்பொருட்டு, மலர்கொய்தற்குத் திருநந்தவனத்திற்சென்றபோது, உமாதேவியார்க்கு மலர்மாலை கட்டிச் சாத்துதற்கு அவ் வனத்திற் பூப்பறித்துநின்ற அவருடைய சேடியர்களாகிய அநிந்திதை, கமலினி என்னும் பெயருடைய பெண்கள் இருவர்மேல் இச்சைகொண்டார். அவர்களும் ஆலால சுந்தரரைக்கண்டு அவர்மேல் ஆசை கொண்டார்கள். பின்பு ஒருவாறு மனத்தை மீட்டுக்கொண்டு ஆலாலசுந்தரர் சிவசந்நிதானத்துக்கும் சேடியர்கள் தாயார் சந்நிதிக்குஞ் சென்றனர். சர்வாந்தரியாமியாகிய கைலாசபதி ஆலாலசுந்தரரை நோக்கி, "நீ பெண்கள் மேல் இச்சை கொண்டமையால் தக்ஷிணபூமியில் மானுடதேகமெடுத்து அப் பெண்களோடு கூடி யின்பமநுபவிப்பாயாக" என்று திருவாய்மலர்ந்தருளக் கேட்டு, ஆலாலசுந்தரர் நடுநடுங்கிச் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, எழுந்துநின்று அஞ்சலியஸ்தராய்க் "கருணைக்கடலே! மனிதனாய்ப்பிறந்து சமுசார சாகரத்தில் மூழ்கி, செய்வது இன்னது, தவிர்ப்பது இன்னது என்று அறியாது மயங்கும்பொழுது தேவரீர் என்னைத் தடுத்தாட்கொள்ள வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்ய, சிவபெருமானார் அதற்குத் திருவுள மிசைந்தனர்.

அவ்வாறே ஆலாலசுந்தரர் புண்ணிய பூமியாகிய பரதகண்டத்தில் தென்தேசத்தில் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் ஆதிசைவப் பிராமணகுலத்தில் சடையனாருடைய கற்புக்கிருப்பிடமாகிய இசைஞானியார் திருவயிற்றில் அவதரித்து, நம்பியாரூரரென்னும் பிள்ளைத் திருநாமம் பெற்று, ஒருநாள் வீதியில் சிறுதேர் உருட்டி விளையாடுகையில், அந் நாட்டரசராகிய நரசிங்கமுனையரையர் கண்டு சடையனார் சம்மதத்தின்மேல் அப்பிள்ளையைத் தம் மாளிகைக்கு எடுத்துக்கொண்டுபோய் அபிமான புத்திரராகப் பாவித்து வளர்க்க வளர்ந்தாராயினும், பிராமணகுலத்துக்குரிய ஒழுக்கமுடையராய்த் தக்க பருவத்தில் உபநயனஞ் செய்யப்பெற்று, வேதாகமமுதலிய சகல சாஸ்திரங்களிலும் வல்லவராய்த் திருமணஞ் செய்துகொள்ளுதற்குரிய பருவத்தை யடைந்தனர். அதுகண்டு, தந்தையாராகிய சடையனார் தம் மரபுக்கேற்ற புத்தூரிலுள்ள சடங்கவி சிவாசாரியரிடத்தில் அவர் புத்திரியைத் தம் புத்திரருக்கு மணம்பேசச் சில முதியோரை அனுப்பினார், அவர்கள் சடங்கவி சிவாசாரியரிடத்திற்சென்று பேசி

டுள்ள உடம்பாட்டைச் செய்தியைச் சடையனாருக்கு அறிவித்தனர். அப்பொழுது சடையனார் மனமகிழ்ந்து, விவாக சுபதின முகூர்த்தம் நிச்சயித்துத் தம் ஞாதிகள் முதலிய உறவினரையும், நட்பினர் யாவரையும் திருமணவோலைபோக்கி வரவழைத்தனர். பின்பு, நம்பியாரூராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமணக்கோலம்பூண்டு, குதிரையிலேறிச் சகல சம்பிரமத்தோடும் புத்தூரில் சடங்கவியார் வீட்டில் திருக்கல்யாணப் பந்தர்க்குமுன் சென்று, குதிரையினின்றிழிந்து, உள்ளேபோய் ஆசனத்திருந்தனர். அப்பொழுது சிவபெருமான் தாம் திருக்கைலாசத்தில் ஆலாலசுந்தரர்க்குத் திருவாக்களித்தபடி ஓர் வயோதிகப்பிராமண வடிவங்கொண்டு அந்தக் கல்யாணப்பந்தலில் எழுந்தருளிவந்து, அங்குள்ளவர்க்கெதிரில் நம்பியாரூரரை நோக்கி, 'உனக்கும் எனக்கும் ஒரு வழக்கிருக்கிறது. அது தீர்ந்தபிறகுதான் நீ விவாகஞ் செய்துகொள்ளவேண்டும்' என்றனர். நம்பியாரூரர், 'உனக்கும் எனக்கும் உள்ள வழக்கு யாது' என்ன, அவ்வையர் அங்குள்ள பிராமணர்களைநோக்கி, 'இந்த நம்பியாரூரன் எனக்கு அடிமை' என்றார். அதுகேட்ட நம்பியாரூரர் இவ்வையர் சொல்லியது நன்றாயிருக்கிறதென்று பழித்துச்சிரிக்க, பிராமணவேடம் பூண்டுவந்த கடவுள், 'உன்பாட்டன் எழுதிக்கொடுத்த முறியோலை இதோ இருக்கிறது. அப்படியிருக்க நீ பரிகாசஞ்செய்தது என்ன?' என்றார். நம்பியாரூரர் ஐயரைநோக்கி, 'பிராமணருக்குப் பிராமணர் அடிமைப்படுதல் இன்றுதான் நீர் சொல்லக் கேட்டோம்; நீ பித்தனோ?' என்ன, ஐயர், 'நான் பித்தனுமாகட்டும், பேயனுமாகட்டும், நான் அதற்குச் சிறிதும் வெட்கமடையேன், நீ விநோதவார்த்தைகள் பேசவேண்டாம், அடிமைத்தொழில் செய்ய வா' என்றார். நம்பியாரூரர் 'ஐயரே! அவ்வோலையைக் காட்டு'மென்ன, ஐயர், 'நீ இந்த வோலையைப்பார்த்து நிச்சயிக்கத்தக்கவனோ? நான் இந்தச் சபையாருக்குக் காட்டி' மெய்யென்று ஒப்புக்கொள்ளச் செய்வித்தபின், அடிமைத்தொழில் செய்யமாத்திரம் தக்கவன்' என்றார். அதுகேட்டு நம்பியாரூரர் கோபங்கொண்டு, அவர் கையிலுள்ள ஓலையைப்பறிக்க அவருக்கு எதிர்சென்றதனால், அவரோடத் தாம் பின்தொடர்ந்தோடிப் பிடித்து ஓலையைப்பறித்துக்கிழித்தனர். சுந்தரமூர்த்தியைப்பிடித்து ஒருதரம் இது முறையோவென்று கூச்சலிட, சமீபத்திலிருந்தவர்கள் இருவரையும் விலக்கி, உலகத்தில் எங்கேனும் நடந்திராத செய்தியைக் கொண்டு வழக்காடுகிற பிராமணரே! நீர் எங்கேயிருக்கிறவர் சொல்லும்மென, 'நான் இந்தத் திருவெண்ணெய் நல்லூரில் இருக்கிறவன்; அஃதிருக்கட்டும், இந்த நம்பியாரூரன் அறநெறிக்கு விரோதமாக என் கையில் இருந்த ஓலையைப் பலாத்காரமாய்ப் பிடுங்கிக் கிழித்ததனால் தான் எனக்கடிமை என்பதை



ஸ்திரப்படுத்தினான்' என்றார். அப்பொழுது நம்பியாரூரர் நீர் திருவெண்ணெய் நல்லூரில் இருப்பவராயின், உம்முடைய தப்பு வழக்கை அங்கே தானே பேசித் தீர்ப்புச்செய்ய வாரும் என்ன, ஐயர் அது கேட்டுத் திருவெண்ணெய் நல்லூரில் உள்ள பிராமணர்களுக்கு முன் ஆதியில் எழுதிய மூல ஓலையைக் காட்டி, நீ எனக்கு அடிமை என்பதைச் சாதிப்பேனென்று தண்டூன்றிக்கொண்டு முன்னே சென்றார். நம்பியாரூரரும் மற்றைப் பிராமணர்களும் பின்னே போயினர்.

ஐயர் தமக்குப் பின்வந்த நம்பியாரூரரோடும் மற்றைப் பிராமணரோடும் திருவெண்ணெய் நல்லூரைச் சேர்ந்து, அங்குக் கூடிய பிராமணர்களுக் கெதிரில் அவர்களை நோக்கி, 'அறிவிற் சிறந்த பெரியோர்களே! இந்த நம்பியாரூரன் எனக்கடிமையென்று காட்டிய ஓலையைப் பறித்துக் கிழித்து விட்டு உங்களிடத்திற்கு வந்திருக்கிறான்' என்று முறையிட்டார். அதைக் கேட்ட பிராமணர்கள் அவரைப் பார்த்து, 'பிராமணர்கள் அடிமைப்படுதல் இவ்வுலகத்தில் எக்காலத்துமில்லையே! ஐயரே! நீர் என்ன தப்புவார்த்தை சொல்லுகின்றீர்' என்ன, ஐயர், 'நான் சொல்லியது பொய்யன்று, மெய்யே இவன் பறித்துக் கிழித்தவோலை இவனுடைய பாட்டன், தானும் தன் உறவினரும் எனக்கடிமை என்றெழுதிக் கொடுத்தவோலை' என்றார். உடனே பிராமணர்கள் நம்பியாரூரரை நோக்கி, 'இவர் உம்முடைய பாட்டன் எழுதிக்கொடுத்த முறியோலையைக் காட்டினால் நீர் அதைப் பறித்துக் கிழிக்கலாமா? அதனால் உம்முடைய பக்ஷம் செயித்ததாமா? இவர் தம் வழக்கை யாவரும் ஒத்துக்கொள்ளும்படி கூறினர். இனி உம்முடைய கருத்து யாது?' என்ன, அதற்குச் சுந்தரர், 'வேதாகம முதலிய யாவுங் கற்றுணர்ந்த மகான்களே! நான் ஆதிசைவனென்பதை நீங்களெல்லா மறிவீர்களே! அப்படியிருக்க இந்தப் பிராமணர் என்னைத் தமக்கடிமை யென்று சாதிக்கிறாரே! இது மனத்தால் நிச்சயிக்கத் தகாத மாயை என்றே நினைத்தல் வேண்டும். நானிதற்கு என்ன சொல்வேன்' என்ன, அதைக் கேட்ட பிராமணர் அவ்வையரை நோக்கி, 'நீர் இவரை உம்முடைய அடிமையென்று சொல்லுகிறதற்கு அநுபவம், லிகிதம், சாக்ஷி இம்மூன்றிலொன்று உம்மிடத்தில் இருக்கவேண்டுமே அதைக் காட்டும்' என்றார்கள். அப்பொழுது ஐயர், 'இவன் கிழித்த ஓலை மூலவோலையைப் பார்த்து எழுதிய படியோலை. மூலவோலையோ என்னிடத்திருக்கின்றது' என்றார். பிராமணர், 'ஆனால் அதைக் காட்டு'மென்ன, ஐயர், 'ஆனால் அதையும் முன்போலப்பறித்துக் கிழித்துப்போட்டால் என்செய்வேன்? ஆதலால், அப்படிச்செய்யாதபடித் திட்டஞ் செய்வீர்களே யானால் காட்டுகிறேன்'

னென்ன, பிராமணர், 'இழிக்கவொட்டோம், காட்டும்' என்றார்கள். ஐயர் மூலவோலையைக் கையிலெடுத்தனர். அப்பொழுது சபையார் கட்டளையின்படி ஓர் கணக்குப்பிள்ளை எழுந்து அவரைக் கும்பிட்டு ஓலையை வாங்கிச் சபையிலுள்ளார் கேட்கும்படி,

"திருநாவலூரிலிருக்கும் ஆதிசைவனாகிய
ஆரூரனென்னும் நான் திருவெண்ணெய்
நல்லூரிலிருக்கும் பித்தனுக்கு, நானுமென்
சந்ததியாரும் வழித்தொண்டுசெய்ய
உள்ளும்புறமும் ஒப்ப உடன்பட்டெழு
திக்கொடுத்தேன்.

இப்படிக்கு,
ஆரூரன்."

என்று வாசித்தான். அதிற் சாக்ஷி கையெழுத்திட்டவர்களும் தங்கள் கையெழுத்தென்றே ஒப்புக்கொண்டனர். அதன் பின்பு பிராமணர்கள் நம்பியாரூரரை நோக்கி, "இது உம்முடைய பாட்டன் கையெழுத்துத் தானோ பாரும்" என்றார்கள். ஐயர் அவர்களைப் பார்த்து, 'இச்சிறுவன் தன்னடிமை யோலையில் எழுதிய தன் பாட்டன் கையெழுத்தை அறியச் சக்தியுள்ளவனோ? இவன் பாட்டன் எழுதிய வேறு கைச்சாத்திருந்தால் அதை வருவித்துப் பார்த்து ஒத்திருந்தால் உங்களுக்குத் தோன்றிய தீர்ப்புச் சொல்லுங்கள்' என்ற அளவில், அப்படியே அவர் பாட்டனார் கைச்சாத்தொன்று அழைப்பித்துப் பார்த்து ஒத்திருக்கக் கண்டு, 'இனி நீர் தப்ப வழி இல்லை. நீர் இந்தப் பிராமணருக்குத் தோற்றீர். ஆதலால் அவர் கருத்தின்படி அடிமை செய்வதே கடன்' என்றார்கள். ஆலாலசுந்தரர், 'விதிமுறை யிதுவாயின் நானுடன்படவேனென்று சொல்லக்கடவேனோ?' என்று நின்றார். அப்பொழுது பிராமணர் அவ்வையரை நோக்கி, 'நீர் காட்டிய மூலவோலையில் உங்களூரே எங்களுடைய ஊராக எழுதப்பட்டிருக்கின்றது. ஆகையால் உமக்கு இங்கே தலைமுறையாகவுள்ள வீடும் வ்ருத்தியும் காட்டுமென்ன, காட்டுகிறேன் வாருங்களென்று நம்பியாரூரரும் பிராமணர்களும் பின்தொடர்ந்துவரத் தாம் அவ்வூரிலுள்ள திருவருட்டுறை என்னுஞ் சிவாலயத்துள்ளே போயினர். பின் போன சபையார் அவரைக் காணாது திகைத்து நின்றார்கள்.

அப்பொழுது சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்னை அடிமைகொண்ட பிராமணர் திருக்கோயிலுள்ளே புகுந்தது என்ன ஆச்சரியமென்று கருதி, அத்தியந்த ஆசையோடு தனித்து அவரைப் பின்தொடர்ந்து போய்க்கூப்பிடச் சிவபெருமான் அறவடிவாகிய இடபவா



கனத்தின்மேல் பார்வதி சமேதராய் எழுந்தருளி, "நீ நமக்கு முன்னே தொண்டனாயிருந்தாய். பெண்கள் மேல் ஆசை வைத்ததனால் நம்முடைய ஆணையால் பூமியிற் பிறந்தாய்; இப்பொழுது சமுசார பந்தமானது உன்னைத் தொடராதபடி நாமே வலியவந்து தடுத்தாட்கொண்டோம்" என்று திருவாய் மலர்ந்தருளினார். இவ்வாறெழுந்த அருமைத் திருவாக்குச் செவியில் நுழையச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவசப்பட்டு அடியற்ற மரம்போல் பூமியில் விழுந்து அஷ்டாங்கநமஸ்காரம் பண்ணி ஆநந்தக் கண்ணீர் பெருக எழுந்து நின்று இரண்டு கைகளையும் சிரசின்மேற் குவித்து, 'பொன்னம்பலத்தில் பஞ்சகிருத்தியத் திருநடனஞ் செய்தருளும் சுவாமி! தேவரீர் ஒன்றுக்கும் பற்றாத என்னை வலியத் தடுத்தாண்ட அருட் பெருமையை என்னென்று சொல்லுவேன்' என்றார். அப்படி நின்ற நம்பியாரூரரை நோக்கி, 'நீ நம்மோடு வன்சொற்பேசி வன்றொண்டனென்னும் பெயர்பெற்றாய். நமக்கு அன்பினாற் செய்யும் அருச்சனையாவது பாடலேயாம். ஆதலால் நம்மேல் தமிழ்ப்பாடல் பாடு' என்று அருளிச்செய்யச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அஞ்சலியஸ்தராய், "அடியேன் தேவரீருடைய அநந்த கல்யாண குணங்களில் எதை அறிவேன்? என்னவென்று பாடுவேன்" என்ன, அதற்குச் சிவபெருமான் "நீ முன்னே நம்மைப் பித்தனென்றாய்; ஆதலால் என்பெயர் பித்தனென்றே பாடுக" என்ன, சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்மை அடிமைகொண்ட சிவபெருமான் மேல் "பித்தாபிறைசூடி" என்னுஞ் சொற்றொடரை முதலாகவுடைய திருப்பதிகத்தைப் பாடியருளினார். பின்பு தம்பிரானார், "நீ இன்னும் நம் புகழைக்குறித்துப் பலவகையாகப் பாடுக" என்று மறைந்தருளினார். இதுநிற்க, புத்தூரில் சடங்கவி சிவாசாரியர் புத்திரியாரோ விவாகந் தவறினதினால் சுந்தரமூர்த்தி சுவாமிகளையே தியானஞ்செய்து கொண்டிருந்து சிவபதமடைந்தனர்.

பின்பு சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவெண்ணெய் நல்லூரிலிருக்கின்ற திருவருட்டுறை என்னும் ஆலயத்தி லெழுந்தருளிய பரம காருண்ணிய மூர்த்தியாகிய சிவபெருமான் தம்மை யாட்கொண்ட பின் திருநாவலூர்க்கும் திருத்துறையூர்க்கும் சென்று திருப்பதிகம் பாடிச் சிதம்பரத்திலே ஆநந்தத் தாண்டவஞ் செய்தருளும் நடேசரைத் தரிசிக்க வேண்டுமென்னும் பேராசையோடு புறப்பட்டுத் திருவதிகை யென்னுந் தலத்துக்குச் சமீபத்திற் போய்த் திருநாவுக்கரசு சுவாமிகள் உழவாரத்தால் கைத்தொண்டு செய்த இத்தலத்திலே நான் மிதிக்க அஞ்சுகின்றேனென்று அதற்குட் செல்லாமல் அருகி

யிருந்த சித்தவடமடத்தி லெழுந்தருளி அன்றிராத்திரி திருவதிகை வீரட்டானத்தில் வீற்றிருக்கும் சிவபிரான் திருவடிகளைத் தியானஞ் செய்துகொண்டு நித்திரை செய்யும்போது வீரட்டானேசுரர் ஓர் விருத்தப்பிராமணராகி அம்மடத்தில் நுழைந்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிரசின்மேல் தமது திருவடியை வைத்தருளித் துயில்பவர்போலிருந்தனர். அப்பொழுது சுந்தரமூர்த்தி சுவாமிகள் விழித்துக்கொண்டு, 'ஐயரே! உம்முடைய பாதத்தை என் சிரசின்மேல் வைத்தீர்' என்ன, ஐயர், 'என்வயோதிகத்தால் திசை தெரியாது அப்படிச் செய்தேன்' என்றார். சுந்தரமூர்த்திசுவாமிகள் அதற்கு ஒத்துக்கொண்டு, தம்முடைய சிரசைவேறொரு திசையில் வைத்து நித்திரை செய்தனர். எம்பிரானார் அங்குஞ் சென்று, சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய சிரசில் தம்முடைய பாதத்தை நீட்டச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், 'என்சிரசில் பலமுறைகாலைவைத்த நீர் யார்?' என்ன, 'நீ என்னை அறியாயா?' என்று உரைத்து மறைந்தருளினர். அது கண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்முடைய சிரசில் பாதத்தை வைத்தவர் சுவாமி என்றறிந்து, "அடியேன் செருக்கினால் சிவபெருமானென்று அறியாமையால் என்செய்தே" னென்று வருந்தி, வீரட்டானேசுரரை "தம்மானை யறியாத சாதியாருளரே" என்னுந் திருப்பதிகம் பாடித் துதித்து அங்கிருந்து புறப்பட்டுச் சிதம்பரத்திற் சென்று கனகசபையில் ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளும் சபாநாதரைத் தரிசித்து அன்பு மிகுதியால் நெருப்பிலிட்ட மெழுகுபோல் மனமுருகி ஆனந்தக்கண்ணீர் பெருக விழுந்து நமஸ்கரித்து பேரின்பசாகரத்தில் முழுகி இரண்டு கைகளையுஞ் சிரசின்மேற் குவித்துப் பதிகம்பாடித் துதித்து நின்றனர்.

அப்பொழுது நடேசர் திருவருளால் "திருவாரூர்க்குவா" என்று எழுந்த அசரீரிவாக்கைக்கேட்டு, அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு கனகசபையைப் பிரதக்ஷிணஞ்செய்து வணங்கி விடைபெற்றுக்கொண்டு, புறப்பட்டுக் கொள்ளிடநதியைக் கடந்து, சீர்காழிக்குச் சமீபித்து, இது திருஞானசம்பந்தசுவாமிகள் திருவவதாரஞ்செய்த தலம், ஆகையால் இதை மிதிக்கலாகாதென்று கருதி, அதன் எல்லையை வணங்கி வலம்வரும்போது சிவபெருமான் தரிசனந் தந்தருள, "சாதலும்பிறத்தலுந் தவிர்த்து" என்னுந் திருப்பதிகம் பாடித் துதித்து, அங்கிருந்து புறப்பட்டுத் திருக்கோலக்கா முதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, திருவாரூர்க்கு எழுந்தருளி ஆலயத்துட் சென்று, வன்மீகநாதரை வணங்கிப் பேரின்பக்கடலுள் மூழ்கித் திருப்பதிகம் பாடித் துதிக்கின்றார். அப்பொழுது சுந்தரமூர்த்திசுவா



மிகள் கேட்கும்படித் தியாகப்பெருமான் திருவருளால் "நாமுனக்குத் தோழரானோம். முன்னே யாட்கொண்ட விவாககாலத்தில் நீ கொண்டிருந்த மணக்கோலத்தை என்றும் பூண்டு விளையாடுவாயாக" என்று ஓர் அசரீரிவாக்கு எழுந்தது. அதுகேட்ட சுந்தரமூர்த்திசுவாமிகள் ஆநந்தபரவசராய்த் தொழுது துதித்துப் புறம்போந்து, அன்றுதொட்டு அடியார் யாவரும் தம்பிரான் தோழர் என்று சொல்லிக்கொள்ளத் திருமணக்கோலம் பூண்டு, நாடோறும் வன்மீகநாதரைத் தரிசனஞ்செய்துகொண்டு அங்கிருந்தனர். இது நிற்க.

இதற்கு முன்னே திருக்கைலாசமலையில் இருக்கும் பார்வதியாருடைய பாங்கியரிருவரில் ஒருவராகிய கமலினி என்பவர் அத்திருவாரூரில் உருத்திரகணிகையர் குலத்தில் பிறந்து பரவையார் என்னும் திருப்பெயர்பெற்று மங்கைப்பருவமடைந்து, தாமும் தோழிமாரோடு தினமும் ஆலயத்துட்சென்று சிவதரிசனஞ்செய்து வருவார். ஒருநாள் தரிசனஞ்செய்யப் போம்பொழுது அங்கு பரிசனத்தோடு சிவதரிசனத்துக் கெழுந்தருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் கண்டு, ஆசைகொண்டு, தாம் அவரை விவாகஞ்செய்து கொள்ளவேண்டுமென்று சுவாமி சந்நிதானத்தில் விண்ணப்பஞ் செய்தருளினர். சிவபெருமான் அவர் விண்ணப்பத்தைத் திருவுளங்கொண்டு பரவையாரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருமணஞ்செய்து கொடுக்கும்படி அடியார்களுக்குக் கட்டளையிட்டருள, அவர்கள் அப்படியே சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பரவையாரை விதிப்படி விவாகஞ்செய்து கொடுத்தார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவையாரைக் கூடி வாழ்ந்திருக்குங்காளில் ஒருநாள் சிவதரிசனத்துக்கு எழுந்தருளும்போது, தேவாசிரிய மண்டபத்தில் சேர்ந்திருந்த சிவனடியார்களைக் கண்டு அவர்கள்மேல் பத்திமிகுந்து, நானிவர்க்கு அடியனாகுநாள் எந்நாளென்று கருதிச் சுவாமி தரிசனத்துக்குத் திருக்கோயிலுட் சென்றனர். அவர் விருப்பத்தை நிறைவேற்றும்பொருட்டுத் தியாகப்பெருமான் அவர்க்குக் காட்சிகொடுத்தருளி, 'நீ அடியார்மேற் பதிகம் பாடுவாயாக' வென்று திருவாய்மலர்ந்தருள, சுந்தரமூர்த்தி சுவாமிகள் வணங்கிநின்று, 'சுவாமீ! அடியவர்கள் யாவரோ இன்னதென்றும் அவர்கள் தன்மை இன்னதென்றும் சிறிதும் அறியாத யான் எப்படிப் பாடுவேன்? அவர்களைப் பாடுதற்குத் திறமைத் தேவரீரே அடியேனுக்கு அருளிச்செய்யவேண்டு' மென்று பிரார்த்தித்தார். சிவபெருமான் அதற்கிசைந்து தமது அருமைத் திருவாக்கால் "தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்" என்று அடி எடுத்துக்கொடுத்து மறைந்தருளினர். அதுகண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாசிரியமண்டபத்தை

யடைந்து அவ்வடியவர் யாவர்க்குந் தனித்தனியே அடியேன் என்று திருத்தொண்டத் தொகை என்னுந் திருப்பதிகம்பாடி அவர்களை வணங்கினர்.

பின்பு சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிலநாள் அங்கிருந்து, அதற்குச் சமீபத்திலுள்ள திருக்கோளிலி என்னும் ஸ்தலத்துக்கெழுந்தருளி ஆலயத்துட்சென்று சிவபெருமானை வணங்கி வேளாளராகிய குண்டையூர்க்கிழார் கொடுத்த நெற்குவியலைத் திருவாரூரிற் சேர்ப்பிக்கக் கிருபைசெய்ய வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, சிவாக்கினையாற் பூதங்கள் குண்டையூரிலிருந்த நென்மலையை எடுத்துச்சென்று பரவையார் திருமாளிகையிலும் மற்றவிடங்களிலும் நிறைத்தன. சுந்தரமூர்த்தி சுவாமிகள் மீண்டுந் திருவாரூர்க்குச் சென்று, வன்மீகநாதரைத்தொழுது துதித்துப் பரவையார் திருமாளிகையிற்சேர்ந்து, நிகழ்ந்தசெய்தியைச் சொல்லிச் சிலநாள் அங்கிருந்து, கோட்புலிநாயனார் வேண்டுகோளால், திருநாட்டியத்தான் குடிக் கெழுந்தருளிய பொழுது, அந்நாயனார் எதிர்கொண்டுவந்து வணங்கித் தம்முடைய வீட்டுக்கு அழைத்துப்போய் ஆசனத்திலிருத்தி, அருச்சனைசெய்து, திருவமுதுசெய்வித்து, வணங்கித் தம்முடைய புத்திரிகளாகிய சிங்கடி, வனப்பகை என்னும் இருவரையும் கொண்டுவந்து வணங்குவித்துத் தாமும் வணங்கி அடியேன்பெற்ற இப்பெண்களை அடிமையாகக் கொண்டருள வேண்டும் என்ன, சுந்தரமூர்த்தி சுவாமிகள் அந்தப் பெண்களைப் புத்திரிகளாகப் பாவித்தருளிச் சிவாலயத்துட் சென்று, சிவபெருமானை வணங்கி "பூணாணாவதோரரவம்" என்னுந் திருப்பதிகம்பாடி அப்பதிகத்தின் திருக்கடைக்காப்பில் கோட்புலிநாயனாரைச் சிறப்பித்துச் சிங்கடியாருக்குத் தம்மைப் பிதாவாகக் கருதினமையால் தம்மைச் சிங்கடியப்பன் என்று வைத்தருளினர். பின்பு அவ்விடத்தினின்றும் எழுந்தருளித் திருவலிவலத்திற் சென்று, சிவதரிசனஞ் செய்துகொண்டு, மீண்டும் திருவாரூர்க்குச் சென்று, வன்மீகநாதரை வணங்கிக்கொண்டு, பரவையார் வீட்டிலிருந்தனர். இருக்குங்காலில் பங்குனியுத்திரத் திருவிழா சமீபிக்கவும், பரவையார்க்குத் திருவிழாச் செலவிற்காகக் கொடுப்பதற்குப் பொருள்கொண்டுவரும் பொருட்டுத் திருப்புகலூரைச் சேர்ந்து, ஆலயத்துட்சென்று, சுவாமியை வணங்கிப் பதிகம்பாடிச் செங்கல்லைப் பொன்னாக்கித் தரப்பெற்று, அங்கிருந்து புறப்பட்டுத் திருவாரூரையடைந்து பரவையார்வீட்டில் எழுந்தருளினர்.

அங்கிருந்து புறப்பட்டுத் திருநன்னிலம் முதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருமுதுகுன்றத்தைச் சேர்ந்து சிவதரி



சனஞ்செய்து பதிகம்பாடியபோது, சுவாமி பன்னீராயிரம் பொன் கொடுத்தருள, சுந்தரமூர்த்திசுவாமிகள் வணங்கிநின்று, தேவரீர் கொடுத்தருளிய பொன்னெல்லாம் திருவாரூரில் உள்ளவர் யாவரும் அதிசயிக்கும்படி அங்கே வரச்செய்யவேண்டும் என்று பிரார்த்திக்க, அப்பொழுது எம்பிரானுடைய திருவருளால், 'சுந்தரமூர்த்தி! நீ இந்தப் பொன் எல்லாவற்றையும் மணிமுத்தாநதியிலிட்டுத் திருவாரூர்த் திருக்குளத்தில் எடுத்துக்கொள்' என்று அசரீரிவாக் கெழுந்தது. அதுகேட்டுச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மச்சம் வெட்டி எடுத்துக் கொண்டு பொன்னனைத்தையும் மணிமுத்தாநதியிலிட்டு, அன்று என்னைத் தடுத்தாட்கொண்ட திருவருளை இதிலறிவேனென்று சிதம்பரத்துக்கு எழுந்தருளக் கருதி, வழிக்கொண்டு இடையிலுள்ள திருக்கடம்பூரை வணங்கித் தில்லையைச் சேர்ந்து, நடேசரைத் தொழுது பதிகம்பாடித் துதித்து விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுத் திருக்கருப்பறியலூர் முதலிய பல சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு மீண்டுந் திருவாரூர்க் கெழுந்தருளி வன்மீகநாதரைப் பணிந்து பரவையாருடன் மனமகிழ்ந்திருக்குநாளில் ஒருநாள், பரவையாரைநோக்கி, 'எனக்குத் திருமுதுகுன்றர் கொடுத்தருளிய பொன்னையெல்லாம் மணிமுத்தாநதியிலிட்டு வந்தேன். இப்போது இத்தலத்தில் திருக்கோயிலுக்கு மேற்கிலுள்ள குளத்திற்போய் அவரது திருவருளால் எடுத்துக்கொண்டு வருவோம் வா' என்ன, பரவையார் இது என்ன அதிசயமென்று தமக்குள்தாமே எண்ணிக்கொண்டு கூடவர, அக்குளத்தருகிற்சென்று பரவையாரைக் கரைமேல் நிறுத்தித் தாம் வன்மீகநாதரை வணங்கித் துதித்துக் குளத்திலிறங்கித் தடவிப் பார்க்கையில் பொன்னகப்படாமையால் மனம் வருந்தித் திருப்பதிகம் பாடச் சிவபெருமான் திருவருளால் வந்தெழுந்த பொற்றிரளை வாரி எடுத்து ஆட்களிற்சுமத்தி அனுப்பிவிட்டுத் தாம் திருக்கோயிலுட் சென்று வன்மீகநாதரைப் பணிந்து, துதித்து வீட்டுக்குச் சென்று பரவையாரோடு மகிழ்ந்திருக்குநாளில், சிவஸ்தல யாத்திரைபண்ண விருப்புற்று, திருநள்ளாறு முதலியவற்றை வணங்கிக்கொண்டு, திருக்குருகாவூர்க்குச் சமீபத்தில் வரும்பொழுது, வன்றொண்டர் பசிதாக முதலியவற்றால் மெலிந்து வருகிறார் என்று பரமசிவம் திருவுளமிரங்கித் தண்ணீரும் கட்டமுதும் கொண்டுவந்து வெயில் வெப்பத்தைத் தணிக்கும்பொருட்டு, அங்கு ஒருபக்கத்தில் ஓர் தண்ணீர்ப்பந்தரையுண்டாக்கித் தாம் ஓர் பிராமணவேடம்பூண்டு, களைத்து வருகின்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளை நோக்கி, 'நீர் மிகவும் பசித்திருக்கின்றீர், என்னிடத்தில் பொதிசோறிருக்கின்றது; அதை யுண்டு, தண்ணீர் குடித்து இளைப்பாறு' மென்று சொல்லியருள, சுந்தரமூர்

த்தி சுவாமிகள் அதற்கிசைந்து, கட்டமுதை வாங்கி அடியாரோடு அமுதுசெய்து, தண்ணீர் அருந்திப் பரிசனங்களோடு நித்திரைசெய்ய, ஐயர் தண்ணீர்ப்பந்தரோடு மறைந்தருளினர். சுந்தரமூர்த்திசுவாமிகள் துயிலெழுந்து ஐயரைக் காணாமையால் ஆச்சரியமடைந்து "இத்தனைமாறுமறிந்திலேன்" என்னுந் திருப்பதிகம்பாடித் திருக்குருகாவூரைச் சேர்ந்து, சிவதரிசனஞ்செய்து, அதை அகன்று வழிக்கிடையிலுள்ள சிவஸ்தலங்களையெல்லாம் வணங்கிக்கொண்டு, திருக்கழுக்குன்றிற்போய்ச் சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு திருக்கச்சூருக்கெழுந்தருளி ஆலக்கோயிலுள்ளே சென்று சிவதரிசனஞ்செய்து புறத்திலிருந்து அமுதுசெய்யுங் காலமாகியும் அமுதுசெய்து படைக்கும் பரிசனங்கள் வாராமையால் மிகுந்த பசியோடு மதிற்புறத்தில் இருந்தனர். அப்பொழுது சிவபெருமான் ஒரு பிராமணராகி அருகிற்சென்று, 'நீர் மிகப்பசியோடு வருந்துகின்றீர்; நான் உமக்குப் பிராமணர் வீடுகளில் அன்னம் யாசித்துக்கொண்டு வருகிறேன், நீர் அப்புறம் போகாமல் இங்கேயேயிரும்' என்று சொல்லிப்போய் அப்படியே யாசித்துக்கொண்டுவந்து கொடுக்க, சுந்தரமூர்த்திசுவாமிகள் தம்முடன்வந்த தொண்டர்களோடு உண்டு மகிழ்ந்தனர். உடனே அவ்வையர் மறைந்தருளியதைக் கண்டு, அவர் சிவபெருமானே என்று துணிந்து, 'இந்த நடுப்பகலில் திருவடி வருந்த அடியேன்பொருட்டு எழுந்தருளிய பெருங்கருணையை என்னென்று புகழ்வேன்!' என்று மனமுருகித் தோத்திரஞ்செய்து, அவ்விடம்விட்டுப் புறப்பட்டுக் காஞ்சீபுரத்திற்சென்று, திருவேகம்பத்தை யடைந்து காமாக்ஷியம்மையால் அருச்சிக்கப்பட்ட ஸ்ரீ ஏகாம்பரநாதரை வணங்கி அங்கிருந்து புறப்பட்டு, இடையிலுள்ள சிவஸ்தலங்களையெல்லாம் தொழுதுகொண்டு, திருக்காளத்தி மலைக்குச்சென்று, சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு அங்கிருந்து புறப்பட்டுத் திருவொற்றியூரிற்போய்ப் பதிகம்பாடிச் சுவாமி தரிசனம் பண்ணிக்கொண்டு அங்கிருந்தனர்.

முன் திருக்கைலாசகிரியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள்மேல் ஆசைகொண்ட தோழிமார் இருவரில் ஒருவராகிய அனிந்திதையார் என்பவர் ஞாயிறு என்னும் ஊரில் வேளாளர்குலத்திற் பிறந்த ஞாயிறுகிழார் என்பவருக்குப் புத்திரியாராகத் திருவவதாரஞ்செய்து சங்கிலியார் என்னுந் திருநாமம்பெற்றுத் திருக்கோயிலில் திருத்தொண்டு செய்து திருவொற்றியூரில் இருந்தனர். சுந்தரமூர்த்திசுவாமிகள் சங்கிலியாரைக்கண்டு ஆசைகொண்டு சுவாமி சந்நிதானத்திற் சென்று வணங்கி, சங்கிலியாரைத் தமக்குத் தந்தருளும்படி பிரார்த்தித்துக் கோயிலின் புறத்தில் ஓரிடத்தில் மனக்கவலையோடிருக்க, அப்பொழுது



சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கெதிரிற்போய், 'சங்கிலியை உனக்குத் தருகிறோம்; நீ கொண்ட கவலையை ஒழிப்பாயாக' வென்று திருவாய்மலர்ந்தருளி, உடனே கன்னிமாடத்திற் கண்வளருஞ் சங்கிலியார் சொப்பனத்திற் றோன்றி, 'சங்கிலியே! நம்மிடத்து மிகுந்த பத்தியையுடைய சுந்தரன் நீ தனக்கு மனைவியாக உன்னைத் தரும்படி என்னைப் பிரார்த்தித்தான்; நீ அதற்கு உடன்படவேண்டும்' என்றார். அதற்குச் சங்கிலியார், 'சுவாமீ! அடியேன் தேவரீருடைய திருவாணையைச் சிரமேற்கொண்டேன்; அவ்வாறே அவர்க்கே மனைவியாகுவேன்; ஆயினும் அவர் திருவாரூரிலே மிகுந்த சந்தோஷத்தோடு வசிக்கின்றவர் என்பதைத் தேவரீர் திருவுளங்கொண்டருளும்' என்று விண்ணப்பஞ்செய்தார். சுவாமி அதுகேட்டு, 'பெண்ணே! சுந்தரன், உன்னைப் பிரியேன் என்று சபதஞ்செய்து தருவான்' என்று சொல்லிச் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்தில் வந்து, 'நான் உன்னைப் பிரியேன் என்று நீ அவளுக்குச் சபதஞ்செய்து கொடுத்தால்தான் அவள் உடன்படுவா'ளென்ன, 'ஆயின் அவ்வாறே செய்துகொடுக்கிறேன்; தேவரீர் அப்பொழுது திருக்கோயிலிலிராது மகிழின்கீழ் எழுந்தருளியிருக்கவேண்டு'மென்ன, அதற்குச் சிவபெருமான் இசைந்தருளி, மீண்டுஞ் சங்கிலியாரிடத்திற் சென்று, 'சுந்தரன் உனக்குச் சபதஞ்செய்து கொடுக்க இசைந்திருக்கிறான்; அவன் ஆலயத்திற் சபதஞ்செய்ய வந்தால் மகிழடியிற் செய்யும்படி கேள்' என்று மறைந்தருளினர். பின்பு சங்கிலியார் திருப்பள்ளியெழுச்சிக்குப் பூமாலை தொடுக்கத் தோழியரோடு திருக்கோயிலுக்குச்செல்ல, அவருக்குச் சபதஞ் செய்துகொடுக்க அதற்குமுன் வந்திருந்த சுந்தரமூர்த்திசுவாமிகள் அவர்க்கெதிரிற்போய்த் தமக்குச் சிவபிரான் திருவாய்மலர்ந்தருளியதைச் சொல்ல, அவர் அதற்கொன்றுஞ் சொல்லாமல் நாணமுற்றுச் சேடியரோடு கோயிலுக்குட் சென்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பின்றொடர்ந்துபோய், 'பெண்ணே! உன்னைப் பிரியேனென்று யான் சபதஞ் செய்யச் சந்நிதானத்திற்கு வா' என்ன, சங்கிலியார் கண்டகனவைக் கேட்டறிந்த தோழிமார், 'இங்கே வேண்டுவதில்லை. மகிழடியிற் சபதஞ்செய்து கொடு'மென, அவ்வாறே மகிழடியிற்போய்ச் சபதஞ்செய்துகொடுத்து, சங்கிலியாரை விவாகஞ்செய்துகொண்டு அங்கு அவரோடு சின்னாள் கூடியிருந்து, அதற்குமேல் திருவாரூர் வீதிவிடங்கப்பெருமானைத் தரிசனஞ் செய்யாமல் எத்தனைநாள் நீங்கியிருப்பேன் என்று மனவருத்தமுற்று, ஆலயத்திற் சென்று சுவாமி தரிசனஞ்செய்து திருவொற்றியூரெல்லையை நீங்கிய அளவில் இரண்டு கண்களும் மறைந்தன. மறையவே சபதந் தவறினமையால் நேரிட்டதென்று வருந்தி, "அழுக்கு மெய்கொடுன் திருவடியடைந்

தேன்" எனுந் திருப்பதிகம் பாடியும் அத்துன்பம் நீங்கவில்லை; ஆயினும் திருவாரூர்க்குப் போகவேண்டுமென்னும் ஆசை மேன்மேலும் வளர்தலால் சிலர் முன்னே வழிகாட்டத் திருமுல்லைவாயிலுக்குச் சென்று சுவாமியை வணங்கி, "விண்பணிந்தேத்தும் வேதியா" என்னுந் திருப்பதிகம்பாடித் திருவெண்பாக்கத்தைச் சேர்ந்து, சிவபெருமானைப் பணிந்து, "திருக்கோயிலுள்ளீரோ" என்று விண்ணப்பஞ்செய்ய, சுவாமி அவருக்கு ஊன்றுகோல் கொடுத்தருளி 'உளோம் போகீர்' என்றனர். பிறகு சுந்தரமூர்த்தி சுவாமிகள், "பிழையுளன பொறுத்திடுவர்" என்னுந் திருப்பதிகம் பாடிக்கொண்டு காஞ்சிபுரத்துக்கெழுந்தருளி, ஏகாம்பரநாதரை வணங்கி, அவர் திருவருளால் ஒருகண் பெற்று, வழிக்கிடையிலுள்ள சிவஸ்தலங்களை யெல்லாம் வணங்கிக்கொண்டு திருவாரூர்க்குச் சென்று வன்மீகநாதரைத் தொழுது மற்றொரு கண்ணும் பெற்றுப் பரவையார் ஊடலை நீக்கும்பொருட்டு, வீதிவிடங்கப் பெருமானை இரண்டுதரம் அவர் மனையில் தூது அனுப்பி ஊடல் தணிந்தபின் அங்குச் சென்று அவரோடு கூடி நாள்தோறும் வன்மீகநாதரைத் தரிசனஞ்செய்து கொண்டிருந்தனர். இருக்கும்பொழுது தாம் சிவபெருமானைத் தூது அனுப்பிய செய்தியைத் திருப்பெருமங்கலத்தி லிருக்கும் ஏயர்கோன்கலிக்காமநாயனார் கேள்வியுற்று, அது தக்கது அன்றென்று தம்மேற் கோபங்கொண்டு இருந்ததை அறிந்து, சுவாமி சந்நிதானத்தில் விண்ணப்பஞ் செய்ய, சிவபெருமான் கலிக்காமநாயனாருக்குச் சூலைநோயை ஏவி, அவரிடத்திற் போய்ச் சுந்தரன் வந்தா லன்றித் தீராதென்ன, அவர் அதற்கு உடன்படாமையைக் கண்டும் சுந்தரமூர்த்திசுவாமிகளிடத்தில் வந்து, நீ போய்க் கலிக்காமனுடைய சூலையைத் தீர்ப்பாய் என்றார். சுந்தரமூர்த்திசுவாமிகள் சூலைநோயைத் தீர்க்கும் பொருட்டு வருஞ் செய்தி கேட்டுக் கலிக்காமநாயனார் உடைவாளால் வயிற்றைப்பீறிக்கொண்டு இறந்தனர். சுந்தரமூர்த்திசுவாமிகள் அங்குச் சென்று கலிக்காமநாயனார் இறந்திருந்ததை நோக்கி, நானும் மரணமடைவேனென்று உடைவாளை யெடுத்தனர். உடனே சிவபெருமான் திருவருளால் கலிக்காமநாயனார் உயிர்த்தெழுந்து உடைவாளைப் பற்றிக்கொள்ள, அவர் விழுந்து நமஸ்கரித்தனர். கலிக்காமநாயனாரும் சுந்தரமூர்த்திசுவாமிகளை வணங்கினர். சிலநாள் இருவரும் அன்போடு அளவளாவியிருந்தபின், சுந்தரர் மீண்டுந் திருவாரூர்க்கெழுந்தருளி வன்மீகநாதரைத் தரிசனஞ் செய்துகொண்டிருந்தனர்.

அப்பொழுது சேரமான்பெருமாணாயனார் சிவபெருமானால் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய மகிமையை அறிந்து, அவரைத் தரிசிக்க



விரும்பித் திருவாரூரை யடைந்து அவரை வணங்க, சுந்தரமூர்த்திசுவாமிகள் சேரமான் பெருமாணாயனாரை வணங்கினர். பின்பு சுந்தரமூர்த்திசுவாமிகள் சேரமான் பெருமாணாயனாரை உடன்கொண்டு ஆலயத்திற் சென்று, வன்மீகநாதரை வணங்கிப் பரவையார்வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் விருந்துசெய்து, சிலநாள் அவரோடு அங்கிருந்து, இன்னுமுள்ள சிவஸ்தலங்களைத் தரிசிக்க விரும்பிச் சேரமான் பெருமாணாயனாரும் கூடவரப் புறப்பட்டுச் சோழநாட்டிலுள்ள சிவஸ்தலங்களை யெல்லாம் வணங்கிக்கொண்டு பாண்டிநாட்டிற் சென்று அங்குள்ள மதுரை முதலிய சிவஸ்தலங்களைத் தரிசனஞ்செய்துகொண்டு மீண்டும் திருவாரூர்க்குச் சென்று வன்மீகநாதரை வணங்கி, அங்கிருந்து புறப்பட்டுச் சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு செல்லுகையில் திருவையாற்றுக்குச் செல்லத் தடையாகக் காவேரி பெருகிவருவதைக் கண்டு சுந்தரமூர்த்திசுவாமிகள் பாடிய திருப்பதிகத்தால் அவ்வாறு வழிவிடப் பரிசனங்களோடு சென்று, பஞ்சநதேசுரரைத் தரிசித்து வணங்கி, மீளவும் அவ்வழியே வந்தபின்பு வெள்ளம் முன்போலப் பெருகி யோடிற்று. அவ்விடம்விட்டு நீங்கிக் கொங்கு நாட்டிலுள்ள சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, மலைநாட்டிற் சென்றபோது சேரமான் பெருமாணாயனார் நகரமாகிய கொடுங்கோளூரிலிருப்பவர்கள் எதிர்கொண்டுவந்து வணங்க, அவர்களுடன் திருவஞ்சைக்களமென்னுந் தலத்திற் சென்று, ஆலயத்தைப் பிரதக்ஷிணம் பண்ணித் திருப்பதிகம் பாடித் துதித்துச் சேரமான் பெருமாணாயனாரோடு அவர் திருமாளிகையிற் சென்று திருவமுது செய்து, சிலநாளங்கிருந்து புறப்படும்போது சேரமான்பெருமாணாயனார் தம்முடைய பொக்கிஷத்திலுள்ள நிதியையெல்லாம் பல ஆட்களின்மேல் சுமத்தியனுப்பத் திருமுருகன் பூண்டியென்னுந் தலத்துக்குச் சமீபமாக வரும்போது சிவபெருமான் ஆஞ்ஞையால் பூதங்கள் வேடுருக்கொண்டுவந்து அப்பொருளனைத்தையும் பறித்துக் கொண்டுபோய்ச் சுவாமி சந்நிதானத்திற் சேர்த்தன. அதுகண்டு சுந்தரமூர்த்திசுவாமிகள் திருமுருகன் பூண்டியில் ஆலயத்துட்சென்று சுவாமியை வணங்கி, "கொடுகுவெஞ்சிலை வடுகவேடுவர்" என்னுந் திருப்பதிகம் பாடியமாத்திரத்தில் கடவுள் திருவருளால் அந்தப் பொருளெல்லாம் கோபுரவாயிலில் குவித்திருக்கக் கண்டு, சுவாமியை வணங்கி, அவற்றை யெடுத்துக்கொண்டு முன்னே செல்லும் ஆட்களை யேவி, அவ்விடத்தை நீங்கிக் கொங்குநாட்டைக் கடந்து, திருவாரூரை அடைந்து, அங்குச் சிவதரிசனஞ் செய்திருந்தனர்.

சிலநாள் சென்றபின் சேரமான் பெருமாணாயனாரைக் காணவிரும்பி, அங்கிருந்து புறப்பட்டுச் சோழதேசத்தைக் கடந்து, கொங்குதேசத்தை யடைந்து, திருப்புக்கொளியூரிற் சென்று, அங்கே ஒரு வீதியிலே இரண்டு வீடுகளுள் ஒருவீட்டில் மங்கலவொலியும், மற்றொரு வீட்டில் அழுகையொலியுமா யிருக்கக் கண்டு, அங்கிருந்த பிராமணர்களை நோக்கி இஃதென்னவென, அவர்கள் வணங்கி, ஐந்தாவயதுள்ள இரண்டு புதல்வர்கள் குளத்தில் நீராடுகையில், ஒருவனை முதலை விழுங்கிற்று; மற்றொருவன் பிழைத்துவந்தான். இந்தவீட்டில் முழங்குமோசை பிழைத்துவந்த புதல்வனுக்கு உபநயனம் செய்யும் மங்கலவோசை; அந்தவீட்டி லுண்டாமோசை இறந்த பிள்ளையைக்குறித்து அழுகைக்குரலோசை என்றனர். அதுகேட்ட சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவுளமிரங்கி அந்தக் குளத்தருகிற் சென்று அம்முதலை தான் விழுங்கிய புதல்வனை உமிழும்பொருட்டு, "உரைப்பாருரையுக் குள்கவல்லார்" என்னுந் திருப்பதிகம் பாடியபோது, அம்முதலை பிள்ளையைக் கரையில் உமிழ்ந்தது. தாய் ஓடி அப்பிள்ளையை எடுத்துக்கொண்டுவந்து, நாயகனோடு தானும் சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவடிகளில் விழுந்து நமஸ்காரஞ் செய்தாள்; சுந்தரமூர்த்திசுவாமிகள் அப்பிள்ளையை அழைத்துக்கொண்டு, அவிநாசிக்குப்போய்ச் சிவதரிசனஞ்செய்து, திருப்பதிகம்பாடித் திரும்பி, அப்புதல்வன் வீட்டிற்சென்று அவனுக்கு உபநயனஞ் செய்வித்து, அதன் பின்பு மகோதையென்னுந் தலத்திற்சென்று இறங்கியிருக்கையில், ஒருநாள் சேரமான் பெருமாணாயனார் ஸ்நானஞ்செய்யும்போது, சுந்தரமூர்த்திசுவாமிகள் மீண்டும் திருவஞ்சைக் களத்திற்குச் சென்று, அங்குள்ள ஆலயத்தை வலஞ்செய்து, உள்ளே புகுந்து, சந்நிதியில் விழுந்து, நமஸ்கரித்து எழுந்துநின்று, அழலிற்பட்ட மெழுகுபோல் உள்ளமுருக மயிர்க்குச்செறியக் கண்ணீர்பெருக இரண்டு கைகளும் சிரசின்மேற் குவியத் துதித்து, அடியேனை மாயாகாரியமாகிய இவ்வுலகவாழ்க்கையினின்று நீக்கித் தேவரீருடைய திருவடியிற் சேர்த்தருளவேண்டுமென்னுங் கருத்தோடு "தலைக்குத் தலைமாலை" என்னுந் திருப்பதிகம் பாடியருள, தயா சமுத்திரமாகிய சிவபெருமான், 'பிரமன், விஷ்ணு முதலிய தேவர்களை நோக்கி, நீங்கள் சென்று நம்முடைய தோழனாகிய சுந்தரனை வெள்ளையானையின்மே லேற்றிக்கொண்டு வாருங்கள்' என்று கட்டளையிட்டார். அவர்கள் அவ்வாறே சென்று சந்நிதானத்தினின்றும் எழுந்தருளுகிற சுந்தரமூர்த்தி சுவாமிகளை எதிர்கொண்டு சிவபெருமானுடைய திருவாணையைத் தெரிவிக்க, அவர் சுவாமியை வணங்கி வெள்ளையானையின்மேலேறிச் செல்லுகையில் தம்முடைய தோ



ழராகிய சேரமான் பெருமாணாயனாரை நினைத்துச் செல்ல, சேரமான் பெருமாணாயனார் அதையறிந்து ஓர் குதிரையின்மேலேறி அதிவிரைவாகத் திருவஞ்சைக் களத்துக்குப் போய்ச் சுந்தரமூர்த்திசுவாமிகள் வெள்ளை யானையின்மேலேறி அந்தரமார்க்கமாய்ச் செல்வதை யுணர்ந்து, தம்முடைய குதிரையின் காதில் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதிய அளவில் அக் குதிரை ஆகாயமார்க்கமாய்ப் போய்ச் சுந்தரமூர்த்திசுவாமிகளேறிச்செல்லும் வெள்ளையானையை வலம்வந்து, அதற்குமுன் சென்றது. சேரமான் பெருமாணாயனார் படைவீரர்கள் அவரைக் கண்ணுக்குத் தோன்றுமளவும் ஆகாயத்திற் கண்டு பின் காணாமையால் மனவருத்தமுற்றுத் தம் தம் உடைவாளால் உடலைச் சேதித்து வீரயாக்கையைப் பெற்று அந் நாயனாருக்கு முற்பட்டு அவரைத் தரிசித்துக்கொண்டு சென்றனர். சேரமான் பெருமாணாயனார் முன்செல்லப் பின் சென்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள், "தானெனை முன்படைத்தான்" என்னுந் திருப்பதிகம் பாடிக்கொண்டு திருக்கைலாசமலையின் தெற்கு வாயிலுக்கு முன்சென்றனர். அங்கு இருவரும் வாகனங்களினின் றிறங்கிச் சந்நிதானத்திற்சென்று கைலாசபதியை நமஸ்கரித்தெழுந்து அவருடைய திருவருளால் பழையபடி சுந்தரர் ஆலாலசுந்தரராய் தாம் முன்செய்துகொண்டிருந்த திருத்தொண்டு செய்பவரும், சேரமான் பெருமாணாயனார் தம் தொழில் செய்பவரும் ஆயினர்.

முன் பூமியின்கண் அவதரித்த பரவையாரும் சங்கிலியாரும் முன்போலக் கமலினியும் அனிந்திதையுமாகிப் பார்வதியாருக்குத் திருத்தொண்டு செய்திருந்தனர். சுந்தரமூர்த்திசுவாமிகள் தாம் வழியில் திருவாய்மலர்ந்தருளிய திருப்பதிகங்களை வருணராஜனிடத்துக் கொடுத்தருள அவன் அதைத் திருவஞ்சைக்களத்திற் கொண்டுபோய் விளக்கினன்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலம்.

திருத்தொண்டர் புராணமாகிய பெரியபுராணத்திற்கு முதனூலென்று சொல்லத்தக்க திருத்தொண்டத்தொகை செய்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளாதலால் அறுபத்துமூன்று நாயன்மார்களினும் பிந்தியவர் இவரே யென்பது விளங்கும். கொடுங்கோளூரிலிருந்து அரசு செலுத்திய சேரமான் இவர் காலத்தவரே யென்பதை இவர் சரித்திரம் விளக்கும். சில வாண்டுகளுக்கு முன், சேரமான் மண்ணுலகினின்று மறைந்த வன்றுதான் கொல்லமாண்டு முதல் வருஷம் பிறந்ததென்னும் அபிப்பிராயம் ஸ்திரமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. கொல்லவருஷம் கி. பி. 825 ஆகஸ்டு மாசம் 15உ தொடங்கியது.

ஆகவே சேரமானும் சுந்தரரும் திகழ்ந்தகாலம் ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியென்று பலரும் ஒப்பியிருந்தனர். பின்னர், அறிந்தோர் கொல்லமாண்டு பிறப்பதற்கு அவ்வாறுரைத்தல் வழுவென்றும், ஸப்தர்ஷிவருஷம் என்னும் பெயரிய வடபுலத்துச் சகமொன்று சௌகரியம் பற்றி இவ்வாறு மாறியதென்றலே சரியென்றும் காட்டினர். அதனால் அவர் சேரமான் காலம் ஒன்பதாம் நூற்றாண்டென்றலை மறுத்தவராகார்.

இந்தச் சேரமானுக்குத் தான் மதுரைச் சொக்கர் 'மதிமலிபுரிசை' யென்னும் திருமுகம் விடுத்தது. இவ்விஷயம் பெரிய புராணத்தேயன்றிப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தும் வேம்பத்தூரார் திருவிளையாடலிலும் கூறப்பட்டுள்ளது. திருமுகத்தாற் பயனெய்திய பாணபத்திரர் இருந்த காலத்துப் பாண்டி நாடாண்ட மன்னவன் இன்னனென்று உறுதியாகவுரைத்தல் எளிதன்று. பெரிய புராணத்திலும் வேம்பத்தூரார் திருவிளையாடலிலும் தென்னவன் என்னும் பொதுப்பெயரே காணப்படுகின்றது. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்து மட்டும் அக்காலத்துப் பாண்டியன் வரகுணனென்றே தரப்பட்டுளது. வரகுண பாண்டியனென்னும் பாண்டியனொருவனைக் குறித்துச் சிலா சாஸனங்கள் சில விஷயங்கள் கூறும். அவன் காலம் ஒன்பதாம் நூற்றாண்டே ஆயினும், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் நம்பத்தக்க நூலன்று. ஏனெனில், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல்களனைத்தையும் கால முறைபற்றிக் கூறியதாகவே அறியக்கிடக்கின்றது. அந்நூலைக்கொண்டு பாண்டியவம்சாவளி யொன்று தயார் செய்யலாம். வரகுணன் ஒன்பதாம் நூற்றாண்டினனென்று கொள்வோமாயின், அவனுக்குப் பிறகு 41 பாண்டியர்கள் அரசாண்ட பின் வந்த அரிமர்த்தன பாண்டியன் காலத்து மாணிக்கவாசகர் இருந்தாரென்று அந்நூல் கூறுவதால், மாணிக்கவாசகரை ஏறக்குறையப் பதினேழாம் நூற்றாண்டிலிருந்தவராகக் கொள்ளவேண்டும். அம்முறையே பற்றித் திருஞானசம்பந்தரைப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்தவராகக் கொள்ளவேண்டும். இவ்வொரு நூலையொழிந்த ஏனையிரண்டு நூல்களிலும் பாண்டியன் இன்னான் என்பது கூறப்படாமையால் வரகுணனென்று



துணியாமை நன்றென்பது எனது அபிப்பிராயம். மேலும், வரகுணன் மேற் படையெடுத்து வந்த சோழன் அவனாற் றுரத்தப்பட்டோடினனென்றும், வரகுணன் சோழநாட்டைக் கைப்பற்றித் திருவிடைமருதூரிற் பல திருப்பணிகள் செய்தானென்றும் இரண்டு திருவிளையாடல்களும் சொல்லப் * பாண்டியனும் சோழனுமொருங்கு கூடிப் பல்லவ அரசனைச் சயித்தனரென்றும், பெரியபுராணத்துச் சேரமான் பெருமாநாயனார் புராணத்தில் பாண்டியனும் அவன் புத்திரியை விவாகஞ்செய்து கொண்டிருந்த சோழனுமென்று கூறுவதனால் வரகுணனும் சோழனும் நட்பினராயிருந்தனரென்றும் சிலர் துணியுமாறெங்ஙன மென்பது விளங்கவில்லை. பெரியபுராணத்துக் குறித்த பாண்டியன் வரகுணன்றான் என்று துணிந்துரைத்த லெங்ஙனம்? பட்டினத்துப்பிள்ளையாரால் சைவசமய குரவர் நால்வரோடும் வைத்துச் சிவபத்தியிற் சிறந்தவராகத் துதிக்கப்பட்ட வரகுணதேவர் திருத்தொண்டத்தொகையிற் சேர்க்கப்படாமையால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்திற்குப் பின்னிருந்தவர் என்று சொல்ல இடமுண்டு.

மலையாள நாட்டில், ஒரு அரசன் நாடுவிட்டுப்போயவன் மீண்டிலனென்றும், அவன் போய காலம் கொல்லமாண்டு பிறப்பதிக்காலமென்னும் ஐதிகம் வழங்குதலால், ஒன்பதாம் நூற்றாண்டே சேரமான் காலமாகவும் அவ்வரசனோடுடனிருந்த சுந்தரர் காலமாகவும் கொள்ளலாம். ஞானசம்பந்தர் பிறந்த ஸ்தலத்தில் அடிவைக்கவும் அஞ்சுதலால் சுந்தரர் அவர்க்கு நெடுநாட் பின்னிருந்தவரென்றெண்ணவுமிடமுண்டு. அவர் காலம் எழாம் நூற்றாண்டென்பது வரையறுக்கப்பட்

* சிலாசாஸன ஆராய்ச்சி செய்வோர் எழுதிய குறிப்பும் திருவிளையாடற் புராணங் கூறுகிறதற்கேற்ப, வரகுணன் திரிசிரபுரத்துச் சாஸனம் எழுதுவதற்கு முன்னே சோழநாட்டிலொருபாதியைக் கொண்டிருக்க வேண்டுமென்றும், வரகுண மஹாராஜன் சோழநாட்டைத் தாண்டித் தொண்டைநாட்டிலொருபகுதியையும் கொண்டானென்றலே அமைவுடைத்தென்றும், அதற்குக் காரணம் அவ்வரசன் பெண்ணையாற்றங்கரையிலுள்ள அரசூரில் தன்படை வீட்டிலிருந்தபடியே ஒரு சாஸனத்தாற் கொடை கொடுத்தானென்றறிகின்றேமென்றும் கூறுகிறது.—G. O. No 518, dated 15th July, 1 905, Page 55.

டது. ஆதலால் ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சுந்தர
இருந்தனரென்பது பொருந்துவதே.

சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பிள்ளைப்பருவத்து வளர்த்த நரசிங்
முனையரையர் காலத்திற்குப் பிற்பட்ட அரசர் சாஸனம் கி.பி. 954-
ஏற்பட்டதென்று தெரிகிறபடியால், ஒன்பதாம் நூற்றாண்டே நரசிங்
முனையரையர் காலமும் சுந்தரர் காலமும் என்று துணிதலும் ஒ
வாறு பொருந்துவதேயாம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளது வயது-௧௮.

முத்தியடைந்தநாள் ஆடிமாதம் சுவாதி நக்ஷத்திரம்.

## சுந்தரமூர்த்திசுவாமிகள்
## திவ்விய சரித்திரம்
## முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

# அகத்தியர் தேவாரத்திரட்டின்
# வரலாறு.

அநாதி முத்த சித்துருவாகிய முதற்கடவுள் சிவபெருமானே என்று ஆன்மாக்கள் துணிந்து வழிபட்டு உய்யும் பொருட்டுப் பல அற்புதங்களினாலே சைவசமயத்தைத் தாபித்தருளிய திருஞான சம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார் என்னும் சமயாசாரியர்கள் மூவரால் அருளிச்செய்யப்பட்ட தமிழ் வேதமாகிய தேவாரம் ஒரு லக்ஷத்திரண்டாயிரந் திருப்பதிகமுடையது. அவைகளுள் எழுநூற்றுத்தொண்ணூற்றேழு திருப்பதிகம் ஒழித்து ஒழிந்தவை இறந்துபோயின. எஞ்சி நின்ற எழுநூற்றுத்தொண்ணூற்றேழு திருப்பதிகங்களையும் திருவாரூர் அபயகுல சோழமகாராஜாவுடைய வேண்டுகோளின்படி திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாருடைய மாணாக்கராகிய நம்பியாண்டார் நம்பி ஏழுதிருமுறைகளாக வகுத்தருளினர். அவ்வேழும் அடங்கிய திருமுறை அடங்கன்முறையெனப்படும்.

கல்வியறிவொழுக்கங்களாற் சிறப்புற்று விளங்கிய சிவாலய முனிவர் அவ்வடங்கன் முறையின்து மகிமையையும், அதனை நாடோறும் விதிப்படி சிரத்தையோடு பாராயணஞ் செய்யின் முத்தி சித்திக்குமென்பதனையும் அறிந்து, தாம் அப்படிப் பாராயணஞ்செய்ய ஆசைகொண்டார். அது நிறைவேறுதல் கூடாமையால் வருத்தமுற்று, சிதம்பரத்தை அடைந்து, கனகசபையின் கண்ணே ஆனந்த தாண்டவஞ் செய்தருளும் சபாநாதனை வணங்கி, தமது கருத்து முற்றும் பொருட்டு நெடுங்காலம் அருந்தவஞ்செய்தார். அப்பொழுது

சயாநாதருடைய திருவருளினாலே, "சிவாலயமுனிவனே, நீ பொதியமலையிலிருக்கின்ற அகத்தியமுனிவனிடத்தே போவாயாயின் உன்கருத்து நிறைவேறும்" என்று ஓரசரீரிவாக்குத் தோன்றிற்று. அதுகேட்ட சிவாலய முனிவர் மனமகிழ்ந்து, சயாநாதரை வணங்கி, விடைபெற்றுக் கொண்டு சென்று, பொதியமலையை அடைந்து, அகத்தியமகாமுனிவரைச் சிந்தித்து, நெடுங்காலம் அருந்தவஞ்செய்தார். அகத்தியமகாமுனிவர் அவருக்கு வெளிப்பட்டு, அடங்கன்முறை முழுவதையும் அவருக்குபதேசித்து, அதினின்றும் இருபத்தைந்து திருப்பதிகங்களை எடுத்துத்திரட்டி, "இவைகளை நாடோறும் பாராயணஞ் செய்பவர்கள் அடங்கன்முறை முழுவதையும் பாராயணஞ் செய்பவர்களாவார்கள்" என்று திருவாய்மலர்ந்து, மறைந்தருளினார். சிவாலயமுனிவர் அப்படியே இவ்விருபத்தைந்து திருப்பதிகங்களையும் நெடுங்காலம் பாராயணஞ் செய்து சிவபெருமானுடைய திருவருளைப்பெற்றார்.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# அகத்தியமகாமுனிவர்
## திரட்டியருளிய
# தேவாரத்திரட்டு
## மூலமும் உரையும்.

### தேவாரமுதலிய பொருள்.

நேரிசை வெண்பா.

குருவுருவும் வெண்ணீ றெழுத்தஞ்சுங் கோயி
லரனுருவ மென்றலைமே லாக்குந் — திருவடியுந்
திட்டான வர்ச்சனையுந் தொண்டுஞ் சிவாலயர்க்கென்
றிட்டா ரகத்தியனா ரெட்டு.

பதவுரை. குரு உருவும் - ஆசாரிய ரூபமும், வெண் நீறு உம் - திருவெண்ணீறும், எழுத்து அஞ்சும் - ஸ்ரீபஞ்சாட்சரமும், கோயில் - திருக்கோயிலும், அரன் உருவம் - சிவபெருமானது திருவுருவமும், என் தலைமேல் ஆக்கும் திருவடியும் - என் சிரத்தின்மீது சூட்டுகின்ற திருப்பாதமும், திட்டம் ஆன அர்ச்சனையும் - மேன்மையாகிய அருச்சனையும், தொண்டும் - அடிமைத்திறமும், (ஆகிய) எட்டு - இவ்வெட்டினையும், அகத்தியனார் - அகத்தியமுனிவர், சிவாலயர்க்கு என்று - சிவாலய முனிவர்க்குரியனவென்று, இட்டார் - நியமித்தருளினார், எ - று.

விசேடவுரை. வெண்ணீறு, கோயில், அரனுருவம் என்பவற்றின் ஈற்றில் எண்ணும்மைகள் கூட்டப்பட்டன. எட்டு என்பவற்றில் முற்றும்மை கூட்டப்பட்டது. இறைவனது திருப்பாதம் பிறவிப் பெருங்கடல் நீந்துதற்குப் புணையாதலானும் ஆன்மாக்களுக்குப் புகலிடமாதலானும் அதன் பெருமை தோன்ற என்றலைமேலாக்குந்

"திருவடி" என்றார். இட்டம் - இஷ்டம் என்னும் வடமொழித்திரிபு இதற்கு மேன்மை என்பது பொருள். இட்டம் என்றாலது இட்டென ஈறு தொகுத்தலாயிற்று.

திருச்சிற்றம்பலம்.

## திருப்பதிகக் கருத்துரை.

நிலைமண்டிலவாசிரியப்பா.

தோடு கூற்றுப் பித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் பேரரு ளாகு
நீற்றுப் பதிகங் கிழத்துங் காலை
மாற்றுப் பறையின் வரலா றாகுந்
துஞ்சல் காதல் சொற்றுணை மற்று
மஞ்செழுத் துண்மை யருளிய தாகு
மாரூர் தில்லை காட்டீர் மூன்றுஞ்
சீரார் கோயிற் றிறமைய தாகு
மொருரு வரிய பாளை வடிவே
மருவா ரென்ற வண்டமி ழைந்துந்
திருவார் மேனிச் செய்திய தாகும்
பொடியுடை யரவினை யந்த ணாள
னடியினை தந்த வருளே யாகும்
பத்து வேற்று கொன்றிவை மூன்று
நத்தலி லருச்சனை நாட்டிய தாகும்
வெய்குலந் தில்லை யெனுமிவை மூன்று
நாயனு மடிமையு நாட்டிய தாகு
மிப்பரி சகத்திய முனிவ னிருநிலத்
தொப்பரு மூவ ரோதுதே வார
முழுவதுஞ் சிவாலய முனிக்கறி வித்துப்
பழுதிலா வவையுட் பரிந்தெடுத் திருபத்
தைந்துயர் பதிகமு மதிவுறத் திரட்டி
யென்னரு மடங்க லியாவரு முணரும்
புண்ணிய நிலைபெறு பொருளது வென்றவன்
றனக்கருள் செய்தன னகுற வசறை



நீதிலா வகத்தியத் திரட்டினை யுலகி
லோதினர் அடங்கலு மோதின ராவரே.

ப - ரை. தோடு கூற்று பித்தா மூன்றும் - தோடுகூற்று பித்தா என்னும் முதற்குறிப்பினையுடைய மூன்று திருப்பதிகங்களும், பீடு உடை தேசிகன் பேர் அருள் ஆகும் - பெருமையையுடைய குருமூர்த்தியின் பெருங்கருணையைக் குறித்தனவாகும், நீற்றுப்பதிகம் - திருவெண்ணீற்றுத் திருப்பதிகமொன்றும், கிழத்துங்காலை - சொல்லுமிடத்து, மாற்று பறையின் வரலாறு ஆகும் - (பிறவிப்பிணியை) மாற்றுதற்குரிய பராசத்தியின் வரலாற்றைக் குறித்ததாகும், துஞ்சல் காதல் சொற்றுணை மற்றும் - துஞ்சல் காதல் சொற்றுணை மற்றும் என்னும் முதற் குறிப்பினையுடையநான்கு திருப்பதிகங்களும், அஞ்சு எழுத்து உண்மை அருளியது ஆகும் - திருவைந்தெழுத்தின் உண்மையை அருளிச்செய்தனவாகும், ஆரூர் தில்லை காட்டீர் மூன்றும் - ஆரூர் தில்லை காட்டீர் என்னும் முதற்குறிப்பினையுடைய மூன்று திருப்பதிகங்களும், சீர் ஆர் கோயில் திறமையது ஆகும் - சிறப்புப்பொருந்திய திருக்கோயிற் பெருமையைக் குறித்தனவாகும், ஒருருவரிய பாளை வடிவு மருவார் என்ற வண் தமிழ் ஐந்தும் - ஒருருவரிய பாளை வடிவுமருவார் என்று சொல்லப்பட்ட முதற்குறிப்பினையுடைய வளவிய தமிழ்ப் பதிகங்கள் ஐந்தும், திரு ஆர் மேனி செய்தியது ஆகும் - சிவனுருவத்தைக் குறித்த செய்தியைச் சொல்லுவனவாகும், பொடியுடை அரவினை அந்தணாளன் - பொடியுடை அரவினை அந்தணாளன் என்னும் முதற் குறிப்பினையுடைய திருப்பதிகங்கள் மூன்றும், அடியினை தந்த அருளே ஆகும் - திருவடிகளைத்தந்த பொருளைக்குறித்துச் சொல்லியனவாகும், பத்து வேற்று கொன்று இவை மூன்றும் - பத்துவேற்றுகொன்று என்னு முதற் குறிப்பினையுடைய இம்மூன்று திருப்பதிகங்களும், நத்தல் இல் அருச்சனை நாட்டிய ஆகும் - கெடுதலில்லாத அருச்சனையின் மேன்மையை நிலைபெறுத்தினவாகும், வெய்குலம் தில்லை என்னும் இவை மூன்றும் - வெய்குலம் தில்லை என்னு முதற் குறிப்பினையுடைய இம்மூன்று திருப்பதிகங்களும், நாயனும் அடிமையும் காட்டிய ஆகும் - இறைவன் திறத்தையும் அடிமைத்திறத்தையும் நிலையிட்டனவாகும், (என்று) இப்பரிசு - இவ்விதமாக, அகத்தியமுனிவன் - அகத்தியமுனிவ னென்பவன், இருநிலத்து - இப்பெரிய வுலகத்தில், மூவர் ஓது - மூவரால் சொல்லப்பட்ட, தேவாரம் முழுவதும் - தேவாரப் பதிகங்கள் முழுதும், சிவாலயமுனிக்கு - சிவாலயமுனிவனுக்கு, அறிவித்து - தெரிவித்து, பழுது இலா அவையுள் - குற்றமற்ற அவற்றினுள்ளே, பரிந்து எடுத்து - விரும்பி எடுத்து, உயர் - உயர்ந்த, இருபத்தைந்து

பதிகமும்-இருபத்தைந்து திருப்பதிகங்களும், அறிவறத் திரட்டி-அறிபடி சேர்த்து, எண்ணரும் - மதித்தற்கரிய, அடங்கல் யாவையும் - அடங்கல் முறை முழுதும், உணரும் புண்ணியம்-ஓதியுணரும் புண்ணியமானது, இவை கொடுபொருந்தும் என்று-இவ்விருபத்தைந்து திருப்பதிகங்களை யோதி யுணர்தலால் உண்டாகுமென்று, அவன் தனக்கு-அச்சிவாலய முனிவனுக்கு, தக்கவுற அருள்செய்தனன்-தகுதியாக அருள்செய்தான், அதனால்-அக்கதவினால், தீது இல்லா அகத்தியத் திரட்டினை - குற்றமற்ற அகத்தியத்திரட்டென்னும் இவ்விருபத்தைந்து திருப்பதிகங்களை, உலகில் ஓதினர் - இவ்வுலகில் ஓதினவர்கள், அடங்கலும் ஓதினராவர் - அடங்கன்முறை முழுதும் ஓதினவராவர், எ - று.

வி - ரை. அஞ்செழுத்து - ஸ்ரீபஞ்சாக்ஷரம். மூவர் - அப்பர் சுந்தரர் திருஞான சம்பந்தர். (௩)

திருச்சிற்றம்பலம்.

---

௨

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

## திருப்பிரமபுரம்.

பண் நட்டபாடை.

### குருவருள்.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிபூசியென்னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமலரான்முனைநாட்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

ப - ரை. தோடு உடைய செவியன்-(சக்தி)குழையணிந்த திருச்செவியையுடையனாய், விடை ஏறி - இடபத்தின் மேலேறி, தூவெண் ஓர் மதிசூடி - பரிசுத்தமான வெண்ணிறத்தையுடைய ஒற்றைக்கலையாகிய சந்திரனைச் சிரத்திற்றரித்து, காடு உடைய சுடலை பொடி பூசி - சுகொட்டிலுள்ள சுடலைப்பொடியைத் திருமேனி முழுதும்பூசி, என் உள்ளம் கவர் கள்வன் - என்மனத்தைக் கவர்ந்துகொண்ட கள்வனானவன், ஏடு உடைய மலரான் - இதழ்களையுடைய மலர்களான் (அருச்சித்து), முனைநாள் - முற்காலத்தில், பணிந்து ஏத்த



அருள்செய்த - (தன்னை) வணங்கி வாழ்த்தும்படி (எனக்கு) அருள்செய்த, பீடு உடைய-பெருமையையுடைய, பிரமாபுரம்மேவிய - திருப்பிரமபுரத்தில் எழுந்தருளிய, பெம்மான் இவன் - பெருமானாகிய இவனே, எ-று.

வி - ரை. தோடு அரவக்குழை யெனினுமாம், "பாம்பினையர்க் குழையாகவணிந்தோன்" என்றார் திருவாதவூரடிகளும், தாம்பாடுந் திருப்பதிகங்களைப் பெற்றருளற் குரியதாதலால் முதற்கண் தோடுடைசெவியன் எனத் திருச்செவியைச் சிறப்பித்தார். விடையேறல் முதலிய கோலங்களைக்கொண்டு என்னுள்ளத்தைக் கவர்ந்தான் என்றற்கு 'தோடுடைய செவியன் விடையேறி யோர்தூவெண்மதிசூடிக் காடுடைய சுடலைப்பொடி பூசி யென்னுள்ளங் கவர்கள்வன்' என்றார். கவர் என்பது கள்வன் என்பதற்கேற்ற அடை. அன்று ஏ - அசைகள்.

சுடலைப்பொடி - திருவெண்ணீறு, இது சர்வசங்காரகாலத்தில் எல்லாப் பொருள்களையும் பொடிபடுத்தலா லுண்டாமது. "நாதனார் பொடிபடுத்து நீறணியின்" என்றார் பிறரும். பெம்மான் பெருமான் என்பதன் சிதைவு, பெருமையுடையான் என்பது பொருள். இத்திருப்பதிகம் தமது தந்தையாராகிய சிவபாத விருதயர் எச்சிற்கலக்க இப்பாலையூட்டினவர்யார் என்று சினந்து,கைக்கோலோங்கி கொண்டோக்க, அதற்கஞ்சித் தமது வலத்திருக்கை விரலொன்றினால் சிவபெருமானைச் சுட்டிக்காட்டி, இவனேயிது செய்தவனென்னும் பொருள்தோன்ற அருளிய பிள்ளையாரால் ஓதியருளப்பட்டது. பிரமபுரம் என்னும் இத்தலம் சோழநாட்டிலுள்ளது. சுவாமிபெயர் பிரமபுரீசர், தேவியார்பெயர் திருநிலைநாயகியம்மை. (௧)

முற்றலாமையிளநாகமோடேனமுளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகலனாப்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன் [தப்
கற்றல்கேட்டலுடையார்பெரியார்கழல்கையாற்றொழுதேத்
பெற்றமூர்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

ப - ரை. முற்றல் ஆமை - முதிர்ந்த ஆமையோடும், இளநாகமோடு - இளம்பாம்புகளோடு, ஏனம் - பன்றியின், முளைகொம்பு - முளைத்தலையுடைய கொம்பும் ஆகிய, அவைபூண்டு - அவற்றை ஆபரணமாக அணிந்து, வற்றல்ஓடு - தசைவற்றின தலையோட்டை, கலன் ஆ - பாத்திரமாகக்கொண்டு, பலிதேர்ந்து - பிச்சையேற்று, எனது உள்ளம்கவர் - என்மனத்தைக் கவர்ந்துகொண்ட, கள்வன்-கள்வனானவன், கற்றல்கேட்டல்உடையார்-கல்விகேள்விகளை யுடையவராகிய, பெரியார் - பெரியோர், கழல்-(தன்) திருவடியை, கையாற்றொழுது

வந்த - கைகளால் அஞ்சலித்துத்துதிக்க, பெற்றம் ஊர்ந்த - இடபத்தை நடத்தின, பிரமாபுரம்மேவிய - திருப்பிரமபுரத்தி லெழுந்தருளிய, பெம்மான் இவன் - பெருமானாகிய இவனே, எ - று.

வி - ரை. பூண்டு என்றமையால் ஆபரணமாக வென்பது வருவிக்கப்பட்டது. கலை என்பது கலைஞனை ஈறுதொகுக்கப்பட்டது. பலிதேர்ந்து என மேல்வருதலால் கலன் என்றது பிக்ஷாபாத்திரமெனக்கொள்க. கற்றல் கேட்டல் - வீட்டு நூல்களைக் கற்றலுங்கேட்டலும். ஊர்தல் - ஏறிநடத்துதல். (௫)

நீர்பரந்தநிமிர்புன்சடைமேலோர்நிலவெண்மதிசூடி
ஏர்பரந்தஇனவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வ
னூர்பரந்தவுலகின்முதலாகியவோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

ப - ரை. நீர்பரந்த - நீர்பரவின, நிமிர் - நீண்ட, புன்சடைமேல் - புல்லிய சடையின்மீது, ஓர் - ஒற்றைக்கலையாகிய, நிலவெண்மதி - சந்திரிகையையுடைய வெண்மையாகிய சந்திரனை, சூடி - தரித்து, ஏர்பரந்த - அழகுமிகுந்த, இனம் வெள்வளைசோர - கூட்டமாகிய வெள்ளியவளையல் கழலும்படி, என் உள்ளம் - என்மனத்தை, கவர் - கவர்ந்துகொண்ட, கள்வன் - கள்வனானவன், ஊர்பரந்த - ஊர்கள் பரவியிருக்கிற, உலகில் - இவ்வுலகில், முதல் ஆகிய - முதன்மையாகிய, ஓர் ஊர் இது என்ன - ஒப்பற்றவூரிது வென்று யாவரும் புகழ்ந்துசொல்லும்படி, பேர்பரந்த - பேர்எங்கும் வியாபித்த, பிரமாபுரம்மேவிய - திருப்பிரமபுரத்தி லெழுந்தருளிய, பெம்மான் இவன் - பெருமானாகிய இவனே, எ - று.

வி - ரை. நீரென்றது இவ்விடத்துக் கங்கையை. ஊர்பரந்த என்பதில் பரவுதல் மிகுதல். படைப்புக் காலந்தொடங்கி எக்காலத்தும் அழியாது நிலைபெற்றிருத்தலால் இத்திருப்பதியை 'ஊர்பரந்த வுலகின் முதலாகிய வோரூர்' என்றார். ஏர்பரந்த இனவெள்வளை சோரவென்னுள்ளங் கவர்கள்வன் என்றதனால் பிள்ளையார் தாமொருதலைவியது நிலையையடைந்து இறைவனைத் தலைவனாக்கி யுரைத்ததாகக் கொள்க.

விண்மகிழ்ந்தமதிலெய்ததுமன்றிவிளங்குதலையோட்டி
லுண்மகிழ்ந்துபலிதேரியவந்தெனதுள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவரவம்மலர்க்கொன்றைமலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

ப - ரை. விண்மகிழ்ந்த - ஆகாயத்தை யளாவின, மதில் - மும்மதில்களை, எய்ததும்அன்றி - எய்ததேயல்லாமல், விளங்கு - பிரகாசிக்கிற, தலை ஓட்டில் - தலையோட்டினால், பலிதேரியவந்து - பிச்சையேற்கவந்து, எனது உள்ளம் - என்மனத்தை, கவர் - கவர்ந்துகொண்ட, கள்வன் - கள்வனானவன், மண்மகிழ்ந்த - மண்ணுலகத்தார் யாவரும் மகிழ்தற்கேதுவாகிய, அரவம் - பாம்பும், மலர்க்கொன்றை - கொன்றைமலரும், மலிந்த - மிகுதியாக அணியப்பெற்று விளங்குகிற, வரைமார்பில் - மலைபோலுந் திருமார்பின்கண், பெண்மகிழ்ந்த - மலைமகளாகிய உமாதேவி மகிழ்ந்து வீற்றிருக்கிற, பிரமாபுரம் மேவிய - திருப்பிரமபுரத்தி லெழுந்தருளிய, பெம்மான் இவன் - பெருமானாகிய இவனே, எ - று.

வி - ரை. விண்மகிழ்ந்த என்பதில் மகிழ்தல் அளாவுதலென்னும் பொருளது. அளாவுதல் நீண்டிருத்தல். மகிழ்தல் விரும்புதலெனினுமாம். மதில் என்றது - மதிலுருவாயிருக்கிற முப்புரங்களை, இவைகளுள் இரும்பாலியன்றது ஒன்று, வெள்ளியாலியன்றது ஒன்று, பொன்னாலியன்றது ஒன்று. "இரும்புமொன்மதில்பொன்னெயில்வெள்ளிப்புரிசையன்றோர் அரும்புரஞ் செற்றகொற்றத் தெம்பிரான்" என்பது திருக்கோவையார். இங்ஙனம் எய்ததென்றது திரிபுரசங்காரத்தைக் குறித்தது. தலையோடு - பிரமகபாலம். பெண்மகிழ்ந்த என்னுங் குறிப்பால் மார்பில் என்றது இடப்பக்கத்து மார்பெனக் கொள்க. (௭)

ஒருமைபெண்மையுடையன்சடையன் விடையூரும்இவ
னென்ன, அருமையாகவுரைசெய்யவமர்ந்தெனதுள்ளங்கவர்
கள்வன், கருமைபெற்றகடல்கொள்ளமிதந்ததோர்காலம்இது
வென்னப், பெருமைபெற்றபிரமாபுரமேவியபெம்மானிவ
னன்றே.

ப - ரை. ஒருமை - ஒருபாகத்தில், பெண்மையுடையன் - பெண்ணுருவை யுடையவன், சடையன் - சடாபாரத்தையுடையவன், இவன்விடை ஊரும் என்ன - இவன் இடபத்தையேறி நடத்துவானென்று, அருமையாக உரைசெய்ய - அருமையாய்ச் சொல்லிப் புகழும்படி, அமர்ந்து - விரும்பி, எனது உள்ளம் - என்மனத்தை, கவர் - கவர்ந்துகொண்ட, கள்வன் - கள்வனானவன், கருமைபெற்ற - கருமையைக்கொண்ட, கடல் கொள்ள - கடல் கவர்ந்துகொள்ள, இது - இந்தத்திருப்பதி, ஓர் காலம் - ஓர்காலத்தில், மிதந்தது - (அழியாமல்) மிதந்துகொண்டிருந்தது, என்ன - என்று அறிஞர்சொல்லும் வண்ணம், பெருமைபெற்ற - மகிமையையடைந்திருக்கிற, பிரமாபுரம்மேவிய - திருப்பிரமபுரத்தி லெழுந்தருளிய, பெம்மான் இவன் - பெருமானாகிய இவனே, எ - று.

வி - ரை. ஒருமையென்றது இங்குத்தன்மையை யுணர்த்தாது ஒன்றென்னும்பொருளை யுணர்த்திற்று. கரு - கருநிறம். ஓர்காலம் என்றது ஒரு பிரளயகாலத்தை. கடல் வெள்ள மிதந்ததனால் இத்திருப்பதிக்குத் தோணிபுரம் என்றொரு பெயர்வழங்கும். அமர்தல் - விரும்புதல். (௫)

மறைகலந்தவொலிபாடலோடாடலராகிமழுவேந்தி
யிறைகலந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடியார்பொழினீடுயர்சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

ப - ரை. மறைகலந்தவொலி - வேதத்தோடு கூடியவொலி, பாடலோடு - பாடல் என்பவற்றோடு, ஆடலர் ஆகி - நடிக்கின்றவராகி, மழு வேந்தி - மழுவைத்தாங்கி, இறைகலந்த - என் கையிறையிற் பொருந்திய, இனம் - கூட்டமாகிய, வெள்வளை சோர - வெள்ளியவளையல் கழலும்படி, என் உள்ளம் - என்மனதை, கவர் - கவர்ந்துகொண்ட, கள்வன் - கள்வனானவன், கறைகலந்த - இருளோடு கூடிய, கடி ஆர் பொழில் - மணம்பொருந்திய பொழில், நீடு உயர்சோலை - நீண்டுயர்ந்த சோலை, (என்பவற்றில்) கதிர்சிந்த - தன்கிரணங்கள் பாயும்படி, பிறை கலந்த - சந்திரன் தவழ்கின்ற, பிரமாபுரம்மேவிய - திருப்பிரமபுரத்தில் எழுந்தருளிய, பெம்மான் இவன் - பெருமானாகிய இவனே, எ - று.

வி - ரை. மழுவேந்தியாடலராகியென் றியைப்பினுமாம். பாடல் என்றது சாமகானத்தை. மழு - பரசாயுதம், எரியிரும்புமாம். இறை - கையிறை, அதாவது முன்கை. கறை - மாசெறிவினாலுண்டாகிய இருள். பொழில் - பூந்தோட்டம், சோலை - மரங்களடர்ந்த தோப்பு. பிறை என்றது இவ்விடத்துச் சந்திரன் என்னும் பொதுப்பெயரை. (௬)

சடைமுயங்குபுனலனனலனெரிவீசிச்சதிர்வெய்த
வுடைமுயங்குமரவோடுழிதந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கடன்முயங்குகழிசூழ்குளிர்கானலம்பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

ப - ரை. சடைமுயங்கு புனலன் - சடையிற் றங்கிய கங்கையையுடையவனும், அனலன் - மழுவை யுடையவனுமாகி, எரிவீசி சதிர்வு எய்த - சுவாலையை வீசி அழகுசெய்யாநிற்க, உடை முயங்கும் அரவோடு - உடைக்கையின்மேற் கட்டின பாம்புக்கச்சையோடு, உழிதந்து - வந்து, எனது உள்ளம் - என்மனத்தை, கவர் - கவர்ந்துகொண்ட, கள்வன் - கள்வனானவன், கடல்முயங்கு - கடலோடு



சேர்ந்த, கழிசூழ் - கழிசூழ்ந்த, குளிர் - குளிர்ந்த, கானல் - கடற்கரைச்சோலையிலுள்ள, அம்பொன்னஞ்சிறகு அன்னம் - அழகாகிய பொன்னிறமாகிய சிறகையுடைய அன்னச்சேவல்கள், பெடை முயங்கு - தம்பெட்டைகளோடு புணர்கின்ற, பிரமாபுரம்மேவிய - திருப்பிரமபுரத்தி லெழுந்தருளிய, பெம்மான் இவன் - பெருமானாகிய இவனே, எ - று.

வி - ரை. எரிவீசி சதிர்வெய்தவுடைமுயங்கு மரவு என்பதற்கு விஷாக்கினியைக் கான்று அழகுசெய்யாநிற்க, அரையாடைக் கச்சையாகிய பாம்பு என்றுரைப்பினுமாம். கழி - உப்பங்கழி. பொன்னஞ்சிறகு என்பதில் அம்சாரியை. பெடை முயங்கு என மேல்வருதலால் அன்னம் சேவலன்னத்துக்காயிற்று. (௭)

வியரிலங்குவரையுந்தியதோள்களைவீரம்விளைவித்த
வுயரிலங்கையரையன்வலிசெற்றெனதுள்ளங்கவர்கள்வன்
றுயரிலங்குமுலகிற்பலவூழிகடோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

ப - ரை. வரைஉந்திய - கைலாயமலையை அசைத்தெடுக்க, வியர் இலங்கு தோள்களை - வேர்வையிருந்த தோள்களுக்கு, வீரம்விளைவித்த - வீரத்தன்மையை யுண்டாக்கின, உயர் - உயர்ந்த, இலங்கை அரையன் - இலங்கைப் பட்டணத்துக் கரசனாகிய இராவணனது, வலிசெற்று - வலிமையைவென்று, எனது உள்ளம் - என் மனத்தை, கவர் - கவர்ந்துகொண்ட, கள்வன் - கள்வனானவன், துயர் இலங்கும் உலகில் - துன்பம் மிக்கு விளங்குகின்ற இவ்வுலகத்தில், பல ஊழிகள் தோன்றும்பொழுது எல்லாம் - பலகற்பங்க ளுண்டாகும்பொழுதெல்லாம், பெயர் இலங்கு - பெயர் அழியாது விளங்குகின்ற, பிரமாபுரம் மேவிய - திருப்பிரமபுரத்தி லெழுந்தருளிய, பெம்மான் இவன் - பெருமானாகிய இவனே, எ - று.

வி - ரை. தோள்களையென்பதில் இரண்டனுருபு நான்கனுருபின் பொருளது. உந்திய - செய்தியவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். துயர் - பிறவித்துன்பம். ஊழி - பிரளய காலம். வியர் வேர் எனப்பொருள்கொண்டு, வியரிலங்குவரை யென்பதற்கு வேருன்றிய மலையென்றுரைப்பினுமாம். (௮)

தாணுதல்செய்திறைகாணியமாலொடுதண்டாமரையானு
நீணுதல்செய்தொழியந்நிமிர்ந்தானெனதுள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மகளீர்முதலாகியவையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

ப - ரை. மாலொடு - திருமாலோடு, தண் தாமரையானும் - குளிர்ந்த தாமரைமலரை யாசனமாகக் கொண்ட பிரமனும், இறைகாணிய - இறைவனைக் காணும்பொருட்டு, நீணுதல்செய்து - தன் திருவடியின் தெற்றியப்படி யுணர்ந்து, நீணுதல்செய்து ஒழிய - கெடுங்காலம் முயன்றும் காணாதொழிந்தபடி, நிமிர்ந்தான் - உயர்ந்து நின்றவனும், எனது உள்ளம் - என்மனத்தை, கவர் - கவர்ந்துகொண்ட, கள்வன் - கள்வனுமாவான், வாள் நுதல்செய் - ஒளிபொருந்திய நெற்றியையுடைய, மகளிர் முதலாகிய - பெண்கள் முதலான, வையத்தவர் ஏத்த - உலகத்தார் துதிக்கும்படி, பேணுதல்செய் - அவர்களைக் காப்பாற்றுகின்ற, பிரமாபுரம் மேவிய - திருப்பிரமபுரத்தி லெழுந்தருளிய, பெம்மான் இவன் - பெருமானாகிய இவனே, எ - று.

வி - ரை. நீணுதல் - நீளுதல் என்பதன் திரிபு, நிமிர்தல் - நெருப்புப்பொருப்பாய் நிமிர்ந்து நிற்றல். வாணுதல்செய் என்பதில் செய் உடைய வென்னும் பொருளது. (௯)

புத்தரோடு பொறியில்சம ணும்புறங் கூறநெறி நில்லா
வொத்தசொல்ல வுலகம்பலி தேர்ந்தெனது உள்ளங்கவர் கள்வன்
மத்தயானை மறுகவ்வுரி போர்த்ததோர் மாயமிது வென்னப்
பித்தர்போலும் பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே.

ப - ரை. புத்தரோடு - புத்தர்களுடன், பொறி இல் சமணும் - அறிவில்லாத சமணர்களும், புறங்கூற - புறங்கூறவும், உலகம் - உலகத்தார், நெறிநில்லா - நன்னெறியில் நில்லாது, ஒத்தசொல்ல - தமது மனத்துக் கிசைந்த வார்த்தைகளைச் சொல்லவும், பலிதேர்ந்து - பிச்சையேற்று, எனது உள்ளம் - என் மனத்தை, கவர் - கவர்ந்து கொண்ட, கள்வன் - கள்வனாவான், மத்தயானை - மதயானையானது, மறுக - மனங்கலங்கும்படி, உரி போர்த்தது - அதனை யுரித்து அதன் தோலைப் போர்த்துக்கொண்டதாகிய, இது - இச்செய்கை, ஓர் மாயம் என்ன - ஒரு மாயச் செய்கைபோலுமென்று கண்டோர் சொல்லும்படி, பித்தர்போலும் - பித்தர்போன்று திரியாநின்ற, பிரமாபுரம் மேவிய - திருப்பிரமபுரத்தி லெழுந்தருளிய, பெம்மான் இவன் - பெருமானாகிய இவனே, எ - று.

வி - ரை. புறங்கூறல் - புறத்தே யிழித்துக் கூறல். நெறிநில்லாது எனற்பாலது நெறிநில்லா வென நின்றது. மத்தயானை யென்றது எதுகைநோக்கி. (௧௦)



அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கையலர் மேய
பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மானிவன் றன்னை
யொருநெறிய மனம்வைத் துணர்ஞான சம்பந்தனுரை செய்த
திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினை தீர்தலெளி தாமே.

ப - ரை. அருநெறிய - அருநெறியையுடைய, மறைவல்ல முனி - வேதங்களில் வல்லவனாகிய பிரமனால் உண்டாக்கப்பட்ட, அகன் பொய்கை - விசாலமான தடாகத்தில், அலர் மேய - மலர்கள் நிறைந்த, பெருநெறிய - பேரழகையுடைய, பிரமாபுரம் மேவிய - திருப்பிரமபுரத்தி லெழுந்தருளிய, பெம்மான் இவன் தன்னை - பெருமானாகிய இவனை, ஒருநெறிய - ஒருவழிப்பட்ட, மனம் வைத்து உணர் - மனம் வைத்து உணர்ந்த, ஞானசம்பந்தன் உரைசெய்த - ஞானசம்பந்தன் சொன்ன, திருநெறிய - திருநெறியையுடைய, தமிழ் வல்லவர் - தமிழ்ப் பாடல்களை ஓதவல்லார், தொல்வினை தீர்தல் - (தமது) பழவினையை யொழித்தல், எளிது ஆம் - எளிதாகும், எ - று.

வி - ரை. அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கை - பிரமதீர்த்தம். ஒருநெறிய மனம் - பலவழியாய்ப் புலன்களிற் செல்லாது ஒருவழிப்பட்ட மனம். ஒருவழி - இறைவன் வழி. திருநெறிய தமிழ் - அழகிய நன்னெறியை யுணர்த்துந் தமிழ்ப்பாடல். நன்னெறி - வீட்டுநெறி. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசுநாயனார்

## திருவதிகைவீரட்டானம்.

பண் கொல்லி.

---

### குருவருள்.

திருச்சிற்றம்பலம்.

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பக லும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதுந்

தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடியே னதிகைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

ப - ரை. கெடிலம் - திருக்கெடிலநதியின் வடகரையிலுள்ள, அதிகை வீரட்டானத்து உறை - திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளிய, அம்மானே - எமது தந்தையே, கூற்று ஆயின ஆறு விலக்ககிலீர் - (சூலைநோயானது எனக்கு) யமனாய் வந்தவழியை தவிர்க்கிலீர், கொடுமைபல செய்தன நான் அறியேன் - பலகொடுமைகளை நான் செய்ததறியேன், ஏற்றாய் - இடபவாகனத்தையுடையவனே, அடிக்கே - உன் திருவடியையே, இரவும்பகலும் - இரவினும் பகலினும், பிரியாது - நீங்காமல், எப்பொழுதும் வணங்குவன் - எக்காலத்தும் தொழுவேன், தோற்றாது - கண்ணுக்குத் தோன்றாமல், என் வயிற்றின் அகம்படியே - என்வயிற்றினுள்ளிடத்திற்றானே, குடரோடு துடக்கி - குடலோடுகூடி, முடக்கியிட - முறுக்காநிற்க, அடியேன் ஆற்றேன் - அடியேன் சகியேன், எ - று.

வி - ரை. கூற்று - யமனுக்குக் காரணப்பெயர், உடம்புயிர்களைப் பிரிப்போன் என்பது பொருள். ஏற்றாய் அடிக்கே என்பதற்கு உன் திருவடித் தொண்டிக்கென்றே என்னை ஏற்றுக்கொண்டனை யென்று ரைப்பினுமாம். அகம்படி - உள்ளிடம். குடர் குடல் என்பதனிற்றுப் போலி, துடக்குதல் - கலத்தல், முடக்குதல் - முறுக்குதல். (௧)

நெஞ்சம்முமக்கே யிடமாகவைத்தேன்
நினையாதொருபோது மிருந்தறியேன்
வஞ்சம்மிதுவொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகிவந்தென்னை நலிவதனை
நணுகாமற்றுரந்து கரந்துமிடீர்
அஞ்சேலுமென்னீ ரதிகைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

ப - ரை. நெஞ்சம் - என்மனத்தை, உமக்கே இடமாக வைத்தேன் - உமக்கே இடமாயமைத்தேன், ஒருபோதும் - ஒருகாலத்தும், நினையாது இருந்தறியேன் - உம்மை நினையாமலிருந்ததறியேன், வஞ்சம் இது ஒப்பது கண்டறியேன் - இதைப்போன்ற வஞ்சநோயைப் பார்த்தறியேன், வயிற்றோடு துடக்கி முடக்கியிட - வயிற்றோடு கலந்து முறுக்கும்பொருட்டு, நஞ்சு ஆகி வந்து - விஷம்போலவந்து, என்னை நலிவதனை - என்னை வருத்துவதை, நணுகாமல் - என்னிடத்துச் சேராமல், துரந்து கரந்தும் இடீர் - துரத்தியொழித்திடுமல்லீர், அஞ்சேலும் என்னீர் - அஞ்சாதே யென்றுஞ் சொல்லீர், அதிகைக் கெடிலவீரட்டானத்துறை அம்மானே, எ - று.

வி - ரை. கட்டுவதற்காதிருந்து வருத்துதலால் இந்நோயை வஞ்சம் என்றார். ஒருபோதும் என்பதில் உம்மை முற்றும்மை. இழிவு சிறப்புமாம். வஞ்சம் - வஞ்சநோய். வயிற்றோடு - வயிற்றிலுள்ள குடலோடு. கரத்தல் - மறைத்தல் (அழித்தல்). (௨)

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலையிற் பலிகொண்டுழல்வீர்
துணிந்தே யுமக்காட்செய்து வாழலுற்றாற்
சுடுகின்றது சூலைதவிர்த் தருளீர்
பிணிந்தார்பொடிகொண்டு மெய்ப்பூசவல்லீர்
பெற்றமேற்றுகந்தீர் சுற்றும் வெண்டலைகொண்
டணிந்தீரடிகே ளதிகைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

ப - ரை. பணிந்தாரன - வணங்கினோருடைய, பாவங்கள் - பாவங்களை, பாற்றவல்லீர் - ஓட்டவல்லீர், படுவெண்டலையில் - வெண்மைபொருந்திய தலையோட்டில், பலிகொண்டு உழல்வீர் - பிச்சையேற்றுத்திரிவீர், துணிந்து - துணிவுகொண்டு, உமக்கு ஆள்செய்து - உமக்குத் தொண்டுசெய்து, வாழலுற்றால் - வாழத் தொடங்கினால், சுடுகின்றது - சூலைநோயானது என்னைச் சுட்டு வருத்துகின்றது, தவிர்த்து அருளீர் - (அதனை) நீக்கியருள்வீராக, பிணிந்தார் பொடிகொண்டு - இறந்தாரது சாம்பலைக்கொண்டு, மெய்பூசவல்லீர் - திருமேனியிற் பூசிக்கொள்ளவல்லீர், பெற்றம் - இடபத்தின் மீது, ஏற்று - ஏறுதலை, உகந்தீர் - விரும்பினீர், வெண்டலைகொண்டு - வெள்ளிய தலைமாலைகளைக்கொண்டு, சுற்றும் அணிந்தீர் - சூழவும் அலங்கரித்துக்கொண்டீர், அடிகேள் - சுவாமிகளே, அதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே, எ - று.

வி - ரை. பணிந்தாரன என்பதில் அன் சாரியை. அ ஆறன்பன்மையுருபு. படுதல் - பொருந்துதல். பிணிதல் - இறத்தல். வெண்டலை - வெண்டலைமாலை. (௩)

முன்னமடியே னறியாமையினான்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்

பின்னையடியேனுமக்காளும்பட்டேன்
சுடுகின்றதுசூலைதவிர்த்தருளீர்
தன்னையடைந்தார்வினைதீர்ப்பதன்றோ
தலையாயவர்தங்கடனாவதுதா
னன்னநடையாரதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே.

ப - ரை. சூலை - சூலைநோயானது, முன்னம் - முன்னே, அடியேன் - அடியேனது, அறியாமையினால் - அறிவின்மையினால், என்னை முனிந்து நலிந்து - என்னை வெறுத்து வருத்தி, முடக்கியிட - முறுக்கிவிட, பின்னை - பின்னே, அடியேன் - அடியனேன், உமக்கு ஆளும்பட்டேன் - உமக்கு அடிமையும் பட்டேன், (அங்ஙனமாகவும்) சுடுகின்றது - (அந்நோய்) என்னைச் சுடாநின்றது, (ஆதலால்) தவிர்த்து - (அந்நோயை) நீக்கி, அருளீர் - அருள்செய்வீராக, தன்னை அடைந்தார் வினை - தம்மை அடைந்தவரது வினைகளை, தீர்ப்பது அன்றோ - ஒழிப்பதல்லவோ, தலையாயவர் தம் கடன் ஆவது - மேலோரது கடனாவது, அன்னம் நடையார் - அன்ன நடையினையுடைய மாதர்கள் சஞ்சரிக்கிற, அதிகைக்கெடில வீரட்டானத்துறையம்மானே, எ - று.

வி - ரை. அறியாமை - அஞ்ஞானம். முடக்கியிட என்பதற்கு முடங்கச்செய்ய எனினுமாம். தலையாயவர்தங்கடன் என்மேல் வருதலாலும், எதுகையின்பம் நோக்கியும் தன்னை யென்பதற்குத் தம்மையெனப் பொருள் கூறலாயிற்று. (௩)

காத்தாள்பவர்காவலிகழ்ந்தமையாற்
கரைநின்றவர்கண்டுகொளென்றுசொல்லி
நீத்தாயகயம்புகநூக்கியிட
நிலைக்கொள்ளும்வழித்துறையொன்றறியேன்
வார்த்தையிதுவொப்பதுகேட்டறியேன்
வயிற்றோடுதுடக்கிமுடக்கியிட
வார்த்தார்புனலாரதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே.

ப - ரை. காத்து ஆள்பவர் - காத்தாள்வோர், காவல் - தமது காத்தற்றொழிலை, இகழ்ந்தமையால் - கைவிட்டமையால், கரைநின்றவர் - கரையில் நின்றவர்கள், கண்டுகொள் என்று சொல்லி - நாளைக் கண்டுகொள்வாய் என்று சொல்லி, நீத்து ஆய - பெருக்காகிய, கயம்புக - குளத்தில் விழும்படி, நூக்கியிட - தள்ளிவிட, நிலைக்கொள்ளும்வழி - நிலைபெறும் வழியாகிய, துறை - துறையை, ஒன்று அறியேன் - சிறிதும் அறிந்திலேன், இது ஒப்பது - இது போல்வதாகிய, வார்த்தை - சொல்லை, கேட்டறியேன் - கேட்டறிந்திலேன், (அது என்னெனின்) வயிற்றோடு துடக்கி - வயிற்றோடு கூடி, முடக்கியிடல் - முறுக்கிவிடுதலேயாம், ஆர்த்து - சத்தித்து, ஆர்புனல் - நிறைந்த நீரானது, ஆர் - பொருந்திய, அதிகைக்கெடில வீரட்டானத்துறை யம்மானே, எ - று.



வி - ரை. நீத்தம் நீத்து என் கடை தொகுத்தது. துறை - நீர்த்துறை. நூக்குதல் - தள்ளுதல். (௪)

சலம்பூவொடுதூபமறந்தறியேன்
றமிழோடிசைபாடன்மறந்தறியே
னலந்தீங்கிலுமுன்னைமறந்தறியே
னுன்னாமமென்னாவின்மறந்தறியே
னுலந்தார்தலையிற்பலிகொண்டுழல்வா
யுடலுள்ளுறுசூலைதவிர்த்தருளா
யலந்தேனடியேனதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே.

ப - ரை. சலம் பூ ஒடு - நீர் மலர் என்பவற்றோடு, தூபம் - தூபமிடுவதையும், மறந்து அறியேன் - மறந்தறியமாட்டேன், தமிழோடு - தமிழ்ப்பாடலோடு, இசைபாடல் - பண்பாடுதலை, மறந்து அறியேன் - மறந்தறியமாட்டேன், நலம் தீங்கிலும் - நன்மை தீமைகளிலும், உன்னை மறந்து அறியேன் - உன்னை மறந்தறியமாட்டேன், உன் நாமம் - உன் திருநாமத்தை, என் நாவின் - என் நாவைக்கொண்டு உச்சரிப்பதை, மறந்து அறியேன் - மறந்தறியமாட்டேன், உலந்தார் - இறந்தோரது, தலையில் - தலையோட்டில், பலிகொண்டு உழல்வாய் - பலியேற்றுத் திரிவோனே, உடல் உள் உறு - என்னுடம்பினுள்ளே தங்கிய, சூலை - சூலைநோயை, தவிர்த்தருளாய் - நீக்கியருளுவாயில்லை, (ஆதலால்) அடியேன் அலந்தேன் - அடியேன் வருந்தினேன், அதிகைக்கெடில வீரட்டானத்துறை யம்மானே. எ - று.

வி - ரை. உலத்தல் - இறத்தல். (௫)

உயர்ந்தேன்மனைவாழ்க்கையுமொண்பொருளு
மொருவர்தலைகாவலிலாமையினால்
வயந்தேயுமக்காட்செய்துவாழலுற்றால்
வலிக்கின்றதுசூலைதவிர்த்தருளீர்

பயந்தேயென் வயிற்றி னகம்படியே
பறித்துப் புரட்டி யறுத்தீர்த்திட நான்
அயர்ந்தே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே.

ப - ரை. உயர்ந்தேன் - சிறந்தேனாது, மனைவாழ்க்கையும் - இல்வாழ்க்கையும், ஒண்பொருளும் - (அதற்குத் துணையாகிய) பெருஞ்செல்வமும், ஒருவர் - ஒருவரும், தலை - சிறந்த, காவல் இலாமையினால் - காவலில்லாமையினால், வயந்து - உயர்ந்து, உமக்கு ஆட்செய்து - உமக்கு அடிமைசெய்து, வாழல் உற்றால் - வாழத்தொடங்கினால், சூலை - சூலைநோயானது, வலிக்கின்றது - என்னைப்பற்றி வருத்துகின்றது, தவிர்த்து அருளீர் - (அந்நோயை) ஒழித்தருளினீரில்லை, (ஆதலால்) என்வயிற்றின் அகம்படியே - என் வயிற்றினுள்ளிடத்தே, பறித்து - இழுத்து, புரட்டி - புரளச்செய்து, அறுத்து ஈர்த்திட - அறுத்து வலிக்க, நான் பயந்து - நான் அஞ்சி, அடியேன் அயர்ந்தேன் - அடியேன் அயர்ந்துவிட்டேன், அதிகைக் கெடில வீரட்டானத்துறை யம்மானே, எ - று.

வி - ரை. பறித்து என்பதற்கு குடைந்து என்றுரைப்பினு மமையும். (எ)

வலித்தேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம் மனமொன்று மிலாமையினாற்
சலித்தா லொருவர் துணையாருமில்லைச்
சங்கவெண் குழைக்கா துடையெம்பெருமான்
கலித்தேயென் வயிற்றி னகம்படியே
கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே.

ப - ரை. அடியேன் - அடியவனேன், மனைவாழ்க்கை - இல்வாழ்க்கையை, வஞ்சம் மனம் ஒன்றும் இல்லாமையினால் - வஞ்சமனமானது சிறிதும் இல்லாமையினால், வலித்தேன் - மனவுறுதிகொண்டேன், சலித்தால் - மனஞ் சலித்தால், ஒருவர் துணை யாரும் இல்லை - துணையானவர் ஒருவரும் இல்லை, (ஆதலால்) வெண் - வெள்ளிய, சங்கக்குழை - சங்கக்குழையை யணிந்த, காதுடை - திருச்செவிகளையுடைய, எம்பெருமான் - எம்பெருமானே, (சூலைநோய்) கலித்து - மிகுந்து, என் வயிற்றின் அகம்படியே - என் வயிற்றினுள்ளே, கலக்கி மலக்கிட்டு - கலக்கி முறுக்கி, கவர்ந்து தின்ன - என் உயிரை கவர்ந்து தின்னுதலால், அடியேன் அலுத்தேன் - அடியேன் அலுத்துப்போயினேன், அதிகைக்கெடில வீரட்டானத்துறை யம்மானே, எ - று.



வி - ரை. கலித்து என்பதற்கு ஆரவாரித்து எனினுமாம். மலக்கிடல் - முறுக்கிடல். தின்ன காரணப்பொருட்டாகிய வினையெச்சம். (அ)

பொன்போல மிளிர்வதோர் மேனியினீர்
புரிபுன்சடையீர் மெலியும்பிறையீர்
துன்பே கவலை பிணியென்றிவற்றை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
என்போலிக ளும்மை யினித்தெளியார்
அடியார் படுவ திதுவேயாகில்
அன்பே யமையு மதிகைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே.

ப - ரை. பொன்போல மிளிர்வது - பொன்போல விளங்குவதாகிய, ஓர் மேனியினீர் - ஒப்பற்ற திருமேனியை யுடையவரே, புரி - கட்டப்பட்ட, புன்சடையீர் - புல்லிய சடையையுடையவரே, மெலியும் பிறையீர் - தேய்ந்த பிறையைத் தரித்தவரே, துன்பு - துன்பமும், கவலை - கவலையும், பிணி - நோயும், என்ற இவற்றை - என்று சொல்லப்பட்ட இவற்றை, நணுகாமல் - என்னிடத்து அணுகாமல், துரந்து கரந்தும் இடீர் - ஓட்டி யொளிக்கிறீரில்லை, அடியார் படுவது இதுவேயாகில் - உம் அடியவர் படும் பாடு இதுவேயானால், என் போலிகள் - என் போன்றவர்கள், இனி உம்மைத் தெளியார் - இனி உம்மை நம்பமாட்டார்கள், (ஆயினும்) அன்பே அமையும் - (நான் உம்மிடத்துச் செய்யும்) அன்பே போதும், அதிகைக்கெடில வீரட்டானத்துறை யம்மானே, எ - று.

வி - ரை. என்ற இவற்றை யென்பதில் என்றிவற்றை யென நிலைமொழியீற்றகரந் தொகுத்தலாயிற்று. கரத்தல் - மறைத்தல். தெளிதல் - நம்புதல். (கூ)

போர்த்தாயங் கொரானையி னீருரிதோல்
புறங்காடரங்கா நடமாட வல்லாய்
ஆர்த்தா னரக்கன் றனைமால்வரைக்கீழ்
அடர்த்திட் டருள்செய்த துகருதாய்

வேர்த்தும்புரண்டும்விழுந்துமெழுந்தா
லென்வேதனையானவிலக்கிடா
யார்த்தார்புனல்சூழதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே.

ப - ரை. அங்கு - அவ்விடத்தில், ஓர் ஆனையின் - ஒருயானையினது, ஈர்உரிதோல் - குளிர்ந்த உரிக்கப்பட்ட தோலினை, போர்த்தாய் - போர்த்துக்கொண்டவனே, புறங்காடு - மயானத்தை, அரங்கு ஆ - அரங்காகக்கொண்டு, நட்டம் ஆடவல்லாய் - நடனஞ்செய்யவல்லவனே, ஆர்த்தான் - ஆரவாரித்துக்கொண்டு வந்தவனாகிய, அரக்கன்தனை - அரக்கனாகிய இராவணனை, மால்வரைக்கீழ் - பெரிய கைலைமலையின்கீழ், அடர்த்திட்டு - நெருக்கிவருத்தி, அருள் செய்த அது - அருள்செய்த அச்செயலை, கருதாய் - நினைத்தாயில்லை, வேர்த்தும் - வியர்த்தும், புரண்டும் - புரண்டும், விழுந்தும் - வீழ்ந்தும், எழுந்தால் - எழுந்திட்டால், என்வேதனை ஆன - என் துன்பமாயினவற்றை, விலக்கிடாய் - நீக்காதிருக்கிறாய், ஆர்த்து - ஆரவாரித்து, ஆர்புனல்சூழ் - மிக்க நீர்சூழ்ந்த, அதிகைக்கெடில வீரட்டானத்துறை யம்மானே, எ - று.

வி - ரை. உரிதோல் - வினைத்தொகை நிலைத்தொடர். யானையென்றது - கயாசுரனை. (க0)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்

## திருவெண்ணெய்நல்லூர்

பண் இந்தளம்.

குருவருள்.

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறைசூடீபெருமானேயருளாளா
எத்தான்மறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டு
ளத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே. [றையு



ப - ரை. பித்தா - பித்தனே, பிறைசூடீ - பிறையை யணிந்தவனே, பெருமானே - பெருமையுடையானே, அருளாளா - அருளையாள்பவனே, எத்தான் - எவ்வகையானும், மறவாதே - மறவாமல், நினைக்கின்றேன் - நினையா நிற்பவனாகிய எனது, மனத்து - மனத்தில், உன்னை வைத்தாய் - உன்னை யிருத்தினாய், பெண்ணை - பெண்ணையாற்றின், தென்பால் - தென்பக்கத்திலுள்ள, வெண்ணெய் நல்லூர் - திருவெண்ணெய் நல்லூரில், அருட்டுறையுள் - திருவருட்டுறையி லெழுந்தருளியிருக்கின்ற, அத்தா - அத்தனே, உனக்கு ஆள் ஆய் - உனக்கு அடிமைப்பட்டு, இனி - இனிமேலும், அல்லேன் எனல் ஆமே - அல்லேனென்றல் கூடுமோ, எ - று.

வி - ரை. பிறை - சந்திரகண்டம். இது ஒற்றைக் கலையாகிய சந்திரன். சந்திரன் இவ்வாறு ஒற்றைக்கலையானதற்குக் காரணம் தக்கனது சாபம். இதன் விரிவெல்லாம் கந்தபுராண முதலிய நூல்களிற் காண்க. (க)

நாயேன்பலநாளுநினைப்பின்றிமனத்துன்னைப்
பேயாய்த்திரிந்தெய்த்தேன்பெறலாகாவருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டு
ளாயாவுனக்காளாயினியல்லேனெனலாமே. [றையு

ப - ரை. நாயேன் - நாயினேன், பலநாளும் - நெடுநாட்களும், மனத்து - மனத்தில், உன்னை நினைப்பின்றி - உன்னை நினைத்தலில்லாமல், பேயாய்த்திரிந்து எய்த்தேன் - பேய்போலத் திரிந்திளைத்தேன், பெறலாகா அருள் பெற்றேன் - பெறுதற் கரிய உன் திருவருளைப் பெற்றேன், வேய் ஆர் - மூங்கிலடர்ந்த, பெண்ணை - பெண்ணையாற்றின், தென்பால் - தென்பக்கத்திலுள்ள, வெண்ணெய் நல்லூர் - திருவெண்ணெய் நல்லூரில், அருட்டுறையுள் - திருவருட்டுறையி லெழுந்தருளிய, ஆயா - ஆயனே, உனக்கு ஆள் ஆய் - உனக்கு அடிமைப்பட்டு, இனி - இன்னமும், அல்லேன் எனல் ஆமே - அல்லேனென்றல் கூடுமோ, எ - று.

வி - ரை. எய்த்தல் - இளைத்தல். ஆயன் - தாயை நிகர்த்தவன். ஆயாவுனக்கு என்பதற்கு வேதசிவாகமாதிகளாலும் மனோவாக்காயங்களாலும் ஆராய்ந்தறியப்படாதவனுக்கு என்றுரைத்தலுமாம். (உ)

மன்னேமறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னைப்
பொன்னேமணிதானேவயிரமேபொருதுந்தி
மின்னார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டு
ளன்னேயுனக்காளாயினியல்லேனெனலாமே. [றையு

ப - ரை. மன்னே - பெருமானாகிய, மனத்து - என் மனத்தில், மறவாதே - மறவாமல், உன்னை நினைக்கின்றேன் - உன்னை நினையா நின்றேன், பொன்னே - சுவர்ணமும், மணியானே - இரத்தினமும், வயிரம்மே - வயிரமும் ஆகிய இவற்றை, பொருது உந்தி - மோதித் தள்ளி, மின் ஆர் - மின்னலைப் பொருந்திய, பெண்ணை - பெண்ணையாற்றின், தென்பால் - தென்பக்கத்திலுள்ள, வெண்ணெய் நல்லூர் - திருவெண்ணெய் நல்லூரில், அருட்டுறையுள் - திருவருட்டுறையில் எழுந்தருளிய, அன்னே - தாயே, உனக்கு ஆள் ஆய் - உனக்கு அடிமைப்பட்டு, இனி - இன்னமும், அல்லேன் எனல் ஆமே - அல்லேனென்றல் கூடுமோ, எ - று.

வி - ரை. பொன் முதலிய மூன்றினீற்றேகாரங்கள் எண்ணும்மைப்பொருளில் வந்தன. (௩)

முடியேனினிப்பிறவேன்பெறின்மூவேன்பெற்றமூர்தீ
கொடியேன்பலபொய்யேயுரைப்பேனைக்குறிக்கொண்ணீ
செடியார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டு
ளடிகேளுனக்காளாயினியல்லேனெனலாமே. [றையு

ப - ரை. இனி - இனி, முடியேன் - இறவேன், பிறவேன் - பிறவேன், பெறின் - (பிறவியை) பெறினும், மூவேன் - முதுமை யடையேன், பெற்றம் ஊர்தீ - இடப ஊர்தியானே, கொடியேன் - கொடியவனும், பலபொய்யே உரைப்பேனை - பலபொய்களையே பேசுகிற என்னை, நீ குறிக்கொள் - நீ குறிக்கொண்டு காத்தருளக்கடவை, செடி ஆர் - செடிகளடர்ந்த, பெண்ணை - பெண்ணையாற்றின், தென்பால் - தென்பக்கத்திலுள்ள, வெண்ணெய் நல்லூர் - திருவெண்ணெய் நல்லூரில், அருட்டுறையுள் - திருவருட்டுறையில் எழுந்தருளிய, அடிகேள் - சுவாமீ, உனக்கு ஆள் ஆய் - உனக்கு அடிமைப்பட்டு, இனி - இன்னமும், அல்லேன் எனல் ஆமே - அல்லேனென்றல் கூடுமோ, எ - று.

வி - ரை. முடிதல் - இறத்தல். பெற்றம் - இடபம். குறிக்கொள்ளல் - திருவுளம் வைத்தல். (௪)

பாதம்பணிவார்கள்பெறுபண்டமதுபணியா
யாதன்பொருளானேனறிவில்லேனருளாளா [றையு
தாதார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டு
ளாதீயுனக்காளாயினியல்லேனெனலாமே.

ப - ரை. பாதம் - திருவடிகளை, பணிவார்கள் - வணங்குவோர்கள், பெறு - பெறுதற்குரிய, பண்டம் - பொருளாகிய, அது - அந்த



முத்தியை, பணியாய் - அருள் செய்யக்கடவை, ஆதன் - அறிவில்லாதிய நானும் பொருள் ஆனேன் - ஒரு பொருட்டன்மை யுடையேனாயினேனை, அறிவில்லேன் - (ஆயினும்) அறிவில்லேயாகின்றேன், அருளாளா - அருளை யாளுதலுடையவனே, தாது ஆர் - மகரந்தங்கள் நிறைந்த, பெண்ணை - பெண்ணையாற்றின், தென்பால் - தென்பக்கத்திலுள்ள, வெண்ணெய் நல்லூர் - திருவெண்ணெய் நல்லூரில், அருட்டுறையுள் - திருவருட்டுறையில் எழுந்தருளிய, ஆதீ - முதல்வனே, உனக்கு ஆள் ஆய் - உனக்கு அடிமைப்பட்டு, இனி - இன்னமும், அல்லேன் எனல் ஆமே - அல்லேனென்றல் கூடுமோ, எ - று.

வி - ரை. பண்டம் - பொருள். அது பாதம் பணிவார்கள் பெறு என்ற விசேடணத்தால் முத்தியைக் குறித்தது. ஆதன் - அறிவில்லாதவன். (௫)

தண்ணார்மதிசூடீதழல்போலுந்திருமேனீ
யெண்ணார்புரமூன்றுமெரியுண்ணநகைசெய்தாய் [றையு
மண்ணார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டு
ளண்ணாவுனக்காளாயினியல்லேனெனலாமே.

ப - ரை. தண் - குளிர்ச்சி பொருந்திய, ஆர் - ஆத்திமாலையையும், மதி - சந்திரகலையையும், சூடீ - தரித்தவனே, தழல்போலும் திருமேனீ - நெருப்புப்போலும் திருமேனியை யுடையவனே, எண்ணார் - பகைவருடைய, புரம் மூன்றும் - முப்புரங்களையும், எரி உண்ண - நெருப்புண்ணும்படி, நகைசெய்தாய் - சிரித்தவனே, மண் ஆர் - மாட்சிமை யமைந்த, பெண்ணை - பெண்ணையாற்றின், தென்பால் - தென்பக்கத்திலுள்ள, வெண்ணெய் நல்லூர் - திருவெண்ணெய் நல்லூரிலே, அருட்டுறையுள் - திருவருட்டுறையில் எழுந்தருளிய, அண்ணா - ஐயனே, உனக்கு ஆள் ஆய் - உனக்கு அடிமைப்பட்டு, இனி - இன்னமும், அல்லேன் எனல் ஆமே - அல்லேனென்றல் கூடுமோ, எ - று.

வி - ரை. திருமேனீ யென்பது திருமேனியை யுடையவனை யுணர்த்திற்று. இவ்வாறு வடமொழியிலும் வருவன சிலவுள. அவை அம்புஜபாணி, அளிகுலவேணி, பல்லவபாணி என்றற் றொடக்கத்தன. (௬)

ஊனாயுயிரானாயுடலானாயுலகானாய்
வானாய்நிலனானாய்கடலானாய்மலையானாய் [றையு
தேனார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டு
ளானாயுனக்காளாயினியல்லேனெனலாமே.

ப - ரை. ஊன் ஆய் - மாமிசமாகி, உயிர் ஆனாய் - உயிருமானாய், உடல் ஆனாய் - உடம்பானாய், உலகு ஆனாய் - உலகமானாய், வான் ஆய் - ஆகாயமாகி, நிலன் ஆனாய் - பூமியானாய், கடல் ஆனாய் - கடல்களானாய், மலை ஆனாய் - மலைகளானாய், தேன் ஆர் பெண்ணை - இனிமைபொருந்திய பெண்ணையாற்றின், தென்பால் - தென்பக்கத்திலுள்ள, வெண்ணெய் நல்லூர் - திருவெண்ணெய் நல்லூரிலே, அருட்டுறையுள் ஆனாய் - திருவருட்டுறையி லெழுந்தருளியவனே, உனக்கு ஆளாய் - உனக்கடிமைப்பட்டு, இனி - இன்னமும், அல்லேன் எனல் ஆமே - அல்லேனென்றல் கூடுமோ, எ - று.

வி - ரை. உடல் எனமேல் வருதலால் ஊன் என்பது மாமிசமென் றுரைக்கலாயிற்று. தேன் - இனிமை. (எ)

ஏற்றார்புரமூன்றுமெரியுண்ணச்சிலைதொட்டாய்
தேற்றாதனசொல்லித்திரிவேனோசெக்கர்வானீ
ரேற்றாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டு [றையு
ளாற்றாயுனக்காளாயினியல்லேனெனலாமே.

ப - ரை. ஏற்றார் - எதிர்த்தவருடைய, புரம் மூன்றும் - மூன்று புரங்களையும், எரி உண்ண - நெருப்புண்ணும்படி, சிலை தொட்டாய் - வில்லெடுத்தவனே, தேற்றாதன சொல்லி திரிவேனோ - தெளிவற்ற வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே அலைவேனோ, செக்கர் வான் நீர் ஏற்றாய் - செவ்வானத்தின் நிறத்தையுடையவனே, பெண்ணை - பெண்ணையாற்றின், தென்பால் - தென்பக்கத்திலுள்ள, வெண்ணெய் நல்லூர் - திருவெண்ணெய் நல்லூரிலே, அருட்டுறையுள் - திருவருட்டுறையிலெழுந்தருளிய, ஆற்றாய் - நன்னெறியை யுடையவனே, உனக்கு ஆளாய் - உனக்கடிமைப்பட்டு, இனி - இன்னமும், அல்லேன் எனல் ஆமே - அல்லேன் என்றல் கூடுமோ, எ - று.

வி - ரை. சிலையென்றது மேருவில்லை. இது ஏற்றார் புரமூன்றுமெரியுண்ண என்றதனால் கிடைத்தபொருள். நீர் - குணம். அது இங்கு நிறத்தையுணர்த்திற்று. ஆறு - நெறி. செக்கர் - செம்மை. ()

மழுவாள்வலனேந்தீமறையோதீமங்கைபங்கா
தொழுவாரவர்துயராயினதீர்த்தலுனதொழிலே [றையு
செழுவார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டு
ளழகாவுனக்காளாயினியல்லேனெனலாமே.

ப - ரை. மழுவாள் - மழுவாகிய வாட்படையை, வலன் ஏந்தீ - வலக்கரத்திலே ஏந்தினவனே, மறை ஓதீ - வேதபாராயணனே, மங்



கைபங்கா [illegible] மாதுபாகனே, தொழுவார் அவர் - தொழுவோராகிய அவர்களு[illegible]டைய, துயர் ஆயின - துன்பங்களாயினவற்றை, தீர்த்தல் - நீக்குதல், [illegible] உன தொழிலே - உன் செயலேயாம், செழு வார் பெண்ணை - செழுமை [illegible] மிக்கிருக்கின்ற பெண்ணையாற்றின், தென்பால் - தென் பக்கத்[illegible]துள்ள, வெண்ணெய் நல்லூர் - திருவெண்ணெய் நல்லூரிலே, அ[illegible]ருட்டுறையுள் - திருவருட்டுறையிலெழுந்தருளிய, அழகா - அழகனே, உனக்கு ஆளாய் - உனக்கடிமைப்பட்டு, இனி - இன்னமும், அ[illegible]ல்லேன் எனல் ஆமே - அல்லேனென்றல் கூடுமோ, எ - று.

[illegible] - ரை. வலம் வலன் எனப்போலியாயிற்று. தொழுவாரவர் என்றது வழிபாடு செய்வோராகிய அடியாரை. (௯)

காரூர்புனலெய்திக்கரைகல்லித்திரைக்கையாற்
பாரூர்புகழெய்தித்திகழ்பன்மாமணியுந்தி
சீரூர்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாரூரனெம்பெருமாற்காளல்லேனெனலாமே.

ப - ரை. கார் ஊர் புனல் எய்தி - மேகத்தின் நீரையடைந்து, திரை கையால் - அலைகளாகிய கைகளால், கரை கல்லி - கரையைத் தோண்டி, பார் ஊர் - உலகமுழுதும் வியாபித்த, புகழ் எய்தி - புகழையடைந்து, திகழ் - விளங்குகின்ற, பல் - பலவாகிய, மாமணி உந்தி - பெரியவாகிய ரத்தங்களைக்கொழித்து, சீர் ஊர் - சிறப்புப்பொருந்திய, பெண்ணை - பெண்ணையாற்றின், தென்பால் - தென்பக்கத்திலுள்ள, வெண்ணெய் நல்லூர் - திருவெண்ணெய் நல்லூரிலே, அருட்டுறையுள் - திருவருட்டுறையிலுள்ள, ஆரூரன் - திருவாரூரன், எம்பெருமாற்கு - எம்பெருமானாகிய உனக்கு அல்லேன் எனல் ஆமே - அடிமையல்லேனென்றல் கூடுமோ, எ - று.

வி - ரை. கார் - கருநிறம். இது பண்பாகு பெயராய் மேகத்தையுணர்த்திற்று. கல்லியென்பதற்குப் பறித்து எனினுமாம். (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்
## திருவாலவாய்த் திருநீற்றுப் பதிகம்.

பண் காந்தாரம்.

பனரயின் வரலாறு.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறுதுதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறுசமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்திருவாலவாயான்திருநீறே.

ப - ரை. மந்திரம் ஆவதும் நீறு - மந்திர ரூபமாயிருப்பதும் நீறே, வானவர்மேலதும் நீறு - தேவர்கள் மேலணியப்பட்டிருப்பதும் நீறே, சுந்தரமாவதும் நீறு - அழகாவதும் நீறே, துதிக்கப்படுவதும் நீறு - தோத்திரிக்கப்படுவதும் நீறே, தந்திரமாவதும் நீறு - நூல்களாயிருப்பதும் நீறே, சமயத்திலுள்ளதும் நீறு - சமயங்களைச் சேர்ந்திருப்பதும் நீறே, (இத்தன்மைத்தாகிய பெருமையமைந்த நீறு யாதெனின்) செந்துவர்வாய் உமைபங்கன் - செவ்விய பவளம் போலும் வாயினையுடைய உமாதேவிபாகனாகிய, திருவாலவாயான் - திருவாலவாயானது, திருநீறே - திருநீறேயாகும், எ - று.

வி - ரை. துவர் - பவளம், வாய் என்றது அதரத்தை. (க)

வேதத்திலுள்ளதுநீறுவெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறுபுன்மைதவிர்ப்பதுநீறு
ஓதத்தகுவதுநீறுவுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்ததிருவாலவாயான்திருநீறே.

ப - ரை. வேதத்தில் உள்ளதும் நீறு - வேதத்தில் சொல்லப்பட்டுள்ளதும் நீறே, வெம் துயர் தீர்ப்பதும் நீறு - கொடியதுன்பங்களை நீக்குவதும் நீறே, போதம் தருவதும் நீறு - ஞானத்தைத் தருவதும் நீறே, புன்மைதவிர்ப்பதும் நீறு - இழிவையொழிப்பதும் நீறே, ஓதத்தகுவதும் நீறு - துதிக்கத்தகுவதும் நீறே, உண்மையில் உள்ளதும் நீறு - மெய்ந்நூல்களில் சொல்லப்பட்டுள்ளதும் நீறே, (இத்தன்மைத்தாகிய பெருமையமைந்த நீறியாதெனின்) சீதப்புனல்வயல் சூழ்ந்த -



குளிர்ச்சியாகிய நீரையுடைய வயல்கள் சூழ்ந்த, திருவாலவாயான் - திருவாலவாயானது, திருநீறே - திருநீறேயாகும், எ - று.

வி - ரை. போதம் - ஞானம். வெந்துயர் என்றது பிறவித்துன்பங்களை. பிறவித்துன்பங்களாவன - தன்னால் வருவனவும் பிறவுயிர்களால் வருவனவும் தெய்வத்தால் வருவனவுமாம். (உ)

முத்தி[illegible]வதுநீறுமுனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறுதக்கோர்புகழ்வதுநீறு
[illegible]ருவதுநீறுபரவவினியதுநீறு
[illegible]ருவதுநீறுதிருவாலவாயான்திருநீறே.

ப - ரை. முத்திதருவதும் நீறு - முத்திகொடுப்பதும் நீறே, முனிவர் அணிவதும் நீறு - முனிவர் தரிப்பதும் நீறே, சத்தியமாவதும் நீறு - உண்மையாவதும் நீறே, தக்கோர்புகழ்வதும் நீறு - பெரியோர் புகழ்வதும் நீறே, பத்திதருவதும் நீறு - பத்தியைக்கொடுப்பதும் நீறே, பரவ இனியதும் நீறு - துதிக்க இனியதாயிருப்பதும் நீறே, சித்திதருவதும் நீறு - சித்திகளைத்தருவதும் நீறே; (இத்தன்மைத்தாகிய பெருமையமைந்த நீறு யாதெனின்) திருவாலவாயான் - திருவாலவாயானது, திருநீறே - திருநீறேயாகும், எ - று.

வி - ரை. முனிவர் - கடவுளைமனஞ்செய்வோர்; சித்தி - அட்டமாசித்திகள், அவை அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன. (௩)

காணவினியதுநீறுகவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம்பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறுமதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறுதிருவாலவாயான்திருநீறே.

ப - ரை. காண இனியதும் நீறு - பார்ப்பதற்கு இனிதாயிருப்பதும் நீறே, கவினைத் தருவதும் நீறு - அழகைத்தருவதும் நீறே, பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமையைக்கொடுப்பதும் நீறு - விரும்பித் தரிப்பவர்களெல்லாம் பெருமைதருவதும் நீறே, மாணம் தகைவதும் நீறு - மாட்சிமைக்கேட்டைத் தடைப்பதும் நீறே, மதியைத் தருவதும் நீறு - அறிவைக்கொடுப்பதும் நீறே, சேண் அம் தருவதும் நீறு - முத்தியின்பத்தைக்கொடுப்பதும் நீறே, (இத்தன்மைத்தாகிய பெருமையமைந்த நீறியாதெனின்) திருவாலவாயான் - திருவாலவாயானது, திருநீறே - திருநீறேயாகும், எ - று.

வி - ரை. கவின் - அழகு. பேணல் - விரும்பல். சத்து - செறிவு. ஆம் என்றது இங்கு இன்பத்தை யுணர்த்திற்று. (௪)

பூசவினியதுநீறுபுண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறுபெருந்தவத்தோர்களுக்கெல்லா
மாசைகெடுப்பதுநீறுவந்தமதாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறுதிருவாலவாயான்றிருநீறே.

ப - ரை. பூச இனியதும் நீறு - பூசிக்கொள்ள இனிதாயிருப்பதும் நீறே, புண்ணியம் ஆவதும் நீறு - புண்ணியரூபமாயிருப்பதும் நீறே, பேச இனியதும் நீறு - புகழ்ந்து பேசுதற் கினிதாயிருப்பதும் நீறே, பெருந்தவத்தோர்களுக்கெல்லாம் ஆசைகெடுப்பதும் நீறு - மகாதவத்தினர்க்கெல்லாம் அவாவை யொழிப்பதும் நீறே, அந்தமதாவதும் நீறு - அழகாவதும் நீறே, தேசம் புகழ்வதும் நீறே (இத்தன்மைத்தாய பெருமை யமைந்த நீறுயாதெனின்), திருவாலவாயான் - திருவாலவாயானது, திருநீறே - திருநீறே யாகும், எ - று.

வி - ரை. ஆசை - பிரபஞ்சத்தின்மேல் விருப்பமென்றுமாம். அந்தம் - முடிவு என்றுமாம். (௫)

அருத்தமதாவதுநீறவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறுவானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறுபுண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே.

ப - ரை. அருத்தம் ஆவதும் நீறு - திரவியமாவதும் நீறே, அவலம் அறுப்பதும் நீறு - துன்பத்தை யொழிப்பதும் நீறே, வருத்தந் தணிப்பதும் நீறு - கஷ்டத்தை மாற்றுவதும் நீறே, வானம் அளிப்பதும் நீறு - மோக்ஷத்தைத் தருவதும் நீறே, பொருத்தமதாவதும் நீறு - பொருத்தமாயிருப்பதும் நீறே, புண்ணியர் பூசும் வெண்ணீறு - புண்ணியவான்கள் பூசிக்கொள்ளும் வெண்ணீறு, (இத்தன்மைத்தாகிய பெருமையமைந்த நீறு யாதெனின்), திருத்தகு மாளிகை சூழ்ந்த - அழகு பொருந்திய மாளிகைகள் சூழ்ந்த, திருவாலவாயான் - திருவாலவாயானது, திருநீறே - திருநீறேயாகும். எ - று.

வி - ரை. அருத்தம் - செல்வம், சிவநேசர்க்கு இன்றியமையாச் சிறப்பிற்றாதலால் அருத்தமதாவது நீறு என்றார். (௬)

எயிலதுவட்டதுநீறிருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறுபாக்கியமாவதுநீறு



துயிலைத்தடுப்பதுநீறுசுத்தமதாவதுநீறு
அயிலைப்பொலிதருசூலத்தாலவாயான்றிருநீறே.

ப - ரை. எயிலது அட்டதும் நீறு - மதில்களை யழித்ததும் நீறே, இருமைக்கும் உள்ளதும் நீறு - இருமைக்குந் துணையாயிருப்பதும் நீறே, பயிலப்படுவதும் நீறு - பழகப்படுவதும் நீறே, பாக்கியம் ஆவதும் நீறு - செல்வமாவதும் நீறே, துயிலைத் தடுப்பதும் நீறு - தூக்கத்தைத் தடுப்பதும் நீறே, சுத்தமதாவதும் நீறு - பரிசுத்தமாவதும் நீறே (இத்தன்மைத்தாகிய பெருமை யமைந்த நீறு யாதெனின்), அயிலைப் பொலிதரு சூலத்து - கூர்மையால் விளங்குகிற சூலப்படையையுடைய, ஆலவாயான் - திருவாலவாயானது, திருநீறே - திருநீறேயாகும், எ - று.

வி - ரை. எயில் - மதில், அது இங்கு முப்புரமதில்களைக் குறித்தது. முப்புரமதில்களாவன இரும்பினாலும் வெள்ளியினாலும் பொன்னினாலும் இயற்றப்பட்ட மூன்று மதில்கள், இவை முப்புரமெனவும் படும். இவை சஞ்சார சக்தியுள்ளன. இருமை - இம்மைமறுமை யின்பங்கள். துயில் - தூக்கம், இறப்பு எனினுமாம். அயில் - கூர்மை. (௭)

இராவணன்மேலதுநீறுவெண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறுபாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறுதத்துவமாவதுநீறு
வராவணங்குந்திருமேனியாலவாயான்றிருநீறே.

ப - ரை. இராவணன் மேலதும் நீறு - இராவணன் மேற்பூசப்பட்டிருப்பதும் நீறே, எண்ணத்தகுவதும் நீறு - மதிக்கத்தகுந்ததும் நீறே, பராவணம் ஆவதும் நீறு - துதிக்கப்படும் வண்ணமாவதும் நீறே, பாவம் அறுப்பதும் நீறு - பாவத்தைச் சேதிப்பதும் நீறே, தராவணம் ஆவதும் நீறு - பிரபஞ்சரூபமாவதும் நீறே, தத்துவம் ஆவதும் நீறு - தத்துவரூபமாவதும் நீறே, (இத்தன்மைத்தாகிய பெருமை யமைந்த நீறுயாதெனின்), அராவணங்கும் திருமேனி - பாம்புகள் அழகுசெய்கிற திருமேனியையுடைய, ஆலவாயான் - திருவாலவாயானது, திருநீறே - திருநீறேயாகும், எ - று.

வி - ரை. பரவுதல் - துதித்தல். தரா-வடசொல் - பூமியென்பது அதன்பொருள். இது தமிழில் தரையென வழங்கும். தத்துவம் - உண்மை. அணங்குதல் - அழகுசெய்தல். (௮)

மாலொடயனறியாதவண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கள் மெய்யதுவெண்பொடிநீறு

ஏலவுடம்பிடர்தீர்க்கு மின்பந்தருவதுநீறு
ஆலமதுண்டமிடற்றெம் மாலவாயான்றிருநீறே.

ப - ரை. மாலொடு அயன் அறியாத - திருமாலுடன் பிரமனு மறியாத, வண்ணமும் உள்ளதும் நீறு - தன்மையுள்ளதும் நீறே, மேல் உறைதேவர்கள் தங்கள்-விண்ணுலகத்தில் வசிக்கின்ற தேவர்களுடைய, மெய்யதும் - உடம்பிலணியப் பட்டிருப்பதும், வெண்பொடி நீறு - வெண்பொடியாகிய நீறே, ஏல - பொருந்த, உடம்பு - சரீரத்தின், இடர் - துன்பத்தை, தீர்க்கும் - ஒழிக்கின்ற, இன்பம் தருவதும் நீறு - இன்பத்தைக்கொடுப்பதும் நீறே (இத்தன்மைத்தாகிய பெருமையமைந்த நீறுயாதெனின்), ஆலமது உண்ட மிடறு - விடமுண்ட கண்டத்தையுடைய, எம் - எமது, ஆலவாயான் - திருவாலவாயானது, திருநீறே - திருநீறேயாகும், எ - று.

வி - ரை. வண்ணம் - தன்மை. மேல்-இடவாகுபெயராய் விண்ணுலகத்தைக் குறித்தது. உடம்பிடர் - உடம்பெடுத்தலாலுண்டாகும் துன்பம். அது பிறவித்துன்ப மெனப்படும். ஆலமது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. (௯)

குண்டிகைக்கையர்களோடு சாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறு கருதவினியதுநீறு
எண்டிசைப்பட்டபொருளா ரேத்துந்தகையதுநீறு
அண்டத்தவர்பணிந்தேத்து மாலவாயான்றிருநீறே.

ப - ரை. குண்டிகை கையர்களோடு-கமண்டலக் கையருடன், சாக்கியர் கூட்டமும்கூட-சாக்கியர் கூட்டங்களுங்கூட, கண் திகைப்பிப்பதும் நீறு - கண் மயங்கச்செய்வதும் நீறே, கருத இனியது நீறு - நினைத்தற்கினிதா யிருப்பதும் நீறே, எண்டிசைப் பட்டபொருளார் - அஷ்டதிக்கிலுள்ள திக்குப்பாலகரும், ஏத்தும் தகையதும் நீறு-துதித்தற்குரிய பெருமையுள்ளதும் நீறே (இத்தன்மைத்தாகிய பெருமையமைந்த நீறுயாதெனின்), அண்டத்தவர் பணிந்து ஏத்தும் - அண்டத்தார் யாவரும் வணங்கித் துதிக்கிற, ஆலவாயான் - திருவாலவாயானது, திருநீறே - திருநீறேயாகும், எ - று.

வி - ரை. குண்டிகை - கமண்டலம்; இது கரகம் எனவும்படும். இது தவத்தினர் நீர்வைக்கும் பாத்திரமாயிருப்பது. அண்டத்தவர் - விண்ணுலகத்தார். அண்டம் - விண். (௧௦)

ஆற்றலடல்விடையேறு மாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும் பூசுரன்ஞானசம்பந்தன்



தேற்றித்தென்ன னுடலுற்ற தீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்நல்லவர்தாமே.

ப - ரை. ஆற்றல் அடல்-வலிமையும் கொலைத்தொழிலுமுள்ள, விடை ஏறும் - இடபத்தையேறி நடத்துகின்ற, ஆலவாயான் - திருவாலவாயானது, திருநீற்றை - திருநீற்றினை, போற்றி - துதித்து, புகலி நிலாவும்-சீகாழியில்வாழ்கின்ற, பூசுரன்-பூதேவனாகிய, ஞானசம்பந்தன் - ஞானசம்பந்தனானவன், தேற்றி - தெளிவித்து, தென்னன் உடல் உற்ற - பாண்டியனது உடம்பிலுண்டாகிய, தீப்பிணி ஆயின தீர - கொடிய பிணியானவைகளொழிய, சாற்றிய-சொல்லிய, பாடல்கள் பத்தும் வல்லவர் - பத்துப்பாடல்களுங் கற்று வல்லவர்கள், நல்லவர்தாமே - நல்லவர்களே யாவார்கள், எ - று.

வி - ரை. அடல்-கொல்லல்; இதற்குப் பகுதி அடு. புகலியென்பது சீகாழியென்னுந் திருப்பதிக்கோர் சிறப்புத் திருநாமம். தென்னனுடலுற்ற தீப்பிணி யென்றது சுரநோயை. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்
## பஞ்சாக்கரத் திருப்பதிகம்.

பண் காந்தாரபஞ்சமம்.

### அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

துஞ்சலுந்துஞ்சலிலாதபோழ்தினு
நெஞ்சகநைந்துநினைமினாடொறும்
வஞ்சகமற்றடிவாழ்த்தவந்தகூற்
றஞ்சவுதைத்தனவஞ்செழுத்துமே.

ப - ரை. வஞ்சகம் அற்று - கபடமற்று, அடி வாழ்த்த - திருவடியை வாழ்த்துதலும், வந்த கூற்று அஞ்ச - வந்த யமனும் அஞ்சும்படி, உதைத்தன - உதைத்துவென்றன (எவை யெனின்), அஞ்செழுத்துமே - பஞ்சாக்ஷரமே யாதலால், துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்

தினும், தூக்கத்திலும் தூக்கமில்லாத காலத்திலும், நான்தோறும் - தினந்தோறும், நெஞ்சகம் நைந்து நினைமின் - (நீங்கள்) மனமுருகி நினையுங்கள் (உலகர்களே), எ - று.

வி - ரை. நினைமின் என்னும் பயனிலைக்கு எழுவாயாகிய நீவிர் என்னுஞ் சொல்வருவித் துரைக்கப்பட்டது. (க)

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திர மஞ்செழுத் துமே.

ப - ரை. மந்திரம் - மந்திரங்களும், நான்மறை ஆகி - நான்கு வேதங்களுமாகி, வானவர் சிந்தையுள் நின்று - தேவர்கள் மனத்திலிருந்து, அவர் தம்மை ஆள்வன - அவர்களை யாண்டருள்வன (யாவையெனின்), செந்தழல் ஓம்பிய - செந்நெருப்பை வளர்த்த, செம்மை - செந்நெறியையுடைய, வேதியர்க்கு - மறையவர்க்கு, அந்தியுள் மந்திரம் - அந்திக்காலத்திற் செபிக்கப்படுகிற மந்திரமாகிய, அஞ்செழுத்துமே - பஞ்சாக்ஷரமே, எ - று.

வி - ரை. செந்தழல் - யாகாக்கினி. வேதியர் - வேதத்தில் வல்லவர். வேதமார்க்கத்தையுடையவர் எனினுமாம். (உ)

ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன வஞ்செழுத் துமே.

ப - ரை. ஊனில் - உடம்பில், உயிர்ப்பை ஒடுக்கி - காற்றையடக்கி, ஒள்சுடர் - ஒப்பாகிய ஒளியையுடைய, ஞானவிளக்கினை ஏற்றி - ஞானதீபத்தை யேற்றி, நன்புலத்து - நன்மையாகிய இடத்தில், ஏனை வழி திறந்து - மற்றைவழியைத் திறந்து, ஏத்தவல்லார்க்கு-துதிக்கவல்லார்க்கு, இடர் ஆன கெடுப்பன-துன்பமானவற்றை நீக்குவன (யாவையெனின்), அஞ்செழுத்துமே - ஸ்ரீ பஞ்சாக்ஷரமேயாம், எ - று.

வி - ரை. ஊன் - மாமிசம். இது இங்கே யாகு பெயராய் அதனையுடைய வுடம்புக்காயிற்று. உயிர்ப்பு-மூச்சு எனினுமாம். ஏனைவழி - சுழுமுனை வழி. "இடை மூக்குளைப் புகவொட்டாது நடையடக்கி மூலவாயுவை யெழுப்பி சுழுமுனையைத் திறந்து ஏறி நெடுங்கால் நிலையிட்டு நெற்றியைத் திறந்து ஞானவொளி விளக்குப் பெருவெளியுடன் போய், தக்கவஞ் செழுத்தோ



செழுத்துருவாந் தன்மை கண்டருளும்பா வெளிக்கே, புக்கழுந்தினைமெய் தருப்பெறுவர் புவியில் வேட்டவெனடுத்த மென்புழுப்போல்" என்னுந் திருவாதவூரடிகள் புராணச்செய்யுளா லினிது விளங்கும்.

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்றமர் கொண்டு போமிடத்
தல்லல் கெடுப்பன வஞ்செழுத் துமே.

ப - ரை. நல்லவர் தீயர் எனாது - நல்லவர் தீயரென்னுமல் நச்சினர் - விரும்பினவர்களுடைய, செல்லல் கெட - துன்பமொழிய, சிவமுத்தி காட்டுவ - சிவமுத்தியைக் காட்டுவனவும், கொல்ல - கொல்லும்பொருட்டு, நமன் தமர் - யமதூதர், கொண்டுபோமிடத்து - கொண்டுபோகுங் காலத்தில், அல்லல் கெடுப்பன - துன்பத்தை யொழிப்பனவும், (பாவையெனின்) அஞ்செழுத்துமே - ஸ்ரீ பஞ்சாக்ஷரமேயாம், எ - று.

வி - ரை. செல்லல் - துன்பம், சிவமுத்தி - மங்களகரமாகிய முத்தி. (ச)

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமு மஞ்ச வைம்பொழிற்
றங்கர வின்படம் அஞ்சுந் தம்முடை
யங்கையி லைவிர லஞ்செழுத் துமே.

இதன் கருத்து விளங்கவில்லை. (ரு)

தும்மலி ருமல்தொ டர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம்வி ளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை யஞ்செழுத் துமே.

ப - ரை. தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும் - தும்மல் இருமல் என்பவை தொடர்ச்ச காலத்திலும், வெம்மை நரகம் விளைந்த போழ்தினும் - கொடிய நரகவேதனையுண்டான காலத்திலும், இம்மை - இம்மையில், வினை - வினைகள், அடர்த்து எய்தும் போழ்தினும் - வந்து வருத்துங்காலத்திலும், அம்மையினும் - மறுபிறப்பிலும், துணை - துணையாயிருப்பன, அஞ்செழுத்துமே - ஸ்ரீபஞ்சாக்ஷரமேயாம், [illegible] எ - று.

வி - ரை. அம்மை - மறுமை, அடர்தல் - வருத்துதல். (சு)

வீடு பிறப்பை யறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாடொறும்

மாடுகொடுப்பன மன்னுமா நட
மாடியுகப்பன வஞ்செழுத்துமே.

ப-ரை. வீடு பிறப்பை அறுத்து - இறப்புப்பிறப்புக்களை யொழுத்து, மெச்சினர் - வாழ்த்தினவர்களுடைய, பீடை கெடுப்பன - துன்பத்தை நீக்குவனவும், பின்னை - மேலும், நாள்தொறும் - தினந்தோறும், மாடுகொடுப்பன - செல்வத்தைத் தருவனவும், மன்னும் - நிலைபெற்ற, மாநடம் ஆடி உகப்பன - பெரிய நடனஞ்செய்து களிப்பனவும் (யாவையெனின்), அஞ்செழுத்துமே - ஸ்ரீ பஞ்சாக்ஷரமேயாம், எ - று.

வி - ரை. வீடு - இறப்பு. மாடு - செல்வம். அது இங்கு முத்திச் செல்வத்தைக் குறித்தது. (எ)

வண்டமரோதி மடந்தை பேணின
பண்டை யிராவணன் பாடியுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்தபின் னவர்க்
கண்டமளிப்பன வஞ்செழுத்துமே.

ப - ரை. வண்டு அமர் ஓதி - வண்டுகள் விரும்புகிற கூந்தலையுடைய, மடந்தை - உமாதேவி, பேணின - விரும்பினவும், பண்டை - முற்காலத்தில், இராவணன் - இராவணனானவன், பாடி உய்ந்தன - பாடி உய்யப்பெற்றனவும், தொண்டர்கள் - அடியார்கள், கொண்டு துதித்தபின் - கொண்டு துதித்தபிறகு, அவர்க்கு - அவர்களுக்கு, அண்டம் அளிப்பன - முத்தியுலகைக் கொடுப்பனவும் (யாவையெனின்) அஞ்செழுத்துமே - ஸ்ரீ பஞ்சாக்ஷரமேயாம், எ-று.

வி - ரை. ஓதி - கூந்தல், இதில் அணிந்த மலர்களிலுள்ள தேன் விருப்பத்தால் வண்டுகள்மொய்த்த லியல்பாதலால், 'வண்டமரோதி' என்றார். உய்தல் - பிழைத்தல். (அ)

கார்வணனு நான்முகனுங் காணுதற் கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன வஞ்செழுத்துமே.

ப - ரை. கார்வண்ணன் - மேகநிறத்தை யுடையவனும், நான்முகன் - நான்முகனும், காணுதற்கு ஒணா - காண்பதற்குக் கூடாத, சீர்வண்ணம் - மேன்மையும் அழகுமுள்ள, சேவடி செவ்வி - திருவடியின் பெருமையை, நாள்தொறும் - தினந்தோறும், பேர்வண்ணம்



பேசி - பிரபலமாகப்பேசி, பிதற்றும் - பிதற்றுகின்ற, பித்தர்கட்கு - பித்தர்களுக்கு, ஆர்வண்ணம் ஆவன - சென்றடையு மிடமாவன (யாவையெனின்) அஞ்செழுத்துமே - ஸ்ரீபஞ்சாக்ஷரமேயாம், எ-று.

வி - ரை. கார்வணன் - திருமால், நான்முகன் - பிரமன், வண்ணம் - அழகு, நிறமென்னினுமாம், பித்தர் என்றது அடியவரை. (௯)

புத்தர்சமண்கழுக்கையர்பொய்கொளாச்
சித்தத்தவர்கடெளிந்துதேறின
வித்தகநீறணிவார்வினைப்பகைக்
கத்திரமாவன வஞ்செழுத்துமே.

ப - ரை. புத்தர் - புத்தரும், சமண் - சமணரும், கழுக்கையர் - கழுக்கையரும், பொய்கொளா சித்தத்தவர்கள் - உண்மையாகிய மனத்தையுடையவர்களும், தெளிந்து தேறின - தெளிந்து தேறினவையும், வித்தகம் நீறு அணிவார் - ஞானரூபமாகிய நீறு தரிப்பவர்களுடைய, வினைபகைக்கு - வினையாகிய பகையை வெல்வதற்கு, அத்திரம் ஆவன - அஸ்திரமாயிருப்பவையும் (யாவையெனின்), அஞ்செழுத்துமே - ஸ்ரீ பஞ்சாக்ஷரமேயாம், எ - று.

வி - ரை. கழு - சூலம், பொய்கொளாச் சித்தத்தவர் என்றதனால் மெய்கொண்ட சித்தத்தவர் என்றாயிற்று. அத்திரம் - அம்பு. ()

நற்றமிழ்ஞானசம்பந்தனான்மறை
கற்றவன்காழியர்மன்னனுன்னிய
வற்றமின்மாலையீ ரைந்துமஞ்செழுத்
துற்றனவல்லவரும்பராவரே.

ப - ரை. நல்தமிழ் - நல்லதமிழறிந்த, ஞானசம்பந்தன் - ஞானசம்பந்தன், நான்மறைகற்றவன் - நான்கு வேதங்களையுங் கற்றவன், காழியர் மன்னன் - காழியர்க்கரசன், உன்னிய - நினைத்துச்சொல்லிய, அற்றம் இல் - முடிவில்லாத, அஞ்செழுத்து உற்றன - அஞ்செழுத்தன்மை பொருந்தின, மாலை ஈரைந்தும் - சொல்மாலையாகிய இப்பத்துப்பாடலும், வல்லவர் - கற்றுவல்லவர், உம்பர் ஆவர் - தேவராவார், எ - று.

வி - ரை, காழியர் - காழியிலுள்ளவர். அற்றம் - என்பதற்குப் பகுதி அறு. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

## நமச்சிவாயத்திருப்பதிகம்.

பண் கௌசிகம்.

### அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

காதலாகிக்கசிந்து கண்ணீர் மல்கி
யோதுவார் தமைநன்னெறிக்குய்ப்பது
வேதநான் கினுமெய்ப்பொருளாவது
நாதனாமநமச்சிவாயவே.

ப - ரை. காதல் ஆகி - அன்புடையராகி, கசிந்து - மனங்கரைந்து, கண்ணீர்மல்கி - கண்களில் நீர்நிறையப்பெற்று, ஓதுவார் தமை - படிக்கின்றவர்களை, நன்னெறிக்கு உய்ப்பது - நல்வழியிற் செலுத்துவதும், வேதம் நான்கினும் - நான்கு வேதங்களுள்ளும், மெய்ப்பொருள் ஆவது - உண்மைப் பொருளாயிருப்பதும் (எதுவெனின்), நாதன் நாமம் - இறைவனது திருநாமமாகிய, நமச்சிவாயவே - நமச்சிவாய வென்னுந் திருமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரமேயாம், எ - று.

வி - ரை. மல்குதல் - நிறைதல், ஓதுதல் - படித்தல், செபித்தல் எனினுமாம். நன்னெறியென்றது முத்திநெறியை. (க)

நம்புவார் நமர்நாவினவிற்றினால்
வம்புநாண் மலர் வார்மது வொப்பது
செம்பொனார் திலகம் முலகுக்கெலா
நம்பனாமநமச்சிவாயவே.

ப - ரை. நமர் - நம்மவர், நம்புவார் - நம்புவோராகி, நாவின் நவிற்றினால் - நாவினால் உச்சரித்தால், வம்பு - மணமுள்ள, நாண் மலர் - புதிய மலரினின்றும், வார் - ஒழுகுகிற, மது ஒப்பது - தேன் போல்வது (யாதெனின்), உலகுக்கு எல்லாம் - எல்லா வுலகங்களுக்கும், செம்பொன் - செம்பொன்னாகவும், ஆர் திலகம் - அரிய திலகமாகவுமிருக்கிற, நம்பன் - இறைவனது, நாமம் - திருநாமமாகிய, நமச்சிவாயவே - ஸ்ரீ பஞ்சாக்ஷரமேயாம், எ - று.



வி - ரை. நமர் - நம்மவர் (அடியார்), நவிற்றுதல் - செபித்தலுமாம். வம்பு - வாசனை, நாள் - புதுமை. (உ)

நெக்குளார்வமிகப்பெருகிநினைந்
தக்குமாலைகொடங்கையிலெண்ணுவார்
தக்கவானவராய்த்தகுவிப்பது
நக்கனாமநமச்சிவாயவே.

ப - ரை. உள் - மனமானது, நெக்கு - நெகிழ்ந்து, ஆர்வம் மிகப் பெருகி - அன்பு மிகப்பெருகி, நினைந்து - நினையாநின்று, அங்கையில் அக்குமாலைகொடு - அகங்கையில் அக்குமாலையைக்கொண்டு, எண்ணுவார் - உருப்போடுவோர், தக்க - தகுதியாகிய, வானவராய் தகுவிப்பது - தேவராகப் பொருந்துவிப்பது, நக்கன் - இறைவனது, நாமம் - திருநாமமாகிய, நமச்சிவாயவே - ஸ்ரீ பஞ்சாக்ஷரமேயாம், எ - று.

வி - ரை. உள் - உள்ளிருப்பதாகிய மனத்தை யுணர்த்தலால் இடவாகுபெயர். நெகு என்னும் பகுதி யொற்றிரட்டித்து இறந்தகாலங்காட்டிற்று. அக்குமாலை - சங்குமணிமாலை, உருத்திராக்கமாலை யெனினுமமையும். (ஙு)

இயமன்றூதருமஞ்சுவரின்சொலா
னயம்வந்தோதவல்லார்தமைநண்ணினா
னியமந்தானினைவார்க்கினியானெற்றி
நயனனாமநமச்சிவாயவே.

ப - ரை. நியமம் - நியமமாக, நினைவார்க்கு - நினைப்பவர்க்கு, இனியான் - இனியவனும், நெற்றிநயனன் - நெற்றிக்கண்ணனுமாகிய இறைவனது, நாமம் - திருநாமமாகிய, நமச்சிவாய - ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை, இன்சொலால் - இனிய சொற்களால், நயம் வந்து ஓதவல்லார் தமை - விருப்பமுண்டாகி ஓதவல்லவரை, நண்ணினால் - கிட்டினால், இயமன்றூதரும் அஞ்சுவர் - யமதூதரும் அஞ்சுவார், எ - று.

வி - ரை. நயம் - விருப்பம். ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை நியமமாக செபிப்பவரைக் கண்டால் யமதூதரும் அஞ்சுவார் என்பது கருத்து. (ச)

கொல்வாரேனுங்குணம்பலநன்மைக
ளில்லாரேனுமியம்புவராயிடி
னெல்லாத்தீங்கையுநீங்குவரென்பரா
னல்லார்நாமநமச்சிவாயவே.

ப - ரை. கொல்வாரேனும் - கொல்லுவோராயினும், குணம்பல நன்மைகள் இல்லாரேனும் - குணமும் பல நன்மைகளுமில்லாதவராக

யினும், நல்லூர் - நன்மைபொருந்திய, நாமம் - திருநாமமாகிய, நமச்சிவாய - ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை, இயம்புவர் ஆயின் - சொல்லுவாராயின், எல்லாத் தீங்கையும் - எல்லாக்கெடுதிகளையும், நீக்குவர் என்பர் - விட்டொழிவார்களென்று சொல்லுவர் (அறிஞர்), எ - று.

வி - ரை. கொல்வார் - கொலைத்தொழிலுடையோர். குணம், நற்குணம். இயம்புதல் - உச்சரித்தல் எனினுமாம். (௬)

மந்தரம்மனபாவங்கள்மேவிய
பந்தனையவர்தாமும்பகர்வரேற்
சிந்தும்வல்வினைசெல்வமுமல்குமா
னந்திநாமநமச்சிவாயவே.

ப - ரை. மால்நந்தி - பெருமையுள்ள சிவபெருமானது, நாமம் - திருநாமமாகிய, நமச்சிவாய - ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை, மந்தரம் அன்ன பாவங்கள் மேவிய - மந்தரமலைபோன்ற பாவங்களைப் பொருந்திய, பந்தனையவர் தாமும் - பந்தத்தையுடையவரும், பகர்வரேல் - உச்சரிப்பாராயின், வல்வினை சிந்தும் - (அவரது) வலியவினைகள் கெட்டொழியும், செல்வமும் மல்கும் - செல்வமும் பெருகும், எ - று.

வி - ரை. பந்தனை - பிறவிக்கட்டு. பகர்வரேல் என்பதில் ஏல் எனின் என்பதன் மரூஉ. செல்வம் - முத்திச்செல்வம். (௭)

நரகமேழ்புகநாடினராயினு
முரைசெய்வாயினராயினுருத்திரர்
விரவியேபுகுவித்திடுமென்பரால்
வரதனாமநமச்சிவாயவே.

ப - ரை. வரதன் - இறைவனது, நாமம் - திருநாமமாகிய, நமச்சிவாய - ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை, நரகம் ஏழ்புக நாடினர் ஆயினும் - ஏழ்நரகத்திலழுந்த வினைத்தவராயினும், உரைசெய் வாயினர் ஆயின் - உச்சரிக்கிற வாயை யுடையவராகில், (அந்த உச்சரிப்பின் பயன் அவரை) உருத்திரர் - உருத்திரர்களோடு, விரவி புகுவித்திடும் என்பர் - கலந்திருக்கும்படி அவர்கள் கூட்டத்தில் புகச் செய்துவிடும் என்று சொல்லுவர் (அறிஞர்), எ - று.

வி - ரை. வரதன் என்பதற்கு ரக்ஷிப்பவன் என்பதுபொருள். செய்வாயினர் - வினைத்தொகை நிலைத்தொடர். நரக மேழாவன :— அள்ளல், இரௌரவம், கும்பீபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி என்பன.



இலங்கைமன்னனையெடுத்தவடுக்கன்மேற்
றலங்கொள்கால்விரல்சங்கரனூன்றலு
மலங்கிவாய்மொழிசெய்தவனுய்வகை
நலங்கொணாமநமச்சிவாயவே.

ப - ரை. இலங்கைமன்னனை - இலங்கைக் கரசனாகிய ராவணனை, எடுத்த - தூக்கின, அடுக்கல்மேல் - கயிலாய மலையின்மேல், சங்கரன் - சிவபெருமான், தலம்கொள் - இடங்கொண்ட, கால்விரல் ஊன்றலும் - கால்விரலை யூன்றினவளவில், அலங்கி - மனங்கலங்கி, வாய்மொழி செய்தவன் - வாய்விட்டழுதவன், உய்வகை - உய்யும்படி, நலம்கொள் நாமம் - நன்மை செய்தலைக்கொண்ட திருநாமம், நமச்சிவாயவே - ஸ்ரீ பஞ்சாக்ஷரமே, எ - று.

வி - ரை. அடுக்கல் - மலை, அது கைலாயமலையைக் குறித்தது. (௮)

போதன்போதனகண்ணனுமண்ணறன்
பாதந்தான்முடிநேடியபண்பரா
யாதுங்காண்பரிதாகியலந்தவ
ரோதுநாமநமச்சிவாயவே.

ப - ரை. போதன் - பிரமனும், போத அன்னகண்ணனும் - தாமரைமலரையொத்த கண்ணையுடைய விஷ்ணுவும், அண்ணல் - சிவபெருமானது, முடிபாதம் நேடியபண்பராய் - முடியையும் அடியையும் தேடினவர்களாய்; யாதும் - சிறிதும், காண்பு அரிதாகி அலந்தவர் - காண்பது அருமையாகத் திரும்பிவந்தவர், ஓதும் நாமம் - ஓதிய திருநாமமானது, நமச்சிவாயவே - ஸ்ரீ பஞ்சாக்ஷரமே, எ - று.

வி - ரை. போதன் - தாமரைமலரையாசனமாக வுடையவன், நேடுதல் - தேடுதல். பண்பர் - குணமுள்ளவர். காண்பரிதாகியலந்தவரோது என்பதற்கு காண்டவருமையால் இளைத்து அவர் ஓதிய என்றுரைத்தலுமாம். (௯)

கஞ்சியண்டையர்கையிலுண்கையர்கள்
வெஞ்சொன்மிண்டர்விரவிலரென்பரால்
விஞ்சையண்டர்கள்வேண்டவமுதுசெய்
நஞ்சுகண்டனமச்சிவாயவே.

ப - ரை. விஞ்சை அண்டர்கள்வேண்ட - வித்தையையுடைய தேவர்கள் பிரார்த்திக்க, அமுதுசெய் - அமுதுசெய்த, நஞ்சு உண் கண்டன் - விஷகண்டத்தையுடையவனாகிய சிவபிரானது, நமச்சிவாய -

ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை, கஞ்சிமண்டையர் - கஞ்சிமண்டையரும், கை
யின் உண்கையர்கள் - கையிலேயேற்றுண்ணும் இழிசாரும், வெ
சொல்மிண்டர் - கொடுஞ்சொற்களையுடைய மிண்டரும், விரலி
என்பர் - அடையமாட்டார்களென்று சொல்லுவர் (அறிஞர்) எ-று.

நந்திநாமநமச்சிவாயவெனுஞ்
சந்தையாற்றமிழ்ஞானசம்பந்தன்சொற்
சிந்தையான்மகிழ்ந்தேத்தவல்லாரெல்லாம்
பந்தபாசமறுக்கவல்லார்களே.

ப - ரை. நந்தி - சிவபிரானது, நாமம் - திருநாமம், நமச்சிவா ய என்னும் - நமச்சிவாயவென்கிற. சந்தையால் - சந்தையினுல் தமிழ் ஞானசம்பந்தன்சொல் - தமிழ் ஞானசம்பந்தன் சொல்லை சிந்தையால் மகிழ்ந்து-மனத்தால் மகிழ்ந்து, ஏத்தவல்லார் எல்லாம் துதிக்கவல்லவரெல்லாரும், பந்தபாசம் அறுக்கவல்லார்கள் - பந்த பாசங்களைச் சேதிக்கவல்லவர்களாவார்கள், எ - று.

வி - ரை. சந்தை - வேதமோதுமிடம், பந்தபாசம் - பிறவி கட்டாகிய கயிறு. (க க

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசுநாயனர்
## நமச்சிவாயத் திருப்பதிகம்.

பண் காந்தாரபஞ்சமம்.

---

### அஞ்செழுத்துண்மை.

---

திருச்சிற்றம்பலம்.

சொற்றுணைவேதியன்சோதிவானவன்
பொற்றுணைத்திருந்தடிபொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர்கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவதுநமச்சிவாயவே.

ப - ரை. சொல்துணைவேதியன் - சொற்றுணையாகிய மறைய வன், சோதிவானவன் - ஒளியையுடையதேவன், (அவனது) பொன் துணை - பொன்னுக்கு நிகராகிய, திருந்து அடி - அழகாகிய திருவடி



யை, பொருந்தக்கைதொழ - பொருந்தக் கைதொழுதலால், (அவ்வாறு தொழுவோர்களை) கல்துணை பூட்டி - இரண்டு கல்லிற்கட்டி, ஓர் கடலில் பாய்ச்சினும் - ஒப்பற்றகடலில் விழுத்தினும், (அவர்களுக்கு) நல்துணையாவது - நல்லதுணையாயிருப்பது, நமச்சிவாயவே- ஸ்ரீ பஞ்சாக்ஷரமே, எ - று.

வி - ரை. சொல்துணை - புகழ்ந்து சொல்லுதற்குரியதுணை, துணை - நிகர், கற்றுணை கற்றுணையென்பதன் குறுக்கமெனினுமாம். (க)

பூவினுக்கருங்கலம்பொங்குதாமரை
யாவினுக்கருங்கலமரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங்கோட்டமில்லது
நாவினுக்கருங்கலநமச்சிவாயவே.

ப - ரை. பூவினுக்கு - மலர்களுக்கு, அருங்கலம் - அருங்கலமாவது, பொங்குதாமரை - விளங்குகின்ற தாமரைமலரேயாம், ஆவினுக்கு - பசுக்களுக்கு, அருங்கலம் - அருங்கலமாவது, அரன் அஞ்சு ஆடுதல் - சிவபிரான் பஞ்சகவ்வியத்தி லாடுதலேயாம், கோவினுக்கு- அரசனுக்கு, அருங்கலம் - அருங்கலமாவது, கோட்டம் இல்லது - கோணுதலில்லாதிருப்பதேயாம், நாவினுக்கு - நாவுக்கு, அருங்கலம்- அருங்கலமாவது, நமச்சிவாயவே - ஸ்ரீபஞ்சாக்ஷரமேயாம், எ-று.

வி - ரை. அருங்கலம் - அருமையாகியஆபரணம், அஞ்சு - பஞ்சகவ்வியம்; அவை, கோசலம், கோமயம், பால், தயிர், நெய், என்பனவாம். கோட்டம்-கோணுதல், ஒருபக்கஞ் சாய்தல். கோட்டம் என்பதற்குப் பகுதிகோடு, கோட்டம் என்பதனை பக்ஷபாதம் என்பர் வடநூலார். (உ)

விண்ணுறவடுக்கியவிறகின்வெவ்வழ
லுண்ணியபுகிலவையொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற்பயின்றபாவத்தை
நண்ணிநின்றறுப்பதுநமச்சிவாயவே.

ப - ரை. விண்உற - ஆகாயத்தைமுட்ட, அடுக்கிய - அடுக்கப்பட்ட, விறகில் - விறகினிடத்தில், வெவ்வழல் - பெருநெருப்பானது, உண்ணியபுகில் - உண்ணப்புகுந்தால், அவை ஒன்றும் இல்லைஆம் - அவை சிறிதும் இல்லையாயொழியும் (அதுபோல), பண்ணிய உலகினில் பயின்றபாவத்தை - செய்த உலகத்தில் மிகுந்த பாவத்தை, நண்ணிநின்று அறுப்பது - பொருந்திநின்று சேதிப்பது, நமச்சிவாயவே - ஸ்ரீபஞ்சாக்ஷரமேயாம், எ - று.

வி - ரை. உண்ணிய செய்யியவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். அவையென்றது விறகினை. பண்ணிய படைக்கப்பட்ட எனினுமாம். (௩)

இடுக்கண்பட்டிருக்கினுமிரந்தியாரையும்
விடுக்கிற்பிரானென்றுவினவுவோமல்லோ
மடுக்கற்கீழ்க்கிடக்கினுமருளினாமுற்ற
நடுக்கத்தைக்கெடுப்பதுநமச்சிவாயவே.

ப - ரை. இடுக்கண்பட்டு இருப்பினும் - துன்பப்பட்டுக்கொண்டிருந்தாலும், யாரையும் இரந்து - எவரையும் யாசித்து, விக்கின் - விட்டால், பிரான்என்று - பிரானேயென்று, வினவுவோம் அல்லோம் - புகழ்ந்துபேசுவோமல்லோம், அடுக்கல்கீழ் கிடக்கினும் - மலையின்கீழே கிடந்தாலும், அருளின் - அருளினால், நாம் உற்ற நடுக்கத்தை - நாமடைந்த நடுக்கத்தை, கெடுப்பது - ஒழிப்பது, நமச்சிவாயவே - ஸ்ரீ பஞ்சாக்ஷரமேயாம், எ - று.

வி - ரை. வினவுதல் பிரார்த்தித்தலுமாம். அருளின் என்பதில் இன் என்னும் ஐந்தாவது மூன்றாவதன் கருவிப்பொருளில் வந்தது. நடுக்கம் - பிறவித் துன்பத்தாலுண்டாகிய நடுக்கம். (௪)

வெந்தநீறருங்கலம்விரதிகட்கெலா
மந்தணர்க்கருங்கலமருமறையாறங்கந்
திங்களுக்கருங்கலந்திகழுநீண்முடி
நங்களுக்கருங்கலநமச்சிவாயவே.

ப - ரை. விரதிகட்கெல்லாம் - விரதியர்க்கெல்லாம், வெந்த நீறு - சுடப்பட்ட திருநீறே, அருங்கலம் - அருங்கலமாவது. அந்தணர்க்கு - வேதியர்க்கு, அருமறை ஆறு அங்கம் - அரியவேதங்களும் அவற்றின் ஆறங்கங்களுமே, அருங்கலம் - அருங்கலமாவது, திங்களுக்கு - சந்திரனுக்கு, திகழும் நீள்முடி - விளங்குகிற நீண்டமுடியே, அருங்கலம் - அருங்கலமாவது, நங்களுக்கு - எங்களுக்கு, நமச்சிவாயவே - ஸ்ரீ பஞ்சாக்ஷரமே, அருங்கலம் - அருங்கலமாவது, எ - று.

வி - ரை. அருங்கலம்-கிடைத்தற்கருமையாகிய ஆபரணம். விரதியர்-விரதங்காப்போர். மறை-இருக்கு யஜுர் சாமம் அதர்வணம் எனநான்கு. ஆறங்கமாவன: மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம் என்பன. திகழு நீண்முடி யென்றது இறைவனது திருமுடியை. (௫)

சலமிலன்சங்கரன்சார்ந்தவர்க்கலா
னலமிலனாடொறுநல்குவானலன்



குலமிலராகினுங்குலத்துக்கேற்பதோர்
நலமிகக்கொடுப்பதுநமச்சிவாயவே.

ப - ரை. சலம் இலன் - சலமில்லாதவன், சங்கரன் - சங்கரன், சார்ந்தவர்க்கு அல்லால் - அடைந்தவர்க்கன்றி, நலம் இலன் - நன்மைசெய்தலிலன், நாள்தொறும் - தினந்தோறும், நல்குவான் அலன் - அருள் செய்பவனுமல்லன், குலம் இலர் ஆகினும் - இழிகுலத்தோராகினும், குலத்துக்கு ஏற்பது - குலத்துக்கேற்பதாகிய, ஓர் - ஒப்பற்ற, நலம் - நன்மையை, மிகக்கொடுப்பது - மிகத்தருவது, நமச்சிவாயவே - ஸ்ரீ பஞ்சாக்ஷரமேயாம். எ - று.

வி - ரை. சங்கரன் - ஆன்மாக்களுக்கு இதஞ்செய்பவன், சலம் - கலகம்; இறைவன் தன்னையடைந்தவர்க்கன்றி மற்றையர்க்கு அருள் செய்யான் என்பது, "மலைவிலங்கு மைந்தனே கற்பகமரங்களே புனல் மூன்றும், தனையடைந்தவர் வறுமையுஞ் சிறுமுந்தாக முந்தவிர்த்தாளும், அனையவீசனு மடைந்தவர்க்கருள் செய்வானடைந்திலார்க்கருள் செய்யான்" என்றதிருவடக்கத்தன வற்றாலினிது விளங்கும். (௬)

வீடினாருலகினில்விழுமியதொண்டர்
கூடினாரந்நெறிகூடச்சென்றலு
மோடினேனோடிச்சென்றுருவங்காண்டலு
நாடினேனாடிற்றுநமச்சிவாயவே.

ப - ரை. உலகினில் - உலகத்தில், வீடினார் - (அநேகர்) இறந்தார்கள், விழுமியதொண்டர் - மேலான அடியார்கள், அந்நெறி கூடினார் - அந்த நெறியையடைந்தார்கள், அந்நெறிகூடச் சென்றலும் - அந்த நெறியையடையச் செல்லுதலும், ஓடினேன் ஓடிச்சென்று - ஓடினவனாய் விரைந்துசென்று; உருவம் காண்டலும் - வடிவத்தைக் கண்டளவில், நாடினேன் - நாடினேனாகிய நான், நாடிற்று - நாடினது, நமச்சிவாயவே - ஸ்ரீ பஞ்சாக்ஷரமேயாம். எ - று.

வி - ரை. அந்நெறி - அந்த முத்திநெறி. (௭).

இல்லகவிளக்கதிருள்கெடுப்பது
சொல்லகவிளக்கதுசோதியுள்ளது
பல்லகவிளக்கதுபலருங்காண்பது
நல்லகவிளக்கதுநமச்சிவாயவே.

ப - ரை. இல்லகம் விளக்கது - வீட்டிலுள்ளவிளக்காவது, இருள்கெடுப்பது - இருட்டையழிப்பது, சொல்லகம்விளக்கது - சொல்லினுள் விளக்காவது, சோதியுள்ளது - ஒளியுள்ளது, பல்லகம்விள

க்கது - பலவிடங்களின் விளக்காவது, பலரும் காண்பது - பலரும் பார்ப்பது, நல் அகல்விளக்கது - நல்லமணிவிளக்காவது, நமச்சிவாயவே - ஸ்ரீபஞ்சாக்ஷரமேயாம் எ - று.

வி - வை. சோதி - அஞ்ஞானவிருளைக் கெடுக்கும் ஞானவொளி. (௮)

முன்னெறியாகியமுதல்வன்முக்கணன்
றன்னெறியேசரணாதறிண்ணமே
யந்நெறியேசென்றங்கடைந்தவர்க்கெலா
நன்னெறியாவதுநமச்சிவாயவே.

ப - வை. முன்நெறி ஆகிய முதல்வன் - பழையநெறியையுடைய முதல்வன், முக்கணன் - முக்கண்ணன், நெறியே - (அவனது) நெறியே, சரண் ஆதல் திண்ணம் - (நமக்குப்) புகலிடமாதல் சத்தியம், அ நெறியே சென்று - அந்நெறியானே சென்று, அங்கு அடைந்தவர்க்கு எல்லாம் - அவ்விடத்தடைந்தவரெல்லாருக்கும், நல்நெறி ஆவது - நல்வழியாயிருப்பது, நமச்சிவாயவே - ஸ்ரீ பஞ்சாக்ஷரமேயாம், எ - று.

வி - வை. முன்னெறி - முதன்மையாகிய நெறியெனினுமாம், முக்கணன்றன்னெறி யென்றது "பொறிவாயிலைந் தவித்தான் பொய்தீரொழுக்க நெறியை". (௯)

மாப்பிணைதழுவியமாதொர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடிபொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவியநமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக்கிடுக்கணில்லையே.

ப - வை. மாப்பிணை தழுவிய - அழகியமான்பொருந்திய, மாது ஒர் பாகத்தன் - பெண்ணைவைத்த ஒருபாகத்தையுடையவனது, பூப்பிணை - மலர்மாலைகள் சூடி, திருந்து - அழகாயிருக்கிற, அடி - திருவடியை, பொருந்த - பொருத்தமாக, கைதொழ - கைதொழும் பொருட்டு, நாப்பிணை தழுவிய - நாவிற்குப் பிணையலாகப் பொருந்திய, நமச்சிவாயப்பத்து - நமச்சிவாயப்பத்தினை, ஏத்தவல்லார் தமக்கு - துதிக்க வல்லார்களுக்கு, இடுக்கண் இல்லை - துன்பமில்லை, எ - று.

வி - வை. மாப்பிணை தழுவிய என்றமையால் மாதொர்பாகத்தன் என்பதில் ஒர்பாகம் என்றது இடப்பாகத்தை. மலர்மாலைகள் - அன்பர்சூட்டின மலர்மாலைகள். (௧௦)

திருச்சிற்றம்பலம்.



சுந்தரமூர்த்திநாயனார்

## திருப்பாண்டிக்கொடுமுடி.

பண் பழம்பஞ்சுரம்.

### அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

மற்றுப்பற்றெனக்கின்றிநின்றிருப்பாதமேமனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந்தேனினிப்பிறவாததன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.

ப - வை. எனக்கு மற்றுபற்று இன்றி - எனக்கு வேறு ஆதரவில்லாமல், நின் - உனது, திருப்பாதமே - திருவடியையே, மனம்பாவித்தேன் - மனத்தில் நினைத்தேன், பெற்றலும் - (நினைக்கப்) பெறுதலும், பிறந்தேன் - பிறந்தவனானேன், இனி - இனி, வந்து பிறவாத தன்மை எய்தினேன் - வந்துபிறவாததன்மையையும் அடைந்தேன், கற்றவர் தொழுது ஏத்தும் - கற்றவர் வணங்கித் துதிக்கிற, சீர் - சிறப்பமைந்த, கறையூரில் - கறையூரின்கண், பாண்டிக்கொடுமுடி - திருப்பாண்டிக் கொடுமுடியிலெழுந்தருளிய, நல்தவா - நல்லநாதனே, நான் உன்னை மறக்கினும் - நான் உன்னை மறந்தாலும், நா - என்நாவானது, நமச்சிவாய - ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை, சொல்லும் - உச்சரித்துக்கொண்டிருக்கும், எ - று.

வி - வை. அரிதாகிய இம்மானிடப்பிறவி பிறந்தபேறு இறைவனது திருவடியை நினைத்தலே யாதலானும், நினையாதவர் பிறவாதவர்களே யாதலானும் 'நின்றிருப்பாதமே மனம் பாவித்தேன் பெற்றலும் பிறந்தேன்' என்றார். தவன் - நாதன். (௧)

இட்டனும்மடியேத்துவாரிகழ்ந்திட்டநாண்மறந்திட்டநாள்
கெட்டநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரி
வட்டவாசிகைகொண்டடிதொழுதேத்துபாண்டிக்கொடுமுடி
நட்டவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.

ப - வை. இட்டன் - இட்டமாகிய, உம் அடி ஏத்துவார் - உமது திருவடியைத் துதிப்பவர், இகழ்ந்திட்டநாள் - இகழ்ந்திட்ட

நாளும், மறந்திட்டனாள் - மறந்திட்டநாளும், (ஆகிய) இவை - இந்த நாட்கள், கெட்டநாள் என்று அல்லால் கருதேன் - கெட்ட நாள்கள் என்று நினைப்பதன்றி நல்ல நாட்களாக நினைக்கமாட்டேன், நிளிர் புனல் - பெருகுகின்ற நீரையுடைய, காவிரி-காவிரியாறானது, வட்டவாசிகைகொண்டு - வட்டவடிவாகிய பூமாலைகளைக்கொண்டு, அடிதொழுது ஏத்து - திருவடியை வணங்கித் துதிக்கின்ற, பாண்டிக்கொடுமுடி - திருப்பாண்டிக்கொடுமுடியி லெழுந்தருளிய, நட்டவா நடராஜனே, நான் உன்னை மறக்கினும்,—நாமசிவாய சொல்லும், எ - று.

வி - ரை. இட்டன் - பரமர்ப்ரன்; இகழ்தல் - மறியா திருத்தல், வாசிகை - கோத்தபூமாலை, காவிரியாசிகை கொண்டடி தொழுதலாவது நான் வருவழியில் இருமருங்கிலுமுள்ள மரக்களினின்று இரிந்த மலர்களை வரிசையாயீர்த்துக்கொண்டு வருதல். (௨)

இவுநாளுணர்வழியுநாளுயிர்போகுநாளுயர்பாடைமேற்
காவுநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரிப்
பாவுதண்புனல்வந்திழிபரஞ்சோதிபாண்டிக்கொடுமுடி
நாவலாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.

ப - ரை. இவும்நாள் - (உன்னைவிட்டு) நீங்குகிற நாட்கள், உணர்வு அழியும்நாள் - அறிவுகெடுகிற நாட்கள், உயிர்போகும்நாள் - உயிர் நீங்குகிற நாட்கள், உயர்பாடைமேல் காவும் நாள் - உயர்ந்த பாடையின்மேலிட்டுச் சுமக்கும் நாட்கள், என்று அல்லால் - என்று நினைப்பதன்றி, இவை - இவற்றை, கருதேன் - வேறாக நினையேன், கிளர்புனல்காவிரி - விளங்குகிற நீரையுடைய காவிரியாற்றின், பாவு - பரவிய, தண்புனல் - குளிர்ந்த நீரானது, வந்து இழி - வந்து இறங்குதற்குரிய, பரஞ்சோதி - பரஞ்சோதியையுடைய, பாண்டிக்கொடுமுடி - திருப்பாண்டிக்கொடுமுடியி லெழுந்தருளிய, நாவலா - நாவலனே, நான் உன்னை மறக்கினும், நமச்சிவாய சொல்லும் எ - று.

வி - ரை. இவுதல் - நீக்குதல், காவுதல் - சுமத்தல், வேதசிவாகமங்களை யாவும் அருளிச்செய்தவனாதலால் இறைவனை 'நாவலன்' என்றார். வடமொழியைப் பாணினிக்கும் தென்மொழியை அகத்தியனுக்கும் கற்பித்தவனாதலால் 'நாவலன்' என்று பெயரினுமாம். (௩)

எல்லையில்புகழெம்பிரானெந்தைதம்பிரானென்பொன்மாமணி
கல்லையுந்தியவளம்பொழிந்திழிகாவிரியதன்வாய்க்கரை [னி
நல்லவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
வல்லவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.



ப - ரை. எல்லை இல்புகழ்எம்பிரான் - எல்லையில்லாதபுகழையுடைய எம்பெருமான், எந்தை - எமதுதந்தை, தம்பிரான் - இறைவன், என்பொன் - என்சுவர்ணம், மாமணி - மாணிக்கம், கல்லை உந்தி - கற்களைத்தள்ளி, வளம்பொழிந்து-(முத்துமுதலாகிய)வளங்களைக்கொழித்து, இழி-வழிகிற, காவிரியதன்வாய்க்கரை - காவிரி யாற்றங்கரையில், நல்லவர் தொழுது ஏத்தும் - நல்லோர் வணங்கித்துதிக்கிற, சீர் - சிறப்பையுடைய, கறையூரில் - திருக்கறையூரில், பாண்டிக்கொடுமுடி - திருப்பாண்டிக்கொடுமுடியி லெழுந்தருளிய, வல்லவா - வல்லவனே, நான் உன்னை மறக்கினும்—, நாமச்சிவாய சொல்லும், எ - று.

வி - ரை. இறைவன்புகழ் பொருள்சேர்புகழாதலால், 'எல்லையில் புகழ்' என்றும், எல்லாம் வல்லவனாதலால் 'வல்லவன்' என்றும் கூறினார்: நல்லவர் என்றது அன்பரை. (௪)

அஞ்சினார்க் கரணாதி யென்றடியேனு நான்மிகவஞ்சினேன், வஞ்சவென்னடித்தொண்டனேற்கருணல்கினுய்க்கழிகின்றதென், பஞ்சின்மெல்லடிப்பாவைமார்குடைந்தாடுபாண்டிக்கொடுமுடி, நஞ்சணிகண்டநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.

ப - ரை. அஞ்சினார்க்கு - பயந்தவர்க்கு, அரண் ஆதி என்று - காவலாகிறாயென்றறிந்து, நான் அடியேனும் மிக அஞ்சினேன் - அடியேனாகிய நானும் மிக அஞ்சினேன், அடித்தொண்டனேற்கு - திருவடித்தொண்டனாகிய எனக்கு, அருள் நல்கினுய்க்கு - அருள்செய்தவனுக்கு, அழிகின்றது என் - கெடுகின்றதென், பஞ்சின் - பஞ்சினும்; மெல் அடி - மென்மையாகிய பாதங்களை யுடைய, பாவைமார் குடைந்து ஆடு - மாதர் குடைந்தாடுகின்ற, பாண்டிக்கொடுமுடி - திருப்பாண்டிக்கொடுமுடியி லெழுந்தருளிய, நஞ்சு அணி கண்ட - விடமணி கண்டனே, நான் உன்னை மறக்கினும்—, நாமச்சிவாயி சொல்லும், எ - று.

வி - ரை. அரண் - காவல். அழிகின்றது என் என்றது நஷ்டம் யாது என்றபடி, பஞ்சின் என்பதில் இன் உறழ் பொருளில்வந்தது. ஒப்புப்பொருளெனக்கொண்டு பஞ்சுபோலமென் றுரைத்தலுமாம். பாவைமார் உவமையாகு பெயராய் பாவைபோலு முருவுடையராகிய மாதரை யுணர்த்திற்று. (௫)

எடுவானிளந்திங்கள்சூடினை பென்பின்கொல்புலித்தோ
லின்மேல், லாடுபாம்பதரைக்கசைத்தவழகனேயந்தண்காவி

ரிப், பாடுதண்புனல் வந்திழியுஞ்சோதி பாண்டிக்கொடுமு டிச், சேடனையுனை நான்மறக்கினுஞ் சொல்லுநாநமச்சிவாய வே.

ப - ரை. வடுவான் - வடுப்பாகிய ஆகாசசஞ்சாரியாகிய, இளந் திங்கள் சூடினை - இளம்பிறையை அணிந்தாய், என் - என்ன, பின்- பேலும், கொல்புலித்தோலின்மேல் - கொல்புலித்தோலின்மீது, ஆடுபாம்பு - ஆடுகின்ற பாம்பை, அரைக்கு அசைத்த - திருவரையிற்கட் டிய, அழகனே - சுந்தரனே, அந்தண் - அழகும் குளிர்ச்சியுமுள்ள, காவிரிப்பாடு - காவிரியாற்றின் பக்கத்தில், தண்புனல்வந்து இழி - குளிர்ந்த நீர்வந்திறங்குகிற, பரஞ்சோதி - மேலான ஒளியையுடைய, பாண்டிக்கொடுமுடி - திருப்பாண்டிக்கொடுமுடியி லெழுந்தருளிய, சேடனே - நித்தியனே, நான் உன்னை மறக்கினும்—, நாமச்சிவாய சொல்லும், எ - று.

வி - ரை, வடு என்பதற்குப் பருந்து எனினு, அசைத்தல் - கட்டுதல். சேடன் - எல்லாப் பொருள்களும் நசித்தொழிந்த காலத்திலும் நசி யாது எஞ்சி நிற்பவன். (௭)

விரும்பிநின்மலர்ப்பாதமேநினைந்தேன் வினைகளும் விண் டனர், நெருக்கிவண்பொழில்சூழ்ந்தெழில்பெறநின்றகாவி ரிக்கோட்டிடைக், குரும்பைமென்முலைக்கோதைமார்குடை ந்தாடுபாண்டிக்கொடுமுடி, விரும்பனேயுனை நான்மறக்கினுஞ் சொல்லுநாநமச்சிவாயவே.

ப - ரை. நின் - உனது, மலர் - தாமரைமலர்போலும், பாத மே - திருவடியையே, விரும்பி நினைந்தேன் - விரும்பி தியானித் தேன், வினைகளும் விண்டனர் - வினைகளும் நீங்கப்பெற்றேன், வண்பொழில் நெருக்கி சூழ்ந்து - வளவிய சோலைகள் நெருங்கிச் சூழ்ந்து, எழில்பெற நின்ற - அழகுபெறநின்ற, காவிரிகோட்டிடை - காவிரியாற்றங்கரையில், குரும்பைமென் முலைகோதைமார் - தேங்கு ரும்புபோலும் மெல்லிய தனங்களையுடைய மாதர், குடைந்தாடு - குடைந்தாடுகிற, பாண்டிக்கொடு முடி - திருப்பாண்டிக்கொடு முடி யிலெழுந்தருளிய, விரும்பனே - யாவரும் விரும்புதற் குரியவனே, நான் உன்னை மறக்கினும்—, நாமச்சிவாய சொல்லும், எ - று.

வி - ரை. கோதை - கவை. கோதைமார் - பூமாலையையணிந்த மாதர், பாண்டிக்கொடுமுடி விரும்பன் - பாண்டிக்கொடு முடியை விரும்பினவன் எனினுமாம்.



செம்பொனேர்சடையாய்திரிபுரந்தீயெழச்சிலைகோலினாய் வம்புலாங்குழலாளைப்பாகமமர்ந்துகாவிரிக்கோட்டிடைக் கொம்பின்மேற்குயில்கூவமாமயிலாடுபாண்டிக்கொடுமுடி நம்பனேயுனை நான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே.

ப - ரை. செம்பொன் நேர்சடையாய் - செம்பொன்னையொத்த சடையையுடையவனே, திரிபுரம்-முப்புரத்தில், தீ எழ-நெருப்பெழும் படி, சிலைகோலினாய் - மலையைவளைத்தாய், வம்புஉலாம் குழலாளை - மணங்கமழ்கின்ற கூந்தலையுடையவளாகிய உமாதேவியை, பாகம் அமர்ந்து - பாகத்திலிருக்க விரும்பி, காவிரி கோட்டிடை - காவிரிக் கரையில், கொம்பின்மேல் குயில் கூவ - கிளைகளின்மேல் குயில்கள் கூவாநிற்க, மாமயில்ஆடு - பெரியமயில்கள் ஆடாநின்ற, பாண்டிக் கொடுமுடி - திருப்பாண்டிக்கொடுமுடியி லெழுந்தருளிய, நம்பனே - சிவபிரானே, நான் உன்னை மறக்கினும்—, நாமச்சிவாய சொல்லும், எ - று.

வி - ரை. செம்பொன் நேர்சடையெனப்பிரித்து செம்பொன் போலும் அழகிய சடையெனினுமாம். கோலுதல்-வளைத்தல். வம்பு - மணம், பாகம் - இடப்பாகம். (௮)

காரணன்றந்தையெம்பிரானெந்தைதம்பிரானென்பொ ன்மாமணியென்று, பேரெணாயிரகோடிதேவர்பிதற்றிநின்று பிரிகிலார், நாரணன்பிரமன்றொழுங்கறையூரிற்பாண்டிக்கொ டுமுடிக், காரணாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவா யவே.

ப - ரை. காரணன் தந்தை - காரணன் தந்தை, எம்பிரான் எந் தை - எம்பெருமான் எந்தை, தம்பிரான் - தம்பிரான், என்பொன்மா மணியென்று - என் பொன்மாமணி யென்று, பேர் - திருநாமங்களை, எண்ணாயிரகோடி தேவர் - எண்ணாயிரகோடி தேவர்கள், பிதற்றி நின்று பிரிகிலார் - பிதற்றிநின்று நீங்காதிருக்கின்றனர், நாரணன் பிரமன் தொழும் - விஷ்ணுவும் பிரமனும் வணங்குகின்ற, கறை யூரில்—, பாண்டிக்கொடுமுடி - திருப்பாண்டிக்கொடுமுடியி லெழுந் தருளிய, காரணா - காரணனே, நான் உன்னை மறக்கினும்—, நாமச்சி வாய சொல்லும், எ - று.

வி - ரை. காரணன் - சர்வகாரணன். (௯)

தோரணிய பிறைசூடியைக் கறையூரிற்பாண்டிக் கொடு முடி, பேணியபெருமானைப்பிஞ்ஞகப்பித்தனைப்பிறப்பில்லி

யைப், பாலுவாலரிவண்டறைகொன்றைத்தாரனைப்படப்பா
ம்பரை, நாணனைத்தொண்டனூரன்சொல்லிவைசொல்லுவா
க்கில்லைத்துன்பமே.

ப - ரை. சோணிய - உலோக்க, பிறைகுடியை - பிறையை
தரித்தவனை, கறையூரில் - திருக்கறையூரில், பாண்டிக்கொடுமுடி
திருப்பாண்டிக் கொடுமுடியை, பேணிய பெருமானை - விரும்பி
பெருமானை, பிஞ்ஞகப்பித்தனை - பிஞ்ஞகனாகிய பித்தனை, பிறப்
இல்லியை - பிறவியில்லாதவனை, பாண் உலா - இசையோடு உலா
கின்ற, வரிவண்டு அறை-கீற்றுக்களையுடைய வண்டுகள் ஒலித்தற்கி
டமாகிய, கொன்றைத்தாரனை-கொன்றைமலர் மாலையையுடையவனை
படப்பாம்பு - படத்தையுடைய பாம்பாகிய, அரை நாணனை - அரை
நாணையுடையவனை, தொண்டனூரன் சொல்-தொண்டனூரன்சொ
ல்லிய, இவை - இத்தப்பாடல்களை, சொல்லுவார்க்கு - சொல்லுவே
ருக்கு, துன்பம் இல்லை-துன்பமில்லையாகும், எ - று.

வி - ரை. பிஞ்ஞகன்-தலைக்கோலத்தையுடையவன், நாண்-அ
று, அரைநாண் - அரையிற் கட்டுங்கயிறு. (௧

திருச்சிற்றம்பலம்.

---

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

## திருக்ஷேத்திரக்கோவை.

பண் இந்தளம்.

---

### கோயிற்றிறம்.

---

திருச்சிற்றம்பலம்.

ஆரூர்தில்லையம்பலம்வல்லநல்லம்
வடகச்சியுமச்சிறுபாக்கநல்ல
கூரூர்குடவாயில்குடந்தைவெண்ணி
கடல்சூழ்கழிப்பாலைதென்கோடிபீடார்
நீரூர்வயனின்றியூர்குன்றியூருங்
குருகாவையூர்நாரையூர்நீடுகானப்
பேரூர்நன்னீள்வயனெய்த்தானமும்
பிதற்றாய்பிறைசூடிதன்பேரிடமே.



ப - ரை. பிறைசூடி தன்பேரிடம் - பிறைசூடியின் பிரபலத்தி
ருப்பதிகளாகிய, ஆரூர் - திருவாரூர், தில்லையம்பலம் - திருத்தில்லை
யம்பலம், வல்லம் - திருவல்லம், நல்லம் - திருநல்லம், வடகச்சியும் -
வடகாஞ்சியும், அச்சிறுபாக்கம் - அச்சிறுபாக்கம், நல்லகூரூர் - நல்ல
கூரூர், குடவாயில் - திருக்குடவாயில், குடந்தை - திருக்குடந்தை,
வெண்ணி - திருவெண்ணி, கடல்சூழ்கழிப்பாலை - கடல்சூழ்ந்த
திருக்கழிப்பாலை, தென்கோடி - திருத்தென்கோடி, பீடு ஆர்-பெரு
மைபொருந்திய, நீர் வார்வயல் நின்றியூர் - நீர்பரந்தவயல்கள் சூழ்ந்த
திருநின்றியூர், குன்றியூரும் - திருக்குன்றியூரும், குருகாவையூர் -
திருக்குருகாவையூர், நாரையூர் - திருநாரையூர், நீடு - பெரிய, கா
னப்பேரூர் - திருக்கானப்பேரூர், நல்நீள்வயல்-நல்ல நீண்ட வயல்களை
யுடைய, நெய்த்தானமும் - திருநெய்த்தானமும், பிதற்றாய் - (மனமே)
நீபிதற்றக்கடவாய், எ - று.

வி - ரை. குடந்தை - கும்பகோணம். (௧)

அண்ணாமலையீங்கோயுமத்திமுத்தா
றகலாமுதுகுன்றங்கொடுங்குன்றமுங்
கண்ணார்கழுக்குன்றங்கயிலைகோணம்
பயில்கற்குடிகாளத்திவாட்போக்கியும்
பண்ணார்மொழிமங்கையோர்பங்குடையான்
பரங்குன்றம்பருப்பதம்பேணிநின்றே
யெண்ணாயிரவும்பகலுமிடும்பைக்
கடனீக்கலாங்காரணமே.

ப - ரை. அண்ணாமலை - திருவண்ணாமலை, ஈங்கோயும் - திரு
வீங்கோயும், அத்தி - திருவத்தி, முத்தாறு அகலாமுதுகுன்றம் -
மணிமுத்தாநதி நீங்காதபழமலை, கொடுங்குன்றமும் - திருக்கொடுங்
குன்றமும், கண் ஆர் கழுக்குன்றம் - இடமகன்ற திருக்கழுக்குன்றம்,
கயிலை - திருக்கயிலை, கோணம் - திருக்கோணம், பயில்கற்குடி -
வசித்தற்குரிய திருக்கற்குடி, காளத்தி - திருக்காளத்தி, வாட்போக்
கியும் - திருவாட்போக்கியும், பண் ஆர் மொழி - பண்போலுஞ்
சொல்லையுடைய, மங்கை - உமாதேவியை, ஓர் பங்கு உடையான் -
ஒருபாகத்திலுடையவனது, பரங்குன்றம் - திருப்பரங்குன்றம், பருப்
பதம் - திருப்பருப்பதம், (ஆகிய இவற்றை) இரவும்பகலும் - இரவி
லும் பகலிலும், பேணிநின்று எண்ணாய் - விரும்பி நின்று நினைக்கக்
கடவை, (இவ்வாறு நினைத்தல்), இடும்பைக் கடல்நீக்கல் ஆம்கார
ணம் - துன்பக்கடலை நீக்குதற்குரிய காரணமாகும், எ - று.

வி - ரை. கண் ஆர் - பெருமைபொருந்திய எனினுமாம். (௨)

அட்டானமென்றோதியகாலிரண்டு
மழகன் னுறைகாவனைத்துந்துறைக
ளெட்டாந்திருமூர்த்தியின்காடொன்பதுங்
குளமூன்றுங்களமஞ்சும்பாடிநான்கு
மட்டார்குழலாண்மலைமங்கைபங்கன்
மதிக்கும்மிடமாகியபாழிமூன்றுஞ்
சிட்டானவன்பாசூரென்றேவிரும்பா
யரும்பாவங்களாயினதேய்க்கதவே.

ப - ரை. அட்டானமென்றோதியகாலிரண்டும் - அட்டான மென்று சொல்லப்பட்ட எட்டும், அழகன் உறைகா அனைத்தும் - அழகனாகிய சிவபெருமான் வாழ்கின்றகாக்களனைத்தும், துறைகள் எட்டாம் திருமூர்த்தியின் காடொன்பதும் - அஷ்டமூர்த்தியின் காடு ஒன்பதும், குளமூன்றும் - குளங்கள் மூன்றும், களம் அஞ்சும் - களங்கள் ஐந்தும், பாடிநான்கும் - பாடிகள் நான்கும், மட்டு ஆர் குழலாள் மலைமங்கைபங்கன் - தேன் ஒழுகுகின்ற கூந்தலையுடைய வளாகிய பார்வதிபாகன், மதிக்கும் இடம் ஆகிய பாழிமூன்றும் - மதித்தற்குரிய இடங்களாகிய பாழிகள் மூன்றும், சிட்டானவன்பா சூர் - மேலானவனுடைய பாசூரும், என்றே - என்று சொல்லா நின்றே, விரும்பாய் - விரும்பக்கடவை, (அப்படி விரும்புதல் யாதுக் கெனின்) அரும்பாவங்களாயின தேய்க்க அறவே - நீக்கிக்கொள்ளு தற்கரிதாகிய பாவங்களானவை தேய்ந்தொழியவேயாம், எ - று. ()

அறப்பள்ளியகத்தியான்பள்ளிவெள்ளைப்பொடிப்பூசி
நீறணிவானமர்காட்டுப்பள்ளி
சிறப்பள்ளிசிராப்பள்ளிசெம்பொன்பள்ளி
திருநனிபள்ளிசீர்மகேந்திரத்துப்
பிறப்பில்லவன்பள்ளிவெள்ளச்சடையான்
விரும்புமிடைப்பள்ளிவண்சக்கரமா
லுறைப்பாலடிபோற்றக்கொடுத்தபள்ளி
யுணராய்மடநெஞ்சமேயுன்னிநின்றே.

ப-ரை. அறப்பள்ளி——, அகத்தியான்பள்ளி, வெள்ளைப்பொடிப் பூசி நீறு அணிவான் ; வெள்ளைப்பொடிப் பூசுவோனும் நீறணி வோனுமாகிய சிவபெருமான், அமர் - விரும்புகிற, காட்டுப்பள்ளி - திருக்காட்டுப்பள்ளி, சிறப்பள்ளி - சிறப்பள்ளி, சிராப்பள்ளி——, செம்பொன்பள்ளி——, திருநனிபள்ளி——, சீர்மகேந்திரத்துப்



பிறப்பில்லவன்பள்ளி - சிறப்புள்ளமகேந்திரத்துப் பிறப்பிலான் பள்ளி, வெள்ளச்சடையான் விரும்பும் இடைப்பள்ளி - கங்கைச் சடையான் விரும்புகின்ற இடைப்பள்ளி, மால் - திருமால், உறைப் பால் - மனவுறுதியால், அடிபோற்ற - திருவடியை வழிபட, வண்சக் கரம் கொடுத்தபள்ளி - வளவியசக்கரங்கொடுத்தபள்ளி, (ஆகிய இவ ற்றை). மடநெஞ்சமே - அறியாமையுள்ளமனமே, உன்னிநின்று - நினைந்து நின்று, உணராய் - அறியக்கடவாய், எ - று. (அ)

ஆறைவடமாகறலம்பரையா
றணியார்பெருவேளூர்விளமர்தெங்கூர்
சேறைதுலைபுகலூரகலாதிவை
காதலித்தானவன்சேர்பதியே.

ப - ரை. ஆறை - திருவாறை, வடமாகறல் - திருவடமாகறல், அம்பர் - திருவம்பர், ஐயாறு - திருவையாறு, அணி ஆர் பெருவேளூர் - அழகுபொருந்திய திருப்பெருவேளூர், விளமர் - திருவிளமர், தெங் கூர் - திருத்தெங்கூர், சேறை - திருச்சேறை, துலை - திருத்துலை, புகலூர் - திருப்புகலூர், இவை - இவைகளை, அவன் - அவ்விறை வன், அகலாது - நீங்காமல், சேர்பதிகாதலித்தான் - சேர்பதிக ளாக விரும்பினன், எ - று. (௯)

மனவஞ்சர்மற்றோடமுன்மாதராரு
மதிகூர்திருக்கூடலிலாலவாயு
மினவஞ்சொலிலாவிடைமாமருது
மிரும்பைப்பதிமாகாளம்வெற்றியூருங்
கனமஞ்சினமால்விடையான்விரும்புங்
கருகாவூர்நல்லூர்பெரும்புலியூர்
தனமென்சொலிற்றஞ்சமென்றேநினைமின்
றவமாமலமாயினதானறுமே.

ப-ரை. மனவஞ்சர் ஓட - மனவஞ்சமுள்ள ஆடவர் ஓட, முன் மாதராரும் - எதிரே மாதர்களும், மதிகூர் - அறிவுமிகுந்த, திருக்க டலில் ஆலவாயும் - கூடலிலுள்ள திருவாலவாயும், இனவஞ்சொல் இல்லா - மிகுதியாகிய கடுஞ்சொற்களில்லாத, இடைமருதும் - திரு விடைமருதூரும், இரும்பைப்பதி - திருவிரும்பைப்பதியும், மாகா ளம் - திருமாகாளமும், வெற்றியூரும் - திருவெற்றியூரும், கனம்மஞ்சு அன்னமால்விடையான் விரும்பும் - பெரியமேகம்போல்பவனாகிய திரு மால்விடையையுடையவன் விரும்புகின்ற, கருகாவூர் - திருக்கருகா

ஊரும், நல்லூர் - திருநல்லூரும், பெரும்புலியூர் - திருப்பெரும்புலியூரும், ஆகிய(இவையாவும்)நணம் - நமக்குநீதிகளாம், என் சொலின் - என்சொல்லினுல், நஞ்சமன்றே-பற்றுக்கோடென்றே, தீவினையின் - தீவினையுக்கள், (தீவினைப்பிராயின்) நவம் ஆம்-தவம்பலிக்கும், மலமாயினதாம்அறும் - மலங்களானவைதாமே அற்றொழியும், எ - று.

வி - ரை. மலம் - மும்மலங்கள், அவை ஆணவம் மாயை காமியம் என்பன. தாம் அசைமொழியுமாம். (௬)

மாட்டேர்மடப்பாச்சிலாச்சிராம
முண்டீச்சரம்வாதவூர்வாரணாசி
காட்டேர்கடம்பூர்படம்பக்கங்கொட்டுங்
கடலொற்றியூர்மற்றுறையூரவையுங்
கோட்டேர்திருவாமாத்தூர்கோழம்பமுங்
கொடுங்கோவலூர்திருக்குணவாயில்.

ப - ரை. மாட்டேர் - திருமாட்டேர், படப்பாச்சிலாச்சிரமம் - திருமடப்பாச்சிலாச்சிரமம், முண்டீச்சரம் - திருமுண்டீச்சரம், வாதவூர் - திருவாதவூர், வாரணாசி - திருவாரணாசி, காட்டேர் - திருக்காட்டேர், கடம்பூர் - திருக்கடம்பூர், படம்பக்கம் - திருப்படம்பக்கம், கொட்டும் - திருக்கொட்டும், கடலொற்றியூர் - கடற்கரையிலுள்ள திருவொற்றியூர், மற்றுறையூர் - வளமுள்ள திருத்துறையூர், அவையும் - அவைகளும், கோட்டேர்-திருக்கோட்டேர், திருவாமாத்தூர்-திருவாமாத்தூர், கோழம்பமும் - திருக்கோழம்பமும், கொடுங்கோவலூர் - திருக்கொடுங்கோவலூர், திருக்குணவாயில்——, எ - று.

வி - ரை. வாரணாசி - காசி. (௭)

குலாவுதிங்கட்சடையான்குளிரும்பரிதிநியமம்
போற்றூரடியார்வழிபாடொழியாத்
தென்புறம்பயம்பூவணம்பூழியூருங்
காற்றூர்வரையன்றெடுத்தான்முடிதோணெரித்தா
னுறைகோயிலென்றென்றுநீகருதே.

ப - ரை. குலாவு - விளங்குகின்ற, திங்கள்சடையான் - சந்திரசேகரனது, குளிரும் - குளிர்ந்த, பரிதிநியமம் - திருப்பரிதிநியமம், போற்றூர் - திருப்போற்றூர், அடியார் வழிபாடு ஒழியா - அடியவர் வழிபாடு நீங்காத, தென்புறம்பயம்- திருத்தென்புறம்பயம், பூவணம்- திருப்பூவணம், பூழியூரும் - திருப்பூழியூரும், காற்றூர் - திருக்காற்றூர், வரைஅன்றுஎடுத்தான் - கயிலாயமலையை அக்காலத்தெடுத்தவனாகிய



இராவணனது, முடிதோள்நெரித்தான் - முடிகளையும் தோள்களையும் நெரித்தவனாகிய சிவபிரான், உறை - வாழ்கின்ற, கோயில் என்று - திருப்பதிகளென்று, என்றும் - எந்நாளும், நீகருது - நீநினைப்பாயாக, எ - று. (௮)

நெற்குன்றமோத்தூர்நிறைநீர்மருக
னெடுவாயில்குறும்பலாநீடுதிரு
நற்குன்றம்வலம்புரநாகேச்சர
நனிர்சோலையுஞ்சேனைமாகாளம்வாய்மூர்
கற்குன்றமொன்றேந்திமழைதடுத்த
கடல்வண்ணனுமாமலரோனுங்காணாச்
சொற்கென்றுந்தொலைவிலாதானுறையுங்
குடமூக்கென்றுசொல்லிக்குலாவுமினே.

ப - ரை. நெற்குன்றம் - திருநெற்குன்றம், ஓத்தூர் - திருவோத்தூர், நிறைநீர் மருகல்- நிறைந்தநீரையுடைய திருமருகல், நெடுவாயில் - திருநெடுவாயில், குறும்பலா - திருக்குறும்பலா, நீடுதிருநற்குன்றம் - பெரியதிருநற்குன்றம், வலம்புரம் - திருவலம்புரம், நாகேச்சரம் - திருநாகேச்சரம், நனிர்சோலையும்- திருநனிர்சோலையும், சேனைமாகாளம் - திருச்சேனைமாகாளம், வாய்மூர் - திருவாய்மூர், கல்குன்றம் ஒன்று ஏந்தி - கற்குன்றம் ஒன்றையேந்தி, மழைதடுத்த - மழையைத்தடுத்த, கடல் வண்ணனும் - கடல் வண்ணனாகிய திருமாலும், மாமலரோனும் - மாமலரோனாகிய பிரமனும், காணா - காணவொண்ணாத, சொற்குஎன்றும் தொலைவிலாதான் - சொற்களுக்கடங்காதவனாகிய சிவபெருமான், உறையும் - வாழ்கின்ற, குடமூக்கு - திருக்குடமூக்கு, என்று சொல்லி - என்று சொல்லாநின்று, குலாவுமின் - கொண்டாடுங்கள், எ - று.

வி - ரை. கற்குன்றமொன்று என்றது கோவர்த்தனமலையை. ( )

கூத்தங்குடிவேதிகுடிபுனல்சூழ்
குருந்தங்குடிதேவன்குடிமருவு
மத்தங்குடிதண்டிருவண்குடியு
மலம்புஞ்சலந்தன்சடைவைத்துகந்த
நித்தன்னிமலனுமையோடுங்கூட
நெடுங்காலமுறைவிடமென்றுசொல்லாப்
புத்தர்புறங்கூறியபுன்சமணர்
நெடும்பொய்களைவிட்டுநினைந்துய்ம்மினே.

ப - ரை. குத்தங்குடி - திருக்குத்தங்குடி, வேதிகுடி - திருவேதிகுடி, புனல்சூழ் - நீர்சூழ்ந்த, குருந்தங்குடி - திருக்குருந்தங்குடி, தேவன்குடி - திருத்தேவன்குடி, மருவுமத்தங்குடி - பொருந்திய திருமத்தங்குடி, தண் - குளிர்ந்த, திருவண்குடியும் ——, அலம்புஞ்சலம் அலம்பாநின்ற நீரை, தன் சடைமேல்வைத்து உகந்த - தன்சடையில் வைத்துக்களித்த, நித்தன் - நித்தனும், நிமலன் - நிர்மலனுமாகிய சிவபெருமான், உமையோடுங்கூட - உமாதேவியோடுகூட, நெடுங்காலம் பெருங்காலம், உறைவிடம் என்றுசொல்லா - உறைவிடமென்று சொல்லி, புத்தர் - புத்தரும், புறங்கூறிய புன்சமணர் - புறங்கூறுகின்ற புல்லியசமணரும் ஆகியஅவர்கள் து, நெடும்பொய்களைவிட்டு - பெரும்பொய்களைவிட்டு, நினைந்து - நினைத்து, உய்மின் - உய்யுங்கள், எ - று.

வி - ரை. அலம்புஞ்சலம் என்றது கங்கையை. (௧௦)

அம்மானையருந்தவமாகிநின்ற
　வமரர்பெருமான்பதியானவுன்னிக்
கொய்ம்மாமலர்ச்சோலைகுலாவுகொச்சைக்
　கிறைவன்சிவஞானசம்பந்தன்சொன்ன
விம்மாலையீரைந்துமிருநிலத்தி
　லிரவும்பகலுநினைந்தேத்திநின்று
விம்மாவெருவாவிரும்புமடியார்
　விதியார்பிரியார்சிவன்சேவடிக்கே.

ப - ரை. அம்மானை - சிவபெருமானை, அருந்தவம்ஆகின்ற - அரியதவம்பெருகின்ற, அமரர்பெருமான் - தேவர்பிரானது, பதியான உன்னி - திருப்பதிகளானவற்றை நினைந்து, கொய் - பறிக்கப்படுகிற, மாமலர்ச்சோலை குலாவு - பெரிய பூஞ்சோலைகள் சூழ்ந்த, கொச்சைக்கிறைவன் - கொச்சைப்பதிக்குத் தலைவன், சிவஞானசம்பந்தன் ——, சொன்ன - சொல்லிய, இம்மாலை ஈரைந்தும் - இந்தச்சொன்மாலையாகிய பத்துப்பாடலும், இருநிலத்தில் - பெரிய வுலகத்தில், இரவும் பகலும் நின்று நினைந்து ஏத்தி - இரவினும் பகலினும் நினைந்து துதிக்கின்ற, விம்மா - விம்மி, வெருவா - வெருவி, விரும்பும் - விரும்புகிற, அடியார் - அடியவர், விதியார் - விதிக்கப்பட்டார், சிவன்சேவடிக்கே பிரியார் - சிவன்சேவடியைப் பிரியமாட்டார், எ - று.

வி - ரை. கொச்சை - சீகாழி. (௧௧)

திருச்சிற்றம்பலம்.



திருநாவுக்கரசுநாயனார்

## திருக்ஷேத்திரக்கோவை.

### திருத்தாண்டகம்.

கோயிற்றிறம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைச்சிற்றம்பலமுஞ்செம்பொன்பள்ளி
　தேவன்குடிசிராப்பள்ளிதெங்கூர்
கொல்லிக்குளிரறைப்பள்ளிகோவல்
　வீரட்டங்கோகரணங்கோடிகாவு
முல்லைப்புறவமுருகன்பூண்டி
　முழையூர்பழையாறைசத்திமுற்றங்
கல்லிற்றிகழ்சீரார்காளத்தியுங்
　கயிலாயநாதனையேகாணலாமே.

ப - ரை. தில்லைச்சிற்றம்பலமும் - தில்லைச் சிற்றம்பலத்திலும், செம்பொன்பள்ளி - திருச்செம்பொன்பள்ளியிலும், தேவன்குடி - திருத்தேவன்குடியிலும், சிராப்பள்ளி - திருச்சிராப்பள்ளியிலும், தெங்கூர் - திருத்தெங்கூரிலும், கொல்லி - கொல்லிமலையிலுள்ள, குளிர் - குளிர்ந்த, அறைப்பள்ளி - திருவறைப்பள்ளியிலும், கோவல் - திருக்கோவலூரிலும், வீரட்டம் - திருவீரட்டத்திலும், கோகரணம் - கோகரணத்திலும், கோடிகாவு - திருக்கோடிகாவிலும், முல்லைப் புறவம் - திருமுல்லைப்புறவத்திலும், முருகன்பூண்டி - திருமுருகன்பூண்டியிலும், முழையூர் - திருமுழையூரிலும், பழையாறை - திருப்பழையாறையிலும், சத்திமுற்றம் - திருச்சத்திமுற்றத்திலும், கல்லில் திகழ் சீரார்காளத்தியும் - மலையில் விளங்குகின்ற சிறப்புப்பொருந்திய திருக்காளத்தியிலும், கயிலாயநாதனையே காணலாம் - கயிலாயநாதனையே சேவிக்கலாம், எ - று. (௧)

ஆரூர்மூலட்டானமானைக்காவு
　மாக்கூரிற்றான்றோன்றிமாடமாவூர்
பேரூர்பிரமபுரம்பேராவூரும்
　பெருந்துறைகாம்பீலிபிடவூர்பேணுங்

கூரார்குறுக்கைவீரட்டானமுங்
கோட்டூர்குடமூக்குக்கோழம்பமும்
காரார்கழுக்குன்றுங்கானப்பேருங்
கயிலாயநாதனையேகாணலாமே.

ப - ரை. ஆரூர்——, மூலட்டானம்——, ஆனைக்கா——, ஆக்கூர்——, தான்தோன்றி——, மாடமாகூர்——, பேரூர்——, பிரமபுரம்——பேராவூர்——, பெருந்துறை——, காம்பீலி—— பிடவூர்——, பேணும் - விரும்புகிற, கூர்ஆர் - சிறப்பமைந்த, குறுக்கை——, வீரட்டானம்——, கோட்டூர்——, குடமூக்கு——, கோழம்பம்——, கார் ஆர் - மேகங்கள் தவழ்கின்ற, கழுக்குன்றம்——, கானப்பேர்——, (ஆகிய இத்திருப்பதிக ளெல்லாவற்றிலும்)——, கயிலாயநாதனையே காணலாம், எ - று. (௨)

இடைமருதீங்கோயிராமேச்சர
மின்னம்பரேரிடவையேமப்பேறூர்
சடைமுடிசாலைக்குடிதக்களூர்
தலையாலங்காடுதலைச்சங்காடு
கொடுமுடிகுற்றாலங்கொள்ளம்பூதூர்
கோத்திட்டைகோட்டாறுகோட்டுக்காடு
கடைமுடிகானூர்கடம்பந்துறை
கயிலாயநாதனையேகாணலாமே.

ப-ரை. இடைமருது——, ஈங்கோய்——, இராமேச்சரம்——, இன்னம்பர்——, இடவை——, ஏமப்பேறூர்——, சடைமுடி——, சாலைக்குடி——, தக்களூர்——, தலையாலங்காடு——, தலைச்சங்காடு——, கொடுமுடி——, குற்றாலம்——, கொள்ளம்பூதூர்——, கோத்திட்டை——, கோட்டாறு——, கோட்டுக்காடு——, கடைமுடி——, கானூர்——, கடம்பந்துறை——, (ஆகியஇத்திருப்பதிகளெல்லாவற்றிலும்) கயிலாயநாதனையே காணலாம், எ - று. (௩)

எச்சிலிளமரேமகல்லூ
ரிலம்பையங்கோட்டூரிறையான்சேரி
யச்சிறுபாக்கமளப்பூரம்பு
ராவடுதண்டுறையழுந்தூராறை
கச்சினங்கற்குடிகச்சூராலக்
கோயில்கரவீரங்காட்டுப்பள்ளி



கச்சிப்பலதளியுமேகம்பத்துங்
கயிலாயநாதனையேகாணலாமே.

ப-ரை. எச்சிலிளமர்——, ஏமகல்லூர்——, இலம்பையங்——; கோட்டூர்——, இறையான்சேரி——, அச்சிறுபாக்கம்——, அளப்பூர்——, அம்பர்——, ஆவடுதண்டுறை——, அழுந்தூர்——, ஆறை——, கச்சினம்——, கற்குடி——, கச்சூர்——, ஆலக்கோயில்——, கரவீரம்——, காட்டுப்பள்ளி——, கச்சிப்பலதளி——, ஏகம்பம்——, (ஆகிய இத்திருப்பதிகளெல்லாவற்றிலும்) கயிலாயநாதனையே காணலாம், எ - று. (௪)

கொடுங்கோளூரஞ்சைக்களஞ்செங்குன்றூர்
கொங்கணங்குன்றியூர்குரக்குக்காவு
நெடுங்களநன்னிலநெல்லிக்காவு
நின்றியூர்நீடூர்நியமநல்லூ
ரிடும்பாவனமெழுமூரேழூர்தோழூ
ரெறும்பியூரேராருமேமகூடங்
கடம்பையிளங்கோயிறன்னினுள்ளுங்
கயிலாயநாதனையேகாணலாமே.

ப - ரை. கொடுங்கோளூர்——, அஞ்சைக்களம்——, செங்குன்றூர்——, கொங்கணம்——, குன்றியூர்——, குரக்குக்கா——, நெடுங்களம்——, நன்னிலம்——, நெல்லிக்கா——, நின்றியூர்——, நீடூர்——, நியமநல்லூர்——, இடும்பாவனம்——, எழுமூர்——, ஏழூர்——, தோழூர்——, எறும்பியூர்——, ஏமகூடம்——, கடம்பை——, இளங்கோயில்——, (ஆகிய இத்திருப்பதிகளெல்லாவற்றிலும்——, கயிலாயநாதனையே காணலாம்——, எ - று. (௫)

மண்ணிப்படிக்கரைவாழ்கொளிபுத்தூர்
வக்கரைமந்தாரம்வாரணாசி
வெண்ணிவிளத்தொட்டிவேள்விக்குடி
விளமர்விராடபுரம்வேட்களத்தும்
பெண்ணையருட்டுறைதண்பெண்ணாகடம்
பிரம்பில்பெரும்புலியூர்பெருவேளூருங்
கண்ணைகளர்க்காறைகழிப்பாலையுங்
கயிலாயநாதனையேகாணலாமே.

ப - ரை. மண்ணிப்படிக்கரை——, வாழ்கொளிபுத்தூர்——, வக்கரை——, மந்தாரம்——, வாரணாசி——, வெண்ணி——, விளத்தொட்டி——, வேள்விக்குடி——, விளமர்——, விராடபுரம்——, வேட்களம்——, பெண்ணை——, அருட்டுறை——, பெண்ணாகடம்——, பிரம்பில்——, களர்க்காறை——, கழிப்பாலை——, (ஆகிய இத்திருப்பதிக ளெல்லாவற்றிலும்) கயிலாயநாதனையே காணலாம்——, எ - று. (சு)

வீழிமிழலைவெண்காடுவேங்கூர்
வேதிகுடிவிசயமங்கைவியலூ
ராழியகத்தியான்பள்ளியண்ணா
மலையாலங்காடுமரதைப்பெரும்
பாழிபழனம்பனந்தாள்பாதாளம்
பராய்த்துறைபைஞ்ஞீலிபனங்காட்டூர்தண்
காழிகடனாகைக்காரோணத்துங்
கயிலாயநாதனையேகாணலாமே.

ப - ரை. வீழிமிழலை——, வெண்காடு——, வேங்கூர்——, வேதிகுடி——, விசயமங்கை——, வியலூர்——, ஆழி——, அகத்தியான்பள்ளி——, அண்ணாமலை——, ஆலங்காடு——, அரதை——, பெரும்பாழி——, பழனம்——, பனந்தாள்——, பாதாளம்——, பராய்த்துறை——, பைஞ்ஞீலி——, பனங்காட்டூர்——, காழி——, நாகைக்காரோணம்——, (ஆகிய இத்திருப்பதிகளெல்லாவற்றிலும்) கயிலாயநாதனையே காணலாம், எ - று. (எ)

உஞ்சேனைமாகாளமூறலோத்தூ
ருருத்திரகோடிமறைக்காட்டுள்ளு
மஞ்சார்பொதியின்மலைதஞ்சைவழுவூர்
வீரட்டமாதானங்கேதாரத்தும்
வெஞ்சமாக்கூடல்மீயச்சூர்வைகா
வேதீச்சரம்விவீச்சரம்வெற்றியூரும்
கஞ்சனூர்கஞ்சாறுபஞ்சாக்கையுங்
கயிலாயநாதனையேகாணலாமே.

ப - ரை. உஞ்சேனைமாகாளம்——, ஊறல்——, ஓத்தூர்——, உருத்திரகோடி——, மறைக்காடு——, பொதியின்மலை——, தஞ்சை——, வழுவூர்——, வீரட்டம்——, மாதானம்——, கேதாரம்——, வெஞ்சமாக்கூடல்——, மீயச்சூர்——, வைகா——,



வேதீச்சரம்——, விவீச்சரம்——, வெற்றியூர்——, கஞ்சனூர்——, கஞ்சாறு——, பஞ்சாக்கை——, (ஆகிய இத்திருப்பதிகளெல்லாவற்றிலும்——, கயிலாயநாதனையே காணலாம், எ - று. (அ)

திண்டீச்சரஞ்சேய்ஞலூர்செம்பொன்பள்ளி
தேவூர்சிரபுரஞ்சிற்றேமஞ்சேறை
கொண்டீச்சரங்கூந்தலூர்கூழையூர்கூடல்
குருகாவூர்வெள்ளடைகுமரிகொங்கு
அண்டர்தொழுமதிகைவீரட்டான
மையாறசோகந்தியாமாத்தூருங்
கண்டியூர்வீரட்டங்கருகாவூருங்
கயிலாயநாதனையேகாணலாமே.

ப - ரை. திண்டீச்சரம்——, சேய்ஞலூர்——, செம்பொன்பள்ளி——, தேவூர்——, சிரபுரம்——, சிற்றேமம்——, சேறை——, கொண்டீச்சரம்——, கூந்தலூர்——, கூழையூர்——, கூடல்——, குருகாவூர்——, வெள்ளடை——, குமரி——, கொங்கு——, அண்டர்தொழும் - தேவர்கள் வழிபடுகிற, அதிகை——, வீரட்டானம்——, ஐயாறு——, அசோகந்தி——, ஆமாத்தூர்——, கண்டியூர்——, வீரட்டம்——, கருகாவூர்——, (ஆகிய இத்திருப்பதிகளெல்லாவற்றிலும்) கயிலாயநாதனையே காணலாம், எ - று. (கூ)

நறையூரிற்சித்தீச்சரநள்ளாறு
நாரையூர்நாகேச்சரநல்லூர்நல்ல
துறையூர்சோற்றுத்துறைசூலமங்கை
தோணிபுரந்துருத்திசோமீச்சர
முறையூர்கடலொற்றியூரூற்றத்தூ
ரோமாம்புலியூரோரேடகத்துங்
கறையூர்கருப்பறியல்கன்றாப்பூருங்
கயிலாயநாதனையேகாணலாமே.

ப - ரை. நறையூர்——, சித்தீச்சரம்——, நள்ளாறு——, நாரையூர்——, நாகேச்சரம்——, நல்லூர்——, துறையூர், சோற்றுத்துறை——, சூலமங்கை——, தோணிபுரம்——, துருத்தி——, சோமீச்சரம்——, உறையூர்——, ஒற்றியூர்——, ஊற்றத்தூர்——, ஓமாம்புலியூர்——, ஏடகம்——, கறையூர்——, கருப்பறியல்——, கன்றாப்பூர்——, (ஆகிய இத்திருப்பதிக ளெல்லாவற்றிலும்) கயிலாயநாதனையே காணலாம், எ - று. (க0)

புலிவலம்புத்தூர்புகலூர்புன்கூர்
புறம்பயம்பூவணம்பொய்கைநல்லூர்
வலிவலமாற்பேறுவாய்மூர்வைகல்
வலஞ்சுழிவாஞ்சியமருகல்வன்னி
நிலமலிநெய்த்தானத்தோடெத்தானத்து
நிலவுபெருங்கோயில்பலகண்டாற்றொண்டீர்
கலிவலிமிக்கோனைக்கால்விரலாற்செற்ற
கயிலாயநாதனையேகாணலாமே.

ப - ரை. புலிவலம்——, புத்தூர்——, புகலூர்——, புன்கூர்——, புறம்பயம்——, பூவணம்——, பொய்கைநல்லூர்——, வலிவலம்——, மாற்பேறு——, வாய்மூர்——, வைகல்——, வலஞ்சுழி ——, வாஞ்சியம்——, மருகல்——, வன்னி——, நெய்த்தானம் (இத் திருப்பதிகளில்) கயிலாயநாதனையே காணலாம்——, எ - று. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்திநாயனார்

## ஊர்த்தொகை.

பண் பழம்பஞ்சரம்.

கோயிற்றிரம்.

திருச்சிற்றம்பலம்.

காட்டூர்க்கடலேகடம்பூர்மலையேகானப்பேரூராய்
கோட்டூர்க்கொழுந்தேயழுந்தூரரசேகொழுநற்கொல்லேறே
பாட்டூர்பலரும்பரவப்படுவாய்பனங்காட்டூரானே
மாட்டூரறவாமறவாதுன்னைப்பாடப்பணியாயே.

ப - ரை. காட்டூர்க்கடலே - காட்டூரிலெழுந்தருளிய (கருணைக்) கடலே, கடம்பூர்மலையே - கடம்பூரி லெழுந்தருளிய குணமலையே, கானப்பேரூராய் - கானப்பேர் என்னும் ஊரிலெழுந்தருளி யிருப்பவனே, கோட்டூர்கொழுந்தே - கோட்டூர்க்கொழுந்தே, அழுந்தூர் அரசே——, கொழுநல்கொல்லேறே, பாட்டூர்பலரும் பரவப்படுவாய் - பாடல்களால் ஊர்தோறுமுள்ளபுலவராலும் துதிக்கப்படுவோனே, பனங்காட்டூரானே ——, மாட்டூர் அறவா-இடபத்தை நடத்துகின்ற தருமசொரூபனே, உன்னை மறவாது பாடப்பணியாய் - உன்னை மறவாமல் பாடும்வண்ணம் (அடியேனை) நியமித்தருள்வாயாக, எ - று.

வி - ரை. கொல்லேறு - (பகைவராகிய யானைகளை) கொல்லுகின்ற ஆண்சிங்கம். (௧)

கொங்கிற்குறும்பிற்குரக்குத்தளியாய்குழகாகுற்றாலா
மங்குற்றிரிவாய்வானோர்தலைவாவாய்மூர்மணவாளா
சங்கக்குழையார்செவியாவழகாவவியாவனலேந்திக்
கங்குற்புறங்காட்டாடியடியார்கவலைகளையாயே.

ப - ரை. கொங்கில் குறும்பில் - கொங்கநாட்டில் குறும்பூரிலுள்ள, குரக்குத்தளியாய் - குரக்குத்தளியை யுடையானே, குழகா - குழகனே, குற்றாலா - குற்றாலத்தையுடையவனே, மங்குல் திரிவாய் - இரவில் சஞ்சரிப்பவனே, வானோர் தலைவா - தேவர் பிரானே, வாய்மூர் மணவாளா - வாய்மூருக்குத் தலைவனே, சங்கக்குழை ஆர் செவியா - சங்கக்குழையணிந்த செவியையுடையவனே, அழகா - அழகனே, அவியா அனல் ஏந்தி - தணியாத அக்கினியைத் தாங்கி, கங்குல் - இராக்காலத்தில், புறங்காட்டு ஆடி - புறங்காட்டிலாடுவோனே, அடியார் கவலை - அடியவரது துன்பத்தை, களையாய் - நீக்கியருள்வாயாக, எ - று.

வி - ரை. குழகன் - அழகன், புறங்காடு - மயானம். (௨)

நிறைக்காட்டானேநெஞ்சத்தானேநின்றியூரானே
மிறைக்காட்டானேபுனல்சேர்சடையாயனல்சேர்கையானே
மறைக்காட்டானேதிருமாந்துறையாய்மாகோணத்தானே
யிறைக்காட்டாயேயெங்கட்குன்னையெம்மான்றம்மானே.

ப - ரை. நிறைக்காட்டானே - நிறைக்காட்டை யுடையவனே, நெஞ்சத்தானே-(அடியாரது) மனத்திலிருப்பவனே, நின்றியூரானே - நின்றியூரை யுடையவனே, மிறைக்காட்டானே - மிறைக்காட்டை யுடையவனே, புனல் சேர் சடையாய்-கங்கைபொருந்திய சடையை யுடையவனே, அனல் சேர் கையானே-நெருப்புப்பொருந்திய கையை யுடையவனே, மறைக்காட்டானே - மறைக்காட்டை யுடையவனே, திருமாந்துறையாய் - திருமாந்துறையை யுடையவனே, மாகோணத்தானே - மாகோணத்தை யுடையவனே, எம்மான் தம்மானே - எம்பெருமானுகிய இறைவனே, எங்கட்கு - எங்களுக்கு, உன்னை-உன்னை, இறைக்காட்டாய் - இறையாகத் தந்தருளாய், எ - று.

வி - ரை. இறைக்காட்டாய் என்பதற்கு சிறிது காட்டியருளாய் என்றுரைத்தலுமாம். (௫)

ஆரூரத்தாவையாற்றமுதேயளப்பூரம்மானே
காரூர்பொழில்கள்புடைசூழ்புறவிக்கருகாவூரானே
பேரூருறைவாய்பட்டிப்பெருமான்பிறவாநெறியானே
பாரூர்பலரும்பரவப்படுவாய்பாரூரம்மானே.

ப - ரை. ஆரூர் அத்தா - ஆரூரத்தனே, ஐயாற்று அமுதே - ஐயாற்றிலுள்ள அமுதமே, அளப்பூர் அம்மானே - அளப்பூரிலுள்ள அம்மானே, கார் ஊர் பொழில்கள் புடைசூழ் - கருமையாகிய சோலைகள் பக்கத்தில் சூழ்ந்த, புறவில் கருகாவூரானே - புறவிலுள்ள கருகாவூரை யுடையவனே, பேரூர் உறைவாய் - பேரூரில் வாழ்பவனே, பட்டிப்பெருமான் - பட்டிப்பெருமானே, பிறவா நெறியானே - பிறவாத நெறியை யுடையவனே, பார் ஊர் பலரும் பரவப்படுவாய் - உலகத்திலுள்ள பலராலும் துதிக்கப்படுவோனே, பாரூர் அம்மானே - பாரூரிலுள்ள பெருமானே, எ - று. (௬)

மருகலுறைவாய்மாகாளத்தாய்மதியஞ்சடையானே
அருகற்பிணிநின்னடியார்மேலகலவருளாயே
கருகற்குரலாய்வெண்ணிக்கரும்பேகாணூர்க்கட்டியே
பருகப்பணியாயடியார்க்குன்னைப்பவளப்படியானே.

ப - ரை. மருகல் உறைவாய் - மருகலில் வாழ்பவனே, மாகாளத்தாய் - மாகாளத்தை யுடையவனே, மதி அம் சடையானே - பிறையணிந்த அழகிய சடையையுடையவனே, அருகல் பிணி - மெலிதற்குக் காரணமாகிய நோய்கள், நின் அடியார்மேல - உன்னடியவர்மேலனவற்றை, அகல அருளாய் - நீங்கும்படி யருள்செய்யக்கடவை, கருகல் குரலாய் - கரிய கண்டத்தையுடையவனே, வெண்ணிக்கரும்பே - வெண்ணியிலுள்ள கரும்பே, காணூர் கட்டியே - காணூரிலுள்ள வெல்லமே, பவளப்படியானே - பவளம்போலுந் திருமேனியை யுடையவனே, அடியார்க்கு - அடியவர்க்கு, உன்னை —— பருகப் பணியாய் - பருகும்படி கிருபை செய்வாயாக, எ - று. (௭)

தாங்கூர்பிணிநின்னடியார்மேலகலவருளாயே
வேங்கூருறைவாய்விளமர்நகராய்விடையார்கொடியானே
நாங்கூருறைவாய்தேங்கூர்நகராய்நல்லூர்நம்பானே
பாங்கூர்பலிதேர்பரனேபரமாபழனப்பதியானே.

ப - ரை. நின் அடியார்மேல - உன்னடியார்மேலனவாகிய, தாங்கூர் பிணி - மிக்க பிணிகள், அகல - நீங்க, அருளாய் - அருள்செய்வாயாக,



வேங்கூர் உறைவாய் - வேங்கூரில் வாழ்பவனே, விளமர் நகராய் - விளமர் நகரையுடையவனே, விடை ஆர் கொடியானே - இடபக்கொடியை யுடையவனே, நாங்கூர் உறைவாய் - நாங்கூரில் வாழ்வோனே, தேங்கூர் நகராய் - தேங்கூர் நகரை யுடையவனே, நல்லூர் நம்பானே - நல்லூர் நம்பனே, பாங்கு ஊர் - அழகிய ஊர்கள்தோறும், பலி தேர் - பலியேற்கிற, பரனே ——, பரமா - பரமனே, பழனப்பதியானே - பழனப்பதியை யுடையவனே, எ - று.

வி - ரை. நம்பனே யென்பாலது - நம்பானே என நீட்டல் பெற்றது. (௮)

தேனைக்காவல்கொண்டுவிண்டகொன்றைச்செழுந்தாராய்
வானைக்காவல்கொண்டுநின்றாரறியாநெறியானே
யானைக்காவிலரனேபரனேயண்ணாமலையானே
யூனைக்காவல்கைவிட்டுன்னையுகப்பாருணர்வாரே.

ப - ரை. தேனை காவல்கொண்டு - தேனைத் தன்னிடத்தே யுடையதாய், விண்ட - விரிந்த, கொன்றை - கொன்றைமலர்களாலாகிய, செழு தாராய் - செழிய மாலையையுடையவனே, வானை காவல் கொண்டு நின்றார் - தேவர்களும், அறியா நெறியானே - அறியாத நெறியை யுடையவனே, ஆனைக்காவில் அரனே - ஆனைக்காவில் வாழ்கின்ற சிவனே, பரனே ——, அண்ணாமலையானே ——, ஊனை காவல் கைவிட்டு - உடற்காப்பை நீங்கி, உன்னை உகப்பார் - உன்னை விரும்புவோர், உணர்வார் - (உன்னை) அறிவார்கள், எ - று.

வி - ரை. வானை காவல்கொண்டு நின்றார் - விண்ணுலகைக் காவலாகக்கொண்டு நின்றவர் - (தேவர்கள்). (௯)

துருத்திச்சுடரேநெய்த்தானத்தாய்சொல்லாய்கல்லாலா
பருத்திநியமத்துறைவாய்வெயிலாய்ப்பலவாய்க்காற்றானாய்
திருத்தித்திருத்திவந்தென்சிந்தையிடங்கொள்கயிலாயா
யருத்தித்துன்னையடைந்தார்வினைகளகலவருளாயே.

ப - ரை. துருத்திச்சுடரே - துருத்திச்சோதியே, நெய்த்தானத்தாய் - நெய்த்தானத்தை யுடையவனே, சொல் ஆய் கல்லாலா - வேதங்களாலாராயப்படுகிற கல்லாலமரத்தின்கீழ் எழுந்தருளினவனே, பருத்தி நியமத்து உறைவாய் - பருத்தி நியமத்தில் வாழ்பவனே, வெயில் ஆய் - வெயிலாகி, பல ஆய் - பல பொருள்களாகி, காற்று ஆனாய் - காற்றானாய், திருத்தித் திருத்தி வந்து - மிகவுந் திருத்தி வந்து, என் சிந்தை - என் மனத்தை, இடம் கொள் - இடமாகக்கொண்ட, கயிலாயா - கயிலாயனே, அருத்தித்து - விரும்பி, உன்னை அடைந்தார்-

உன்னை யடைந்தவர்களுடைய, வினைகள் அகல-வினைகளொழியும்படி, அருளாய் - அருள்கடவை, எ - று.

வி - ரை. சொல் - வேதம். (அ)

புலியூர்ச்சிற்றம்பலத்தாய்புகலூர்ப்போதாமூதூரா
பொலிசேர்புரமூன்றெரியச்செற்றபுரிபுன்சடையானே
வலிசேரரக்கனடக்கையைஞ்ஞான்கடர்த்தமதிசூடி
கலிசேர்புறவிற்கடவூராளீகாணவருளாயே.

ப - ரை. புலியூர் சிற்றம்பலத்தாய் - புலியூர்ச் சிற்றம்பலத்தை யுடையவனே, புகலூர்ப்போதா-புகலூரிலுள்ள அறிவனே, மூதூரா-மூதூரையுடையவனே, பொலிசேர் - விளக்கம்பொருந்திய, புரம் மூன்று - முப்புரங்கள், எரிய - எரிந்தொழிய, செற்ற - (அவற்றை) வென்ற, புரி புன் சடையானே - முறுக்குடைய புன் சடையை யுடையவனே, வலிசேர் அரக்கன் - வலிபொருந்திய ராவணேசுரனது, ஐஞ்ஞான்கு தடக்கை - இருபது பெரிய கைகளையும், அடர்த்த-நெரித்த, மதிசூடி - பிறைசூடி, கலிசேர் புறவில் - ஒலிபொருந்திய முல்லை நிலத்திலுள்ள, கடவூராளி - கடவூரை யாள்வோனே, காண அருளாய் - (உன்னை நான்) காணும்படி கிருபைசெய்வாயாக, எ - று.

வி - ரை. ஐஞ்ஞான்கு என்பதில் ஞகரம் நகரத்திற்குப் போலியாய் வந்தது. (௯)

கைம்மாவுரிவையம்மான்காக்கும்பலவூர்கருத்துன்னி
மைம்மாந்தடங்கண்மதுரமன்னமொழியாண்மடச்சிக்கடி
தம்மானூரன்சடையன்சிறுவனடியன்றமிழ்மாலை
செம்மாந்திருந்துதிருவாய்திறப்பார்சிவலோகத்தாரே.

ப - ரை. கைம்மா உரிவை - யானைத்தோலையுடைய, அம்மான் காக்கும் - பெருமான் காக்கின்ற, பலவூர்-பல திருப்பதிகளையும், கருத்து உன்னி - மனத்தில் நினைத்து, மை - அஞ்சனமெழுதப்பெற்ற, மா - மாவடுவைப் போன்ற, தடம் கண் - பெரிய கண்களையுடைய, மதுரம் அன்ன மொழியாள் - மதுரம்போலு மொழியை யுடையவளாகிய, மடச்சிக்கடி-மடச்சிக்கடிக்கும், தம்மான் ஊரன் சடையன்-தம்மானூரன் சடையனுக்கும், சிறுவன் - சிறுவனாகிய, அடியன் - அடியவனது, தமிழ்மாலை - தமிழ் மாலையை, செம்மாந்திருந்து-இறுமாந்திருந்து, திருவாய் திறப்பார் - திருவாய் திறப்பவர், சிவலோகத்தாரே - சிவலோகத்தை யுடையவரேயாவர், எ - று.

வி - ரை. திருவாய் திறப்பார் - திருவாய்மலர்ந்து பாடுவோர். (௰)

திருச்சிற்றம்பலம்.



## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

## திருவெழுகூற்றிருக்கை.

சிவவுருவம்.

திருச்சிற்றம்பலம்.

ஓருருவாயினைமானாங்காரத்
தீரியல்பாயொருவிண்முதல்பூதலம்
ஒன்றியவிருசுடருப்பர்கள்பிறவும்
படைத்தளித்தழிப்பமும்மூர்த்திகளாயினை
யிருவரோடொருவனாகிநின்றனை
யோராநீழலொண்கழலிரண்டு
முப்பொழுதேத்தியநால்வர்க்கொளிநெறி
காட்டினைநாட்டமூன்றாகக்கோட்டினை
யிருநதியரவமோடொருமதிசூடினை
யொருதாளீரயின்மூவிலைச்சூல
நாற்கான்மான்மறியைந்தலையரவ
மேந்தினைகாய்ந்தநால்வாய்மும்மதத்
திருகோட்டொருகரியீடழித்துரித்தனை
யொருதனுவிருகால்வளையவாங்கி
முப்புரத்தோடுநானிலமஞ்சக்
கொன்றுதலத்துறவவுணரையறுத்தனை
யைம்புலனாலாமந்தக்கரண
முக்குணமிருவளியொருங்கியவானோ
ரேத்தநின்றனையொருங்கியமனத்தோ
டிருபிறப்போர்ந்தமுப்பொழுதுகுறைமுடித்து
நான்மறையோதியைவகைவேள்வி
யமைத்தாறங்கமுதலெழுத்தோதி
வரன்முறைபயின்றெழுவான்றனைவளர்க்கும்
பிரமபுரம்பேணினை
யறுபதமுரலும்வேணுபுரம்விரும்பினை
யிகலியமைந்துணர்புகலியமர்ந்தனை

பொங்குநாற்கடல்சூழ் வெங்குருவிளங்கினை
பாணிமூவுலகும் புதையமேன்மிதந்த
தோணிபுரத்துறைந்தனை தொலையாவிருநிதி
வாய்ந்தபூந்தராயேய்ந்தனை
வரபுரமென்றுணர் சிரபுரத்துறைந்தனை
பொருமலையெடுத்த விருதிறலரக்கன்
விறல்கெடுத்தருளினை புறவம்புரிந்தனை
முந்நீர்த்துயின்றோ னான்முகனறியாப்
பண்பொடுநின்றனை சண்பையமர்ந்தனை
ஐயுறுமமணரு மறுவகைத்தேரரு
மூழியுமுணராக் காழியமர்ந்தனை
யெச்சனேழிசையோன் கொச்சையைமெச்சினை
யாறுபதுமைந்துமமர்ந்தகல்வியு
மறைமுதனான்கு
மூன்றுகாலமுந்தோன்றநின்றனை
யிருமையினொருமையுமொருமையின்பெருமையு
மறுவிலாமறையோர்
கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியனறியு
மனையதன்மையையாதலினின்னை
நினையவல்லவரில்லைநீணிலத்தே.

(இ-ள்.) ஓருருவாயினை - என்றது. எல்லாத் தத்துவங்களையுங் கடந்தவர்க்கு மனுஷிகளுக்கு மெட்டாமலிருந்துள்ள தற்சுரூபதரான் பஞ்சகிருத்தியங்களையும் நிகழ்த்தவேண்டி, பின்னிச்சையா லெடுத்துக்கொண்டிருக்குந் திருமேனியை என்றவாறு.

மானாங்காரத்தீரியல்பாய் என்றது. மானென்பது - சத்தி-ஆங்காரத்தீரியல்பாய் - தற்சத்தியைக் கொண்டு சீவான்மாக்களின் பஞ்சகிருத்தியங்களை நடத்தவேண்டிச் சத்தி சிவமாகிய இரண்டுருவாயினை என்றவாறு.

ஒரு - என்றது. அந்தச் சத்தியுடனே கூடியொன்றாகி நின்றனை என்றவாறு.

விண்முதல் பூதல மொண்டிய விருசுடர் உம்பர்கள் பிறவும்படைத்தளித்தழிப்பமும் மூர்த்திகளாயினை - என்றது. ஆகாசமுதலாக



பூமியீறாகவுள்ள பஞ்சபூதங்களையுஞ் சந்திராதித்தர்களையுந் தேவர்களையு மற்றுமுள்ள ஆத்மாக்களையும் படைக்கைக்கும், காக்கைக்கும், அழிக்கைக்கும், பிரமா - விஷ்ணு - ருத்திரனென்கின்ற திரிமூர்த்திகளுமாயினை என்றவாறு.

இருவரோடொருவனாகி நின்றனை - என்றது, பிரமாவையும் விஷ்ணுவையு மிடத்திலும் வலத்திலும் அடக்கிக்கொண்டு ஏகமாய்த் திரிமூர்த்தியாகி நின்றனை என்றவாறு.

ஓரால்நீழலுண் கழலிரண்டு முப்பொழுதேத்திய நால்வர்க்கொளிநெறிகாட்டினை - என்றது, விருக்ஷங்களுக்கெல்லாந் தலைமையாயிருப்பதொரு வடவிருக்ஷத்தினிழலிலே யெழுந்தருளியிருந்து நின்னுடைய ஸ்ரீபாதங்களை யுதயமத்தியான மஸ்தமனமென்கின்ற மூன்றுகாலமுந் தோத்திரஞ் செய்யாநின்ற அகஸ்தியன் - புலஸ்தியன் - சனகன் - சனற்குமாரனென்னும் நால்வராகிய ரிஷிகளுக்குந் தற்சுரூபமான திருமேனியைக் காட்டியருளினை என்றவாறு.

நாட்டமூன்றாகக் கோட்டினை - என்றது. பிரமா முதலாயிருந்துள்ள ஆத்மாக்கள் ரூபமென்னும் புலனாலே சர்வபதார்த்தங்களையுங் காணுதல்படியாலே சந்திராதித்தகளையு மக்கினியையு மூன்று கண்ணாகக்கொண்டருளி அந்தகாரமான விருளை யோட்டினை என்றவாறு.

இருநதி யரவமோ டொருமதிசூடினை - என்றது, பெரிதாகிய கங்கையையு மொப்பில்லாத பாம்பினையு மொருகாலத்திலு முதிராத பிறைக்கண்ணியையுஞ் சூடியருளினை என்றவாறு.

ஒருதாளீரயின் மூவிலைச்சூல நாற்கான் மான்மறியைந்தலையரவமேந்தினை - என்றது. பிரணவமாயிருந்துள்ள ஒரு காம்பினையும் கருகின்ற கூர்மையினையும் பிரமா - விஷ்ணு - ருத்திரனென்கின்ற மூன்றிலையினையு முடையதொரு சூலத்தினையும் இருக்கு - யசுர் - சாமம் - அதர்வணமென்கின்ற நாலு வேதங்களையும் காலாயிருந்துள்ள தொருமான்கன்றினையும் ஸ்ரீபஞ்சாக்ஷரங்களையு மஞ்சுதலையாகவுடையதொரு மகாநாகத்தினையும் அஸ்தங்களிலே தரித்தருளினை என்றவாறு.

காய்ந்த நால்வாய் மும்மதத்திருகோட் டொருகரி யீடழித்துரித்தனை - என்றது தன்னிழலைக் காயத்தக்க கோபத்தினையும் தொங்கும் வாயினையு மிரண்டு கொம்பினையு முடையதொரு ஒப்பில்லாத யானையினுடைய பெலங்களெல்லாங் கெடுத்து உரித்துப் போர்த்தனை என்றவாறு.

"ஒருதனு விருகால் வளையவாங்கி முப்புரத்தோடு நானிலமஞ்சக் கொன்று தலத்துறுமவுணரை யறுத்தனை." என்றது. ஒப்பில்லாத பொன்மலையாகிய வில்லை யிருதலையும் வளையவாங்கி அஸ்திரத்தைத் தொடுத்து, முப்புராதிகளாகிய அவுணரை யறுத்தனை என்றவாறு.

ஐம்புலன்காலா மைந்தனை முக்குண மிருவளி யொருங்கிய வானோரேத்த நின்றனை - என்றது, சத்த - பரிச - ரூப - ரச - கந்தமென்னப்பட்ட ஐம்புலன்களையும், மனம் - புத்தி - அங்கார - சித்தமென்கின்ற அந்தக்கரணங்கள் நான்கினையும், ராசத - தாமத - சாத்துவித மென்கின்ற மூன்று குணங்களையும், பிராணன் அபானனென்கின்ற விரண்டு வாயுவையும், மூலாதாரத்திலே யொடுக்கிக்கொண்டு ஏகாக்கிரசித்தரா யிருக்குள்ள தேவர்களேத்த நின்றனை என்றவாறு.

ஒருங்கிய மனத்தோடிரு பிறப்போர்ந்து முப்பொழுது குறைமுடித்து நான்மறையோதி ஐவகையவ்வேள்வி யமைத்தாறங்கமுதலெழுத்தோதி வரன்முறை பயின்றெழுவான்றனை வளர்க்கும் பிரமபுரம் பேணினை என்றது. ஆகாரம் - நித்திரை - பயம் - மைதுனமிவற்றில் செல்லுகின்ற மனத்தைப் பரமேசுவரனுடைய ஸ்ரீபாதங்களிலே யொருக்கி முன்பு தாம் மாதாவின் உதரத்திலே பிறந்த பிறப்பும், உபநயனத்தின் பின்பு உண்டான பிறப்புமாகிய இரண்டையும் விசாரித்து மூன்று சந்தியும், செபதர்ப்பண - அனுட்டான - ஓமங்களையு முடித்து, இருக்கு - யசுர் - சாமம் - அதர்வண மென்கின்ற நாலுவேதங்களையு மோதி, சிவபூசை - குருபூசை - மகேசுரபூசை - பிராமணபோசனமதிதிபூசிப்பு என்கின்ற ஐவகை வேள்வியு முடித்து ஓதல் ஓதுவித்தல் - வேட்டல் - வேட்பித்தல் - ஈதல் ஏற்றல் என்னு மாறங்கங்களையும் நடத்தி இவைகளுக்கு முதலாயிருக்குள்ள பிரணவத்தைய் மூச்சரித்துத் தேவலோகத்திலுள்ள தேவர்களுக்கு மவிகொடுத்து மழை பெய்விக்கும் பிராமணராலே பூசிக்கப்பட்ட பிரமபுரமே திருப்பதியாக வெழுந்தருளி யிருந்தனை என்றவாறு.—ஆறங்கமாவன - மந்திரம் - வியாகரணம் - நிகண்டு - சந்தோபிசிதம் - நிருத்தம் - சோதிடம் இவ்வாறு சொல்லப்படுகின்ற முறையொன்று.

அறுபதமுரலும் வேணுபுரம் விரும்பினை - என்றது. அறுகாலுடைய வண்டுகளிசைபாடும் பொழில் சூழ்ந்த வேணுபுரமென்பதே திருப்பதியாக வெழுந்தருளினை என்றவாறு.—வேணுபுரமென்பதற்குக் காரணம் - வேணுவென்பானொரு, இந்திரனுடன் கசமுகனென்பானொரு வசுரன் வந்து யுத்தம்பண்ண அவனுடனே பொருது அபசெயப்பட்டுப் பிரமபுரமென்னுமுன் சொன்ன பதியிலே வந்து பர



மேசுவரன் திருவடிகளிலே தம்பிரானே அடியேனுக்கமைத்தருளின சுவர்க்கலோகத்தைக் கசமுகன் சங்கரிக்க அவனுடன் யுத்தம்பண்ணி அபசெயப்பட்டுப் போந்தேனென்று விண்ணப்பஞ்செய்து பூசிக்கையாலே தம்பிரானுங் கணேசரனைத் திருவுள்ளத்தடைத்து, வாராய் கணேசரனே, கசமுகன் வரப்பிரசாத முடையவன், ஒருவராலு மவனைச் செயிக்கப்போகாது, நீயுமவன் வடிவாகச் சென்று உன் வலக்கொம்பை முறித்தெறிந்து அவனைக்கொன்று வேணுவென்கின்ற இந்திரனைச் சுவர்க்கலோகத்திலே குடி புகவிடுவாயென்று திருவுளம்பற்ற, கணேசரனும் அவன் வடிவாகச்சென்று தன் வலக்கொம்பை முறித்தெறிந்து அவனையுங் கொன்று வேணு வென்கின்ற இந்திரனையும் சுவர்க்கலோகத்திலே குடிபுகவிட வுண்டானதென்க.

இகலிய மைந்துணர் புகலியமர்ந்தனை என்றது. தேவர்கள் முன்பு புகலிட மென்று புகுதலாய திருப்புகலி யென்பதே திருப்பதியாக வெழுந்தருளியிருந்தனை என்றவாறு.

தேவலோகமான அமராபதியைச் சூரபத்மா என்பானொரு வசுரன்வந்து சங்காரம்பண்ண அவனுடனே தேவேந்திரன் முதலாயுள்ளோர் பொருது அபசெயப்பட்டு யுத்தத்தை யொழிந்து இனி நமக்குப் பரமேசுவரன் ஸ்ரீபாதமொழிய புகலிடமில்லை யென்று வேணுபுரத்திலே வந்து பரமேசுவரனைத் தெண்டம்பண்ணி அவனாலுண்டாகிய கலிகையை விண்ணப்பஞ்செய்து எங்களை ரக்ஷித்தருளவேண்டுமென்ன, பரமேசுவரனும் சுப்பிரமணியரைத் திருவுளத்தடைத்து, வாராய் சுப்பிரமணியனே நீ— ஆறுமுகமும் பன்னிரண்டு கையுமாகப் போய்ச் சூரபத்மாவையுஞ் செயித்துத் தேவலோகத்திலே தேவர்களையும் குடிபுகுதவிடுவாயென வருகைகாரணம்.

பொங்கு நீர்க்கடல் சூழ் வெங்குருவிளங்கினை - என்றது மிகவும் கோபிக்கப்பட்ட கடல்சூழ்ந்த வெங்குருவென்றதே திருப்பதியாக எழுந்தருளி யிருந்தனை என்றவாறு.—லோகங்களுக் கெல்லாந் தேவகுருவாகிய பிரகஸ்பதி பகவான் என்னை யொழிந்து கர்த்தாவுண்டோவென்று மனோகர்வஞ் சொல்லுகையாலே பரமேசுவரனும் இவன் மகா கர்வியாயிருந்தான் இவனுடைய கர்வத்தையடக்கவேண்டுமென்று திருவுளத் தடைத்தருளித் தேவர்களுக் குருவாகிய அதிகாரத்தை மாற்றியருளப் பயப்பட்டுப் புகலியென்கின்ற திருப்பதியிலே போய்ப் பரமேசுவரனைத் தெண்டம்பண்ணி, அடியேன்செய்த அபராதங்களைப் பொறுத்தருளி அடியேனை ரட்சித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, தம்பிரானும் நீ மகா வித்வானா யிருந்தாயென்று திருவுள்ளமாய் முன்புபோல தேவர்களுக்குங் குருவாக

யை அதிகாரத்தையுங் கொடுத்த காரணத்தால் வெங்குரு என்கின்ற பெயருண்டாயது.

பாணி மூவுலகும் புதைப்ப மேல்மிதந்த தோணிபுரத் துறைந்தனை — என்றது பாணி யென்கின்ற ஜலம் பிரளயமாய்ப் பூமி அந்தரசுவர்க்க மூன்று லோகங்களையும் புதைப்ப அதைச் சங்காரம்பண்ணியருளி, அதின்மேலே தோணிபோல மிதந்த வெங்குருவாகியதோணிபுரமென்றதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனை என்றவாறு.

தொலையா விருநிதிவாய்ந்த பூந்தராயேய்ந்தனை — என்றது வேண்டினோர் வேண்டியது கொடுத்துந் தொலையாத சங்கநிதி பதுமநிதியென்று சொல்லப்பட்ட இரண்டு நிதிகளும் பூவுந்தாரையும் பூசிக்கையாலே திருப்பூந்தராய வெனப்பட்ட திருப்பதியிலே எழுந்தருளியிருந்தனை என்றவாறு. ஒருகாலத்து தொலையாத வரத்தைப் பெறுவது காரணமாகத் திருத்தோணிபுரத்திலேவந்து தம்பிரானைப் பூசித்தவிடத்து உங்களுக்கு வேண்டுமென்னென்று கேட்டருள, தம்பிரானே அடியேங்களுக்கு எவ்வாக்காலங்களுந் தொலையாமல் கொடுக்கத்தக்க வரத்தைப் பிரசாதித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, அவ்வாறே தொலையாதவரத்தையுங்கொடுத்தருளி, மகா சங்காரத்திலுந் தம்முடைய ஸ்ரீ அஸ்தங்களிலே தரித்தருளும் வரப்பிரசாதமுங்கொடுத்தருளினதால் பூந்தராய் எனப்பெயருண்டாயது.

வரபுரமென்றுணர் சிரபுரத்துறைந்தனை — என்றது, வரத்தைத் தருவதான புரமென்றுணரத்தக்க சிரபுரமென்பதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனை என்றவாறு. தேவர்களும் - பிரமா - விஷ்ணுக்களுமாகக்கூடி அமிர்தத்தையுண்டாக்கித் தேவர்களையிருத்திவிஷ்ணு பகவான் அமிர்தம் படைத்துக்கொண்டுவருகிற வேளையில் இராகு கேது வென்கிற இரண்டுபாம்பும் கூடிக்கரந்திருந்து அமிர்தபானம் பண்ணுவதாக இருப்பதுகண்டு, விஷ்ணுபகவான் அமிர்தம் படைத்து வருகின்ற சட்டுவத்தைக்கொண்டு தலையறவெட்டினதைய துடலிழந்து நாகமிரண்டும் நம்முடல் தரக்கடவான் பரமேசுவரனொழிய வேறேயில்லையென்று திருப்பூந்தராயிலே வந்து பரமேசுவரனை நோக்கி இரண்டு சிரங்களும் பூசித்ததால் சிரபுரமென்று பெயருண்டாயது.

ஒருமலையெடுத்த விருதிறலரக்கன் விறல்கெடுத்தருளினை — என்றது. பெருமையிற்சிறந்த கயிலாசமென்னும் பேரையுடைத்தாயுள்ளதே ஆலயமாயிருப்பதொரு வெள்ளியமலையை யெடுத்த பெரிய புசபலங்கொண்ட இராவணனுடைய கர்வத்தைக் கெடுத்தருளினை என்றவாறு.

புறவம்புரிந்தனை - என்றது - பிரசாபதி யென்கிற பிரமவிருஷி, கவுதமரிஷியை நோக்கி, நீ ஸ்திரீபோகத்தைக் கைவிடாமலிருக்



கின்றவனல்லோ வென்று அவமதிக்கையாலே கவுதமரிஷியும் பிரசாபதி பகவானைப் பார்த்து, நீ புறுவென்னும் ஒரு பக்ஷியாய் நரமாமிசம் புசிப்பாயாகவென்று சபிக்க, பிரசாபதியும் ஒரு புறுவாய்ப் போய்ப் பகலிடத்திலும் நரமாமிசம் புசிக்கையிலே யொருநாள், பாபிசந் சேடிச் சோழவம்சத்திலே யொரு ராசா இளைசிதனை யிருக்கிற விடத்திலே யிந்தப் புறுவாகிய ரிஷியும் போய், ராசாவைப் பார்த்து, எனக்கு அதிக தாகமா யிருக்கின்றது சற்று நரமாமிசம் இடவல்லையோவென்ன, ராசாவு முனக்கெவ்வளவு மாமிசம் வேண்டுமென்ன, புறுவு முன்சரீரத்திலே யொன்றுபாதிதரவேண்டுமென்ன, ராசாவுந் தன்சரீரத்திலே யொன்றுபாதி யரிந்திட, புறுவுக்கு நிறைபோதாமல் சர்வமாமிசத்தையு மரிந்திட்டு ராசாவுஞ் சோர்ந்துவிழ, இந்தப்புறுவாகிய பக்ஷியும் நமக்குத்தன்சரீரத்தையரிந்திட்டுப் பிழைப்பித்த ராசாசரீரம் பெறும்படி யெங்ஙனே யென்று விசாரிக்குமளவில், பரமேசுவரனொழியவேறில்லை யென்று சிரபுரத்திலே வந்து பரமேசுவரனை நோக்கி அர்ச்சிக்க, பரமேசுரனுந்திருவுளத்தடைத்தருளி, தம்பிரானே, அடியேன் ராசேந்திரத்தன் சரீரத்தை யரிந்திட்டராசாவுக்கு முன்புபோலே யுடலும் பிரசாதித்து அடியேனுக்கும் இத்ச்சாபதோஷம்நீக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, ராசாவுக்குச் சரீரமுங்கொடுத்துப் புறுவுக்குவேண்டும் வரப்பிரசாதங்களையும் பிரசாதித்துச் சாபதோஷமுமாற்றியருளிப் புறுவும் பூசிக்கையாலே புறவமென்கின்றதே திருப்பதியாக வெழுந்தருளியிருந்தனை என்றவாறு.

மூன்றாற்றுயின்றோ னான்முகனறியாப் பண்பொடு நின்றனை - என்றது. ஆற்றுநீர் - வேற்றுநீர் - ஊற்றுநீர் என்று சொல்லப்பட்ட மூன்றாகிய சமுத்திரத்திலே துயிலாநின்ற நாராயணனும் நாலுமுகத்தினையுடைய பிரமாவும் அடியுமுடியுந்தேடக்கரிதாய்நின்ற பண்பினையுடையையாய் யெழுந்தருளி யிருந்தனை என்றவாறு.

சண்பையமர்ந்தனை என்றது. துர்வாசமகாரிஷியாசிரமத்தே இருந்தவதாரத்திலுள்ள கோபாலப்பிள்ளைகளெல்லாமிந்த இருஷியை அசங்கதித்துத் தங்களிலே யொருவனைக்கெர்ப்பிணியாகப்பாவித்துச்சென்று இவள்பெறுவது ஆணோ பெண்ணோவென்று அந்த இருஷியைக் கேட்கையாலே அவர்கோபித்து இவள்பெறுவது ஆணுமல்ல பெண்ணுமல்ல உங்கள்வமிசத்தாரையெல்லாஞ்சங்கரிக்கைக்கு ஒரு இருப்புலக்கை பிறக்கக்கடவதென்று சபிக்கையாலே அவன்வயிற்றிலிருந்து ஒரு இருப்புலக்கைவிழ, அந்தச்சேதியைக் கிருஷ்ணன் கேட்டுத் துர்வாசமகாரிஷிசாபங்கேவலமல்லவென்று அந்தஇருப்புல

க்கையைப் பொடியாக அராவி அந்தப் பொடியைச் சமுத்திரத்திலே போட, அராவுதலுக்குப் பிடிபடாத ஒரு வேப்பம்விதைப் பிரமாணமுள்ள இரும்பை ஒருமீன் விழுங்கி ஒருவலைக்காரன் கையிலே அகப்பட்டது. அதின் வயிற்றிற் கிடைத்த இரும்பைத் தன்னம்பத்திலே வைத்தான், மற்றுஞ் சமுத்திரத்திற் போட்ட இரும்புப்பொடிகளெல்லாம் அலையுடனே வந்து கரைசேர்ந்து சண்பையாகமுளைத்துத் தழைத்து நின்றவிடத்திலே, கோபால குமாரர்கள் விளையாடவருவோமென்று இரண்டிரண்டாகப் பிரிந்து சென்று அந்தச் சண்பைக்கதிரைப் பிடுங்கி யெறிந்துகொண்டு, அதனாலே மடிந்திருந்தார்கள். இதைத் திருஷ்ணன் கேட்டு இந்தவுலகத்து மரணமாயிருக்குமென்று விசாரித்து, ஆலின்மேலே ஒரு நிலைவிலே யோகாசனமாக ஒரு பாதத்தை மடித்து ஒருபாதத்தைத் தொங்க விட்டிருக்கிற விடத்திலே, அந்த மீன்வேடன் பக்ஷிசாலத்தைத் தேடிவருகிறபோது அக்கியபாதத்தைத் தொரு செம்பருந்திருக்கிறதாகப் பாவித்து அந்த அம்பைத் தொடுத்துச் செய்ய, கிருஷ்ணனும் பட்டிப்பரமபதத்தை அடைந்தான். இந்தக்கொலை தோஷம் துர்வாசமகாரிஷியைச் சென்று நமஸ்கரித்து இந்தத் தோஷத்தை நீக்கப் பரமேசுரனை நோக்கி அர்ச்சிக்க, பரமேசுவரனுந் திருவுளந்தளைத்தருள, இருடியுந் தெண்டம் பண்ணி, தம்பிரானே, கூடியிருந்தவர் சாபத்தாலே கிருஷ்ணனுடைய வமிசத்திலுள்ள கோபாலரெல்லாருஞ் சண்பைக்கதிரால் சங்காரப்பட்டமையாலே அந்தத் தோஷமடியேனைவந்து கவியாதபடி திருவுளத்தடைத்தருளி ரக்ஷிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய, துர்வாசமகாரிஷிக்குச் சண்பைச்சாபத்தினுள்ள தோஷத்தை நீக்கிச் சண்பைமுனியென்கிறதே திருப்பதியாக வெழுந்தருளி இருந்தனை என்றவாறு.

ஐயுறு மமணருமறுவகைச் சேரருமொழிய முணராச்சண்பையமர்த்தனை - என்றது. வேதாகமபுராண சாஸ்திரங்களிலுள்ள பேதமை யில்லையென்று ஐயமுற்றிருக்கின்ற அமணரும் வைசே, பௌத்த, சார்ப்பு, துவர்ப்பு, கடர்ப்பு, நித்திப்பு என்கிற அறுவகைச் சமயங்களையு முச்சிக்குமுன்னே புசிக்கிறதே பொருளென்றிருக்கிற ஐந்தரு மூழிகாலத்து அறியாமல் மிகவுங் காரிருளான வெள்ளத்திலுடைய காளியென்கிற நாகம் புசிக்கையாலே சீகாழியென்கிறதே திருப்பதியாக வெழுந்தருளியிருந்தனை என்றவாறு.

எச்சவெழிசையோன் சொற்கவை வெச்சினை - என்றது குரல் - துத்தம் - கைக்கிளை - உழை - இளி - விளரி - தாரம் என்பதேழிசை.—குரலாவது - சுத்தத்தொனி, துத்தமாவது - ஆண்



மயிலினிது, கைக்கிளையாவது - குதிரையின் குரல், உழையாவது - யானையின் குரல், இளியாவது - மயிலின் குரல், விளரியாவது - கடலோசை, தாரமாவது - காடையின் குரல் என்னும் சாதங்களையு மெச்சினை; மகத்தான இருடிகள் எல்லாரினும் விருத்தராயுள்ள பராசரப் பிரமரிஷியானவர் மற்றரிஷிகளெல்லாரையும் நோக்கி, நீங்கள் சமுசாரிகளொழிய விரதத்தை யனுஷ்டிப்பாரில்லையென்று அவர்களை அவிக்க, அவர்களும் நீமச்சகந்தியைப் புணர்ந்துமச் சகந்தமுமுன்னைப்பற்றி விடாமலனுடவிப்பாயென்று சபிக்கையாலே அந்தச்சாபத்தின்படியேயாய் மச்சகந்தியைப்புணர்ந்து அந்தத்துர்க்கந்த மிவரைப் பற்றி, யொருபோசனே ராமதுர்க்கந்தத்தபடியாலே இதுபோக்க வல்லவர் பரமேசுரனை யொழிய வில்லையென்று சீகாழியிலே வந்து பரமேசுவரனை அர்ச்சிக்க, பரமேசுவரன் உனக்கு வேண்டின தென்னென்று கேட்க, தம்பிரானே அடியேனைப்பற்றின துர்க்கந்தத்தை நீக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, தம்பிரானும் பிரமசொல்லை கொச்சை முனியோமென்று திருவுளமாயிவன்மேற் பற்றின துர்க்கந்தத்தையும் போக்கிச் சுகந்தத்தையும் பிரசாதித்தருளிக் கொச்சைவயமென்கிற நாமத்தையுந் தரித்தருளிக் கொச்சைவயமென்கிறதே திருப்பதியாக வெழுந்தருளியிருந்தனை என்றவாறு.

இது மதமே, ஐந்தவர் கல்விய மறைமுதல் நான்கு மூன்று காலமுந் தோன்ற நின்றனை என்றது, பிரத்தி-பிரத்தியாகாரம், துல்லியம் - துல்லியாதீதம் - வித்தை - அவித்தையென்கின்ற அறுபசங்களும், ஆச - சதுரம் - சித்திரம் - வித்தாரம் - விசையம் என்கின்ற ஐந்து கல்வியும், இருக்கு - யசுர் - சாமம் - அதர்வணமென்கின்ற நாலுவேதங்களும், சென்றகாலம், வருகாலம், நிகழ்காலமென்கின்ற மூன்றுகாலமுந் தோன்ற நின்ற மூர்த்தியாயினை என்றவாறு.

இருமையின் ஒருமையும் - என்றது. சத்தி சிவங்களாயிருந்துள்ள இரண்டுமொன்றாய் அர்த்தநாரீசுவரமாயிருந்துள்ளதை யென்றவாறு.

ஒருமையின் பெருமையும் என்றது. தானே யொரு எல்லையில்லாதபெருமையாயிருந்துள்ளதை யென்றவாறு.

மறுவிலா மறையோர் கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை கழுமல முதுபதிக் கவுணியனறியும் என்றது. மறுவற்ற பிரமவிசத்தில் தோன்றித் தீக்ஷையாலே மலத்தைக் கழுவப்பட்ட கவுணியர் கோத்திரத்திலே வந்த சீகாழிப்பிள்ளை கட்டுரையை விரும்பக் கழுமலமென்கின்ற முதுபதியிலே யெழுந்தருளின. கம் மென்கின்ற பிரமசிரசிலே உண்கின்றவனே அறியுமென்றவாறு.

அனையதன்மையை யாதலின் என்றது, அத்தன்மையாகிய வியப்பினையுடையை யாதலின் என்றவாறு.

கின்னை கினையவல்லவரில்லை நீணிலத்தே - என்றது, கின்னை நினைக்க வல்லவர்களுக்குப் பிறப்பில்லை என்றவாறு.

திருச்சிற்றம்பலம்.

---

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

# திருக்கடவூர்மயானம்.

பண் காந்தாரம்.

---

சிவனுருவம்.

---

திருச்சிற்றம்பலம்.

வரியமறையார்பிறையார்மலையோர்சிலையாவணக்கி
எரியமதில்களெய்தாரெறியுமுசலமுடையார்
கரியமிடறுமுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
பெரியவிடைமேல்வருவாரவரெம்பெருமானடிகளே.

ப - ரை. வரிய மறையார் - மேன்மையையுடைய வேதங்களையுடையவர், பிறையார் - பிறையை யுடையவர், மலை - மலையை, ஓர் சிலையா வணக்கி - ஒரு வில்லாக வளைத்து, மதில்கள் - மும்மதில்கள், எரிய - எரிந்துபோம்படி, எய்தார் - அம்பெய்தவர், எறியும் முசலம் உடையார் - எறியப்படுகிற முசலத்தை யுடையவர், கரிய மிடறும் உடையார் - கரிய கண்டத்தையுமுடையவர், கடவூர் மயானம் அமர்ந்தார் - திருக்கடவூர் மயானத்தையும் விரும்பினவர், பெரிய விடை மேல் வருவார் - பெரிய இடபத்தின்மேல் எறிவருவார், (இத்தன்மையர் யாரோ) அவர் - அவரே, எம்பெருமான் அடிகள் - எம்பெருமானுடைய சுவாமிகளாவார், எ - று.

வி - ரை. மலையென்றது மேருமலையை. மதில்கள் என்றது முப்புரத்தை, இந்த முப்புரம் இரும்பு வெள்ளி பொன் என்பவற்றாற் செய்யப்பட்டு சஞ்சரிப்பனவாயிருப்பவை. முசலம்-ஓராயுதவிசேடம். (௧)

மங்கைமணந்தமார்பர்மழுவாளொன்றேந்திக்
கங்கைசடையிற்கரந்தார்கடவூர்மயானமமர்ந்தார்



செங்கண்வெள்ளேறேறிச்செல்வஞ்செய்யவருவார்
அங்கையேறியமறியாரவரெம்பெருமானடிகளே.

ப - ரை. மங்கை மணந்த மார்பர் - உமாதேவி கலந்த மார்பினையுடையவர், வலன் - வலப்பக்கத்தில், மழுவாள் ஒன்று ஏந்தி - மழுவாகிய வாளொன்றைத் தாங்கி, கங்கை - கங்கையை, சடையில் கரந்தார் - சடையில் மறைத்தவர், கடவூர் மயானம் அமர்ந்தார் ——, செங்கண் வெள் ஏறு ஏறி - சிவந்த கண்களையுடைய வெள்ளையிடபத்திலேறி, செல்வஞ் செய்ய வருவார் - செல்வஞ்செய்யவருவார், அங்கை ஏறிய மறியார் - அழகிய கையிலேறிய மானையுடையவர், (இத்தன்மையர் யாரோ) அவர் - அவரே, எம்பெருமான் அடிகள் - எம்பெருமானுடைய சுவாமிகள், எ - று.

வி - ரை. தம்மைத் தரிசிப்பவர்க்குச் செல்வத்தை யருள்செய்வாராதலால் 'செல்வஞ்செய்ய வருவார்' என்றார். (௨)

ஈடலிடபமிசையவேறிமழுவொன்றேந்திக்
காடதிடமாவுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
பாடலிசைகொள்கருவிபடுதம்பலவும்பயில்வார்
ஆடலரவமுடையாரவரெம்பெருமானடிகளே.

ப - ரை. ஈடல் இடபம்-பொருந்திய இடபத்தின்மேல், இசைய ஏறி - பொருந்த ஏறி, மழு ஒன்று ஏந்தி - மழுவொன்றைத் தாங்கி, காடு இடமா உடையார் - காட்டையிடமாக வுடையவர், கடவூர் மயானம் அமர்ந்தார் ——, பாடல் இசை கொள் கருவி - பாடலிசையைக் கொண்ட கருவிகளாகிய, படுதம் பலவும் பயில்வார் - வாத்திய விசேடங்களெல்லாவற்றையும் பயில்பவர், ஆடல் அரவம் உடையார் - ஆடுகின்ற பாம்பை யுடையவர், (இத்தன்மையர் யாரோ) அவர் - அவரே, எம்பெருமானடிகள் ——, எ - று.

வி - ரை. ஆடலரவம்-படமெடுத்தாடுதலையுடைய பாம்பு. காடு இடுகாடு சுடுகாடு என்னுமிரண்டனையுங் குறிக்கும், இவ்விரண்டற்கும் மயானமென்னும் பெயர் வழங்கும். காடது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. காடு அது னைப் பிரித்து காடாகிய அது என்றுரைத்தலுமாம். (௩)

இறைநின்றிலங்குவளையாளிளையாளொருபாலுடையார்
மறைநின்றிலங்குமொழியார்மலையார்மனத்தின்மிசையார்
கறைநின்றிலங்குபொழில்சூழ்கடவூர்மயானமமர்ந்தார்
பிறைநின்றிலங்குசடையாரவரெம்பெருமானடிகளே.

ப - ரை. இறைமின்று இலங்குவளையாள் - கையிறையில் நிலைபெற்று விளங்குகின்ற வளையலையுடையவள், இளையாள் - இளம்பருவமுடையவள், (அந்த உமாதேவியை) ஒருபால் உடையார் - ஒருபாகத்திலுடையவர், மறை நின்று இலங்கும் மொழியர் - வேதங்கள் நின்று விளங்குகின்ற திருவாக்கையுடையவர், மலையார் மனை [illegible] யார் - மலையாகிய வீட்டையுடையவர், கறை நின்று இலங்கு பொழில் சூழ் - கருமைநிலைபெற்று விளங்குகின்ற சோலைகள் சூழ்ந்த, கடவூர் மயானம் அமர்ந்தார் —, பிறை நின்று இலங்கு சடையார் - பிறை நின்று விளங்குகிற சடையையுடையவர், (இத்தன்மையர் யாரோ) அவர் - அவரே, எம்பெருமானடிகள் —, எ - று.

வி - ரை. ஒருபால் என்றது இடப்பாகத்தை. மலையார் - பிரமிக்காதவர், (ஞானியர்) கறை - கருப்பு. இது மரச்செறிவினாலுண்டாகிய இருள். (௬)

வெள்ளைப் பெருத்தின் மிசைகடாவிரிதோடொருகாதிலங்கத்
துள்ளுமிளமான் மறியார்சுடர்பொற்சடைகள்விலங்கக்
கள்ளக்குவெண்டலையார்கடவூர்மயானமமர்ந்தார்
பிள்ளைமதியமுடையாரவரெம்பெருமானடிகளே,

ப - ரை. வெள்ளை எருத்தின் மிசை - [illegible] மேலவர், விரிதோடு ஒருகாது இலங்க - விரிந்த குழையானது ஒருகாதில் விளங்க, துள்ளும் இளமான் மறியார் - துள்ளுகின்ற இளமான் கன்றையுடையவர், சுடர் பொன் சடைகள் துவங்க - பிரகாசிக்கிற பொன்போலுஞ் சடைகள் விளங்காநிற்க, கள்ளம் - கபடத்தையுடைய, கருவெள் தலையார் - சிரிக்கின்ற வெண்டலையையுடையவர், கடவூர் மயானம் அமர்ந்தார் —, பிள்ளை மதியம் உடையார் - இளம் பிறையையுடையவர், (இத்தன்மையர் யாரோ) அவர் - அவரே, எம்பெருமானடிகள் —, எ - று.

வி - ரை. மதியம் என்பதில் அம் சாரியை, மதி யென்பது நிலவை அமிர்தத்தையுடையது என்பது பொருள். (௭)

பொன்றாதிருமணக்கொன்புனை பூங்கொன்றைபுனைந்தார்
ஒன்றுவெள்ளேறுயர்த்ததுடையாரதுவேயூர்வார்
கன்றுவிளங்கும்புறவிற்கடவூர்மயானமமர்ந்தார்
மின்றுஞ்சடையாரொருவரவரெம்பெருமானடிகளே,

ப - ரை. பொன் தாது உதிரும் - பொன்போலும் மகரந்தம் உதிர்கின்ற, மணம் கொள் - வாசனையைக்கொண்ட, புனை - அலங்



கரிக்கப்பட்ட, பூங்கொன்றை புனைந்தார் - கொன்றை மலர்மாலையைத் தரித்தவர், உயர்த்தது - உயர்த்தினது ஆகிய, ஒன்று வெள்ளேறு உடையார் - சமானமில்லாத வெள்ளைவிடையினையுடையவர், அதுவே ஊர்வார் - அதனையே நடத்துபவர், கன்று [illegible] இனம்கும் புறவில் - கன்றுகளையுடைய பசுக்களின் இனங்கள் [illegible] புறவினுள்ள, கடவூர் மயானம் அமர்ந்தார் —, [illegible] விளங்குகிற சடையையுடையவர், ஒருவா - ஒப்பற்றவர், (இத்தன்மையர் யாரோ) அவர் - அவரே, எம்பெருமானடிகள் —, எ - று.

வி - ரை. பூங்கொன்றை யென்பதைக் கொன்றைப்பூ வென முன்பின்னாக மாற்றிப் பொருளுரைக்கப்பட்டது. உயர்த்தார் - கொடியாக வெடுத்தவர். புறவு - முல்லைநிலம். (௮)

பாசமானகளைவார்பரிவார்க்கமுதமனையா
ராசைதிரக்கொடுப்பாரலங்கல்விடைமேல்வருவார்
காசைமலர்போன்மிடற்றார்கடவூர்மயானமமர்ந்தார்
பேசவருவாரொருவரவரெம்பெருமானடிகளே,

ப - ரை. பாசமான களைவார் - பாசமானவற்றை யொழிப்பவர், பரிவார்க்கு அமுதம் அனையார் - விரும்புவோருக்கு அமிர்தத்தை நிகர்ப்பவர், ஆசை திரக் கொடுப்பார் - ஆசையடங்கக் கொடுப்பவர், அலங்கல் விடைமேல் வருவார் - அசைதலுடைய இடபத்தின்மேலேறி வருபவர், காசை மலர்போல் மிடற்றார் - காயாம்பூவை நிகர்த்த கண்டத்தையுடையவர், கடவூர் மயானம் அமர்ந்தார் —, பேசவருவார் - புகழவருவார், ஒருவர் - ஒப்பற்றவர், (இத்தன்மையர் யாரோ) அவர் - அவரே, எம்பெருமானடிகள் —, எ - று.

வி - ரை. பரிதல்-விரும்புதல். (அன்புசெய்தல்) பாசமான என்பதில் ஆன வினையாலணையும் பெயர். காசைமலர் நீலநிறமாதலால் இறைவரது நீலகண்டத்துக் குவமையாயிற்று. பேசல்-புகழ்தல். (௯)

செற்றவரக்கனலறத்திகழ்சேவடிமெல்விரலாற்
கற்குன்றடர்த்தபெருமான்கடவூர்மயானமமர்ந்தார்
மற்றொன்றிணையில்வலியமாசில்வெள்ளிமலைபோற்
பெற்றொன்றேறிவருவாரவரெம்பெருமானடிகளே.

ப - ரை. செற்றம் அரக்கன் அலற - கோபத்தையுடைய அரக்கனாகிய ராவணன் அலறும்படி, திகழ் - விளங்குகிற, சேவடி - திருவடியின், மெல் விரலால் - மெல்லிய விரலினால், கல் குன்று அடர்த்த பெருமான் - கற்களையுடைய கைலாயமலையை யழுத்தின பெருமான்,

கடவூர் மயானம் அமர்ந்தார் ——, மற்றொன்று இணை இல்-மற்றொன்று இணையில்லாத, வலிய - வலிதாகிய, மாக இல் - குற்றமற்ற, வெள்ளிமலைபோல் - வெள்ளிமலைபோன்ற, பெற்றம் ஒன்று ஏறி வருவார்-இடபமொன்றின்மேலேறி வருபவர், (இத்தன்மையர் யாரோ) அவர் - அவரே, எம்பெருமானடிகள் ——, எ - று.

வி-ரை. கயிலாயமலை வெள்ளியா லியன்றதாயினும் சாதிபற்றி அதனைக் 'கற்குன்று' என்றார். பெற்றம் - இடபம், அது ஈறுதொகுத்தலாய் பெற்று என வந்தது. (அ)

வருமாகரியினுரியார்வளர்புன்சடையார்விடையார்
கருமானுரிதோலுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
திருமாலொடுநான்முகனுந்தேர்ந்துங்காணமுன்னொண்ணாப்
பெருமானெனவும்வருவாரவரெம்பெருமானடிகளே.

ப-ரை. வரு-வந்த, மா-பெரிய, கரியின்உரியார்-யானைத்தோலை யுடையவர், வளர்புன்சடையார் - வளர்ந்தபுன்சடையை யுடையவர், விடையார்-இடபவாகனத்தையுடையவர், கருமான் உரிதோல் உடையார் - கரியமானினது உரிக்கப்பட்ட தோலையுடையவர், கடவூர் மயானம் அமர்ந்தார் ——, திருமாலொடு நான்முகனும்-திருமாலோடு பிரமனும், தேர்ந்தும் - தேடியும், முன்காணவொண்ணா - முற்காலத்திற் காணவொண்ணாத, பெருமான் எனவும் வருவார் - பெருமான் என்றுசொல்லவும் வருவார் (இத்தன்மையர் யாரோ,) அவர்-அவரே, எம்பெருமானடிகள் —, எ - று.

வி - ரை. கரி - கரத்தையுடையது (துதிக்கையையுடையது). ( )

தூயவிடைமேல்வருவார்துன்னாருடையமதில்கள்
காயவேவச்செற்றார்கடவூர்மயானமமர்ந்தார்
தீயகருமஞ்சொல்லுஞ்சிறுபுன்றேரரமணர்
பேய்பேயென்னவருவாரவரெம்பெருமானடிகளே.

ப - ரை. தூய - பரிசுத்தமாகிய, விடைமேல்வருவார் - இடபமீதேறிவருபவர், துன்னாருடைய மதில்கள் - பகைவருடைய மதில்கள், காயவேவசெற்றார் - வெந்தொழிய அழித்தவர், கடவூர்மயானம் அமர்ந்தார் ——, தீயகருமம் சொல்லும்-கெட்டகாரியங்களைச் சொல்லுகிற, சிறுபுன்தேரர் அமணர்-மிகஅற்பராகிய தேரரும் அமணரும், பேய்பேய் என்ன வருவார் - பேய்பே யென்னும்படி வருபவர், (இத்தன்மையர்யாரோ) அவர்-அவரே, எம்பெருமானடிகள் ——, எ-று.

வி - ரை. துன்னார்என்றது திரிபுரவாசிகளை. செறல் - அழித்தல். தேரர் - சாக்கியரிலொருசாரார். (க0)



மரவம்பொழில்சூழ்கடவூர்மன்னுமயானமமர்ந்த
அரவமசைத்தபெருமானகலமறியலாகப்
பரவுமுறையேபயிலும்பந்தன்செஞ்சொன்மாலை
இரவும்பகலும்பரவிநினைவார்வினைகளிலரே.

ப - ரை. மரவம்பொழில்சூழ்-மரவஞ்சோலைசூழ்ந்த, மன்னும் - நிலைபெற்ற, கடவூர்மயானம்அமர்ந்த - கடவூர்மயானத்தை விரும்பின, அரவம்அசைத்தபெருமான் - பாம்பைக் கச்சையாகக்கட்டின பெருமானது, அகலம் - பெருமையை, அறியலாக - அறியும்படி, பரவும் முறையே - வழிபடுதற்குரிய முறையாகவே, பயிலும் - பழகுகின்ற, பந்தன் - சம்பந்தனது, செஞ்சொல்மாலை - செஞ்சொல்மாலைகளை, இரவும்பகலும் - இரவினும் பகலினும், பரவி நினைவார் - துதித்துநினைப்பவர், வினைகள் இலர்-வினைகளில்லாதவராவர், எ-று.

வி - ரை. மரவம் - குங்குமமரம், அசைத்தல் - கட்டுதல், சம்பந்தன் என்பது பந்தன் எனமுதற்குறைந்து வந்தது. பயில்சம்பந்தன் என்றும் பாடம். (கக)

திருச்சிற்றம்பலம்.

---

திருநாவுக்கரசநாயனார்.

# கோயிற்றிருவிருத்தம்.

பண் கொல்லி.

---

சிவனுருவும்.

---

திருச்சிற்றம்பலம்.

பாளையுடைக்கமுகோங்கிப்பன்மாடநெருங்கியெங்கும்
வாளையுடைப்புனல்வந்தெறிவாழ்வயற்றில்லைதன்னுள்
ஆளவுடைக்கழற்சிற்றம்பலத்தரனாடல்கண்டாற் [ன்னே.
பீளையுடைக்கண்களாற்பின்னைப்பேய்த்தொண்டர்காண்பதெ

ப - ரை. பாளை உடைகமுகு-பாளைகளையுடைய கமுகமரங்கள், ஓங்கி - உயர்ந்து, எங்கும் - எவ்விடத்தும், பல்மாடம்நெருங்கி - பல மாடங்கள் அடர்ந்து, வாளை உடைபுனல் - வாளைமீன்களையுடைய நீரானது, வந்துஎறிவாழ்வயல் - வந்துஅலைவீசித்தங்கிய வயல்வள

முன்னை, தில்லைதன்னுள் - தில்லையில், ஆளை - யாவரையும் ஆளுங்கொ(ண்)டு, கழலடை - வீரக்கழலணிந்த, சிற்றம்பலத்து - சிற்சபையில், அரன் - சிவபெருமானது, ஆடல் - திருநடனத்தை, கண்டால் - சேவித்தால், பேய்த்தொண்டர் - பேயடியார், பின்னை - பிறகு, பிறிது உடைகண்களால் - பிறவற்றையுடைய கண்களைக் கொண்டு, (எ)ன்பது காண்பதற்குரியது, என் - யாது, எ - று.

வி - ரை. சிற்றம்பலம் - ஞானசபை (சிற்சபை, சிதாகாசம்) இது சிற்றம்பலம் எனமரூஉ வாயிற்று.

பொருவிடையொன் றுடைப்புண்ணியமூர்த்திபுலியதளன்
னுருவுடையம் மலைமங்கைமணாளனுலகுக்கெல்லாந்
திருவுடையந்தணர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
றிருவடியைக்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்

ப - ரை. பொருவிடை ஒன்றுடை - போர்செய்கிற இடபமொன்றையுடைய, புண்ணியமூர்த்தி - அறவடிவன், புலி அதளன் - புலித்தோலையுடையவன், உருவுடை - அழகையுடைய, அம் - அந்த, மங்கைமணாளன் - மலைமாதுக்கு நாயகன், உலகுக்கெல்லாம் - உலகமுழுமைக்கும், திருவுடை அந்தணர் - அலங்காரமாகவுள்ள அந்தணர்கள், வாழ்கின்ற - உறைகின்ற, தில்லைச்சிற்றம்பலவன் - தில்லைச் சிற்றம்பலத்தானது, திருவடியைக்கண்ட கண்கொண்டு - திருவடியைக்கண்ட கண்களால், மற்று இனிக்காண்பது - வேறு இனிக்காண்பதற்குரியது, என் - யாது, எ - று.

வி - ரை. பொருவிடை - வினைத்தொகை. (புலித்தோலுடை) மூர்த்தி - வடிவர், மூர்த்தி - வடிவத்தையுடையவன். திருவுடைத் தில்லை அந்தணர் வாழ்கின்ற தில்லை எனவியையும் அந்தணர் - தில்லைமூவாயிரவர்.

தொடுத்தமலரொடுதூபமுஞ்சாந்துங்கொண்டெப்பொ
ழுது, மடுத்துவணங்குமயனொடுமாலுக்குங்காண்பரியான்
பொடிக் கொண்டணிந்து பொன்னாகிய தில்லைச் சிற்றம்பலவ
னுடுத்ததுகில் கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்
னே.

ப - ரை. தொடுத்த மலரொடு - தொடுக்கப்பட்ட பூமாலையோடு, தூபமும் சாந்துங்கொண்டு - தூபத்தையும் சந்தனத்தையும் கொண்டு, எப்பொழுதும் - எப்போதும், அடுத்து வணங்கும் - அடுத்து வணங்குகிற, அயனொடு மாலுக்கும் காண்பு அரியான் - பிரமனோடு மாலுக்கும் காண்டல் அருமையானவன், பொடிக்கொண்டு அ



ணிந்து - பொடியைக்கொண்டு தரித்த, பொன் ஆகிய - பொன்னொளியன்ற, தில்லைச்சிற்றம்பலவன் - தில்லைச்சிற்றம்பலத்தை யுடையவன், உடுத்த - உடுத்திருக்கிற, துகில் - பரிவட்டத்தை, கண்ட - பார்த்த, கண்கொண்டு - கண்களால், மற்றினிக்காண்பது ——, என் - யாது, எ - று.

வி - ரை. காண்பு - காண்டல், பொடி - திருவெண்ணீறு. தொடுத்தல் - கட்டுதல். தொடுத்தமலர் - மலர்மாலை. அடுத்து - கிட்டி. கொண்டு - மூன்றுருபுடன் சொல்லுருபு. (௭)

வைச்சபொருணமக்காகுமென்றெண்ணிநமச்சிவாய
வச்சமொழிந்தேனணிதில்லையம்பலத்தாடுகின்ற
பிச்சன்பிறப்பிலிபேர்நந்தியுந்தியின்மேலசைத்த
கச்சினழகுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே

ப - ரை. நமச்சிவாய - ஸ்ரீபஞ்சாக்ஷரமானது, நமக்கு - எமக்கு, வைச்சபொருள் ஆகும் என்று எண்ணி - சேமநிதியாகுமென்று நினைத்து, அச்சம் ஒழிந்தேன் - பயந்தவிர்ந்தேன், அணி - அழகாகிய, தில்லையம்பலத்து ஆடுகின்ற - தில்லையம்பலத்தில் நடிக்கிற, பிச்சன் - பித்தன், பிறப்பு இலி - பிறப்பில்லாதவன், பேர்நந்தி - பெரியநந்தி, உந்தியின்மேல் அசைத்த - திருவுந்தியின்மேற் கட்டின, கச்சின் அழகு கண்டால் - கச்சின் அழகைப்பார்த்தால், பின்னை - பிறகு, கண்கொண்டு - கண்களால், காண்பதென் ——, எ - று.

வி - ரை. ஸ்ரீபஞ்சாக்ஷரம் - திருவைந்தெழுத்து, வைச்ச - புதைத்துவைத்த, பிச்சன் - பைத்தியங்கொண்டவன். (அன்பர்மீது பித்துக்கொண்டவன்) ஆப்ரிய்யா மோஹந் என்பர் வடநூலார். (௮)

செய்ஞ்ஞின்றநீலமலர்கின்றதில்லைச்சிற்றம்பலவன், மைஞ்
ஞின்றவொண்கண்மலைமகள் கண்டுமகிழ்ந்துநிற்க, நெய்ஞ்
ஞின்றெரியும்விளக்கொத்தநீலமணிமிடற்றான், கைஞ்ஞின்ற
வாடல்கண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே.

ப - ரை. செய்ஞ்ஞின்ற - வயல்களிலிருக்கிற, நீலம் - கருங்குவளைமலர்கள், மலர்கின்ற - விரிகின்ற, தில்லைச்சிற்றம்பலவன் ——, மைஞ்ஞின்ற - மையெழுதப்பெற்ற, ஒண்கண் - அழகிய கண்களையுடைய, மலைமகள் - பார்வதிதேவியானவள், கண்டு மகிழ்ந்து நிற்க - கண்டு களித்துநிற்க, நெய்ஞ்ஞின்று எரியும் விளக்கு ஒத்த - நெய்யிருந்தெரிகின்ற தீபத்தைநேர்ந்த, நீலமணிமிடற்றான் - நீலமணிபோலுங் கண்டத்தையுடையவன், கைஞ்ஞின்ற ஆடல் கண்டால் - ஒப்பனையமைந்த

திருவடகத்தைக்கண்டால், பின்னை கண்கொண்டு காண்பது என்——, எ - று.

வி - ரை. நின்ற என்பது நின்ற எனப் போலியாயிற்று. நீலம் முதலாகுபெயர். நீலமணியென்பதற்கு நீல நிறமும் அழகும் என்றுரைத்தலுமாம், அழகாவது நஞ்சுண்டு தேவர் முதலியோரைக் காத்தருளினதனாலுண்டான சோபை. (௪)

ஊனத்தைநீக்கியுலகறியவென்னையாட் கொண்டவன்
தேனொத்தெனக்கினியான் றில்லைச்சிற்றம்பலவனெங்கோன்
வானத்தவருய்யவன்னஞ்சையுண்டகண்டத்திலங்கு [மே
மேனத்தெயிறுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே.

ப - ரை. ஊனத்தைநீக்கி - குற்றத்தைநீக்கி, உலகறிய - உலகறியும்படி, என்னை ஆட்கொண்டவன் - என்னை யடிமைகொண்டவன், எனக்கு——, தேன் ஒத்து இனியான் - தேன்போன்று இனிமையைத்தருபவன், தில்லைச்சிற்றம்பலவன்——, எங்கோன் - எம்மிறைவன், வானத்தவர் - தேவர்கள், உய்ய - பிழைக்க, வல்நஞ்சை உண்ட - வலிய நஞ்சைப்பருகின, கண்டத்து - கண்டத்தில், இலங்கும் - விளங்குகிற, ஏனத்து எயிறுகண்டால் - பன்றியின் கொம்பைக்கண்டால், பின்னை கண்கொண்டு காண்பது என்——, எ - று.

வி - ரை. தேவர்கள் விண்ணுலகத் துள்ளவர்களாதலால் அவர்களை 'வானத்தவர்' என்றார். ஏனம் - பன்றி. எயிறு - பல். அது இங்குக் கொம்புக்காயிற்று. (௫)

தெரித்தகணையாற்றிரிபுரமூன்றுஞ்செந்தீயின்மூழ்க
வெரித்தவிறைவனிமையவர்கோமானிணையடிக
டரித்தமனத்தவர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
சிரித்தமுகங்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே.

ப - ரை. தெரித்தகணையால் - தெரிந்தெடுத்த அம்பினால், திரிபுரம் மூன்றும் - சஞ்சரிக்கின்ற புரங்கள் மூன்றும், செந்தீயில் மூழ்க - செந்தீயில் குளிக்கும்படி, எரித்த இறைவன் - எரித்துவிட்டதலைவன், இமையவர்கோமான் - தேவர்பெருமான், (அவனது) இணை அடிகள் - திருவடியிணையை, தரித்த - தாங்கின, மனத்தவர் - மனத்தையுடையவர், வாழ்கின்ற——, தில்லைச்சிற்றம்பலவன்——, சிரித்தமுகம் - நகைத்த முகத்தை, கண்ட - பார்த்த, கண்கொண்டு - கண்களால், மற்றினிகாண்பது என்——, எ - று.

வி - ரை. மூன்று என்மேல் வருதலால் திரிபுரம் என்பதற்குச் சஞ்சரிக்கிற புரங்கள் எனப்பொருள் கூறவாயிற்று. (௬)



சுற்றுமமரர்சுரபதிநின்றிருப்பாதமல்லாற்
பற்றொன்றிலோமென்றழைப்பப்பரவையுணஞ்சையுண்டான்
செற்றங்கநங்கனைத்தீவிழித்தான்றில்லையம்பலவ [னே.
னெற்றியிற்கண்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்

ப - ரை. சுற்றும் - சூழ்ந்த, அமரர் - அமரர்கள், சுரபதி - தேவர்பெருமான், (இவர்கள்) நின் - உனது, திருப்பாதம் அல்லால் - திருவடியன்றி, பற்று ஒன்று இலோம் என்று அழைப்ப - ஒருபற்றுமிலமென்றுகூவ, பரவையுள் - கடலிலுண்டாகிய, நஞ்சை உண்டான் - நஞ்சையுண்டவன், அங்கு - அவ்விடத்து, அநங்கனை செற்று - மன்மதனை யழிக்க, தீவிழித்தான் - நெருப்புக்கண்ணைத்திறந்தவன், தில்லையம்பலவன்——, (அவனது) நெற்றியில் கண் - நெற்றிக்கண்ணை, கண்ட கண்கொண்டு - கண்ட கண்களால், மற்றினிகாண்பது என்——, எ - று.

வி - ரை. அமரர் - கற்பகாலத்தளவும் இறவாதவர், (தேவர்கள்) கற்பத்திறப்பவரை அமரர் என்றது மங்கலவழக்கு. சுரபதி - இந்திரன். பரவை தொழிலாகுபெயர். செற்று செறவென்னும் பொருளில் வந்தது. (௭)

சித்தத்தெழுந்தசெழுங்கமலத்தன்னசேவடிகள்
வைத்தமனத்தவர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
முத்தும்வயிரமுமாணிக்கந்தன்னுள்விளங்கியதூ
மத்தமலர்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே.

ப - ரை. சித்தத்து எழுந்த - மனத்திற்பூத்த, செழுங்கமலத்து அன்ன - செழுந்தாமரைமலரையொத்த, சேவடிகள் - திருவடிகளை, வைத்த - இருத்திவைத்த, மனத்தவர் - மனத்தையுடையவர், வாழ்கின்ற - உறைகின்ற, தில்லைச்சிற்றம்பலவன் - தில்லைச்சிற்றம்பலவனது, முத்தும் வயிரமும் மாணிக்கந்தன்னுள், விளங்கியது - விளங்கியதாகிய, ஊமத்தமலர் - ஊமத்தமலரை, கண்டகண்கொண்டு - கண்ட கண்களால், மற்றினிக்காண்பது என்——, எ - று.

வி - ரை. சித்தத்து என்பது மனத்திடத்தில். வயிரம் - வச்சிரம். (௮)

தருக்குமிகுத்துத்தன்றோள்வலியுன்னித்தடவரையை
வரைக்கைகளாலெடுத்தார்ப்பமலைமகள்கோன்சிரித்து
அரக்கன்மணிமுடிபத்துமிறுத்தில்லையம்பலவ
னெருக்கிமிதித்தவிரல்கண்டகண்கொண்டுகாண்பதென்னே

ப - ரை. தருக்கு மிகுத்து - தருக்கு அதிகரித்து, தன் தோள் வலி உன்னி - தன் தோள்வலியை நினைத்து, தடவரையை - பெரிய கைலாய மலையை, வரை கைகளால் எடுத்து - வரைகள்போலுடைய கைகளால் தூக்கி, ஆர்ப்ப - ஆரவாரிக்க, மலைமகள் கோன் - பார்வதி நாதன், சிரித்து - நகைத்து, அரக்கன் மணிமுடி பத்தும் - ராவணேசுரனது மணிமுடிகள் பத்தும், அணி தில்லை யம்பலவன் - அழகிய தில்லையம்பலவன், நெருக்கி மிதித்த விரல் - நெருக்கி மிதித்த விரலை, கண்டு - கண்கொண்டு-கண்ட கண்களால், காண் மற்று அன் ——, எ - று.

வி - ரை. தருக்கு-செருக்கு. வரைக் கைகளால் - மலைபோன்ற கைகளால் எனினுமாம். (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

# திருப்பூவனம்.

[illegible]

சிவனுருவம்.

திருச்சிற்றம்பலம்.

வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமே லிளமதியந் தோன்றுந் தோன்றுங்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே.

ப - ரை. பொழில் திகழும் - சோலைகள் விளங்குகின்ற, பூவணத்து - திருப்பூவணத்தில் எழுந்தருளிய, எம் புனிதனார்க்கு-எமது பரிசுத்தராகிய சிவபெருமானுக்கு, வடிவு ஏறு - வடித்தல் மிகுந்த, திரிசூலம் தோன்றும் தோன்றும் - திரிசூலம் தோன்றுகின்றது தோன்றுகின்றது, வளர் சடைமேல் - நீண்ட சடையின்மீது, இள மதியம்



தோன்றும் தோன்றும் - இளம்பிறை தோன்றுகிற்கும் தோன்றுகிற்கும், கடி ஏறு - வாசனை மிகுந்த, கமழ் - பரிமளிக்கிற, கொன்றைக் கண்ணி தோன்றும்-கொன்றைமலர்மாலை தோன்றுகிற்கும், காதில் - செவிகளில், வெண் குழை தோடு கலந்து தோன்றும் - வெள்ளிய குழையும் தோடும் சேர்ந்து தோன்றுகிற்கும், இடி ஏறு-முழக்க மிகுந்த, களிறு உரிவை போர்வை தோன்றும்-யானைத்தோலாகிய போர்வை தோன்றுகிற்கும், எழில் திகழும் - அழகு விளங்காநின்ற, திருமுடியும் இலங்கி தோன்றும் - திருமுடியும் விளங்கித் தோன்றுகிற்கும், பொடி ஏறு திருமேனி - வெண்பொடி மிகுதியா யணியப்பெற்ற திருமேனியானது, பொலிந்து தோன்றும்-விளங்கித் தோன்றுகிற்கும், எ - று.

வி - ரை. திரிசூலம் - முத்தலைச் சூலம். கொன்றை-மூதலாரு பெயர். கண்ணி - முடிச்சக்கலையுடையது. (௧)

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்று
மடியவர்கட் காரமுத மாகித் தோன்று
மூணாகி யூர்திரிவா னாகித் தோன்று
மொற்றைவெண் பிறைதோன்றும் பற்றார் தம்மேற்
சேணாக வரைவில்லா லெரித்தல் தோன்றுஞ்
செத்தவர்த மெலும்பினாற் செறியச் செய்த
பூணாணு மரைநாணும் பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே.

ப-ரை. பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கு——, ஆணாகி - ஆணாயிருந்து, பெண் ஆயவடிவு தோன்றும் - பெண்ணுகிய உருவம் தோன்றுகிற்கும், அடியவர்கட்கு - அடியார்களுக்கு, ஆர் அமுதம் ஆகி தோன்றும் - அரிய அமிர்தமாகித் தோன்றுகிற்கும், ஊண் ஆகி - உணவின் பொருட்டாக, ஊர் திரிவானாகி தோன்றும்-ஊர்தோறும் திரிபவனாய்த் தோன்றும், ஒற்றை-ஒரு கலையாகிய, வெண்பிறை தோன்றும் - வெண்பிறை தோன்றுகிற்கும், பற்றார் தம் மேல்-பகைவர் மெய்யை, சேண் - ஆகாயத்தை யளாவிய, நாகவரை வில்லால் - மேருமலையாகிய வில்லினால், எரித்தல் தோன்றும் - எரித்தல் தோன்றுகிற்கும், செத்தவர்தம் எலும்பினால்-இறந்தவரது எலும்பினால், செறியச்செய்த - நெருக்கக்கட்டின, பூண் நாணும்-ஆபரணமாலையும், அரைநாணும்-அரைஞாணும், பொலிந்து தோன்றும்-விளங்கித் தோன்றுகிற்கும், எ - று.

வி - ரை. பற்றார்-அடைக்காதவர். (திரிபுரத்தார்) இவர் மெய்யை யெரித்தது, "செல்வரை மெய்யெரிகாய் சிலையாகண் டென்னையாண்

டுகொண்ட செவ்வரை மேனியன்" என்றும் மணிவாசகர் திருவா க்கா லினிது விளங்கும். மேல் - உடம்பு. (உ)

கல்லாலின் நீழலிற்கலந்துதோன்றுங்
கவின்மறையோர்நால்வர்க்குநெறிகளன்று
சொல்லாமற்சொல்லியவாதோன்றுந்தோன்றுஞ்
சூழரவுமான்மறியுந்தோன்றுந்தோன்று
மல்லாதகாலனைமுன்னடர்த்தறோன்று
மைவகையாலினைவார்பாலமர்ந்துதோன்றும்
பொல்லாதபுலாலெலும்புப்பூணுந்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே.

ப - ரை. கல்லாலின் நீழலிற் கலந்துதோன்றும்-கல்லாலின் நிழலிற் சேர்ந்து தோன்றாநிற்கும், கவின்-அழகிய, மறையோர் நால் வர்க்கும்-வேதியர் நால்வர்க்கும், நெறிகள்-மூத்திநெறிகளை, அன்று அந்நாளில், சொல்லாமல் சொல்லியவாறு - சொல்லாமற் சொன்ன விதம், தோன்றும் தோன்றும் - தோன்றாநிற்கும் தோன்றாநிற்கும், சூழ் அரவும் - சூழ்ந்த பாம்புகளும், மான்மறியும்-மான்கன்றும், தோ ன்றும் தோன்றும்——, அல்லாத காலனை - நல்லவனல்லாத யமனை, முன் - முற்காலத்தில், அடர்த்தல் தோன்றும்-வென்றமை தோன்றா நிற்கும், ஐவகையால் நினைவார்பால் - ஐவகையாலே நினைக்கிறவர்க ளிடத்தில், அமர்ந்து தோன்றும்-விரும்பித் தோன்றாநிற்கும், பொல் லாத புலால் எலும்பு-பொல்லாத மாமிசத்தோடுகூடிய எலும்புகளை, பூணும் தோன்றும் - ஆபரணமாகத் தோன்றாநிற்கும், பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கு——, எ - று.

வி - ரை. ஐவகையானினைத்தல்-ஐம்பொறிகளாலும் நுகர்தல் அன்றி ஐந்தொழிலையு நடத்துவோனென்று நினைத்தல் எனினுமாம்.

படைமலிக்தமழுவாளுமானுந்தோன்றும்
பன்னிரண்டுகண்ணுடையபிள்ளைதோன்று
நடைமலிர்தவிடையோடுகொடியுந்தோன்று
நான்மறையினொலிதோன்றுநயனந்தோன்று
முடைமலிந்தகோவணமுங்கீளுந்தோன்று
மூரல்வெண்சிரமாலையுலாவித்தோன்றும்
புடைமலிந்தபூதத்தின்பொலிவுதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே.



ப - ரை. படைமலிந்த-ஆயுதரூபமாக விளங்குகிற, மழுவாளும்-மழுவாளும், மானும் தோன்றும் - மானும் தோன்றாநிற்கும், பன்னி ரண்டு கண் உடைய பிள்ளை தோன்றும் - பன்னிரண்டு கண்களையு டைய பிள்ளை தோன்றாநிற்கும், நடைமலிந்த விடையோடு கொடி யும் தோன்றும் - நடைமிகுந்த இடபத்துடனே கொடியுந் தோன்றா நிற்கும், நான்மறையின் ஒலி தோன்றும்-நான்கு வேதங்களின் ஓசை தோன்றாநிற்கும், நயனம் தோன்றும் - கண்கள் தோன்றாநிற்கும், உடைமலிந்த - உடுத்தல் மிகுந்த, கோவணமும் கீளும் தோன்றும் - கோவணமுங் கீளுந் தோன்றாநிற்கும், ஊரல் - பரவிய, வெண் சிர மாலை - வெள்ளிய தலைமாலைகள், உலாவி தோன்றும் - உலாவித் தோன்றாநிற்கும், புடைமலிந்த - பக்கத்தில் மிகுந்திருக்கிற, பூதத் தின் பொலிவு தோன்றும் - பூதகணங்களின் பொலிவு தோன்றாநிற் கும், பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கு——, எ - று.

வி - ரை. பன்னிரண்டு கண்ணுடையபிள்ளை-சுப்பிரமணியன். ஊரல்வெண் சிரமாலை யெனக்கொண்டு ஊருவெண்டலைமாலை யென் றுரைத்தலுமாம். (௩)

மயலாகுந்தன்னடியார்க்கருளுந்தோன்று
மாசிலாப்புன்சடைமேன்மதியந்தோன்று
மியல்பாகவிடுபிச்சையேற்றறோன்று
மிருங்கடனஞ்சுண்டிருண்டகண்டந்தோன்றுங்
கயல்பாயக்கடுங்கலுழிக்கங்கைநங்கை
யாயிரமாமுகத்தினொடுவானிற்றோன்றும்
புயல்பாயச்சடைவிரித்தபொற்புந்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே.

ப - ரை. மயலாகும் தன் அடியார்க்கு-விரும்புகிற தன்னடியார் மேல், அருளும் தோன்றும்-அருளும் தோன்றாநிற்கும், மாசு இல்லா-குற்றமில்லாத, புன் சடைமேல் - புல்லிய சடையின்மீது, மதியம் தோன்றும் - சந்திரகண்டம் தோன்றாநிற்கும், இயல்பாக - இயற்கை யாக, இடு பிச்சை - இடப்படுகிற பிக்ஷையை, ஏற்றல் தோன்றும்-ஏற் பது தோன்றாநிற்கும், இரு கடல் - பெரிய கடலிலுண்டாகிய, நஞ்சு உண்டு இருண்ட - விடமுண்டு கறுத்த, கண்டம் தோன்றும் - கண் டம் தோன்றாநிற்கும், கயல் பாய - கயல்கள் பாய்ந்திருக்க, கடுங்கலுழி - வேகமாகிய நீர்ப்பெருக்கையுடைய, கங்கை நங்கை - கங்கையாகிய பெண், ஆயிரம் மாமுகத்தினொடு - ஆயிரம் பெரிய முகங்களுடனே, வானில் தோன்றும்-ஆகாயத்தில் தோன்றாநிற்கும், புயல் பாய சடை

விரித்த - நீர்பாயச் சடையை விரித்த, பொற்பு தோன்றும் - அழகு தோன்றுகிற்கும், பொழிலிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கு——, எ - று.

வி - ரை. புயல் - மேகம், அது இடவாகுபெயராய் அதிலுள்ள நீருக்காயிற்று. கடல் என்றது பாற்கடலை. (௫)

பாராழிவட்டத்தார்பரவியிட்ட
பன்மலருநறும்புகையும்பரந்துதோன்றுஞ்
சீராழித்தாமரையின்மலர்களன்ன
திருந்தியமாநிறத்தசேவடிகடோன்று
மோராழித்தேருடையவிலங்கைவேந்த
னுடறுணித்தவிடர்பாவங்கெடுப்பித்தன்று
போராழிமுன்னீந்தபொற்புத்தோன்றும்
பொழிலிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே.

ப - ரை. பார் ஆழி வட்டத்தார் - பெரிய கடல்சூழ்ந்த மண்ணுலகத்தார், பரவியிட்ட - துதித்திட்டு அர்ச்சனைசெய்த, பன்மலரும் நறும் புகையும் - பல மலர்களும் வாசனைப்புகையும், பரந்து தோன்றும் - விரிந்து தோன்றுகிற்கும், சீர் ஆழி தாமரையின் மலர்கள் அன்ன - சிறந்த வட்டமாகிய தாமரை மலர்கள் போன்ற, திருந்திய மா நிறத்த - திருந்தமாகிய அழகிய நிறத்தையுடைய, சேவடிகள் தோன்றும் - திருவடிகள் தோன்றுகிற்கும், ஓர் - ஒப்பற்ற, ஆழி - உருளைகோர்த்த, தேர் உடைய - தேரையுடைய, இலங்கை வேந்தன் - ராவணனது, உடல் துணித்த - உடம்பைச் சேதித்த, இடர் பாவம் - துன்பத்தைத் தருகிற பாவத்தை, கெடுப்பித்து - கெடச்செய்து, அன்று - அக்காளில், போர் ஆழி - போர்ச்சக்கரத்தை, முன் ஈந்த - முன்னே கொடுத்த, பொற்பு தோன்றும் - அழகு தோன்றுகிற்கும், பொழிலிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கு——, எ - று.

வி - ரை. ஆழி - ஆழமுடையது. பார் - பருமையடியாகப் பிறந்த பெயரெச்சம். போராழி முன்னீந்தது திருமாலுக்கு. (௬)

தன்னடியார்க்கருள்புரிந்ததகவுதோன்றுஞ்
சதுர்முகனைத்தலையரிந்ததன்மைதோன்று
மின்னனையநுண்ணிடையாள்பாகந்தோன்றும்
வேழத்தினுரிவிரும்பிப்போர்த்ததோன்றுந்
துன்னியசெஞ்சடைமேலோர்புனலும்பாம்புந்
தூயமாமதியுடனேவைத்ததோன்றும்



பொன்னனையதிருமேனிபொலிந்துதோன்றும்
பொழிலிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே.

ப - ரை. தன் அடியார்க்கு - தன் அடியவர்க்கு, அருள்புரிந்த - அருள்செய்த, தகவு தோன்றும் - தகுதி தோன்றுகிற்கும், சதுர்முகனை தலை அரிந்த - பிரமனைச் சிரங்கொய்த, தன்மை தோன்றும் - தன்மை தோன்றுகிற்கும், மின் அனைய - மின்கொடிபோன்ற, நுண் இடையாள் - நுண்ணிடையாளாகிய உமாதேவியின், பாகம் தோன்றும் - பாகம் தோன்றுகிற்கும், வேழத்தின் உரி - யானைத்தோலை, விரும்பி போர்த்தல் தோன்றும் - விரும்பிப் போர்த்துக்கொள்ளுதல் தோன்றுகிற்கும், துன்னிய - நெருங்கிய, செஞ்சடைமேல் - செஞ்சடையின்மீது, ஓர் - ஒப்பற்ற, புனலும் பாம்பும் - கங்கையையும் பாம்பையும், தூய - பரிசுத்தமாகிய, மாமதியுடனே - அழகிய பிறையோடு, வைத்தல் தோன்றும் - வைத்திருப்பது தோன்றுகிற்கும், பொன் அனைய திருமேனி - பொன்போன்ற திருமேனியானது, பொலிந்து தோன்றும் - பொலிந்து தோன்றுகிற்கும், பொழிலிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கு——, எ - று.

வி - ரை. தகவு பெருமையுமாம். (௭)

செறிகழலுந்திருவடியுந்தோன்றுந்தோன்றுந்
திரிபுரத்தையெரிசெய்தசிலையுந்தோன்று
நெறியதனைவிரித்துரைத்தநேர்மைதோன்று
நெற்றிமேற்கண்டோன்றும்பெற்றந்தோன்று
மறுபிறவியறுத்தருளும்வகையுந்தோன்று
மலைமகளுஞ்சலமகளும்மலிந்துதோன்றும்
பொறியரவுமிளமதியும்பொலிந்துதோன்றும்
பொழிலிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே.

ப - ரை. செறிகழலும் - நெருங்கிய வீரக்கழலும், திருவடியும் - (அவனை யணிந்த) திருவடியும், தோன்றும் தோன்றும் - தோன்றுகிற்கும் தோன்றுகிற்கும், திரிபுரத்தை எரிசெய்த - முப்புரத்தையெரித்த, சிலையும் தோன்றும் - வில்லும் தோன்றுகிற்கும், நெறியதனை விரித்து உரைத்த - மெய்ந்நெறியை விரித்துச்சொன்ன, நேர்மை தோன்றும் - செம்மைக்குணம் தோன்றுகிற்கும், நெற்றிமேல் கண் தோன்றும் - நெற்றியின்மீது ஒருகண் தோன்றுகிற்கும், பெற்றம் தோன்றும் - இடபம்தோன்றுகிற்கும், மறுபிறவி அறுத்து அருளும் வகையும் தோன்றும் - மறுஜனனத்தை யறுத்தருள் செய்கிறவித

மும் தோன்றுகிற்கும், மலைமகளும்-பார்வதியும், சலமகளும் - கங்கையும், மலிந்துதோன்றும் - மிகவும் தோன்றுகிற்கும், பொறியரவும் - புள்ளிகளையுடையபாம்பும், இளமதியும் - இளம்பிறையும், பொலிந்துதோன்றும் - விளங்கித்தோன்றுகிற்கும், பொழிலிகழும் பூவணத்தெம்புனிதனார்க்கு, எ - று.

வி - ரை. செறியதனை விரித்துரைத்தது சாகாதியர்க்கு. (அ)

அருப்பொட்டுமுலைமடவாள்பாகந்தோன்றும்
அணிகிளருமுருமென்னவடர்க்குங்கேழன்
மருப்பொட்டுமணிவயிரக்கோவைதோன்றும்
மணமலிந்தநடந்தோன்றுமணியார்வைகைத்
திருக்கோட்டினின்றதோர்திறமுந்தோன்றுஞ்
செக்கர்வானொளிமிக்குத்திகழ்ந்தசோதிப்
பொருப்பொட்டிநின்றதிண்புயமுந்தோன்றும்
பொழிலிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே.

ப - ரை. அரும்பு ஒட்டும் முலை - தாமரையரும்பைத் தோற்கின்ற தனங்களையுடைய, மடவாள் - உமாதேவியின், பாகம் - இடப்பாகம், தோன்றும் - தோன்றுகிற்கும், அணிகிளரும் - அழகுவிளங்குகின்ற, உருமென்ன - இடிபோல, அடர்க்கும் - ஆரவாரிக்கின்ற, கேழல் - பன்றியினது, மருப்பு - கொம்புகளால், ஒட்டும் - செய்யப்பட்ட, மணி - அழகிய, வயிரக்கோவை - வச்சிரகண்டிகை, தோன்றும் - தோன்றுகிற்கும், மணம் மலிந்த - மணமிகுந்த, நடம் - நடனமானது, தோன்றும் - தோன்றுகிற்கும், மணிஆர் - இரத்தினங்கள் நிறைந்த, வைகை - வைகைநதியின், திருக்கோட்டில் நின்றது - அழகிய கரையின்மீது நின்றதாகிய, ஓர்திறமும் - ஒப்பற்றவிதமும், தோன்றும் - தோன்றுகிற்கும், செக்கர்வான் - செவ்வானத்தின், ஒளிமிக்கு - ஒளிமிகுந்து, திகழ்ந்த - விளங்குகின்ற, சோதி - பிரகாசத்தையுடைய, பொருப்பு - மேருமலையை, ஒட்டிநின்ற - தோற்பித்துநின்ற, திண்புயமும் - வலியதோள்களும், தோன்றும் - தோன்றுகிற்கும், பொழிலிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கு, எ - று.

வி - ரை. அரும்பொட்டுமுலை என்பதில் ஒட்டும் உவமவுருபெனக் கொண்டு அரும்புபோலும் முலையெனினுமாம். அரும்பு அருப்பு எனவலித்தல்பெற்றது. கோவை - மாலையுமாம், கோடு - கரை. (கூ)

ஆங்கணைந்தசண்டிக்குமருளியன்று
தன்முடிமேலலர்மாலையளித்தறோன்றும்
பாங்கணைந்துபணிசெய்வார்க்கருளியன்று
பலபிறவியறுத்தருளும்பரிசுந்தோன்றுங்



கோங்கணைந்தகூவிளமுமதமத்தமுங்
குழற்கணிந்தகொள்கையொடுகோலந்தோன்றும்
பூங்கணைவேளுருவழித்தபொற்புந்தோன்றும்
பொழிலிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே.

ப - ரை. ஆங்கு அணைந்த - அவ்விடத்துவந்த, சண்டிக்கும் - சண்டேசுரனுக்கும், அருள் இயன்று - அருள்செய்து, தன் முடிமேல் - தன் சிரசில் அணிந்திருக்கின்ற, அலர்மாலை - பூமாலையை, அளித்தல்தோன்றும் - கொடுத்தலும் தோன்றுகிற்கும், பாங்கு அணைந்து - பக்கத்திலிருந்துகொண்டு, பணி செய்வார்க்கு - தொண்டு செய்பவர்க்கு, அருள் இயன்று - அருள்செய்து, பலபிறவி - பலபிறவிகளை, அறுத்தருளும் - சேதித்தருளுகின்ற, பரிசும் - விதமும், தோன்றும் - தோன்றுகிற்கும், கோங்கு அணைந்த - வாசனைபொருந்திய, கூவிளமும் - வில்வமும், மதமத்தமும் - செழித்த ஊமத்தமலரும், குழற்கு அணிந்த - சடையில்தரித்த, கோலமொடு கொள்கை - அழகோடு கூடின கொள்கையும், தோன்றும் - தோன்றுகிற்கும், பூங்கணை - புஷ்பபாணத்தையுடைய, வேள் - மன்மதனது, உருவழித்த - உருவை அழித்த, பொற்பு - அழகானது, தோன்றும்-தோன்றுகிற்கும், பொழிலிகழும் பூவணத்தெம்புனிதனார்க்கு, எ - று.

வி - ரை. குழற்கு என்னும் நான்கனுருபு ஏழாவதனிடப்பொருளில் வந்தது. (க0)

ஆருருவவுள்குவாருள்ளத்துள்ளே
யவ்வுருவாய்நிற்கின்றவருளுந்தோன்றும்
வாருருவப்பூண்முலைநன்மங்கைதன்னை
மகிழ்ந்தொருபால்வைத்துகந்தவடிவுந்தோன்றும்
நீருருவக்கடலிலங்கையரக்கர்கோனை
நெறுநெறெனவடர்த்திட்டநிலையுந்தோன்றும்
போருருவக்கூற்றுதைத்தபொற்புந்தோன்றும்
பொழிலிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே.

ப - ரை. ஆர் உருவம் - அருமையாகிய தன் உருவத்தை, உள்குவார் - நினைப்பவரது, உள்ளத்துள்ளே - மனத்தினுள்ளே, அவ்வுருவாய் நிற்கின்ற - அவ்வுருவமாய்நிற்கிற, அருளும்தோன்றும் - அருளும் தோன்றுகிற்கும், வார்-கச்சணிந்த, உருவம் - அழகோடுகூடிய, பூண் - ஆபரணமணிந்த, முலை - தனங்களையுடைய, நல்மங்கைதன்னை - சிறந்த உமாதேவியை, மகிழ்ந்து - மனமகிழ்ந்து, ஒருபால்வைத்து - ஒருபாகத்தில்வைத்து, உகந்தவடிவு - ஏற்றுக்கொண்ட வடி-

வம், தோன்றும் - தோன்றாநிற்கும், நீர்உருவம் - நீர்உருவமாகிய, கடல் - கடல்சூழ்ந்த, இலங்கை - இலங்கைப்பட்டணத்தையுடைய, அரக்கர்கோனை - இராக்கதர்க்கு அரசனான இராவணனை, நெறுநெறென - நெறுநெறென்று நெரியும்படி, அடர்த்திட்ட - (அவன்தோள்களை) அமுத்தின, நிலையும் - நிலைமையும், தோன்றும் - தோன்றாநிற்கும், போர்உருவம் - போர்த்தொழிலே வடிவாகக்கொண்ட கூற்றுவனை, உதைத்த பொற்பு - உதைத்த அழகானது, தோன்றும் - தோன்றாநிற்கும், பொழில்திகழும் பூவணத்தெம்புனிதனார்க்கு, எ - று.

வி - ரை. ஒருபால் என்றது இடப்பாகத்தை, அடர்த்தல் - நெரித்தல் எனினுமாம். (கக)

திருச்சிற்றம்பலம்.

---

சுந்தரமூர்த்திநாயனார்

## திருக்கடவூர்மயானம்.

பண் பழம்பஞ்சரம்.

---

சிவனுருவம்.

---

திருச்சிற்றம்பலம்.

மருவார்கொன்றைமதிசூடிமாணிக்கத்தின்மலைபோல
வருவார்விடைமேன்மாதோடுமகிழ்ந்துபூதப்படைசூழத்
திருமால்பிரமனிந்திரற்குந்தேவர்நாகர்தானவர்க்கும்
பெருமான்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே.

ப - ரை. மரு ஆர் கொன்றை - மணம்பொருந்திய கொன்றைமலர்மாலையையும், மதி - இளம்பிறையையும், சூடி - தரித்து, மாணிக்கத்தின்மலைபோல - மாணிக்கமலைபோல், பூதப்படைசூழ - பூதப்படைகள் சூழ்ந்துவர, மகிழ்ந்து - மகிழ்வடைந்து, மாதோடு - உமாதேவியாரோடு, விடைமேல் வருவார் - இடபத்தின்மேலேறிவருபவர், (யாரெனின்), திருமால் பிரமன் இந்திரற்கும் - திருமாலுக்கும் பிரமனுக்கும் இந்திரனுக்கும், தேவர் நாகர் தானவர்க்கும் - தேவர்க்கும் நாகர்க்கும் தானவர்க்கும், பெருமான் - இறைவனாய், கடவூர் மயானத்து - திருக்கடவூர் மயானத்திலெழுந்தருளியிருக்கிற, பெரிய பெருமான் அடிகளே - பெரிய பெருமானாகிய சுவாமிகளே யாவர், எ - று.



வி - ரை. மரு ஆர் - வாசனைமிகுந்த எனினுமாம். இந்திரற்கும் என்னும் உம்மையை திருமால்என்பதனோடும் பிரமன்என்பதனோடும், தானவர்க்கும் என்னும் உம்மையை தேவர் என்பதனோடும்நாகர் என்பதனோடும் கூட்டுக. (க)

விண்ணோர்தலைவர்வெண்புரிநூன்மார்பர்வேதகீதத்தர்
கண்ணார்நுதலர்நகுதலையர்காலகாலர்கடவூரர்
எண்ணார்புரமூன்றெரிசெய்தவிறைவரிமையோரொருபாகம்
பெண்ணாணாவார்மயானத்துப்பெரியபெருமானடிகளே.

ப - ரை. விண்ணோர்தலைவர் - தேவர்களுக்குத்தலைவரும், வெண்புரிநூல்மார்பர் - வெண்புரிநூலைத்தரித்த மார்பினையுடையவரும், வேதகீதத்தர் - வேதகீதத்தையுடையவரும், கண் ஆர் நுதலர் - கண்ணோடுகூடிய நெற்றியையுடையவரும், நகுதலையர் - சிரிக்கின்றதலையையுடையவரும், காலகாலர் - காலகாலரும், கடவூரர் - கடவூரரும், எண்ணார் - பகைவருடைய, புரம்மூன்று - முப்புரங்களை, எரிசெய்த இறைவர் - எரித்த இறைவரும், இமையோர் - தேவரும், ஒருபாகம் - ஒருபாகத்தில், பெண் - பெண்ணையுடைய, ஆண் ஆவார் - ஆணுருவாவாரும், (யாரெனின்) மயானத்து - திருக்கடவூர் மயானத்திலெழுந்தருளியிருக்கிற, பெரியபெருமானடிகளே, எ - று.

வி - ரை. இமையோரொருபாகம் பெண்ணாணாவர் எனப்பாடபேதமுண்டு, இதற்கு உமாதேவியாரை யொருபாகத்திலுடைமையால் பெண்டன்மையும் ஒருபாகத்தில் தமதுருவாயிருத்தலால் ஆண்டன்மையும் உடையரென்பது தோன்ற, உமையோரொருபாகம் பெண்ணாணாவர், என்றார். (உ)

காயும்புலியின தளுடையர்கண்டரெண்டோட்கடவூரர்
தாயுந்தந்தைபல்லுயிர்க்குந்தாமேயாயதலைவனார் [மேட்டி
பாயும்விடையொன்றதுவேறிப்பலிதேர்ந்துண்ணும்பர
பேய்கள்வாழுமயானத்துப்பெரியபெருமானடிகளே.

ப - ரை. காயும்புலியின் அதள் உடையர் - கோபிக்கிறபுலியின் தோலையுடையவரும், கண்டர் - கண்டரும், எண்தோள் கடவூரர் - எட்டுத்தோள்களையுடைய கடவூரரும், பல்உயிர்க்கும் - எல்லாவுயிர்களுக்கும், தாயுந்தந்தை - தாயும் தந்தையும், தாமே ஆய தலைவனார் - தாமேயாகிய தலைவரும், பாயும் - பாய்ந்து செல்லுகிற, ஒன்றுவிடை ஏறி - ஒரு இடபத்தின்மீதேறி, பலிதேர்ந்து உண்ணும் பரமேட்டி - பிச்சைபெற்றுண்ணுகிற பரமேட்டியும், (யாரெனின்) பேய்கள்வாழும்மயானத்து - பேய்கள்வாழ்கின்ற திருக்கடவூர்மயானத்திலெழுந்தருளியிருக்கிற, பெரியபெருமானடிகளே, எ - று.

வி - ரை. காய்தல் - உறுமுதலுமாம், கண்டர் - நீலகண்டர், தாயும் என்னும் உம்மை தந்தையெனபதனோடும் கூட்டப்பட்டது. பரமேட்டி மேன்மையாகிய யாகங்களுக்கு முதல்வன். (௬)

நறைசேர்மலரைங்கணையானையனத்தியாற்பொடிசெய்த
விறையாராவரெல்லார்க்குமில்லையென்னதருள்செய்வார் [ரிப்
பறையார்முழவம்பாட்டோடுபயிலுந்தொண்டர்பயில்கடவூ
பிறையார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே.

ப - ரை. நறைசேர் - மணம்பொருந்திய, மலர்ஐங்கணையானை - ஐந்து பூவம்புகளையுடையவனாகிய மன்மதனை, நயனத்தியால் - கண்ணெருப்பால், பொடிசெய்த - பொடித்த, இறையார் ஆவர் - இறைவராவாரும், எல்லார்க்கும் - யாவருக்கும், இல்லை யென்னாது - இல்லையென்னாமல், அருள் செய்வார் - அருள்செய்வாரும், பறை ஆர் முழவம் - பறையும்பொருந்திய முழவமும், பாட்டோடெபயிலும் - பாட்டொலி பயில்கின்ற, தொண்டர்பயில் - அடியார்கள் வாழ்கிற, கடவூர் பிறை ஆர் சடையார் - கடவூரிலுள்ள பிறையணிந்த சடையையுடையவரும், (யாரெனின்) மயானத்து - திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளியிருக்கிற, பெரியபெருமானடிகளே, எ - று.

வி - ரை. நறை - தேன் எனினுமாம், பறைமுழவம் என்பன வாத்தியவிசேடங்கள். (௭)

கொத்தார்கொன்றைமதிசூடிக்கோணாகங்கள்பூணாக
மத்தயானையுரிபோர்த்துமருப்புமாமைத்தாலியார்
பத்திசெய்துபாரிடங்கள்பாடியாடப்பலிகொள்ளும்
பித்தர்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே.

ப - ரை. கொத்து ஆர் - கொத்துகளாயிருக்கிற, கொன்றை - கொன்றைமலர் மாலையையும், மதி - பிறையையும், சூடி - தரித்து, கோள் நாகங்கள் - துன்பத்தைச்செய்கிற பாம்புகள், பணி ஆக - ஆபரணமாகக்கொண்டு, மத்த யானை உரி போர்த்து - மதயானையின் தோலைப் போர்த்து, மருப்பும் ஆமைத்தாலியார் - (அதன்) கொம்பையும் ஆமையோட்டையும் தாலியாகவுடையவரும், பாரிடங்கள் - பேய்கள், பத்திசெய்து - பத்திபண்ணி, பாடி ஆட - பாடி யாடாநிற்க, பலிகொள்ளும் - பிச்சை யேற்கிற, பித்தர் - பித்தரும், (யாரெனின்) கடவூர் மயானத்து - திருக்கடவூர்மயானத்தி லெழுந்தருளியிருக்கிற, பெரிய பெருமானடிகளே —, எ - று.

வி - ரை. கொன்றை தான் மலருக்கும் மலர் அதனைத் தொடுக்கப்பட்ட மாலைக்கும் ஆயினமையால் இருமடியாகுபெயர், பின்னையது கருவியாகுபெயர். (௮)



துணிவார்கீளுங்கோவணமுந்துதைந்துசுடலைப்பொடியணி
பணிமேலிட்டபாசுபதர்பஞ்சவடிமார்பினர்கடவூர்த் [ந்து
திணிவார்குழையார்புரமூன்றுந்தீவாய்ப்படுத்தசேவகனார்
பிணிவார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே.

ப - ரை. துணி - துணித்த, வார்கீளும் கோவணமும் துதைந்து - நீண்ட கீளும் கோவணமும் தரித்து, சுடலைப்பொடி அணிந்து - சுடலைப்பொடியைப் பூசி, பணிமேல் இட்ட - பாம்புகளை மேலேபூண்ட, பாசுபதர் - பாசுபதரும், பஞ்சவடி மார்பினர் - பஞ்சவடியைத் தரித்த மார்பினையுடையவரும், கடவூர் - கடவூரையுடைய, திணிவார் குழையார் - வலிமையும் நீட்சியுமுள்ள குழையை யணிந்தவரும், புரம் மூன்றும் - மூப்புரங்களையும், தீவாய் படுத்த - நெருப்புக் கிரையாக்கின, சேவகனார் - வீரரும், பிணி வார் சடையார் - கட்டி நீண்ட சடையை யுடையவரும், (யாரெனின்) மயானத்து - திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளிய, பெரிய பெருமானடிகளே —, எ - று.

வி - ரை. துணித்தல் - துண்டித்தல், பாசுபதர் - பாசுபதான் திரத்தை யுண்டவர், பஞ்சவடி - பூணூல். (௯)

காரார்கடலினஞ்சுண்டகண்டர்கடவூருறைவாணர்
தேரார்அரக்கன்போய்வீழ்ந்துசிதையவிரலாலூன்றினா
ரூர்தானாவதுலகேழுமுடையார்க்கொற்றியூராரூர்
பேராயிரவர்மயானத்துப்பெரியபெருமானடிகளே.

(ப - ரை.) கார் ஆர் - கருமைபொருந்திய, கடலில் - பாற்கடலிற்பிறந்த, நஞ்சு - விஷத்தை, உண்ட - உண்டருளின, கண்டர் - கண்டத்தையுடையவரும், கடவூர் உறைவாணர் - கடவூரில்வாழ்கிறவாணரும், தேர் ஆர் அரக்கன் - தேரையுடைய அரக்கன் - போய்வீழ்ந்து சிதைய - போய்விழுந்துசிதையும்படி, விரலால் ஊன்றினார் - விரலால் அழுத்தினவரும், ஊர் தான் ஆவது - ஊராவதோவென்றால், உலகு ஏழும் உடையார்க்கு - ஏழுலகங்களையும் உடையவருக்கு, ஒற்றியூர் ஆரூர் - ஒற்றியூரும் ஆரூருமாம், பேர் ஆயிரவர் - ஆயிரம் பேர்களையுடையவரும், (யாரெனின்) மயானத்து - திருக்கடவூர்மயானத்திலெழுந்தருளியிருக்கிற, பெரிய பெருமானடிகளே, எ - று.

வி-ரை. கார் ஆர் என்னும் விசேடணம் நஞ்சக்காதல் கண்டத்துக்காதல் இயைத்துக்கொள்க. (௰)

வாடாமுலையாட்டன்னோடுமகிழ்ந்துகானில்வேடுவனாய்க்
கோடார்கேழற்பின்சென்றுகுறுகிவிசயன்றவமழித்து

நாடாவண்ணஞ்செருச்செய்தாவநாழிகையருள்செய்
பீடார்ச்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே.

ப - ரை. வாடாமுலையாள்தன்னோடு மகிழ்ந்து - சாயாததனங்களையுடையவளாகிய உமாதேவியோடு கூடிமகிழ்ந்து, கானில் - காட்டில், வேடுவனாய் - வேடனாகி, கோடு ஆர் - கொம்பையுடைய, கேழல்பின் சென்று குறுகி - பன்றியின்பின்னே போய்க்கிட்டி, விசயன் தவம் அழித்து - அருச்சுனனது தவத்தை யழித்து, நாடாவண்ணம் செருசெய்து - பார்க்கவொண்ணாதபடி யுத்தம்பண்ணி, ஆவநாழிகையருள்செய் - ஆவமாகியநாழியை கொடுக்க அருள்செய்த, பீடார் சடையார் - பெருமைபொருந்திய சடையையுடையவர் (யாரெனின்) மயானத்து - திருக்கடவூர்மயானத்தி லெழுந்தருளியிருக்கிற, பெரிய பெருமானடிகளே, எ - று.

வி - ரை. வாடாமை இவ்விடத்துச் சாயாமைப் பொருளது. ஆவம் - அம்பறாத்தூணி. (௭)

வேழமுரிப்பர்மழுவாளர்வேள்வியழிப்பர்சிரமறுப்ப
ராழியளிப்பரரிதனக்குவானஞ்சுகப்பரறமுரைப்ப
ரேழைதலைவர்கடவூரிலிறைவர்சிறுமான்மறிக்கையர்
பேழைச்சடையர்மயானத்துப்பெரியபெருமானடிகளே.

ப - ரை. வேழம் உரிப்பர்-யானையை யுரிப்பவரும், மழுவாளர் - மழுவாளரும், வேள்வி அழிப்பர் - யாகத்தைக் கெடுப்பவரும், சிரம் அறுப்பர் - தலையறுப்பவரும், அரிதனக்கு ஆழி அளிப்பார் - விஷ்ணுவுக்குச் சக்கரம் கொடுப்பவரும், வான் நஞ்சு உகப்பர் - பெரிய விஷத்தை விரும்புவோரும், அறம் உரைப்பர் - தருமத்தைச் சொல்லுவாரும், ஏழை தலைவர்-உமாதேவிக்கு நாயகரும், கடவூரில் இறைவர் - கடவூரிறைவரும், சிறுமான் மறிக்கையர் - சிறுமான் கன்றை யேந்திய கையினை யுடையவரும், பேழைச்சடையர் - பெரிய சடையையுடையவரும் (யாரெனின்) மயானத்து-திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளியிருக்கிற, பெரிய பெருமானடிகளே, எ-று.

வி - ரை. வேள்வி - தக்கன் யாகம், சிரமறுத்தது அயனையே, வானஞ்சுகப்பர் என்பதை ஆன் அஞ்சு உகப்பர் எனப்பிரித்து, பசுவினது ஐந்து பொருள்களையும் விரும்புவோர் எனினுமாம். ஆனஞ்சு - பஞ்சகவ்வியம், அவை பால் தயிர் நெய் கோமயம் கோசலம் என்பன.

மாடமல்குகடவூரின்மறையோரேத்துமயானத்துப்
பீடைதீரவடியாருக்கருளும்பெருமானடிகள்சீர்



நாடிநாவலாரூரன்நம்பிசொன்னநற்றமிழ்கள்
பாடுமடியார்கேட்பார்மேற்பாவமானபறையுமே.

ப - ரை. மாடம்மல்கு கடவூரில் - மாடங்கள் நிறைந்த கடவூரிலுள்ள, மறையோர் ஏத்தும் - வேதியர் துதிக்கின்ற, மயானத்து - திருக்கடவூர் மயானத்தி லெழுந்தருளி, பீடைதீர - துன்பம் நீங்கும்படி, அடியாருக்கு அருளும் - அடியவர்க் கருள்செய்கிற, பெருமானடிகள் சீர் - பெருமானடிகளின் சிறப்பை, நாடி - ஆராய்ந்தறிந்து, நாவலாரூரன் நம்பி-சுந்தரர், சொன்ன - சொல்லிய, நல் தமிழ்கள் - நல்ல தமிழ்மாலைகளை, பாடும் - பாடுகிற, அடியார் கேட்பார்மேல் - அடியார்மேலும் கேட்போர்மேலும், பாவமான பறையும் - பாவமாயினவெல்லாம் விட்டு நீங்கும், எ-று.

வி - ரை. மல்கல் - நிறைதல், நம்பி - குணம் பூர்த்தியுள்ளவன், பறைதல் - நீங்குதல். (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

## திருவாழ்கொளிபுத்தூர்.

பண்-தக்கராகம்.

திருவடிகள்.

---

திருச்சிற்றம்பலம்.

பொடியுடைமார்பினர்போர்விடையேறிப்பூதகணம்புடைசூ
கொடியுடையூர்திரிந்தையங்கொண்டுபலபலகூறி [ழக்
வடிவுடைவாட்கண்ணுமைபாகமாயவன்வாழ்கொளிபு
கடிகமழ்மாமலரிட்டுக்கறையிடற்றானடிகாண்போம். [த்தூர்க்

ப - ரை. பொடி உடை மார்பினர் - வெண்பொடி பூசின மார்பையுடையவராய், போர்விடை ஏறி - போர்த்தொழிலையுடைய இடபத்திலேறி, பூதகணம் புடைசூழ-பூதகணங்கள் பக்கத்தில் சூழ்ந்துவர, கொடி உடை - கொடிகளையுடைய, ஊர் திரிந்து - ஊர்கள்தோறும் திரிந்து, ஐயம் கொண்டு - பிச்சையேற்று, பலபல கூறி - பற்பல வார்த்தைச் சொல்லி, வடிவு உடை - அழகையுடைய, வாள்-ஒளிபொரு

ருந்திய, நெடுகண் - நெடிய கண்களையுடைய, உமை பாகம் ஆயவன் - உமாதேவியைப் பாகத்திற் பெற்றவன் ஆகிய, கறைமிடற்றான்-விஷ கண்டத்தானாகிய சிவபெருமானது, அடி - திருவடியை, வாழ்கொளி புத்தூர் - திருவாழ் கொளிபுத்தூரில், கடிகமழ் - வாசனை வீசுகிற மாமலர் இட்டு - அழகாகிய மலர்களால் அருச்சித்து, காண்போம் - தரிசிப்போம், எ - று.

வி-ரை. வடியுடை எனப் பாடங்கொண்டு கூர்மையையுடைய வெனப் பொருளுரைத்து அதனை வாளுக்கு விசேடணமாக்கினும் அமையும். (க)

அரைகெழுகோவணவாடையின்மேலோராடரவம
சைத்தையம், புரைகெழுவெண்டலையேந்திப்போர்விடையே
றிப்புகழ, வரைகெழுமங்கையதாகமோர்பாகமாயவன்வாழ்
கொளிபுத்தூர்,விரைகமழ்மாமலர்தூவிவிரிசடையானடிசேர்
வோம்.

ப-ரை. அரைகெழு - அரையிற் கட்டின, கோவண ஆடையின்மேல் - கோவணவுடையின்மேல், ஓர் - ஒப்பற்ற, ஆடு அரவம் - படமெடுத்தாடுமியல்புள்ள பாம்பை, அசைத்து - கட்டி, ஐயம் - பிச்சையை, புரைகெழுவெண் தலை யேந்தி - தொளைகளையுடைய வெண்டலையிலேற்று, போர்விடை ஏறி - போர்த்தொழிலையுடைய இடபத்திலேறி, புகழ - யாவரும் புகழும்படி, வரைகெழு மங்கையது ஆகம் - பர்வதராஜ குமாரியின் திருமேனி, ஓர் பாகம் ஆயவன் - ஒரு பாகத்திற் பெற்றவன் ஆகிய, விரிசடையான் - படர்ந்த சடையையுடையவனாகிய சிவபெருமானது, அடி - திருவடியை, வாழ்கொளி புத்தூர் - திருவாழ்கொளி புத்தூரில், விரைகெழு - மணம் பொருந்திய, மாமலர்தூவி - அழகாகிய மலர்களால் அருச்சித்து சேர்வோம் - அடைவோம், எ - று.

வி - ரை. வரைகெழு மங்கை - மலையரையன் மகளாகிய உமா தேவி. ஆகம் - உடம்பு, ஓர் பாகம் - இடப்பாகம். (உ)

பூணெடுநாகமசைத்தனலாடிப்புன்றலையங்கையிலேந்தி
யூணிடுபிச்சையூரையமுண்டியென்றுபலகூறி [ளிபுத்தூர்த்
வாணெடுங்கண்ணுமைமங்கையோர்பாகமாயவன்வாழ்கொ
தாணெடுமாமலரிட்டுத்தலைவனதாணிழல்சார்வோம்.

ப - ரை. பூண் - ஆபரணமாக, நெடுநாகம் அசைத்து - நெடும் பாம்புகளைக் கட்டி, அனல் ஆடி - அழலோடாடி, புன்தலை அங்கை



யில் ஏந்தி - இழிவாகிய தலையைக் கையில் தாங்கி, ஊர் - ஊர்தோறுஞ்சென்று, ஊண் இடுபிச்சை ஐயம் உண்டி என்று பல கூறி-உணவை இடுபிச்சை ஐயம் உண்டியென்று பல பெயர்களால் சொல்லி, வாள் நெடுங்கண் - வாள்போன்ற நெடிய கண்களையுடைய, உமைமங்கை - உமாதேவியை, ஓர் பாகம் ஆயவன் - ஒருபாகத்திற் பெற்றவன் ஆகிய, தலைவன - இறைவனுடைய, தாள் நிழல் - திருவடிநிழலை, வாழ்கொளிபுத்தூர் - திருவாழ்கொளி புத்தூரில், தாள் நெடுமா மலர் இட்டு - காம்புகளையுடைய நெடிய அழகிய மலர்களால் அருச்சித்து, சார்வோம் - அடைவோம், எ - று.

வி - ரை. வாள் - ஒளியெனினுமாம். (ங)

தாரிடுகொன்றையோர்வெண்மதிகங்கைதாழ்சடைமேல
யூரிடுபிச்சைகொள்செல்வமுண்டியென்றுபலகூறி [வைருடி
வாரிடுமென்முலைமாதொருபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
காரிடுமாமலர்தூவிக்கறைமிடற்றானடிகாண்போம். [க்

ப - ரை. தார் இடு கொன்றை - மாலையாகக்கட்டின கொன்றை மலர், ஓர் வெண்மதி - ஒரு வெண்பிறை, கங்கை - கங்கை ஆகிய, அவை - அவற்றை, தாழ்சடைமேல் சூடி-நீண்ட சடைமேல் தரித்து, ஊர் இடு பிச்சை உண்டி - ஊரார்கொடுக்கின்ற பிச்சையுணவு, கொள் - கொள்ளுதற்குரிய, செல்வம் என்று - செல்வமென்று, பல கூறி - பலவற்றைச் சொல்லி, வார் இடு - கச்சணிந்த, மென்முலை மாது - மெல்லிய தனங்களையுடைய உமாதேவியை, ஒருபாகம் ஆயவன் - ஒரு பாகத்திலிருக்கப்பெற்றவனாகிய, கறைமிடற்றான் - விஷகண்டனது, அடி - திருவடியை, வாழ்கொளிபுத்தூர் - திருவாழ்கொளிபுத்தூரில், கார் இடும்மாமலர் தூவி - மேகம்போல அழகிய மலர்களால் அருச்சித்து, காண்போம் - தரிசிப்போம், எ - று.

வி - ரை. காரிடுமாமலர் தூவி யென்பதற்கு மேகம் நீர்மழையை மிகுதியாய்ச் சொரிவதுபோல மலர்மழையை மிகுதியாய்ச்சொரிந்து என்பது பொருள். (ச)

கனமலர்க்கொன்றையலங்கலிலங்கக்காதிலோர்வெண்குழை
புனமலர்மாலைபுனைந்தூர்புகுதியென்றேபலகூறி [யோடு
வனமுலைமாமலைமங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூ
ரினமலரேய்ந்தனதூவியெம்பெருமானடிசேர்வோம்.

ப - ரை. கனம்மலர் - மிக்கமலர்களால் தொடுக்கப்பட்ட, கொன்றை அலங்கல் - கொன்றைமாலை, இலங்க - விளங்க, காதில் -

செவியில், ஓர் வெண்குழையோடு - ஒரு வெள்ளிய குழையுடனே, புனம் மலர்மாலை புனைந்து - புனமலர்மாலைகளையும் தரித்து, ஊர் ஊர்தோறும், புகுதி என்று - புகுதியென்று, பலகூறி - பலவற்றைச் சொல்லி, வனம் முலை - அழகிய முலைகளையுடைய, மாமலை மங்கை - பெரிய மலைமாதானவள், ஓர் பாகம் ஆயவன் - ஒரு பாகத்தில் அமர்ந்திருக்கப்பெற்றவனாகிய, எம்பெருமான் - எம்மிறைவனது, அடி - திருவடியை, வாழ்கொளிபுத்தூர் - திருவாழ் கொளிபுத்தூரில், எட்டுத்தன - பொருந்தினவாகிய, இனமலர் தூவி - பலவகைமலர்களால் அருச்சித்து, சேர்வோம் - அடைவோம். எ - று.

வி - ரை. புனமலர்மாலை - புனத்திலுள்ள தும்பை எருக்கு முதலிய மலர்களாலியன்றமாலை, புகுதி - புகுதற்குரிய வாயிற்படி, புகுதியென்று பல கூறி-வாயிற்படியில் வந்து நிற்கிறேன் ஐயமிடுங்களென்று பலவற்றைச் சொல்லி. (௬)

அளைவளர்நாகமசைத்தனலாடி யலர்மிசையந்தணனுச்
சிக், களைதலையிற்பலிகொள்ளுங்கருத்தனேகள்வனேயென்
று, வளையொலி முன்கைமடந்தையோர் பாகமாயவனைவாழ்
கொளிபுத்தூர்த், தளையவிழ்மாமலர் தூவித்தலைவனதாளிணை
சார்வோம்;

ப - ரை. அளைவளர் - புற்றில் வளர்கின்ற, நாகம் - பாம்புகளை, அசைத்து - (சிரமுதலிய இடங்களில்) கட்டி, அனலாடி - அழலோடாடி - அலர்மிசை - தாமரைமலரி லிருக்கிற, அந்தணன் - வேதியனாகிய பிரமனது, உச்சி - சிரங்களினின்றும், களை - அறுக்கப்பட்ட, தலையில் - ஒருதலையோட்டில், பலிகொள்ளும் - பிச்சையேற்கிற, கருத்தனே - கர்த்தனே, கள்வனே - சோரனே, என்று - என்று சொல்லி, வளை ஒலி - வளையல் ஒலிக்கப்பெற்ற, முன்கை - முன்னங்கையையுடைய, மடந்தை - உமாதேவியை, ஓர் பாகம் ஆயவன் - ஒரு பாகத்தி லமைத்தவனாகிய, தலைவன - முதல்வனது, தாள் இணை - இரண்டு திருவடிகளை, வாழ்கொளிபுத்தூர் - திருவாழ்கொளிபுத்தூரில், தளை அவிழ் - முறுக்கவிழ்ந்த, மாமலர் தூவி - அழகியமலர்களால் அருச்சித்து, சார்வோம் - அடைவோம், எ - று.

வி - ரை. களைதல் - அறுத்தல். [illegible]ன்று - செய்யாவென்னும் வாய்பாட்டிறந்த காலவினையெச்சம். (௭)

அடர்செவிவேழத்தினீருரிபோர்த்தழிதலையங்கையிலே
யுடலிடுபிச்சையோடையமுண் டியென் றுபலகூறி [த்தி
மடலெடுமாமலர்க்கண்ணிபோ[illegible] பாகமாயவன்வாழ்கொளிபு
தடமலராயினதூவித்தலைவனதாணிழல்சார்வோம். [த்தூர்த்

823.4117
N06



ப - ரை. அடர்செவி - நெருங்கின காதையுடைய, வேழத்தின் - யானையின், ஈர் உரிபோர்த்து - குளிர்ந்ததோலைப் போர்த்து, அழிதலை - அழிதலையை, அங்கையில் ஏந்தி - அழகியகையில். தாங்கி, உடல் இடு - உடம்புக்கிடுகிற, பிச்சையோடு - பிச்சையுடன், (பிக்ஷை) ஐயம் - ஐயம், உண்டி - உண்டி, என்றுபலகூறி - என்று பலவற்றைச்சொல்லி, மடல் - இதழ்களையுடைய, மாமலர் - அழகிய தாமரைமலர்போன்ற, கண்ணி - கண்களையுடையவளாகிய உமா தேவியை, ஓர் பாகம் ஆயவன் - ஒருபாகத்தி லமைத்துக்கொண்டவனாகிய, தலைவன - தலைவனுடைய, தாள்நிழல் - திருவடிநிழலை, வாழ்கொளிபுத்தூர் - திருவாழ்கொளிபுத்தூரில், தடம்மலர் ஆயின தூவி - பெருமையுள்ளமலர்களால் அருச்சித்து, சார்வோம் - அடைவோம், எ - று.

11673 (௫)

வி - ரை. அழிதலை - அறுக்கப்பட்டதலை,

உயர்வரையொல்கவெடுத்தவரக்கனொளிர்கடகக்கையடர்
வயலிடுபிச்சையோடையமார்தலையென்றடிபோற்றி [த்து
வயல்விரிநீலநெடுங்கண்ணிபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்,
சயவிரிமாமலர்தூவித்தாழ்சடையானடிசார்வோம். [ச்

ப - ரை. உயர் - உயர்ந்த, வரை - கைலாயமலையானது, ஒல்க - அசையும்படி, எடுத்த - தூக்கின, அரக்கன் - அரக்கனாகிய ராவணனுடைய, ஒளிர் - விளங்குகிற, கடகம் - கடகமணிந்த, கை - கைகளை, அடர்த்து - நெரித்து, அயல் இடுபிச்சையோடு - அயலாரிடுகிற பிட்சையுடனே, ஐயம் - ஐயத்தை, ஆர் - உண்ணுகிற, தலை - தலைவனே, என்று - என்று, அடிபோற்றி - அடி[illegible], வயல்விரி - வயலில் மலர்கின்ற, நீலம் - கருங்குவளைமலர்[illegible], நெடுங்கண்ணி - நெடிய கண்களையுடைய[illegible] பாகம் ஆயவன் - பாகத்தில் அமைத்துக்கொண்டவனாகிய, தாழ்சடையான் - நீண்டசடையையுடையவனாகிய சிவபிரானது, அடி - திருவடியை, வாழ்கொளிபுத்தூர் - திருவாழ்கொளிபுத்தூரில், சயம் - கூட்டமாகிய, விரி - மலர்ந்த, மாமலர் [illegible] அழகிய மலர்களால்அருச்சித்து, சார்வோம் - அடைவோம். எ[illegible]

வி - ரை. ஆர்தல் - உண்[illegible] தலை - [illegible]பண்பாகுபெயர், சயம் - கூட்டம், இது வடசொல். (௮)

கரியவனான்முகன்கை[illegible] [illegible]தக்[illegible]மாகா
வெரிபுருவாகியுரையமிட[illegible]புன்னியென்றேத்தி

விரியரவல்குன்மடந்தையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்-
விரிமலராயினதூவிவிகிர்தனசேவடிசேர்வோம். [தூர்

ப - ரை. கரியவன் - திருமாலும், நான்முகன் - பிரமனும், கைதொழுது - கைகளால் அஞ்சலித்து, ஏத்தி-துதித்து, காணலும் - காணுதலும், சாரலும் - அணுகுதலும், ஆகா - ஒண்ணாத, எரி உரு ஆகி - நெருப்பு வடிவமாகி, ஊர் - ஊர் தோறும், ஐயம் - ஐயம், இடுபலி - இடுகின்றபிச்சை, உண்ணி - உண்பேன், என்று ஏத்தி - என்று துதித்து, வரி - வரிகளையுடைய, அரவு - பாம்பின்படம்போன்ற, அல்குல் - அல்குலையுடைய, மடந்தை - உமாதேவியை, ஓர் பாகம் ஆயவன் - ஒருபாகத்தி லமைத்துக்கொண்டவனாகிய, விகிர்தன - விகிர்தனுடைய, சேவடி - சிவந்த திருவடியை, வாழ்கொளிபுத்தூர் - திருவாழ்கொளிபுத்தூரில், விரிமலர் ஆயின தூவி - மலர்ந்த புட்பங்களால் அருச்சித்து, சேர்வோம் - அடைவோம், எ - று.

வி - ரை. கரியவன் - கருநிறத்தையுடையவன், எரி - தொழிலாகுபெயர். அரவு - முதலாகுபெயர். விகிர்தன் - அழியாதவன். (௯)

குண்டமணர்துவர்க்கூறைகண்மெய்யிற்கொள்கையினா
ர்புறங்கூற, வெண்டலையிற்பலிகோடல்விரும்பினையென்று
விளம்பி, வண்டமர்பூங்குழன்மங்கையோர்பாகமாயவன்வா
ழ்கொளிபுத்தூர்த், தொண்டர்கண்மாமலர்தூவத்தோன்ற
நின்றானடிசேர்வோம்.

ப - ரை. குண்டமணர் - குண்டமணராகிய, துவர்க்கூறைகள் - துவராடையை, மெய்யில் கொள்கையினார் - உடம்பின்மேலுடுத்தவர், புறங்கூற - புறங்கூறாநிற்க, வெண்டலையில் - வெள்ளியதலையோட்டில், பலிகோடல் விரும்பினையென்று - பலியேற்றலை விரும்பினையென்று, விளம்பி - சொல்லி, வண்டு அமர் - வண்டுகள் விரும்புகிற, பூகுழல் - மலரணிந்த கூந்தலையுடைய, மங்கை - உமாதேவியை, ஓர் பாகம் ஆயவன் - ஒரு பாகத்திலமைத்துக்கொண்டவனாகி, வாழ்கொளிபுத்தூர் - திருவாழ்கொளிபுத்தூரில், தொண்டர் - அடியார்கள், மாமலர்தூவ - அழகியமலர்களால் அருச்சிக்கும்படி, தோன்ற நின்றான் - காணவரும்படி நின்றவனது, அடி - திருவடியை, சேர்வோம் - அடைவோம், எ - று.

வி - ரை. துவர்-சிவப்பு. துவர்க்கூறை-சீவரவஸ்திரம், அமர்தல் - விரும்புதல். (௧௦)



கல்லுயர்மாக்கடனின்றுமுழங்குங்கரைபொருகாழியமூதூர்
நல்லுயர்நான்மறைநாவினற்றமிழ்ஞானசம்பந்தன் [த்தூர்ச்
வல்லுயர்சூலமும்வெண்மழுவாளும்வல்லவன்வாழ்கொளிபு
சொல்லியபாடல்கள்வல்லார்துயர்கெடுதலெளிதாமே.

ப - ரை. கல் - கற்பாறைகளையுடைய, உயர் - உயர்ந்த, மாக்கடல் - பெரியகடலானது, நின்று முழங்கும் - நின்று முழங்காநின்ற, கரைபொரு - கரையைமோதுகிற, காழி - சீகாழியாகிய, அம் - அழகாகிய, மூதூர் - பழமையாகியவூரி லவதரித்த, நல் - நன்மையாகிய, உயர் - உயர்ந்த, நால்மறை - நான்குவேதங்களையும், நாவின் - நாவிலேயுடைய, நல்தமிழ் - நல்தமிழிலும் வல்லவனாகிய, ஞானசம்பந்தன் - ஞானசம்பந்தனென்பவன், வல் உயர் - வன்மையாலுயர்ந்த, சூலமும் - சூலத்தினும், வெண்மழுவாளும் - வெள்ளியமழுவாளிலும் வல்லவன் - வல்லவனாகிய சிவபெருமானது, வாழ்கொளிபுத்தூர் - திருவாழ்கொளிபுத்தூரைக் குறித்து, சொல்லிய - சொன்ன, பாடல்கள்வல்லார் - பாடல்களில் வல்லவர்களுடைய, துயர் - துன்பமானது, கெடுதல் - அழிதல், எளிது ஆம் - எளிதாகும், எ - று.

வி - ரை. கல் - கற்பாறை, வெண்மை இவ்விடத்துத் தூய்மையைக் குறித்தது. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்

# திருவதிகைவீரட்டானம்.

## திருவடித்திருத்தாண்டகம்.

### திருவடிகள்.

திருச்சிற்றம்பலம்.

அரவணையான் சிந்தித் தரற்றும்மடி
யருமறையான் சென்னிக் கணியாமடி
சரவணத்தான் கைதொழுது சாரும்மடி
சார்ந்தார்கட் கெல்லாஞ் சரணாமடி
பரவுவார் பாவம் பறைக்கும்மடி
பதினெண் கணங்களும் பாடும்மடி

விரவுநீர்த்தென்கெடிலநாடனடி
திருவீரட்டானத்தெந்செல்வனடி.

ப - ரை. அரவு அணையான் - சர்ப்பசயனத்தையுடைய திரு
மால், சிந்தித்து - தியானித்து (காணவொண்ணாமையினால்), அரி
தும் - காணுதற்கு அரிதாகிய, அடி - திருவடி, அருமறையான்-அரு
மையாகிய வேதங்களையுடையவனாகிய பிரமனது, சென்னிக்கு-சிர
க்கு, அணி ஆம் - அழகாகிய, அடி - திருவடி, சரவணத்தான் - சு
பிரமணியன், கைதொழுது-கையால்தொழுது, சாரும் - அடைகின்ற
அடி - திருவடி, சார்ந்தார்கட்கு எல்லாம் - அடைந்தவர்கட்கு எல்
லாம், சரண் ஆம் - சரணாகிய, அடி - திருவடி, பரவுவார் - வழிப
வாரது, பாவம் - பாவத்தை, பறைக்கும் - ஓட்டுகின்ற, அடி - திரு
வடி, பதினெண்கணங்களும்-பதினெட்டுக்கணங்களும், பாடும்-பாடு
தற்குரிய, அடி-திருவடி, விரவுநீர்-நீர்மிகுந்த, தென்கெடில நாடன்-
தென்கெடில நாடனது, அடி - திருவடி, திருவீரட்டானத்து - திரு
வீரட்டானத்தில் எழுந்தருளிய, எம் செல்வன் - எமது செல்வனது
அடி - திருவடி, எ - று.

வி - ரை. அரவணையான் எனப்பொதுப்படக் கூறினும் திரு
மால் என்னும் பொருளைத் தருதலால் அரவு ஆதிசேஷன் எனப்பொ
ருள்படும், சரவணத்தான்-சரவணப்பொய்கையில் வளர்ந்தவன். (க)

கொடுவினையாரென்றுங்குறுகாவடி
குறைந்தடைந்தாராழாமைக்காக்குமடி
படுமுழவம்பாணிபயிற்றுமடி
பதைத்தெழுந்தவெங்கூற்றைப்பாய்ந்தவடி
கடுமுரணேறூர்ந்தான்கழற்சேவடி
கடல்வையங்காப்பான்கருதுமடி
நெடுமதியங்கண்ணியணிந்தானடி
நிறைகெடிலவீரட்டநீங்காவடி.

ப - ரை. கொடுவினையார் - கொடிவினையையுடையவர், என்
றும் - எக்காலத்தும், குறுகா - கிட்டப்பெறாத, அடி - திருவடி, குறை
ந்து அடைந்தார் - தாழ்ந்து அடைந்தவர், ஆழாமை - (துன்பக்கட
லில்) அழுந்தாமை, காக்கும் - காக்கின்ற, அடி - திருவடி, படுமுழ
வம் - ஒலிக்கின்ற முழவத்தை, பாணிபயிற்றும் - கையினால் பழக்கு
கின்ற, அடி - திருவடி, பதைத்து எழுந்த - துடித்தெழுந்த, வெங்
கூற்றை - கொடிய யமனை, பாய்ந்த - பாய்ந்து உதைத்த, அடி - திரு



வடி, கடு முரண் - மிக்கவலியையுடைய, ஏறு ஊர்ந்தான் - இடபவா
கனனுடைய, கழல் - வீரக்கழலணிந்த, சேவடி - திருவடி, கடல்வை
யம் - கடல்சூழ்ந்த உலகத்தை, காப்பான் - காப்பவனாகிய விட்டுணு,
கருதும் - நினைக்கின்ற, அடி - திருவடி, நெடுமதியங்கண்ணி - நெடிய
அழகிய பிறையாகிய மாலையை, அணிந்தான் - சூடினவனது, அடி -
திருவடி, நிறை - நீர்நிறைந்த, கெடிலம் - திருக்கெடிலம் என்னும்
நதிக்கரையிலுள்ள, வீரட்டம் - திருவீரட்டத்தை, நீங்கா - விட்டுப்
பிரியாத, அடி - திருவடி, எ - று.

வி - ரை. கொடுவினையார் - பாவிகள். (உ)

வைதெழுவார்காமம்பொய்போக்காவடி
வஞ்சவலைப்பாடொன்றில்லாவடி
கைதொழுதுநாமேத்திக்காணுமடி
கணக்குவழக்கைக்கடந்தவடி
நெய்தொழுதுநாமேத்தியாட்டுமடி
நீள்விசும்பையூடறுத்துநின்றவடி
தெய்வப்புனற்கெடிலநாடனடி
திருவீரட்டானத்தெந்செல்வனடி.

ப - ரை. வைது எழுவார் - வைதெழுவோருடைய, காமம்
பொய் - காமத்தையும் பொய்யையும், போக்கா - நீக்காத, அடி-திரு
வடி, வஞ்சம் வலைப்பாடு-வஞ்சகமாகிய வலையிற்படுதல், ஒன்று-சிறி
தும், இல்லா - இல்லாத, அடி - திருவடி, காம்-யாம், கைதொழுது
ஏத்தி - கையால் வணங்கி (நாவால்) துதித்து, காணும் - காணுதற்
குரிய, அடி - திருவடி, கணக்குவழக்கை கடந்த - கணக்கு வழக்கு
களைத்தாண்டின, அடி - திருவடி, நாம்தொழுது ஏத்தி - யாம்வணங்
கித்துதித்து, நெய் ஆட்டு - நெய்யாட்டுகிற, அடி-திருவடி, நீள்விசும்
பை - நெடிதாகிய ஆகாயத்தை, ஊடறுத்து நின்ற - நடுவேயறுத்து
நின்ற, அடி - திருவடி, தெய்வப்புனல் - தெய்வத்தன்மை பொருந்
திய நீரையுடைய, கெடிலநாடன்-திருக்கெடில நாடனது, அடி-திரு
வடி, திருவீரட்டானத்து-திருவீரட்டானத்திலுள்ள, எம்செல்வன் -
எம்செல்வனது, அடி - திருவடி, எ - று.

வி - ரை. நெய்யாட்டுதல்-நெய்யினால் அபிஷேகஞ்செய்தல். ()

அரும்பித்தஞ்செஞ்ஞாயிறேய்க்குமடி
அழகெழுதலாகாவருட்சேவடி
கரும்பித்தவண்டினங்கள்சூழ்ந்தவடி
சேரமனையுங்காலனையுங்காய்ந்தவடி.

பெரும்பித்தர்கூடிப்பிதற்றும்மடி
பிழைத்தார்பிழைப்பறியவல்லவடி
திருத்தநீர்த்தென்கெடிலநாடன்னடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி.

ப - ரை. அரும்பித்த - உதிக்கின்ற, செஞ்ஞாயிறு - செவ் சூரியனை, எய்க்கும் - நிகர்க்கின்ற, அடி - திருவடி, அழகு எழுத் ஆகா - அழகெழுதவொண்ணாத, அருள் - அருளுருவாகிய, சேவடி திருவடி, கரும்பித்த - கரும்புகளோடு கூடின, வண்டினங்கள்-வண் க்கூட்டங்கள், குழும் - மொய்க்கின்ற, அடி - திருவடி, சோமனை யும் காலனையும்-சந்திரனையும் யமனையும், காய்ந்த-கோபித்த, அடி திருவடி, பெரும்பித்தர்கூடி - பெரியபித்தர்கள் சேர்ந்து, பிதற்றும் பிதற்றுதற்குரிய, அடி-திருவடி, பிழைத்தார்-பிழைசெய்தவர், பிழை ப்பு - பிழையை, அறியவல்ல - உணரவல்ல, அடி - திருவடி, திரு த்தநீர் - திருத்தமான நீரையுடைய, தென்கெடிலநாடன் - தென்கெ டிலநாடனது, அடி-திருவடி, திருவீரட்டானத்து-திருவீரட்டான திலெழுந்தருளின, எம்செல்வன் - எம்செல்வனது, அடி - திருவ எ - று.

வி - ரை. எய்தல் - நிகர்த்தல், பிழைப்பு - குற்றம். (

ஒருகாலத்தொன்றாகிநின்றவடி
யூழிதோறூழியுயர்ந்தவடி
பொருகழலும்பல்சிலம்புமார்க்கும்மடி
புகழ்வார்புகழ்த்தகையவல்லவடி
யிருநிலத்தாரின்புற்றங்கேத்தும்மடி
யின்புற்றாரிட்டபூவேறும்மடி
திருவதிகைத்தென்கெடிலநாடன்னடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி.

ப - ரை. ஒருகாலத்து - ஒருகாலத்தில், ஒன்று ஆகி நின்ற-ஒ பொருளாகி நின்ற, அடி - திருவடி, ஊழிதோறு ஊழி - பலஊழி காலங்கள் தோறும், உயர்ந்த - சிறந்து நின்ற, அடி - திருவடி, பொ ருகழலும் - வீரக்கழலும், பல்சிலம்பும்-பலசிலம்புகளும், ஆர்க்கும் ஒலிக்கின்ற, அடி - திருவடி, புகழ்ந்தார் - புகழ்ந்தோரது, புகழ் புகழை, தகையவல்ல - பெருமைப்படுத்தவல்ல, அடி-திருவடி, இரு நிலத்தார் - பெரிய நிலவுலகத்தார், இன்பு உற்று - மகிழ்ந்து, அங் ஏத்தும் - அவ்விடத்துத் துதிக்கின்ற, அடி - திருவடி, இன்பு உ



றார்-மகிழ்ந்தவர்கள், இட்டபூ - சாத்தினமலர், ஏறும்-ஏறப்பெற்ற, அடி - திருவடி, திருவதிகைத்தென்கெடில நாடன் - திருவதிகைத் தென்கெடில நாடனது, அடி - திருவடி, திருவீரட்டானத்து எம் செல்வன் அடி ——, எ - று.

வி - ரை. இருநிலத்தார் என்பதற்கு மண்ணுலகத்தாரும் விண் ணுலகத்தாரும் என்றுரைத்தலுமாம். (௫)

திருமகட்குச்செந்தாமரையாமடி
சிறந்தவர்க்குத்தேனாய்விளையும்மடி
பொருளவர்க்குப்பொன்னுரையாய்நின்றவடி
புகழ்வார்புகழ்த்தகையவல்லவடி
யுருவிரண்டுமொன்றோடொன்றொவ்வாவடி
யுருவென்றுணரப்படாதவடி
திருவதிகைத்தென்கெடிலநாடன்னடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி.

ப - ரை. திருமகட்கு - திருமகளுக்கு, செந்தாமரை ஆம்-செந் தாமரை மலராகிற, அடி - திருவடி, சிறந்தவர்க்கு - பெரியோருக்கு, தேன் ஆய்விளையும் - தேனாய் விளைகின்ற, அடி - திருவடி, பொரு ளவர்க்கு-பொருளுடையோர்க்கு, பொன் உரையாய் நின்ற-பொன் னுரைபோல நின்ற, அடி - திருவடி, புகழ்வார் - புகழ்வோருடைய, புகழ் - புகழை, தகையவல்ல - பெருமைப்படுத்தவல்ல, அடி - திரு வடி, உருஇரண்டும்-உருவமிரண்டானும், ஒன்றோடு ஒன்று ஒவ்வா - ஒன்றோடொன்றொவ்வாத, திருவடி ——, உரு என்று உணரப் படாத - உருவமுளதென்று அறியப்படாத, அடி - திருவடி, திரு வதிகைத் தென்கெடிலநாடன் அடி ——, திருவீரட்டானத்து எம் செல்வன் அடி ——, எ - று.

வி - ரை. திருமகள் - திருவாகிய பெண், பொருளவர்க்கு - உண்மையுடையோர்க்கு எனினுமாம். (௬)

உரைமாலையெல்லாமுடையவடி
யுரையாலுணரப்படாதவடி
வரைமாதைவாடாமைவைக்கும்மடி
வானவர்கடாம்வணங்கிவாழ்த்தும்மடி
யரைமாத்திரையிலடங்கும்மடி
யகலமளக்கிற்பாரில்லாவடி
கரைமாங்கலிக்கெடிலநாடன்னடி
கழல்வீரட்டானக்கபாலியடி.

ப - ரை. உரைமாலை எல்லாம் உடைய - சொல்மாலைகளெல்லாவற்றையுமுடைய, அடி - திருவடி, உரையால் - சொல்லால், உணரப்படாத - அறியப்படாத, அடி - திருவடி, வரைமாதை - மலையரையன் பெண்ணை, வாடாமை வைக்கும் - வாடாமல் வைக்கின்ற, அடி - திருவடி, வானவர்கள்தாம் - தேவர்கள்தாம், வணங்கி வாழ்த்தும் - வணங்கித் துதிக்கின்ற, அடி - திருவடி, அரைமாத்திரையில் அடங்கும் - அரைமாத்திரையில் அடங்குகின்ற, அடி - திருவடி, அகலம் அளக்கிற்பார் இல்லா - அகலமளக்க வல்லாரில்லாத, அடி - திருவடி, கரைமாய்கடிக் கெடிலநாடன் - கரைமாய்கவிக் கெடில நாடனது, அடி - திருவடி, கமழ்வீரட்டானம் - பரிமளிக்கின்ற திருவீரட்டானத்தில் எழுந்தருளிய, காபாலி - காபாலியின், அடி - திருவடி, எ - று.

வி - ரை. அகலம் - அளவு, கரைமாய்கவி - கரையையழிக்கின்ற ஆரவாரத்தையுடைய. (எ)

நறுமலராய்நாறுமலர்ச்சேவடி
நடுவாயுலகநடாயவடி
செறிகதிருந்திங்களுமாய்நின்றவடி
தீத்திரளாயுள்ளேதிகழ்ந்தவடி
மறுமதியைமாசுகழுவுமடி
மந்திரமுந்தந்திரமுமாயவடி
எறிகெடிலநாடர்பெருமானடி
திருவீரட்டானத்தெஞ்செல்வனடி.

ப - ரை. நறுமலராய் நாறும் - மணமலராய் மணக்கின்ற, மலர் - தாமரைமலர்போலும், சேவடி - சிவந்த திருவடி, நடுவாய் - நடுவாயிருந்து, உலகம் - உலகத்தை, நடாய - நடத்தின, அடி - திருவடி, செறி - நெருங்கின, கதிரும் திங்களும் ஆய்நின்ற - சூரியனுஞ் சந்திரனுமாகின்ற, அடி - திருவடி, தீத்திரள் ஆய் - நெருப்புத்திரளாகி, உள்ளே திகழ்ந்த - உள்ளே விளங்கின, அடி - திருவடி, மறுமதியை - களங்கமுள்ள சந்திரனை, மாசுகழுவும் - அழுக்கு அகற்றுகின்ற, அடி - திருவடி, மந்திரமும் தந்திரமும் ஆய - மந்திரமும் தந்திரமுமாகிய, அடி - திருவடி, எறி - அலைவீசுகின்ற, கெடிலநாடர் - திருக்கெடிலநாட்டையுடையவர்க்கு, பெருமான் - தலைவனது, அடி - திருவடி, திருவீரட்டானத்து எம்செல்வன் அடி ——, எ - று.

வி - ரை. நடுவாய் - நடுநிலையாய் (பொதுவாய்). (அ)



அணியனவுஞ்சேயனவுமல்லாவடி
யடியார்கட்காரமுதமாயவடி
பணிபவர்க்குப்பாங்காகவல்லவடி
பற்றற்றார்பற்றும்பவளவடி
மணியடிபொன்னடிமாண்பாமடி
மருந்தாய்ப்பிணிதீர்க்கவல்லவடி
தணிபாடிதண்கெடிலநாடனடி
தகைசார்வீரட்டத்தலைவனடி.

ப - ரை. அணியனவும் - சமீபத்திலுள்ளனவாகிய பொருள்களும், சேயனவும் - தூரத்திலுள்ளனவாகிய பொருள்களும், அல்லா - அல்லாத, அடி - திருவடி, அடியார்கட்கு - அடியவர்களுக்கு, ஆர் அமுதம் ஆய - அரிய அமிர்தம்போன்ற, அடி - திருவடி, பணிபவர்க்கு - வணங்குபவர்க்கு, பாங்காகவல்ல - அழகாகவல்ல, அடி - திருவடி, பற்று அற்றார் பற்றும் - பற்றற்றவர்கள் பற்றுகின்ற, பவளம் - பவளம்போன்ற, அடி - திருவடி, மணிஅடி - மணிபோலும் அடி, பொன் அடி - பொன்போலும் அடி, மாண்பு ஆம் - பெருமையாகிய, அடி - திருவடி, மருந்து ஆய் - மருந்தாகி, பிணிதீர்க்கவல்ல - நோய் தீர்க்கவல்ல, அடி - திருவடி, தணி - தாழ்ந்த, பாடு - பெருமைபொருந்திய, தண் - குளிர்ச்சியாகிய, கெடிலநாடன் - திருக்கெடிலநாடனது, அடி - திருவடி, தகைசார் - அழகுபொருந்திய, வீரட்டத்தலைவன் - திருவீரட்டத்தலைவனது, அடி - திருவடி, எ - று.

வி - ரை. ஆரமுதம் - உண்ணுதற்குரிய அமிர்தம் எனினுமாம். பற்று - உயிர்ப்பற்று பொருட்பற்று என்னுமிருவகைப் பற்று. பற்றற்றார் - ஞானியர். (௯)

அந்தாமரைப்போதலர்ந்தவடி
யரக்கனையுமாற்றலழித்தவடி
முந்தாகிமுன்னேமுளைத்தவடி
முழங்கழலாய்நீண்டவெம்மூர்த்தியடி
பந்தாடுமெல்விரலாள்பாகனடி
பவளத்தடவரையேபோல்வானடி
வெந்தார்சுடலைநீறாடுமடி
வீரட்டங்காதல்விமலனடி.

ப - ரை. அம் - அழகாகிய, தாமரைப்போது - தாமரை மலர் போல, அலர்ந்த - விரிந்த, அடி - திருவடி, அரக்கனையும் - அரக்கனு

ிய இராவணனையும், ஆற்றல் அழித்த - வலியழித்த, அடி - திருவடி, மூர்த்தி ஆகி - மூர்த்தியினதாகி, முன்னே முளைத்த - முன்னே தோன்றின, அடி - திருவடி, முழங்கு - ஒலிக்கின்ற, அழலாய் நீண்ட - நெருப்புருவமாக நீண்ட, எம்மூர்த்தி - எமது மூர்த்தியின், அடி - திருவடி, பந்து ஆடும் - பந்தாடுகின்ற, மெல்விரலாள் - மெல்லிய விரல்களையுடையவளாகிய உமாதேவியினது, பாகன் - பாகத்தையுடையவனது, அடி - திருவடி, தடம் - பெரிதாகிய, பவளவரையே போல்வான் - பவளமலையையே நிகர்ப்பவனது, அடி - திருவடி, வெந்தார் - மடிந்து சுடப்பட்டவரது, சுடலை நீறு ஆடும் - சுடலைப்பொடியில் ஆடுகின்ற, அடி - திருவடி, வீரட்டம் காதல் - திருவீரட்டத்தின்மேல் விருப்பத்தையுடைய, விமலன் - பரிசுத்தனது, அடி - திருவடி எ - று.

வி - ரை. இறைவனது திருமேனி பவளமலை போறலால் பவளவரையே போல்வான், என்றார். முக்கட்பவளமலை "பவளத் தடக்குன்று" என்றற் றொடக்கத்துப்பிற அறிஞரது செய்யுட்களானும் இஃதினிது விளங்கும். (க0)

திருச்சிற்றம்பலம்.

---

சுந்தரமூர்த்திநாயனார்

# திருப்புன்கூர்.

பண் - தக்கேசி.

---

திருவடிகள்.

---

திருச்சிற்றம்பலம்.

அந்தணாளனுன் னடைக்கலம்புகுத
 வவனைக்காப்பதுகாரணமாக
வந்தகாலன்றனாருயிரதனை
 வவ்வினாய்க்குன்றன் வண்மைகண்டடியே
னெந்தைநீயெனை நமன்றமர்நலியி
 னிவன்மற்றென்னடியானென விலக்குஞ்
சிந்தையால்வந்துன் றிருவடியடைந்தேன்
 செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.



ப - ரை. அந்தணாளன் - வேதியனாகிய மார்க்கண்டேன், உன் அடைக்கலம் புகுத - உன்னைச் சரணமடைய, அவனை - அந்த அந்தணனை, காப்பது காரணமாக - காப்பதே காரணமாகக் கொண்டு, வந்த காலன்தன் - வந்த யமனது, ஆர் உயிரதனை - அரிய உயிரை, வவ்வினாய் - கவர்ந்தாய், உன்றன் வண்மை கண்டு - உனது வன்மை கண்டு, அடியேன் - அடியனேனது, எந்தை நீ - எந்தையாகிய நீ, என்னை - அடியேனை, நமன் தமர் - யமதூதர், நலியின் - வருத்தினால், இவன் என் அடியான் என - இவன் என் அடியவனென்று, விலக்கும் - விலக்கவேண்டுமென்கிற, சிந்தையால் - எண்ணத்தினால், வந்து உன் திருவடி அடைந்தேன் - வந்து உன் திருவடியைச் சேர்ந்தேன், செழும் பொழில் - செழுமையாகிய சோலைகள் சூழ்ந்த, திருப்புன்கூர் - திருப்புன்கூரில், உள்ளானே - எழுந்தருளியிருப்பவனே, எ - று.

வி - ரை. அந்தணாளன் - அழகிய தட்பத்தையாள்பவன். காலன்தன் என்பதில் தன் சாரியை. (க)

வையகமுற்றுமாமழைமறந்து
 வயலினீரிலைமாநிலந்தருகோ
முய்யக்கொள்கமற்றெங்களையென்ன
 வொளிகொள்வெண்முகிலாய்ப்பரந்தெங்கும்
பெய்யுமாமழைப்பெருவெள்ளந்தவிர்த்துப்
 பெயர்த்தும்பன்னிருவேலிகொண்டருளுஞ்
செய்கைகண்டுநின்றிருவடியடைந்தேன்
 செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.

ப - ரை. வையகம் முற்றும் - உலகமுழுதும், மாமழை மறந்து - பெரிய மழைபெய்ய மறந்ததனால், வயலில் நீர் இலை - வயலில் நீரில்லையாயிற்று, மாநிலம் தருகோம் - பெரிய நிலத்தைக் கொடுப்போம், எங்களை - அடியோங்களை, உய்யக்கொள்க என்ன - உய்யக்கொண்டருள்கவென்று சொல்லுதலும், ஒளிகொள் - ஒளியைக்கொண்ட, வெண் முகில் ஆய் - வெண்மேகமாகி, எங்கும் பரந்து - எங்கும் பரவி, பெய்யும் - பெய்கிற, மாமழை - பெரிய மழையினாலுண்டாகிய, பெருவெள்ளம் தவிர்த்து - பெருவெள்ளத்தை யொழித்து, பெயர்த்தும் - மறுபடியும், பன்னிருவேலி கொண்டருளும் - பன்னிரண்டுவேலி நிலத்தைக் கொண்டருளின, செய்கை கண்டு - செய்கையை நோக்கி, நின் திருவடி அடைந்தேன் - உன் திருவடியைச் சேர்ந்தேன், செழும்

பொழில் - செழுமையாகிய சோலைகள் சூழ்ந்த, திருப்புன்கூர் உள்ளானே——, எ - று.

வி - ரை. 'வையகமுற்று மாமழை மறந்து வயலினீரிலை மாநிலந்தருகோ, முய்யக்கொள் கமற்றெங்களை யென்ன வொலிகொள் வெண்முகிலாய்ப் பரந்தெங்கும், பெய்யுமா மழைப்பெரு வெள்ளந் தவிர்த்துப் பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளுஞ்செய்கை, என்பதிலடங்கியிருக்குங் கதையாவது.—திருப்புன்கூரில் மழை பெய்யாது வருத்துகிற காலத்தில், அவ்வூரார், மழைபெய்வித்து எங்களைக் காப்பாற்றினால், உமக்குச் சில நிலந் தருவோமென்று வேண்டுதலும், பெருமான் திருவுளமிரங்கி மூகிலுருவாய் அதிக மழையைப் பெய்விக்க, அதுவும் அவர்களுக்கு வருத்தத்தை யுண்டாக்க, பன்னிரு வேலி நிலம் மறுபடியுந் தருவோமென்றளவில் மழையை நிறுத்தி, முன்சொன்ன நிலத்தோடு இந்தப் பன்னிருவேலி நிலத்தையுங் கொண் டருளினரென்பது. (௨)

ஏதமின்னிலமீ ரறுவேலிக்
  கேயர்கோனுற்றவிரும்பிணிதவிர்த்துக்
கோதனங்களின்பால்கறந்தாட்டக்
  கோலவெண்மணற்சிவன்றன்மேற்சென்ற
தாதைதாளறவெறிந்தசண்டிக்குன்
  சடைமிசைமலரருள்செயக்கண்டு
பூதவாளிநின்பொன்னடியடைந்தேன்
  பூம்பொழிற்றிருப்புன்கூருளானே.

ப - ரை. ஏதம் இல் நிலம் ஈராறுவேலிக்கு - குற்றமில்லாத பன்னிருவேலி நிலத்துக்காக, ஏயர்கோன் உற்ற-ஏயர்கோன் அடைந்த, இரும்பிணி தவிர்த்து-பெரிய பிணியை யொழித்து, கோதனங்களின் பால் கறந்து - பசுக்கூட்டங்களின் பாலைக்கறந்து, ஆட்ட - அபிஷேகஞ் செய்ய, கோலம்-அழகாகிய, வெள் மணல் - வெள்ளைமணலாற் செய்யப்பட்ட, சிவன் தன்மேல்சென்ற-சிவன்மேல்சென்ற, தாதை-தந்தையின், தாள் அற - காலற, எறிந்த - வெட்டின, சண்டிக்கு - சண்டேசுரனுக்கு, உன்சடை மிசை மலர் - உன்சடைமே லணிந்த மலரை, அருள்செய்ய கண்டு - அருள்செய்யப் பார்த்து, பூதவாளி - பூதநாதனே, நின் பொன்னடி அடைந்தேன் - உன் பொன்னடியைச் சேர்ந்தேன், பூ பொழில் - பூஞ்சோலைகள் சூழ்ந்த, திருப்புன்கூர் உள்ளானே——, எ - று.



வி - ரை. ஏயர்கோன் - ஏயர்கோன் கலிக்காமநாயனார், இவர் பன்னிருவேலி கன்னிலம் கொடுத்துத் தம் பிணியை யொழித்துக் கொண்டார் என்னுஞ்செய்தியும், சண்டேசர் தமது சிவாபிஷேக பத்தத்தை யுத்தேசித்து வந்த தந்தையின்காலெறிந்த செய்தியும் இதிலடங்கியிருக்கின்றன. பூதவாளி - பூதகணங்களை யாள்பவன். (௩)

நற்றமிழ்வல்லஞானசம்பந்த
  னாவினுக்கரையனாளைப்போவானுங்
கற்றசூதனற்சாக்கியன்சிலந்தி
  கண்ணப்பன்கணம்புல்லனென்றிவர்கள்
குற்றஞ்செய்யினுங்குணமெனக்கருதுங்
  கொள்கைகண்டுநின்குரைகழலடைந்தேன்
பொற்றிரண்மணிக்கமலங்கண்மலரும்
  பொய்கைசூழ்திருப்புன்கூருளானே.

ப - ரை. நல் தமிழ் வல்ல ஞானசம்பந்தன்-நல்ல தமிழில் வல்லவனாகிய ஞானசம்பந்தனும், நாவினுக்கு அரையன் - திருநாவுக்கரசனும், நாளைப்போவானும் - திருநாளைப்போவானும், கற்ற சூதன் - கற்ற சூதனும், நல் சாக்கியன் - நல்ல சாக்கியனும், சிலந்தி - சிலந்தியும், கண்ணப்பன் - கண்ணப்பனும், கணம் புல்லன் - கணம்புல்லனும், என்றிவர்கள் - என்று சொல்லப்பட்ட இவர்கள், குற்றம் செய்யினும் - குற்றம் செய்தாலும், குணம் என கருதும் - குணமென்று நினைக்கிற, கொள்கை கண்டு - உன் கொள்கையைப் பார்த்து, நின் குரை கழல் அடைந்தேன் - உன்னது ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடியைச் சேர்ந்தேன், பொன் திரள் மணி கமலங்கள் மலரும் - பொற்றிரளும் அழகிய தாமரைகளும் மலரப்பெற்ற, பொய்கைசூழ் - தடாகங்கள் சூழ்ந்த, திருப்புன்கூர் உள்ளானே——, எ - று.

வி - ரை. நாவினுக்கரையன்-வாகீசர். இவரை அப்பர் என்றுங் கூறுவர். குற்றத்தைக் குணமாகக்கொண்டு சிலந்தி கண்ணப்பன் முதலானவர்களுக்கருள்செய்த செய்திகள் இச்செய்யுளி லடங்கியிருக்கின்றன. (௪)

கோலமால்வரைமத்தெனநாட்டிக்
  கோளரவுசுற்றிக்கடைந்தெழுந்த
வாலநஞ்சுகண்டவர்மிகவிரிய
  வமரர்கட்கருள்புரிவதுகருதி
நீலமார்கடல்விடந்தனையுண்டு
  கண்டத்தேவைத்தபித்தநீசெய்த

சீலங்கண்டுநின் றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.

ப - ரை. கோலம் - அழகாகிய, மால்வரை - பெரிய மலையை, மத்து என நாட்டி - மத்தாக நட்டு, கோள் அரவு சுற்றி கடைந்து - துன்பத்தைச்செய்கிற பாம்பை அந்த மலைமீது சுற்றிக்கடைந்து, எழுந்த - அதிலுண்டாகிய, ஆலம் நஞ்சு கண்டு - ஆலாகல விஷத்தைக் கண்டு, அவர் மிக இரிய - அவர்கள் மிகுதியாய் ஓட, அமரர்கட்கு - தேவர்கட்கு, அருள்புரிவது கருதி - அருள்செய்ய நினைத்து, நீலம் ஆர் - நீலநிறம் பொருந்திய, கடல் விடந்தனை உண்டு - கடல் விஷத்தைப் பருகி, கண்டத்தே வைத்த - திருமிடற்றி லமைத்துக்கொண்ட, பித்த - பித்தனே, நீசெய்த சீலம் கண்டு - நீசெய்த செய்கையைக் கண்டு, நின் திருவடி அடைந்தேன் - உன் திருவடியைச் சேர்ந்தேன், செழும்பொழில் - செழுமையாகிய சோலைகள் சூழ்ந்த, திருப்புன்கூர் உள்ளானே—, எ - று.

வி - ரை. கோலமால்வரை யென்றது மந்தரமலையை, கோளரவு என்றது வாசுகியை. அவர் என்றது அந்தத் தேவர் முதலியோரை. இரிதல் - ஓடுதல். (௩)

இயக்கர்கின்னரர்யமனொடுவருண
ரியங்குதீவளிஞாயிறுதிங்கண்
மயக்கமில்புலிவானரநாகம்
வசுக்கள்வானவர்தானவரெல்லா
மயர்ப்பொன்றின்றிநின் றிருவடியதனை
யர்ச்சித்தார்பெறுமாரருள்கண்டு
திகைப்பொன்றின்றிநின் றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.

ப - ரை. இயக்கர் - யக்ஷர், கின்னரர் - கிந்நரர், யமனொடு வருணர் - யமனொடு வருணர், இயங்கு தீ - விளங்குகிற நெருப்பு, வளி - காற்று, ஞாயிறு-சூரியன், திங்கள்-சந்திரன், மயக்கம் இல்-மயக்கமில்லாத, புலி-புலி, வானரம்-குரங்கு, நாகம்-பாம்பு, வசுக்கள் - வசுக்கள், வானவர்-தேவர்கள், தானவர்-அசுரர்கள், (ஆகிய) எல்லாம் - எல்லாரும், அயர்ப்பு ஒன்று இன்றி-தளர்வு சிறிதுமில்லாமல், நின் திருவடி யதனை-உன் திருவடியை, அர்ச்சித்தார் - அர்ச்சித்தவராய், பெறும்-பெற்ற, ஆர் அருள் கண்டு-அரிய அருளைப்பார்த்து, திகைப்பு ஒன்று இன்றி - பிரமித்தல் சிறிதுமில்லாமல், நின் திருவடி அடைந்



தேன்-உன் திருவடியைச் சேர்ந்தேன், செழும்பொழில்-செழுமையாகிய சோலைகள் சூழ்ந்த, திருப்புன்கூர் உள்ளானே—, எ-று.

வி-ரை. இயக்கர் கின்னரர் முதலாயினோர் இத்திருப்பதி யெம்பெருமானை யருச்சித்த தருள்பெற்றா ரென்னுஞ் செய்தி இச்செய்யுளி லடங்கியிருக்கின்றது. (௪)

போர்த்தநீள்செவியாளரந்தணர்க்குப்
பொழில்கொளாலின்கீழறம்புரிந்து
பார்த்தனுக்கன்றுபாசுபதங்கொடுத்
தருளினாய்பண்டுபகிரதன்வேண்ட
வார்த்துவந்திழியும்புனற்கங்கை
நங்கையாளைநின் சடைமிசைக்கரந்த
தீர்த்தனேநின் றன்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.

ப - ரை. போர்த்த நீள் செவியாளர் - பொத்தின நீண்ட செவியினையுடையவராகிய, அந்தணர்க்கு-வேதியர்க்கு, பொழில்கொள் - சோலையாகத் தழைத்திருந்த, ஆலின்கீழ் - கல்லாலின் நிழலில், அறம்புரிந்து - தர்மோபதேசஞ் செய்து, பார்த்தனுக்கு - அருச்சுனனுக்கு, அன்று - அக்காலில், பாசுபதம் கொடுத்து - பாசுபதாஸ்திரத்தைத் தந்து, அருளினாய் - அருள்செய்தாய், பண்டு - முற்காலத்தில், பகிரதன் வேண்ட - பகீரதன் பிரார்த்திக்க, ஆர்த்து வந்து இழியும் - ஆரவாரித்துக்கொண்டு வந்திறங்குகின்ற, புனல் - நீருருவாகிய, கங்கை நங்கையாளை - கங்கையாகிய பெண்ணை, நின் சடைமிசை கரந்த - உன் சடைமீது அடக்கிக்கொண்ட, தீர்த்தனே - பரிசுத்தனே, நின்றன் - உன்னுடைய, திருவடி யடைந்தேன்—, செழும்பொழிற் றிருப்புன்கூருளானே—, எ - று.

வி - ரை. போர்த்த நீள்செவியாளரந்தணர்க்கு என்றது சநகாதியர் நால்வருக்கு என்றபடி, தீர்த்தன் - தேவன் எனினுமாம். (௫)

மூவெயில்செற்றஞான்றுய்ந்தமூவரி
லிருவர்நின் றிருக்கோயிலின்வாய்தல்
காவலாளரென் றேவியபின்னை
யொருவனீகரிகாடரங்காக
மானைநோக்கியோர்மாநடமகிழ
மணிமுழாமுழக்கவருள்செய்த

தேவதேவ நின் றிருவடியடைந்தேன்
செழும்பொழிற் றிருப்புன்கூருளானே.

ப - ரை. மூவெயில் செற்றஞான்று - மும்மதில்களை யழித்தகாலில், உய்ந்த - பிழைத்துப்போன, மூவரில் - மூன்றுபேர்களுள், இருவர் - இரண்டுபேர், நின் - உனது, திருக்கோயிலின் வாயில் காவலாளர் என்று - திருக்கோயிலின் வாசற் காப்பாளரென்று, ஏவிய பின்னை - அனுப்பின பிறகு, ஒருவன் - மற்றொருவன், நீ - நீ, கரிகாடு அரங்கு ஆக - கரிகாடே நாட்டிய சபையாகக்கொண்டு, மானை நோக்கி - மான்போலும் அழகிய நோக்கத்தையுடையவளாகிய உமாதேவி, மகிழ - களிக்க, ஓர் மா நடம் - ஒப்பற்ற பெரிய நடனத்தை, மணிமுழா முழக்க - அழகிய மத்தளமுழக்கும்படி, அருள்செய்த - அருள்புரிந்த, தேவதேவ - தேவதேவனே, நின் திருவடி அடைந்தேன் ——, செழும்பொழிற் றிருப்புன்கூருளானே, எ - று.

வி - ரை. மானைநோக்கி - உமாதேவியை நோக்கி யெனினுமாம்.

அறிவினான் மிக்கவறுவகைச்சமய
மவ்வவர்க்கங்கேயாரருள்புரிந்து
வெறியுமாகடலிலங்கையர்கோனைத்
துலங்கமால்வரைக்கீழடர்த்திட்டுக்
குறிகொள்பாடலினின்னிசைகேட்டுக்
கோலவாளொடுநாளதுகொடுத்த
செறிவுகண்டுநின் றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.

ப - ரை. அறிவினால் மிக்க - அறிவினாற் சிறந்த, அறுவகை சமயம் - அறுவகைச் சமயங்களையுடைய, அவரவர்க்கு - அவரவர்களுக்கு, அங்கே - அவ்விடத்தில், ஆர் அருள்புரிந்து - அரிய அருளைச்செய்து, எறியும் - அலைகள் வீசுகிற, மாகடல் - பெரிய கடல் சூழ்ந்த, இலங்கையர்கோனை - இலங்கையர்க் கரசனாகிய இராவணனை, துலங்க - துலங்கும்படி, மால் - பெரிய, வரைக்கீழ் - மலையின்கீழ், அடர்த்திட்டு - அமுக்கி, குறிகொள் பாடலின் - குறித்துப்பாடுகின்ற பாடலின், இன் இசைகேட்டு - இனிய இசையைக்கேட்டு, கோலவாளொடு - அழகிய வாளாயுதத்துடன், நாளது கொடுத்த - ஆயுளையும் கொடுத்த, செறிவுகண்டு - அன்பைப்பார்த்து, நின் திருவடியடைந்தேன் ——, செழும்பொழிற் றிருப்புன்கூருளானே ——, எ - று.

வி - ரை. மால்வரை யென்றது கயிலாய மலையை. (௯)



கம்பமால்களிற்றின்னுரியானைக்
காமற்காய்ந்ததோர்கண்ணுடையானைச்
செம்பொனேயொக்குந்திருவுருவானைச்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானை
யும்பராளியையுமையவள்கோனை
யூரன்வன்றொண்டனுள்ளத்தாலுகந்
தன்பினாற்சொன்னவருந்தமிழைந்தோ
டைந்தும்வல்லவரருவினையிலரே.

ப - ரை. கம்பம் - கட்டுத்தறியிற் கட்டப்படுகிற, மால் - மதமயக்கத்தையுடைய, களிற்றின் உரியானை - யானைத்தோலையுடையவனை, காமன் காய்ந்தது - மன்மதனை யெரித்ததாகிய, ஓர் கண் உடையானை - ஒருகண்ணையுடையவனை, செம்பொன்னே ஒக்கும் - செம்பொன்னையே நிகர்க்கிற, திருவுருவானை - திருமேனியையுடையவனை, செழும்பொழிற் றிருப்புன்கூருளானை ——, உம்பர் ஆளியை - தேவர்களுக்குள்ளே சிறந்தவனை, உமையவள்கோனை - உமாநாயகனை, ஊரன்வன்றொண்டன் ——, உள்ளத்தால் உகந்து - மனத்தால் விரும்பி, அன்பினால் சொன்ன - அன்பினாற்சொல்லிய, அருந்தமிழ் - அரிய தமிழ்ப்பாடல்கள், ஐந்தோடு ஐந்தும் - பத்தும், வல்லவர் - கற்றுவல்லவர், அரு - ஒழித்தற் கரிதாகிய, வினை - வினையை, இலர் - இல்லாதவராவார். எ - று.

வி - ரை. ஆளி சிறந்தவன் என்னும் பொருளில் வந்தது. ஓர் கண் - நெற்றிக்கண். (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

## திருப்பூந்தராய்.

பண்-காந்தாரபஞ்சமம்.

அருச்சனை.

திருச்சிற்றம்பலம்.

பந்துசேர்விரலாள் பவளத்துவர்வாயினாள் பனிமாமதி
போன்முகத்தந்தமில்புகழாண்மலைமாதொடுமாதிப்பிரான்,

வந்துசேரிடம் வானவரெத்திசையு நிறைந்து வலஞ்செய்து மாமலர், புந்திசெய்திறைஞ்சிப் பொழிபூந்தராய் போற்றுதுமே.

ப - ரை. பந்துசேர் விரலாள் - பந்துபொருந்திய விரலையுடையவள், பவளம் துவர்வாயினாள்-பவளம்போற் சிவந்த வாயினையுடையவள், பனிமாமதிபோல் முகத்து - குளிர்ச்சிபொருந்திய பூரண சந்திரன்போன்ற முகத்தினையுடைய, அந்தம் இல் புகழாள் - முடிவில்லாத புகழையுடையவளாகிய, மலைமாதொடும் - மலையரையன் பெண்ணாகிய உமாதேவியோடும், ஆதிப்பிரான் - சிவபெருமான், வந்து சேர்வு இடம் - வந்துசேருமிடமாகிய, வானவர் - தேவர்கள், எத்திசையும் நிறைந்து - எல்லாத்திக்குகளிலும் நிறைந்து, வலஞ்செய்து - வலம் வந்து, புந்திசெய்து - நினைத்து, இறைஞ்சி - வணங்கி, மாமலர் பொழி - அழகிய மலர்களைத் தூவுகின்ற, பூந்தராய் - திருப்பூந்தராய் என்னுந் திருப்பதியை, போற்றுதும்-வணங்குவோம், எ - று.

வி - ரை. துவர் - செந்நிறம், மாமதியென்றதனாலும் முகத்துக் குவமையாகப் புணர்க்கப்படுதலாலும் பூர்ணசந்திரன் எனப்பொருளுரைக்கலாயிற்று. (௬)

காவியங்கருங்கண்ணினாள் கனித்தொண்டைவாய்க்கதிர் முத்தநல்வெண்ணகைத், தூவியம்பெடையன்னநடைச்சுரி மென்குழலா டேவியுந்திருமேனியோர்பாகமாயொன் றிரண்டொருமூன்றொடுசேர்பதி, பூவிலந்தணனொப்பவர் பூந்தராய் போற்றுதுமே.

ப - ரை. காவி அம் கருங்கண்ணினாள் - நீலமலர்போன்ற அழகிய கருங்கண்களையுடையவள், தொண்டைக் கனிவாய் - கொவ்வைக்கனிபோன்ற வாயையும், கதிர் முத்தம் நல்வெண் நகை - ஒளியையுடைய முத்துப்போன்ற அழகிய வெண்ணகையையும், தூவி அம் பெடை அன்னம் நடை - இறகையும் அழகையுமுடைய பெட்டை அன்னத்தின் நடைபோன்ற நடையையும், சுரிமென் குழலாள் - சுரித்த மெல்லிய கூந்தலையுமுடையவளாகிய, தேவியும்-உமாதேவியும், திருமேனி ஓர் பாகமாய் - திருமேனியின் ஓர்பாகத்திலமர்ந்தவளாய், ஒன்று இரண்டு இரு மூன்றொடு சேர்பதி - பொருந்திய பன்னிரு திருநாமங்களையுடைய தலமாகிய, பூவில் அந்தணன் ஒப்பவர் - பிரமனை நிகர்ப்பவராகிய வேதியர் வாழ்கின்ற, பூந்தராய் - திருப்பூந்தராய் என்னுந் திருப்பதியை, போற்றுதும் - வணங்குவோம், எ - று.



பையராவருமல்குன் மெல்லியல் பஞ்சின்னேரடி வஞ்சிகொளுண்ணிடைத், தையலாளொருபாலுடையெம்மிறைசாருமிடஞ், செய்யெலாங்கழுநீர் கமலம்மலர்த் தேறலூறலிற் சேறுலாதநற், பொய்யிலாமறையோர்பயில்பூந்தராய்போற்றுதுமே.

ப - ரை. பை அராவரும் அல்குல்-படத்தையுடைய பாம்புபோன்ற அல்குலையும், மெல் இயல்-மெல்லியலையும், பஞ்சின்நேர் அடி - பஞ்சினை நிகர்த்த அடியினையும், வஞ்சிகொள் நுண் இடை - வஞ்சிக்கொடிபோன்ற நுட்பமாகிய இடையினையுமுடைய, தையலாள் - உமாதேவியை, ஒருபால் உடை - ஒருபாகத்திலுடைய, எம் இறை - எமது இறைவன், சாரும் இடம்-பொருந்துமிடமாகிய, செய் எலாம்-கழனிகளிலெல்லாம், கழுநீர் கமலம் மலர் - கழுநீர் மலரும் தாமரை மலரும் ஆகிய இவற்றின், தேறல் - தேனானது, ஊறலின் - ஊறுதலால், சேறு உலாத - சேறுபுலராத, நல் - நன்மையுள்ள, பொய் இல்லா மறையோர் பயில் - பொய்யென்பதில்லாத மறையோர் வாழ்கின்ற, பூந்தராய் - திருப்பூந்தராய் என்னுந் திருப்பதியை, போற்றுதும் - வணங்குவோம், எ - று.

வி - ரை. அராவரும் என்பதில் வரும் உவமவுருபு. தையலாள்- தைபுனையப்பட்டவள், (அலங்கரிக்கப்பட்டவள்) ஒருபால் என்றது இடப்பாகத்தை. (௭)

முள்ளிநாண்முகை மொட்டியல் கோங்கினரும்புதேன் கொள்குரும்பைமூவாமருந், துள்ளியன்றபைம்பொற்கலசத் தியலொத்தமுலை, வெள்ளிமால்வரையன்னதோர்மேனியின் மேவினார்பதி வீமருதண்பொழிற், புள்ளினந்துயின் மல்கிய பூந்தராய்போற்றுதுமே.

ப - ரை. முள்ளி நாண்முகை - தாமரையின் புதிய முகை, மொட்டு இயல் கோங்கின் அரும்பு - மொட்டித்தலையுடைய கோங்கரும்பு, தேன்கொள் குரும்பை-தென்னங்குரும்பை (ஆகிய இவைகள்), மூவா மருந்து - அமிர்தமானது, உள் இயன்ற-உள்ளே பொருந்தப்பெற்ற, பைபொன்கலசத்து இயல் ஒத்த முலை-பசும்பொற் கலசத்தினழகை நிகர்த்த தனங்களையுடைய உமாதேவி, வெள்ளிமால்வரை அன்னது - பெரிய வெள்ளிமலையை நிகர்த்ததாகிய, ஓர் மேனியில் - ஒருபக்கத் திருமேனியில், மேவினார்பதி - பொருந்தி யிருக்கப்பெற்ற சிவபெருமானது இடமாகிய, வீ மருது அண் பொழில்-மலர்களையுடைய குளிர்ந்த

சோலைகளில், புள் இனம் துயில்மல்கிய - பறவைக்கூட்டம் தூங்கப் பெற்ற, பூந்தராய் - திருப்பூந்தராய் என்னும் திருப்பதியை, போற்றுதும் - வணங்குவோம், எ - று.

வி - ரை. முளரி - தாமரை, தெங் - தென்னமரம், அமிர்தம் சாவாமைக் கேதுவாதலால் 'மூவாமருந்து' என்றார், இறைவனது திருமேனி பவளநிறமாயினும் முழுநீறு பூசிமறைக்கப்பட்டிருத்தலால் 'வெள்ளிமால் வரையன்னதோர்மேனி' என்றார், விமலர். ()

பண்ணியன் றெழுமென்மொழியாள் பகர்கோதைஏர்
திகழ்பைந்தளிர், மேன்னியன்றமொய்ம்பிற்பெருமாற்கிடம்
பெய்வளையார், கண்ணியன் றெழுகாவிச்செழுங்கரு நீலமல்
கியகாமருவாவிசூழ், புண்ணியருறையும்பதிபூந்தராய்போற்று
துமே.

ப - ரை. பண் இயன்று எழும்மென் மொழியாள் - பண்ணின் தன்மை யமைந்துண்டாகிய மென்மொழியையுடையவள் என்று, பகர் - சொல்லப்படுகிற, கோதை - கூந்தலையும், ஏர்திகழ் - அழகு விளங்குகிற, பைந்தளிர்மேனி - பசிய தளிர்போலும் திருமேனியையுமுடைய, ஓர் பெண் இயன்ற - ஒருபெண் அமர்ந்த, மொய்ம்பின் - திருத்தோள்களையுடைய, பெருமாற்கு இடம் - சிவபெருமானுக்கு இடமாய், பெய்வளையார் - மாதரது, கண் இயன்று எழு - கண்ணையொத்துத் தோன்றுகிற, காவி - காவிமலரோடு, செழு கரு நீலம் - செழிய கரிய நீலமலர்களும், மல்கிய - நிறைந்த, காமர்வாவி - அழகாகிய தடாகங்களையுடையதாய், நல் புண்ணியர் உறையும் பதி - நல்ல புண்ணியவான்கள் வாழுமிடமாகிய, பூந்தராய் - திருப்பூந்தராய் என்னுந் திருப்பதியை, போற்றுதும் - வணங்குவோம், எ - று.

வி - ரை. பண் - இந்தளம், தக்கராகம், குறிஞ்சி முதலாயின, ஓர் பெண் என்றது உமாதேவியை, மொய்ம்பு - தோள். கண்ணியன்று என்பதில் இயன்று ஒப்புப்பொருளில் வந்தது. காமரு என்பதில் உகரம் சாரியை. (௬)

வானிலாமதிபோலுதலாண்மடமானைழ் யொண்கணாள்
வண்டரளந்நகை, பாணிலாவின்னிசையார் மொழிப்பாவை
யொடுஞ், சேணிலாத்திகழ் செஞ்சடையெம்மண்ணல்சேர்வ
துசிகரப்பெருங்கோயில்சூழ், போணிலா நுழையும் பொழிற்
பூந்தராய்போற்றுதுமே.



ப - ரை. வான்நிலாமதிபோல் நுதலாள் - ஒளியையுடைய நிலவோடு கூடிய இளம்பிறைபோலும் நெற்றியையுடையவளும், மடம் மானைழ் ஒண்கணாள் - இளமைபொருந்திய மாவடுவகிர்போலுங்கண்களையுடையவளும், வண்தரளம் நகை - வளவிய முத்துப்போன்ற பல்லோடு, பாண்நிலாவிய - பாடல் நிலைபெற்ற, இன்இசை ஆர்மொழி - இனிய இசைபோலும் மொழியையுமுடையவளுமாகிய, பாவையொடும் - உமாதேவியோடும், சேண்நிலா திகழ் - பெரிய சந்திரகண்டம் பிரகாசிக்கின்ற, செஞ்சடை - செவந்த சடாபாரத்தையுடைய, எம் அண்ணல்சேர்வது - எமது அண்ணல்சேர்வதாய், சிகரம் - சிகரங்களையுடைய, பெருகோயில் சூழ் - பெரியகோயில்கள் சூழ்வதாய், போழ்நிலா நுழையும் பொழில் - வகிர்ந்த சந்திரகண்டம் நுழைதற்குரிய சோலைகளையுடைய, பூந்தராய் - திருப்பூந்தராய் என்னுந் திருப்பதியை, போற்றுதும் - வணங்குவோம், எ - று.

வி - ரை. நுதலுக்குவமையாகப் புணர்க்கப்பட்டமையால் 'வானிலாமதி இளம்பிறை' யெனப்பட்டது, அதாவது அஷ்டமிச் சந்திரன். மானைழ் - மா, அது இங்கு அதன் வடுவுக்காகி, அது அதன் வகிருக்காயினமையால் இருமடியாகு பெயர், மிக்கமரச் செறிவுதோன்ற, 'போணிலா நுழையும் பொழில்' என்றார். (௭)

காருலாவியவார்குழலாள்கயற்கண்ணிநுண் புயற்காலொளி
வாருலாவியமென்முலையாண்மலைமாதுடனாய் [மின்னிடைந்
நீருலாவியசென்னியன் மன்னிநிகருநாமமுந்நான்குநிகழ்பதி
போருலாவெயில்சூழ்பொழிற்பூந்தராய்போற்றுதுமே.

ப - ரை. கார் உலாவிய வார்குழலாள் - கருமைதங்கிய நெடிய கூந்தலையுடையவள், புயல்கால் ஒளிமின் இடை - மேகத்தால் தரப்பட்ட ஒளியையுடையமின்போலும் இடையினையும், வார் உலாவிய மென் முலையாள் - கச்சணிந்த மெல்லிய முலையினையுமுடையவளாகிய, மலைமாது உடனாய் - மலைமங்கையோடுகூடி, நீர் உலாவிய சென்னியன் - கங்கை தங்கிய திருமுடியையுடையவன், மன்னி - நிலைபெற்று, நிகரும் - தனக்குத்தானே நிகர்க்கின்ற, நாமம் முந்நான்கு நிகழ்பதி - பன்னிரண்டு திருநாமங்களையுடைய தலமாய், போர் உலா எயில் - போர்த்தொழில் தங்கிய மதிலும், சூழ்பொழில் - வளைந்த சோலைகளுமுள்ள, பூந்தராய் - திருப்பூந்தராய் என்னுந் திருப்பதியை, போற்றுதும் - வணங்குவோம், எ - று.

வி - ரை. கார் மேகமெனினுமாம், புயல் - மேகம், கால்தல் - கக்குதல், (உமிழ்தல்), பன்னிரண்டு திருநாமங்களாவன: பிரமபுரம், வேணு

புரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சை, கழுமலம் என்பன. (எ)

காசைசேர்குழலாள்கயலேர்தடங்கண்ணிகாம்பனதோட்
கதிர்மென்முலைத், தேசுசேர்மலைமாதமருந்திருமார்பகத்
தீசன்மேவுமிருங்கயிலையெடுத்தானையன்றடர்த்தானிணைச்சே
வடி, பூசைசெய்பவர்சேர்பொழிற்பூந்தராய்போற்றுதுமே ()

ப - ரை. காசைசேர்குழலாள் - காயாம்பூவையொத்த கூந்தலையுடையவள், கயல் ஏர் தடங்கண்ணி - கயல்மீன்போலும் அழகிய விசாலமான கண்களையுடையவள், காம்பு அன்னதோள் - மூங்கிலை நிகர்த்த தோளினையும், கதிர் மென்முலை - ஒளியுள்ள மெல்லிய தனத்தையுமுடைய, தேசு சேர் - ஒளி பொருந்திய, மலைமாது - மலையரையன் பெண்ணாகிய உமாதேவி, அமரும் - விரும்புகின்ற, திருமார்பு அகலத்து ஈசன் - திருமார்பின் பரப்பினையுடைய ஈசன், மேவும் - தங்குகின்ற, இருகயிலை - பெரிய கயிலாயமலையை, எடுத்தானை - தூக்கினவனாகிய இராவணனை, அன்று அடர்த்தான் - அந்நாளில் வென்றவனது, இணைச்சேவடி - திருவடியிணையை, பூசை செய்பவர் - பூசைசெய்கிறவர்கள், சேர் - கூடின, பொழில் - சோலைகளையுடைய, பூந்தராய் போற்றுதும் ——, எ-று.

வி - ரை. காசை - காயா, அது அதன்மலரையுணர்த்தலால் முதலாகுபெயர். குழலுக்குவமையாகப் புணர்க்கப்படுதலால்காயாம்பூ எனப்பட்டது. கயல் ஏர் என்பதில் ஏர் உவமவுருபு. காம்பு - மூங்கில். ஈசன் மேவும் பூந்தராய் பூசைசெய்பவர் சேர்பூந்தராய் பொழிற் பூந்தராய் என வியையும். (அ)

கொங்குசேர்குழலாணிழல்வெண்ணகைக்கொவ்வை
வாய்க்கொடியேரிடையாளுமை,பங்குசேர்திருமார்புடையார்
படர்தீயுருவாய், மங்குல்வண்ணனுமாமலரோனுமயங்கநீண்
டவர்வான்மிசைவந்தெழு, பொங்குநீரின்மிதந்தநற்பூந்தராய்
போற்றுதுமே.

ப - ரை. கொங்குசேர்குழலாள் - மணந்தங்கிய கூந்தலையுடையவள், நிழல் - ஒளியுள்ள, வெண்ணகை - வெள்ளிய பற்களையும், கொவ்வைவாய் - கொவ்வைக்கனிபோன்ற அதரத்தினையும், கொடி ஏர் இடையாள் - கொடிபோலுமிடையினையுமுடையவளாகிய, உமை - உமாதேவியானவள், பங்கு சேர் - ஒரு பாகத்திற்சேர்ந்த, திருமார்பு உடையார் - திருமார்பையுடையவர், படர் - பரவிய, தீ உருவாய் -



நெருப்புருவாகி, மங்குல் வண்ணனும் - மேகவண்ணனாகிய திருமாலும், மாமலரோனும் - பெரிய தாமரைமலரை யாசனமாகவுடைய பிரமனும், மயங்க - மயங்கும்படி, நீண்டவர் - நீண்டவரது, வான் மிசை வந்து எழு - ஆகாயத்தினளவும் வந்துயர்ந்த, பொங்குநீரில் மிதந்த - பொங்குகின்ற கடலில் மிதந்திருந்த, நல்பூந்தராய் - நல்ல பூந்தராய் என்னுந் திருப்பதியை, போற்றுதும் - வணங்குவோம், எ - று.

வி - ரை. கொங்கு - வாசனை, இயற்கை செயற்கையென்னு மிருவகை மணமுமுண்டென்பது பட (கொங்கு) என்றார். கொவ்வை - முதலாகுபெயர், தீயுருவாய் நீண்டவர் எனவியையும். (௯)

கலவமாமயிலாரியலாள்கரும்பன்னமென்மொழியாள்
கதிர்வாணுதற், குலவுபூங்குழலாளுமைகூறனைவேறுரையா,
லலவைசொல்லுவார்தேரமணாதர்களாக்கினான்றனைநண்ணலு
நல்குநற், புலவர்தாம்புகழ்பொற்பிதிபூந்தராய்போற்றுது
மே.

ப - ரை. கலவமாமயில் ஆர் - கலாபத்தையுடைய அழகிய மயில்போன்ற, இயலாள் - சாயலையுடையவள், கரும்பு அன்னமென்மொழியாள் - கருப்பஞ்சாற்றை நிகர்த்தமென் சொல்லையுடையவள், கதிர்வாள் நுதல் - மிக்க ஒளியினையுடைய நெற்றியையும், குலவு பூங்குழலாள் - விளங்குகின்ற மலரையணிந்த கூந்தலையுமுடையவளாகிய, உமை கூறனை - உமாதேவியை பாகத்திலுடையவனை, வேறு உரையால் - வேறு சொல்லினால், அலவை சொல்லுவார் - அல்லாதவற்றைச் சொல்லுவோர், தேரர் - தேரரை, அமண் - அமணர்களாகிய, ஆதர்கள் ஆக்கினான் - அறிவிலிகளாகச் செய்தான், தன்னை நண்ணலும் - தன்னை யடைதலும், நல்கு - கொடுக்கின்ற, புலவர்தாம் புகழ் - புலவர்கள் புகழாநின்ற, பொற்பு இதி - அழகியதலமாகிய, பூந்தராய் போற்றுதும் ——, எ - று.

வி - ரை. கலாயம், தோகை, அது கலவம் என வந்தது. கரும்பு - முதலாகுபெயர், அலவை - அல்லவை, (குற்றங்கள்) தேரர் - தேர் என ஈறுகெட்டு வந்தது. (௧௦)

தேம்பனுண்ணிடையாள்செழுஞ்சேலனகண்ணியோ
டண்ணல்சேர்விடந்தேனமர், பூம்பொழிற்பொற்பதிபூந்
தராய்போற்றுதுமென், றோம்புதன்மையன்முத்தமிழ்நான்
மறைஞானசம்பந்தனொண்டமிழ்மாலைகொண், டாம்படியி
வையேத்தவல்லார்க்கடையாவினையே.

ப - ரை. தேம்பல் நுண் இடையாள் - வருந்துகின்ற நுண்ணிய இடையையுடையவள், செழுஞ்சேல் அன்னகண்ணியோடு - செழுமையாகிய சேல்மீன்போன்ற கண்களையுடையவளாகிய உமாதேவியோடு, அண்ணல் சேர்வு இடம் - பெரியோனாகிய சிவபெருமான் சேருமிடமாய், தேன் அமர் - தேன் பொருந்திய, பூம் பொழில் - பூஞ்சோலைகள், திகழ் - விளங்குகின்ற, பொற்பதி - அழகிய தலமாகிய, பூந்தராய் போற்றுதுமென்று - பூந்தராயை வணங்குவோமென்று, ஓம்பு தன்மையன் - அச்சொல்லையே மீட்டு மீட்டுச் சொல்லிவந்த தன்மையையுடையவன், முத்தமிழ் - முத்தமிழையும், நான்மறை - நான்கு வேதங்களையு முடைய, ஞானசம்பந்தன் - திருஞானசம்பந்தன் செய்த, ஒண்தமிழ் மாலைகொண்டு - ஒள்ளிய தமிழ் மாலைகளைக்கொண்டு, ஆம்படி - இசைந்தவண்ணம், இவ்வையேத்த வல்லார்க்கு - இவைகளால் துதிக்க வல்லவர்களுக்கு, வினை அடையா - வினைகள் சேரா, எ - று.

வி - ரை. தேம்பல் வாடுதல் எனினுமாம். தேன் வண்டு எனினுமமையும். முத்தமிழாவன: இயல் இசை நாடகம் என்பன. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசுநாயனார்.

## ஸ்ரீ கயிலாயம்.

### திருத்தாண்டகம்.

அருச்சனை.

---

திருச்சிற்றம்பலம்.

வேற்றாகிவிண்ணாகிநின்றாய்போற்றி
மீளாமேயாளென்னைக்கொண்டாய்போற்றி
ஊற்றாகியுள்ளேயொளித்தாய்போற்றி
ஓவாதசத்தத்தொலியேபோற்றி
ஆற்றாகியங்கேயமர்ந்தாய்போற்றி
ஆறங்கநால்வேதமானாய்போற்றி
காற்றாகியெங்குங்கலந்தாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி.



ப - ரை. வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி - வேறு பூதங்களாகி அவற்றிற்குப் பிறப்பிடமாகிய ஆகாயமுமாகி நின்றவனே உனக்கு நமஸ்காரம், என்னை - அடியேனை, மீளாமே - திரும்பாமல், ஆள்கொண்டாய் - அடிமைகொண்டவனே, போற்றி - உனக்கு நமஸ்காரம், ஊற்று ஆகி - சரப்பாகி, உள்ளே - என்மனத்தினுள்ளே, ஒளித்தாய் - ஒளித்தவனே, போற்றி - உனக்கு நமஸ்காரம், ஓவாத - இடையறாத, சத்தத்து ஒலியே - நாதவோசையே, போற்றி - உனக்கு நமஸ்காரம் ஆற்றுஆகி - தனிவிடமாகி, அங்கே - அவ்விடத்தே, அமர்ந்தாய் - அமர்ந்தவனே, போற்றி - உனக்கு நமஸ்காரம், ஆறு அங்கம் - ஆறங்கங்களும், நால்வேதம் - நான்கு வேதங்களும், ஆனாய் - ஆனவனே, போற்றி - உனக்கு நமஸ்காரம், காற்று ஆகி - வாயுரூபமாகி, எங்கும் கலந்தாய் - எவ்விடத்தும் வியாபித்தவனே, போற்றி - உனக்கு நமஸ்காரம், கயிலைமலையானே - கயிலாயமலையிலெழுந்தருளி யிருப்பவனே, போற்றி போற்றி - உனக்கு நமஸ்காரம் நமஸ்காரம், எ - று.

வி - ரை. மீளாமே - பிறவிக்குவராமல், ஆறங்கமாவன - மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், கிருத்தம், சோதிடம் என்பன. நால்வேதமாவன - ருக்யஜுஸ்ஸாமாதர்வணங்கள். ()

பிச்சாடல்பேயோடுகந்தாய்போற்றி
பிறவியறுக்கும்பிரானேபோற்றி
வைச்சாடனன்றுமுகந்தாய்போற்றி
மருவியென்சிந்தைபுகுந்தாய்போற்றி
பொய்ச்சார்புரமூன்றுமெய்தாய்போற்றி
போகாதென்சிந்தைபுகுந்தாய்போற்றி
கச்சாகநாகமசைத்தாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி.

ப - ரை. பேயொடு - பேய்களுடன், பிச்சாடல் உகந்தாய் - பிச்சாடலை விரும்பினவனே, போற்றி——, பிறவி அறுக்கும் - பிறவியையொழிக்கின்ற, பிரானே - உபகாரசீலனே, போற்றி——, வைச்ச ஆடல் - வைத்த ஆடுதலை, நன்றும் உகந்தாய் - மிகவும் விரும்பினவனே, போற்றி——, மருவி - பொருந்தி, என்சிந்தை - என்மனத்தில், புகுந்தாய் - புகுந்தவனே, போற்றி——, பொய்சார் - பொய்ந்நெறியையடைந்திருந்த, புரம்மூன்றும் எய்தாய் - முப்புரங்களை யெய்தவனே, போற்றி——, போகாது - போகாமல், என்சிந்தை - என்மனத்தில் புகுந்தாய் - புகுந்தவனே, போற்றி——, நாகம் - பாம்பை, கச்சு ஆக-

சச்சையாக, இசைந்தாய் - திருவரையிற் கட்டினவனே, போற்றி——, கயிலைமலையானே போற்றி போற்றி——, எ - று.

வி - ரை. பிச்சாடல் - பித்தராகுதல்போ லாடுதல், வைத்து என்பதை வைத்த எனப் போலியாய்த் தகரத்துக்குச் சகரம்வந்தது. பொய்ச்சார் - பொய்த்தவர் எனினுமாம், அசைத்தல் - கட்டுதல். ()

மருவார்புரமூன் றுமெய்தாய்போற்றி
மருவியென் சிந்தைபுகுந்தாய்போற்றி
யுருவாகியென்னைப்படைத்தாய்போற்றி
யுள்ளாவிவாங்கியொளித்தாய்போற்றி
திருவாகிநின்றதிறமேபோற்றி
தேசம்பரவப்படுவாய்போற்றி
கருவாகியோடுமுகிலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி.

ப - ரை. மருவார் - பகைவரது, புரம்மூன்றும் - முப்புரங்களையும், எய்தாய் - எய்தவனே, போற்றி——, மருவி - பொருந்தி, என் சிந்தை - என்மனத்தில், புகுந்தாய் - புகுந்தவனே, போற்றி——, உரு ஆகி - உருவாகி, என்னை படைத்தாய் - என்னைப் படைத்தவனே, போற்றி——, உள் ஆவி வாங்கி - உள்ளுயிரைக் கவர்ந்து, ஒளித்தாய் - மறைந்தவனே, போற்றி——, திரு ஆகி நின்ற - செல்வமாய் நின்ற, திறமே - திறனே, போற்றி——, தேசம் - உலகத்தாரால், பரவப் படுவாய் - வழிபடப்படுவோனே, போற்றி——, கரு ஆகி (எல்லாப்பொருள்களுக்கும்) பிறப்பிடமாய் நிகழ்கின்ற, முகிலே - மேகமே, கயிலைமலையானே போற்றி போற்றி——, எ - று.

வி - ரை. கரு - பிறப்பிடம். எல்லாப் பொருள்களுக்கும் மூல காரணனாதலால் இறைவனை 'கரு' என்றார். ஆவி வாங்கலாவது ஆட்கொள்ளுங்காலத்தில் உடல்பொருளாவியினை யேற்றுக்கோடல்; ஆவியென்றதேனும் உபலக்கணமாய் வினையுடல் பொருள்களையுங் கொள்க. தேசம் இடவாகுபெயர்.

வானத்தார்போற்றுமருந்தேபோற்றி
வந்தென்றன்சிந்தைபுகுந்தாய்போற்றி
யூனத்தைநீக்குமுடலேபோற்றி
யோங்கியழலாய்நிமிர்ந்தாய்போற்றி
தேனத்தைவார்த்ததெளிவேபோற்றி
தேவர்க்குந்தேவனாய்நின்றாய்போற்றி
கானத்தீயாடலுகந்தாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி.



ப - ரை. வானத்தார் - விண்ணுலகத்தார், போற்றும் - வணங்குகின்ற, மருந்தே - அமிர்தமே, போற்றி—, வந்து - எழுந்தருளி, என்றன்சிந்தை புகுந்தாய் - என்மனத்தில் புகுந்தவனே, போற்றி—, ஊனத்தை நீக்கும் - ஊனத்தை யொழிக்கின்ற, உடலே - உடம்பே, போற்றி—, ஓங்கி - உயர்ந்து, அழலாய் நிமிர்ந்தாய் - நெருப்புருவாய் நிமிர்ந்தவனே, போற்றி—, தேனத்தைவார்த்த - தேனைவடித்த, தெளிவே - தெளிவே, போற்றி—, தேவர்க்குந்தேவன் ஆய் நின்றாய் - தேவர்களுக்குந் தேவனாகி நின்றவனே, போற்றி—, கானத்தீ ஆடல் உகந்தாய் - காட்டுத்தீயோடாடுதலை விரும்பினவனே, போற்றி—, கயிலைமலையானே போற்றி போற்றி—, எ - று.

வி - ரை. வானத்தார் - தேவர்கள், ஊனம் - குற்றம், தேனத் தையென்பதில் அத்துச்சாரியை. கானத்தீ - சுடுகாட்டுத்தீ. (௫)

ஊராகிநின்றவுலகேபோற்றி
யோங்கியழலாய்நிமிர்ந்தாய்போற்றி
பேராகியெங்கும்பரந்தாய்போற்றி
பேராதென்சிந்தைபுகுந்தாய்போற்றி
நீராவியானநிழலேபோற்றி
நேர்வாரொருவரையுமில்லாய்போற்றி
காராகிநின்றமுகிலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி.

ப - ரை. ஊர் ஆகி நின்ற உலகே - எல்லாருக்குமாய் நின்ற உலகே, போற்றி—, ஓங்கி - உயர்ந்து, அழலாய் நிமிர்ந்தாய் - நெருப்புருவாய் நிமிர்ந்தவனே, போற்றி——, பேர் ஆகி - பிரபலமாகி, எங்கும் பரந்தாய் - எவ்விடத்தும் வியாபித்தவனே, போற்றி—, பேராது - நிலைபெயராமல், என்சிந்தை புகுந்தாய் - என்மனத்திற் புகுந்தவனே, போற்றி——, நீராவி ஆன நிழலே - நீருவியாகிய நிழலே, போற்றி——, நேர்வார் ஒருவரையும் இல்லாய் - நிகரானோர் ஒருவருமில்லாதவனே, போற்றி—, கார் ஆகி நின்ற முகிலே - கருமையாய் நின்ற மேகமே, போற்றி—, கயிலைமலையானே போற்றி போற்றி——, எ - று.

வி - ரை. நீராவி - நீர்ப்புகை, இல்லாய் என்பதில் இன்மை உண்மைக்கு மறுதலையாகிய இன்மை. (௬)

சில்லுருவாய்ச்சென்றுதிரண்டாய்போற்றி
தேவரறியாததேவேபோற்றி

புல்லுயிர்க்கும்பூட்சிபுணர்த்தாய்போற்றி
போகாதென்சிந்தைபுகுந்தாய்போற்றி
பல்லுயிராய்ப்பார்தோறுநின்றாய்போற்றி
பற்றியுலகைவிடாதாய்போற்றி
கல்லுயிராய்நின்றகனலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி.

ப - ரை. சில் உரு ஆய் சென்று திண்டாய் - அணுரூபமாயிருந்து பின்னே பேருருவானவனே, போற்றி—, தேவர் அறியாததேவே - தேவராலும் உணரப்படாத தேவனே, போற்றி—, புல் உயிர்க்கும் பூட்சிபுணர்த்தாய் - அற்பவுயிர்களுக்கும் அவற்றுக்கேற்ற உடம்பைத் தந்தவனே, போற்றி—, போகாது - நீங்காமல், என்சிந்தை புகுந்தாய் - என் மனத்திற் புகுந்தவனே, போற்றி—, பல் உயிராய் - பலவுயிர்களாகி, பார்தோறும் நின்றாய் - எல்லா வுலகங்களிலும் நின்றவனே, போற்றி—, உலகைபற்றிவிடாதாய் - உலகைப் பற்றி விடாதவனே, போற்றி—, கல் உருஆய் நின்ற கனலே - மலையுருவாய் நின்ற நெருப்பே, போற்றி—, கயிலாயமலையானே போற்றி போற்றி——, எ - று.

வி - ரை. சில் உரு - அணுரூபம், (சிறியவடிவு) பூட்சி - உடம்பு, புணர்த்தல் - அமைத்தல், (௬)

பண்ணினிசையாகிநின்றாய்போற்றி
பாவிப்பார்பாவமறுப்பாய்போற்றி
யெண்ணுமெழுத்துஞ்சொல்லானாய்போற்றி
யென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
விண்ணுநிலனுந்தீயானாய்போற்றி
மேலவர்க்குமேலாகிநின்றாய்போற்றி
கண்ணின்மணியாகிநின்றாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி.

ப - ரை. பண்ணின் இசையாகி நின்றாய் - பண்களோடு இசையுமாய் நின்றவனே, போற்றி——, பாவிப்பார் - நினைப்பவருடைய, பாவம் - பாவத்தை, அறுப்பாய் - ஒழிப்பவனே, போற்றி——, எண்ணும் - எண்ணப்படுகிற, எழுத்தும் சொல்லும் ஆனாய் - எழுத்தும் சொல்லுமானவனே, போற்றி——, என்சிந்தை நீங்கா - என் மனத்தைவிட்டு நீங்காத, இறைவா - இறைவனே, போற்றி——, விண்ணும் - ஆகாயமும் - நிலனும் - பூமியும், தீ - நெருப்பும், ஆனாய் - ஆனவனே, போற்றி——, மேலவர்க்குமேலாகி நின்றாய் - மேலோருக்கு மேலானவனாய் நின்றவனே, போற்றி——, கண்ணில் மணி ஆகி நின்றாய் - கண்ணுள் கோமணியாய் நின்றவனே, போற்றி——, கயிலைமலையானே போற்றி போற்றி——, எ - று.



வி - ரை. பண் - நட்டராகம், பஞ்சுரம், இந்தளம் முதலியன. இசை - குரல், துத்தம், கைக்கிளை முதலியன. இராகம் எனினுமாம். அவை பைரவி, தோடி, காம்போதி முதலியன, இவற்றின் விகற்பங்களெல்லாம் எழுதின் விரிப்பிற்பெருகும். எண் - தருக்கம் எனினுமாம். எழுத்தும் என்னும் உம்மை சொல்லுக்கும் கூட்டப்பட்டது. கண்ணின்மணி - சக்ஷுரிந்திரியம். (எ)

இமையா துயிரா திருந்தாய்போற்றி
யென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
யுமைபாகமாகத்தணைத்தாய்போற்றி
யூழியேழானவொருவாபோற்றி
யமையாவருநஞ்சமார்ந்தாய்போற்றி
யாதிபுராணனாய்நின்றாய்போற்றி
கமையாகிநின்றகனலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி.

ப - ரை. இமையாது - இமைக்காமலும், உயிராது - மூச்சுவிடாமலும், நின்றாய் - நின்றவனே, போற்றி——, என்சிந்தை நீங்கா - என் மனத்தைவிட்டு நீங்காத, இறைவா - இறைவனே, போற்றி——, உமைபாகம் - உமாதேவி பங்கை, ஆகத்து அணைத்தாய் - திருமேனியில் சேர்த்தவனே, போற்றி——, ஊழி ஏழ் ஆன ஒருவா - ஏழூழிகளுமாயிருக்கிற ஒப்பற்றவனே, போற்றி——, அமையா அருநஞ்சம் - உண்ணுதற்கமையாத அரிய நஞ்சினை, ஆர்ந்தாய் - உண்டவனே, போற்றி——, ஆதிபுராணன் ஆய் நின்றாய் - ஆதிபுராணனாகி நின்றவனே, போற்றி——, கமை ஆகி நின்ற கனலே - பொறுமையாய் நின்ற நெருப்பே, போற்றி——, கயிலைமலையானே போற்றி போற்றி——, எ - று.

வி - ரை. இமைத்தல் - இமைகொட்டல், உயிர்த்தல் - மூச்சுவிடுதல், ஆகம் - உடம்பு, ஆர்தல் - உண்டல், கமை - க்ஷமா என்னும் வடமொழித்திரிபு, (அ)

மூவாய்பிறவாயிறவாய்போற்றி
முன்னமேதோன்றிமுளைத்தாய்போற்றி

தேவாதிதேவர்கொழுந்தேபோற்றி
சென்றேறியெங்கும்பரந்தாய்போற்றி
யாவாயடியேனுக்கெல்லாம்போற்றி
யல்லனலியவலந்தேன்போற்றி
காவாய்கனகத்திரளேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி.

ப - ரை. மூவாய் - மூவாதவனே, பிறவாய் - பிறவாதவனே, இறவாய் - இறைவாதவனே, போற்றி——, முன்னமே - முன்பே, தோன்றி முளைத்தாய் - தோன்றி முளைத்தவனே, போற்றி——, தேவாதிதேவர் கொழுந்தே - தேவாதிதேவர்களுக்குக் கொழுந்தாயிருப்பவனே, போற்றி——, சென்று ஏறி - போய் நிமிர்ந்து, எங்கும் பரந்தாய் - எவ்விடத்தும் வியாபித்தவனே, போற்றி——, அடியேனுக்கு எல்லாம் ஆவாய் - அடியேனுக் கெல்லாப் பொருள்களுமாகின்றவனே, போற்றி——, அல்லல் - துன்பமானது, நலிய-வருத்துதலால், அலந்தேன் - வருந்தினேன், போற்றி——, காவாய் - காப்பாற்றியருள்க, கனகத்திரளே - பொற்றிரளே, போற்றி——, கயிலைமலையானே போற்றி போற்றி——, எ - று.

வி - ரை. மூவாய் என்பதற்குப் பகுதிமூ, மூத்தல்-முதிர்தல். ()

நெடியவிசும்பொடுகண்ணேபோற்றி
நீளவகலமுடையாய்போற்றி
யடியுமுடியுமில்லீபோற்றி
யங்கொன்றறியாமைநின்றாய்போற்றி
கொடியவன்கூற்றமுதைத்தாய்போற்றி
கோயிலாவென்சிந்தைகொண்டாய்போற்றி
கடியவுருமொடுமின்னேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி.

ப - ரை. நெடியவிசும்பொடு கண்ணே - நீண்ட ஆகாயத்தோடு கண்ணாயிருப்பவனே, போற்றி——, நீளம் அகலம் உடையாய் - நீளமும் அகலமும் உடையவனே, போற்றி——, அடியும் முடியும் இல்லி - அடியும் அந்தமும் இல்லாதவனே, போற்றி——, அங்கு - அவ்விடத்தில், ஒன்று அறியாமை நின்றாய்-சிறிதும் அறியப்படாமல் நின்றவனே, போற்றி——, கொடிய வன்கூற்றம் உதைத்தாய் - வலிய யமனை உதைத்தவனே, போற்றி——, என் சிந்தை - என் மனத்தை, கோயிலா கொண்டாய் - கோயிலாகக் கொண்டவனே,



போற்றி——, கடிய - கடுமையாகிய, உருமொடு மின்னே - உருமுடனே மின்னலுமாயிருப்பவனே, போற்றி ——, கயிலைமலையானே போற்றி போற்றி——, எ - று.

வி - ரை. யமனது கொடுமை மிகுதிதோன்ற, 'கொடியவன் கூற்றம்' என்றார். (௧௦)

உண்ணாதுறங்காதிருந்தாய்போற்றி
யோதாதேவேதமுணர்ந்தாய்போற்றி
யெண்ணாவிலங்கைக்கோன்றன்னைப்போற்றி
யிறைவிரலால்வைத்துகந்தவீசாபோற்றி
பண்ணாரிசையின்சொற்கேட்டாய்போற்றி
பண்டேயென்சிந்தைபுகுந்தாய்போற்றி
கண்ணாயுலகுக்குநின்றாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி.

ப - ரை. உண்ணாது உறங்காது இருந்தாய்-உண்ணாமலும் உறங்காமலும் இருந்தவனே, போற்றி——, ஓதாதே வேதம் உணர்ந்தாய் - ஓதாமலே வேதங்களை யறிந்தவனே, போற்றி——, எண்ணா - மதிக்காத, இலங்கைக்கோன் தன்னை - இலங்கைக் கரசனாகிய ராவணனை, இறைவிரலால் வைத்து உகந்த - இறைவிரலால் வைத்தூன்றின, ஈசா - ஈசனே, போற்றி——, பண் ஆர் - பண்கள் நிறைந்த, இசையின் சொல் கேட்டாய் - இசை பாடுதலைக் கேட்டோனே, போற்றி——, பண்டே - முன்பே, என் சிந்தை புகுந்தாய் - என் மனத்தில் புகுந்தவனே, போற்றி——, உலகுக்கு கண் ஆய் நின்றாய் - உலகத்துக்குக் கண்ணாகி நின்றவனே, போற்றி——, கயிலைமலையானே போற்றி போற்றி——, எ - று.

வி - ரை. எண்ணல் - மதித்தல், இறைவிரல் - தலைமையாகிய விரல் (பெருவிரல்). உலகுக்கு - உலகத்தார்க்கு, கண்ணாய் நிற்றலாவது, நன்மை தீமைகளைப் பகுத்தறிவித்தல் (செல்வழி அல்வழிகளைத் தெரிவித்தல்). (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்

## திருக்கழுக்குன்றம்.

பண் - நட்டபாடை.

அருச்சனை.

திருச்சிற்றம்பலம்.

கொன்றுசெய்தகொடுமையாற்பலசொல்லவே
நின்றபாவவினைகடாம்பலநீங்கவே
சென்றுசென்றுதொழுமின்றேவர்பிரானிடங்
கன்றினோடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே.

ப - ரை. கொன்றுசெய்த கொடுமையால் - கொன்று செய்த கொடுமையினால், பலசொல்ல - பலவற்றை (கண்டோர்) சொல்லும்படி, நின்ற - நின்ற, பாவவினைகள் தாம் பல நீங்க - பாவத்தொழில்கள் பலவும் நீங்குதற்பொருட்டு, சென்று சென்று - பலகாற்சென்று, தொழுமின்-(நீங்கள்) வணங்குங்கள், (எதையெனின்) தேவர்பிரான் இடம்-தேவர் பெருமானிடமாயிருக்கிற, கன்றினோடு பிடி சூழ்-கன்றுகளோடு பெண்யானைகள் சூழ்கின்ற, தண் - குளிர்ச்சியையுடைய, கழுக்குன்றமே - திருக்கழுக்குன்றத்தையே, எ - று.

வி - ரை. கொன்று - கொலைசெய்து, கொடுமை - தீச்செயல், தொழுமின் என்பதற்கு எழுவாயாகிய நீங்கள் என்பது வருவித்துரைக்கப்பட்டது. இது உலகத்தாரை நோக்கிச் சொல்லியது. (க)

இறங்கிச்சென்றுதொழுமினின்னிசைபாடியே
பிறங்குகொன்றைச்சடையனெங்கள்பிரானிடம்
நிறங்கள்செய்தமணிகணித்திலங்கொண்டிழி
கறங்குவெள்ளையருவித்தண்கழுக்குன்றமே.

ப - ரை. பிறங்கு-விளங்குகின்ற, கொன்றை - கொன்றைமலர்மாலையைத்தரித்த, சடையன் - சடையையுடையவனாகிய, எங்கள் பிரான் இடம் - எம்பெருமானுக்கு இடமாகிய, நிறங்கள் செய்த - பல நிறங்களையுடைய, மணிகள் - ரத்தினங்களையும், நித்திலம் - முத்துக்களையும், கொண்டு - வாரிக்கொண்டு, இழி - இறங்குகிற, கறங்கு - ஒலிக்கின்ற, வெள்ளை அருவி - வெள்ளையாகிய அருவிகளையுடைய, தண் -





குளிர்ச்சியையுடைய, கழுக்குன்றம் - திருக்கழுக்குன்றத்தை, இன் இசைபாடி - இனிய இசையோடு புகழ்ந்துகொண்டு, இறங்கிச் சென்று தொழுமின்-(நீங்கள்) தாழ்ந்துபோய் வணங்குங்கள், எ - று.

வி - ரை. கொன்றை - இருமடியாகுபெயர். மணிகள் நித்திலம் என்பவற்றில் எண்ணும்மைகள் தொக்கன. கறங்குதல் - ஒலித்தல். (உ)

நீளநின்றுதொழுமினித்தலுநீதியா
லாளுநம்மவினைகளல்கியழிந்திடத்
தோளுமெட்டுமுடையமாமணிச்சோதியான்
காளகண்டனுறையுந்தண்கழுக்குன்றமே.

ப - ரை. நீதியால் - நீதியினால், நம்மவினைகள் - நம்முடைய வினைகள், அல்கி அழிந்திட - குறைந்து நசிக்கும்படி, ஆளும் - ஆண்டருள்கின்ற, தோளும் எட்டும் உடைய-எட்டுத்தோள்களையுடைய, மாமணி சோதியான் - மாணிக்கவொளியையுடையவனும், காளகண்டன் - விஷகண்டனும் ஆகிய சிவபிரான், உறையும்-எழுந்தருளியிருக்கிற, தண்கழுக்குன்றம் - குளிர்ச்சியையுடைய திருக்கழுக்குன்றத்தை, நித்தலும்-நாள்தோறும், நீளநின்று தொழுமின்-தூரத்தேநின்று வணங்குங்கள், எ - று.

வி - ரை. தோளும் எட்டும் என்னும் உம்மைகள் இசைநிறையாய் வந்த இடைச்சொற்கள். மாமணி-மாணிக்கம். காளம்-நஞ்சு. (ங)

வெளிறுதீரத்தொழுமின்வெண்பொடியாடியை
முளிறிலங்குமழுவாளன்முந்தியுறைவிடம்
பிளிறுதீரப்பெருங்கைப்பெய்ம்மதமூன்றுடைக்
களிறினோடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே.

ப - ரை. வெண்பொடி ஆடியை-திருவெண்ணீறு பூசுவோனை, வெளிறு தீர-நமது அறியாமை நீங்கும்படி, தொழுமின் - வணங்குங்கள், (அவன் உறைவிடம் யாதெனின்) முளிறு இலங்கும் மழுவாளன் - கூர்மையோடு கூடி விளங்குகின்ற மழுவையுடையவன், முந்தி உறைவு இடம் - முற்பட்டுவாழும் இடமானது, பிளிறு தீர - ஒலித்தலொழிய, பெருங்கை - பெரிய துதிக்கையினையும், பெய்ம்மதம் மூன்று - பொழிகின்ற மும்மதத்தையும், உடை-உடைய, களிறினோடு-ஆண்யானைகளுடன், பிடி - பெண்யானைகள், சூழ் - சூழ்கின்ற, தண்கழுக்குன்றமே - குளிர்ச்சியுள்ள திருக்கழுக்குன்றமேயாம், எ - று.

வி - ரை. வெளிறு - தீறியாமை. பிளிறல் - ஒலித்தல். மும்மதம் - கர்ணமதம், கபோலமதம், கோசமதம். (௪)

புலைகள்தீரத்தொழுமின்புன்சடைப்புண்ணிய
னிலைகொள்சூலப்படையனெந்தைபிரானிடம்
முலைகளுண்டுதழுவிக்குட்டியொடுமுசுக்
கலைகள்பாயும்புறவிற்றண்கழுக்குன்றமே.

ப - ரை. புன்சடை புண்ணியன் - புல்லிய சடையையுடைய புண்ணியன், இலைகொள் சூலப்படையன் - இலைவடிவத்தைக்கொண்ட சூலாயுதத்தையுடையவன், எந்தைபிரான் - எமது தந்தையாகிய உபகாரசீலன், இடம் - (அவனது) இடமாய், முலைகள் உண்டு - முலைகளையுண்டு, தழுவி - அணைத்து, குட்டியொடு - குட்டிகளோடு, முசுக்கலைகள் பாயும் - முசுக்கலைகள் பாய்தற்கிடமாகிய, புறவின் - குறிஞ்சிநிலத்தையுடைய, தண் கழுக்குன்றமே - குளிர்ச்சியையுடைய திருக்கழுக்குன்றத்தையே, புலைகள்தீர - (நமது) நீசத்துவம் ஒழியும்படி - தொழுமின் - வணங்குங்கள், எ - று.

வி - ரை. முலைகளுண்டு என்றது முலைப்பாலையுண்டு என்றபடி. முசு - ஓர் சாதிக்குரங்கு, கலை - ஆண்குரங்கு. (௫)

மடமுடையவடியார்தம்மனத்தேயுற
விடமுடையமிடறன்விண்ணவர்மேலவன்
படமுடையரவன்றன்பயிலுமிடங்
கடமுடையபுறவிற்றண்கழுக்குன்றமே.

ப - ரை. மடம் உடைய - மடத்தையுடைய, அடியார்தம் - அடியாரது, மனத்தே உற - மனத்தின்கண் பொருந்த, விடம் உடைய மிடறன் - விஷத்தை யணிந்த கண்டத்தை யுடையவன், விண்ணவர் மேலவன் - தேவர்களுள்ளே மேலானவன், படம் உடைய அரவன் - படத்தையுடைய பாம்பணியை யுடையவன், தான் - அவன்றான், பயிலும் இடம் - வாழுமிடமாவது, கடம் உடைய - அருநெறிகளுள்ள, புறவின் - குறிஞ்சி நிலத்தையுடைய, தண் - குளிர்ச்சியாகிய, கழுக்குன்றமே - திருக்கழுக்குன்றமேயாம், எ - று.

வி - ரை. மடம் உடைய என்பதற்கு அறியாமை நசிக்கும் பொருட்டு எனினுமாம், மிடறு - கண்டம். (௬)



ஊனமில்லாவடியார்தம்மனத்தேயுற
ஞானமூர்த்திநட்டமாடிநவிலுமிடந்
தேனும்வண்டுமதுவுண்டின்னிசைபாடியே
கானமஞ்ஞையுறையுந்தண்கழுக்குன்றமே.

ப - ரை. ஊனம் இல்லா - பழுதில்லாத, அடியார்தம் மனத்தே உற - அடியார்களது மனத்தில் பொருந்தும்படி, ஞானமூர்த்தி - ஞானரூபத்தையுடைய சிவபெருமான், நட்டம் ஆடி - நடனமாடி, நவிலும் இடம் - பழகுமிடமாவது, தேனும் வண்டும் - தேன்வண்டுகளும் கருவண்டுகளும், மதுஉண்டு - தேனைப்பருகி, இன் இசை பாடி - இனிய இசையைப்பாடி, கானம் மஞ்ஞை உறையும் - கானமயில்கள் வாழ்கின்ற, தண் கழுக்குன்றமே - குளிர்ச்சியாகிய திருக்கழுக்குன்றமேயாம், எ - று.

வி - ரை. ஊனம் - குற்றம், (அஞ்ஞானம்) ஞானமூர்த்தி - அறிவுருவன். நட்டம் - நடனம். (௭)

அந்தமில்லாவடியார்தம்மனத்தேயுற
வந்துநாளும்வணங்கிமாலொடுநான்முகன்
சிந்தைசெய்தமலர்கணித்தலுஞ்சேரவே
சந்தநாறும்புறவிற்றண்கழுக்குன்றமே.

ப - ரை. அந்தம் இல்லா - முடிவில்லாத, அடியார்தம் மனத்தே உற - அடியார்கள் மனத்தில் பொருந்த, மாலொடு நான்முகன் - திருமாலோடு பிரமனும், வந்து - வந்து, நாளும் வணங்கி - தினந்தோறும் வணங்கி, சிந்தைசெய்த மலர்கள் - சிந்தித்து அர்ச்சித்த மலர்கள், நித்தலும் சேர - நாள்தோறும் சேர்தலால், சந்தம் நாறும் புறவின் - அழகாக மணக்கின்ற குறிஞ்சிநிலத்தையுடைய, தண் கழுக்குன்றமே - குளிர்ச்சியாகிய திருக்கழுக்குன்றமேயாம், எ - று.

வி - ரை. அந்தம் இல்லா என்றது பெருமைக்கு முடிவில்லாத என்றபடி. சந்தநாறும் எனப் பாடங்கொண்டு மணம்வீசுகின்ற என்றுரைத்தலுமாம். (௮)

பிழைகள்தீரத்தொழுமின்புன்சடைப்பிஞ்ஞகன்
குழைகொள்காதன்குழகன்றானுறையுமிடம்
மழைகள்சாலக்கலித்துநீடுயர்வேய்களை
குழைகொண்முத்தஞ்சொரியுந்தண்கழுக்குன்றமே

ப - ரை. புன்சடை-புன்சடையையுடைய, பிஞ்ஞகன்-பிஞ்ஞகன், குண்டிழ கொள் காதன் - குழையையணிந்த காதையுடையவன், குழகன் - கட்டழகன், தான் - அவன்றான், உறையும் இடம் - வாழுமிடமாய், மழைகள் சால கலித்து - மேகங்கள் மிகுதியாக முழங்கி, நீடு உயர் - மிகவுமுயர்ந்த, வேயவை - மூங்கில்களானவை, குழை கொள் முத்தம் சொரியும்-செழிப்பைக்கொண்ட முத்துக்களைச் சொரிகின்ற, தண் கழுக்குன்றம்-குளிர்ச்சியாகிய திருக்கழுக்குன்றத்தை, பிழைகள் தீர - நமது தவறுகள் ஒழியும்படி, தொழுமின் - வணங்குங்கள், எ - று.

வி - ரை. பிஞ்ஞகன்-தலைக்கோலத்தையுடையவன். வேய்-மூங்கில், குழைத்தல் - செழித்தல். (க)

பல்லில்வெள்ளைத்தலையன்றான்பயிலுமிடங்
கல்லில்வெள்ளையருவித்தண்கழுக்குன்றினை
மல்லின்மல்குதிரடோளூரன்வனப்பினாற்
சொல்லல்சொல்லித்தொழுவாரைத்தொழுமின்களே.

ப - ரை. பல் இல் - பல் இல்லாத, வெள்ளைத்தலையன்-வெண்டலையை யுடையவனாகிய சிவபெருமான், பயிலும் இடம் - வாழுமிடமாகிய, கல்லில் - கற்பாறைகளின்மேல், வெள்ளை அருவி - வெண்மையாகிய அருவிகள் தவழ்கின்ற, தண் கழுக்குன்றினை - குளிர்ந்த திருக்கழுக்குன்றத்தை, மல்லின்மல்கு-மற்போரினால் நிரம்பின, திரள் தோள் - திரண்ட தோள்களையுடைய, ஊரன் - நாவலூரன், வனப்பினால் - அழகினால், சொல்லல் - சொன்ன பாடல்களை, சொல்லி தொழுவாரை - சொல்லி வணங்குவோரை, தொழுமின் - வணங்குங்கள், எ - று.

பல்லில் வெள்ளைத்தலை - பல்லுதிர்ந்த வெண்டலை, மல்-வளமெனினுமாம். (க0)

திருச்சிற்றம்பலம்.

---



திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

# கோளறு திருப்பதிகம்.

---

பண்-பியந்தைக்காந்தாரம்.

---

அடிமை.

---

திருச்சிற்றம்பலம்.

வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்
மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழம்வெள்ளி
சனிபாம்பிரண்டுமுடனே
யாசறுநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

ப - ரை. வேய் உறு தோளிபங்கன் - மூங்கில்போலும் தோள்களையுடைய உமாதேவியைப் பாகத்திலுடையவன், விடம் உண்ட கண்டன் - நஞ்சுண்ட கண்டத்தையுடையவன், மிக நல்ல வீணை தடவி - மிகவும் அழகாகிய வீணையை வருடி, மாசுஅறு திங்கள்-குற்றமற்ற சந்திரகண்டத்தையும், கங்கை-கங்கையையும், முடிமேல்அணிந்து-திருமுடியின்மீது தரித்து, என் உள்ளம் புகுந்த அதனால் - என் மனத்தில் புகுந்ததனால், ஞாயிறு - சூரியன், திங்கள்-சந்திரன், செவ்வாய் - அங்காரகன், புதன் - புதன், வியாழம் - குரு, வெள்ளி-சுக்கிரன், சனி - சனி, பாம்பு இரண்டும் உடனே - ராகு கேதுவென்கிற பாம்புகளிரண்டுமாகிய எல்லாம் உடன் கூடினாலும், அடியார் அவர்க்கு - அடியவராகிய அவர்களுக்கு, மிக - மிகுதியாக, ஆசு அறு - குற்றமறுதற்கேதுவாகிய, நல்ல நல்ல - நல்லன நல்லன, அவை - அவைகள், நல்ல நல்ல - நல்லன நல்லன, எ - று.

வி - ரை. வேயுறு என்பதில் உறு உவமவுருபு, வேயின் றன்மை யமைந்த எனினுமாம். ஞாயிறு என்று தொடங்கி பாம்பிரண்டும் என முடித்தது நவக்கிரகங்களை. கோள் - கிரகங்கள். இவற்றானுண்

டாருக் கின்ப மருதற் கேதுவாகையால் இந்தப் பதிகம் கோளறு திருப்பதிகம் எனப்பட்டது. (௧)

என்பொடுகொம்பொடாமையிவைமார்பிலங்க
　வெருதேறியேழையுடனே
பொன்பொதிமத்தமாலைபுனல்சூடிவந்தெ
　னுளமேபுகுந்தவதனா
லொன்பதொடொன்றொடேழுபதினெட்டொடாறு
　முடனாயநாள்களவைதா
மன்பொடுநல்லநல்லவவைநல்லநல்ல
　வடியாரவர்க்குமிகவே.

ப - ரை. என்பொடு கொம்பொடு ஆமை - எலும்பும் கொம்பும் ஆமையும் ஆகிய, இவை - இவைகள், மார்பு இலங்க - திருமார்பில் விளங்க, எருது ஏறி - இடபத்தின்மேலேறி, பொன்பொதி மத்தமாலை - அழகுபொருந்திய மத்தமலர் மாலையையும், புனல் - கங்கையையும், சூடி - தரித்து, ஏழையுடனே வந்து - உமாதேவியோடும் எழுந்தருளி, என் உள்ளம் புகுந்த அதனால் - என்மனத்தில் புகுந்ததனால், ஒன்பதொடு ஒன்றொடு ஏழு பதினெட்டொடு ஆறும் உடனாய நாள்கள் அவைதாம் - இருபத்தேழு நக்ஷத்திரங்களும், அன்பொடு - அன்புடனே, அடியார் அவர்க்கு——, நல்ல நல்ல——, எ - று.

வி - ரை. ஆமையென்றது - ஆமையோட்டை, ஏழை - பெண் பொதுப்பெயர், மத்தம்-ஊமத்தை, மத்தம்-இருமடியாகுபெயர். (௨)

உருவளர்பவளமேனியொளிநீறணிந்து
　வுமையோடும்வெள்ளைவிடைமேன்
முருகலர்கொன்றைதிங்கண்முடிமேலணிந்தெ
　னுளமேபுகுந்தவதனாற்
றிருமகள்கலையதூர்திசெயமாதுபூமி
　திசைதெய்வமானபலவு
மருநெதிநல்லநல்லவவைநல்லநல்ல
　வடியாரவர்க்குமிகவே.

ப - ரை. உருவளர் - அழகுவளர்கின்ற, பவளமேனி - பவளம் போலும் திருமேனியில், ஒளி நீறு அணிந்து - ஒளியையுடைய திருவெண்ணீற்றை யணிந்து, வெள்ளை விடைமேல் - வெள்ளெருதின் மேல், முருகு அலர் கொன்றை - வாசனையோடு மலர்கின்ற கொன்



றைமலர் மாலையையும், திங்கள் - பிறையையும், முடிமேல் அணிந்து - திருமுடிமீதணிந்து, உமையோடும் - உமாதேவியோடும், என் உள்ளம் புகுந்த அதனால் - என்மனத்தில் புகுந்ததனால், திருமகள் - திருமாது, கலையது ஊர்தி - துர்க்கை, சயமாது - விசயலக்ஷுமி, பூமி - பூதேவி, திசை - திசைகள், தெய்வம் - மற்றுமுள்ள தெய்வங்கள், ஆன - ஆகிய, பலவும் - பலவும், அருநெதி - பெறுதற்கரிய செல்வங்களாம், அடியார் அவர்க்கு——, நல்ல நல்ல, எ - று.

வி - ரை. முருகு - தேன் எனினுமாம். கலையதூர்தி யென்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. (௩)

மதிநுதன்மங்கையோடுவடபாலிருந்து
　மறையோதுமெங்கள்பரம
னதியொடுகொன்றைமாலைமுடிமேலணிந்தெ
　னுளமேபுகுந்தவதனாற்
கொதியுறுகாலனங்கிநமனோடுதூதர்
　கொடுநோய்களானபலவு
மதிகுணநல்லநல்லவவைநல்லநல்ல
　வடியாரவர்க்குமிகவே.

ப - ரை. மதி நுதல் மங்கையோடு - பிறைபோலும் நெற்றியையுடைய உமாதேவியோடு, வடபால் இருந்து - வடதிசையிலிருந்து, மறை ஓதும் - வேதங்களையோதுகிற, எங்கள் பரமன் - எமது பரமன், நதியொடு - கங்காநதியுடனே, கொன்றைமாலை - கொன்றை மலர் மாலையையும், முடிமேல் அணிந்து - திருமுடிமேலணிந்து, என் உள்ளம் புகுந்த அதனால் - என்மனத்திற் புகுந்ததனால், கொதி உறு காலன் - மனக்கொதிப்புள்ள யமன், அங்கி - அக்கினி, நமனோடு தூதர் - நமனுடனே அவன் தூதர், கொடுநோய்கள் - கொடிய பிணிகள், ஆன பலவும் - ஆகிய பலவும், அதி குணம் - மேன்மையாகிய குணமுள்ள, அடியார் அவர்க்கு——, நல்ல நல்ல——, எ - று.

வி - ரை. மதி சந்திரனுக்குப் பொதுப்பெயராயினும் இவ்விடத்து நுதலுக் குவமையாகப் புணர்க்கப்பட்டதனால் பிறையென் றுரை யுரைக்கப்பட்டது. அங்கி அக்கியென்னும் வடமொழித்திரிபு. (௪)

நஞ்சணிகண்டனெந்தைமடவாடனோடு
　விடையேறுநங்கள்பரமன்
றுஞ்சிருள்வன்னிகொன்றைமுடிமேலணிந்தெ
　னுளமேபுகுந்தவதனால்

வெஞ்சினவவுணரோடுமுருமிடியுமின்னு
மிகையானபூதமவையு
மஞ்சிடுநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

ப - ரை. நஞ்சு அணி கண்டன் - விஷத்தைத் தரித்த கண்டத்தையுடையவன், எந்தை - எமது தந்தை, மடவாள் தன்னொடு - மடப்பத்தை யுடையவளாகிய உமாதேவியோடு, விடை ஏறும் - எருதேறுகின்ற, எங்கள் பரமன் - எமது மேலோன், துஞ்சு இருள் - நிலைபெற்ற இருண்ட, வன்னி - வன்னியிலை, கொன்றை - கொன்றைமலர் மாலை, (இவற்றை) முடிமேல்அணிந்து - திருமுடிமீதணிந்து, என் உள்ளம் - என் மனத்தில், புகுந்த அதனால் - புகுந்ததனால், வெம் சினம் அவுணரோடும் - கொடிய கோபத்தையுடைய அவுணருடனே, இடியும் மின்னும் - இடியும் மின்னலும், மிகையான பூத மவையும் - துன்பத்தைச்செய்கிற பூதங்களும், அஞ்சிடும் - அஞ்சும், அடியார் அவர்க்கு ——, நல்ல நல்ல ——, எ - று.

வி - ரை. வன்னியிலை மிகக் கருநிறமுடைமையால் 'துஞ்சிருள் வன்னி' என்றார். மிகை-குற்றம். அது இங்குத் துன்பத்தைக் குறித்தது. (௩)

வாள்வரியதளதாடைவரிகோவணத்தர்
மடவாடனோடுமுடனாய்
நாண்மலர்வன்னிகொன்றைநதிசூடிவந்தெ
னுளமேபுகுந்தவதனாற்
கோளரியுழுவையோடுகொலையானைகேழல்
கொடுநாகமோடுகரடி
யாளரிநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

ப - ரை. வாள் - ஒளியுள்ள, வரிஅதள் அது ஆடை - வேங்கைப்புலித்தோலாகிய ஆடையை, வரி - வரிந்துகட்டின, கோவணத்தர் - கோவணத்தையுடையவர், நாண்மலர் வன்னி - புதியமலர்களோடு கூடியவன்னி, கொன்றை - கொன்றைமலர்மாலை, நதி - கங்காநதி, (இவைகளை) சூடி - தரித்து, வந்து - எழுந்தருளி, என் உள்ளம் புகுந்த அதனால் - என்மனத்தில் புகுந்ததனால், கோள் - துன்பத்தைச்செய்கிற, அரி - சிங்கம், உழுவையொடு - புலியுடனே, கொலையா



னை - கொலைத்தொழிலையுடையயானை, கேழல் - பன்றி, கொடுநாகமோடு - கொடியபாம்புடனே, கரடி - கரடி, ஆளரி - நரசிங்கம், அடியார் அவர்க்கு ——, நல்ல நல்ல ——, எ - று.

வி - ரை. அதளது என்பதில் அது பகுதிப் பொருள்விகுதி, வரி கோவணத்தர் வினைத்தொகை நிலைத்தொடர். (௪)

செப்பிளமுலைநன்மங்கையொருபாகமாக
விடையேறுசெல்வனடைவா
ரொப்பிளமதியுமப்புமுடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
வெப்பொடுகுளிரும்வாதமிகையானபித்தும்
வினையானவந்துநலியா
வப்படிநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

ப - ரை. செப்பு - செப்புப்போன்ற, இளமுலை - இளமுலைகளையுடைய, நல்மங்கை - அழகாகிய உமாதேவி, ஒருபாகம் ஆக-ஒருபாகத்திலமர்ந்திருப்பவளாக, விடைஏறுசெல்வன்-இடபமேறுகின்ற செல்வன், அடைவார் ஒப்பு - அடைவோர் விரும்புதற்குரியவன், இளமதியும் - பாலசந்திரனையும், அப்பும் - கங்கையையும், முடிமேல் அணிந்து - திருமுடிமீதணிந்து, என்உள்ளம்புகுந்த அதனால் - என் மனத்தில் புகுந்ததனால், வெப்பொடுகுளிரும் - வெப்பத்துடன் குளிர்ச்சியும், வாதம் - வாதமும், மிகையானபித்தும் - துன்பத்தைச்செய்கிறபித்தமும், வினையான - வினைகளானவையும், வந்து நலியா - வந்துவருத்தமாட்டா, அப்படி-அவ்வாறே, அடியார் அவர்க்கு ——, நல்ல நல்ல ——, எ - று.

வி - ரை. செப்பு - பொற்கிண்ணமுமாம், மங்கை - மங்கைப்பருவத்தையுடையவள், மங்கைப்பருவம் பன்னிரண்டுவயதுள்ளது.()

வேள்படவிழிசெய்தன்றுவிடைமேலிருந்து
மடவாடனோடுமுடனாய்
வாண்மதிவன்னிகொன்றைமலர்சூடிவந்தெ
னுளமேபுகுந்தவதனா
லேழ்கடல்சூழிலங்கையரையன்றனோடு
மிடரானவந்துநலியா
வாழ்கடனல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

ப - ரை. வேள் - மன்மதன், பட - இறக்க, அன்று - அக்காலத்தில், விழிசெய்து - விழித்தலைச்செய்து, விடைமேல் இருந்து - இடபத்தின்மீதிருந்து, மடவாள் தன்னோடும் உடனாய் - உமாதேவியோடு கூடினவனாய், வாண்மதி - ஒளியையுடையபிறை, வன்னிகொன்றைமலர் - வன்னியும் கொன்றையுமாகிய இவற்றின்மலர்கள், (இவற்றை) சூடி - தரித்து, வந்து - எழுந்தருளி, என் உள்ளம் புகுந்த அதனால் - என் மனத்தில் புகுந்ததனால், ஏழ்கடல்சூழ் - ஏழுகடல் சூழ்ந்த, இலங்கை அரையன் தன்னோடு - இலங்கைக்கரசனாகிய ராவணனுடனே, இடரான - (மற்றைய) துன்பங்களானவைகளும், வந்து நலியா - வந்து வருத்தமாட்டா, ஆழ் கடல் - ஆழ்ந்த கடல்களும், அடியார் அவர்க்கு——, நல்ல நல்ல——, எ - று.

வி - ரை. வேள் - விருப்பத்தையுண்டாக்குவோன், விழி-முதனிலைத் தொழிற்பெயர், விழிசெய்து என்பதை ஒருசொல்லாக்கி விழித்து என்றுரைப்பினுமாம். ஏழ்கடல்களாவன - உவர்நீர்க்கடல், நன்னீர்க்கடல், பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், தேன்கடல் என்பன. (அ)

பலபலவேடமாகும்பரனாரிபாகன்
பசுவேறுமெங்கள்பரமன்
சலமகளோடெருக்குமுடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
மலர்மிசையோனுமாலுமறையோடுதேவர்
வருகாலமானபலவு
மலைகடல்மேருநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

ப - ரை. பலபல வேடம் ஆகும்பரன் - பலபல வுருவங்களெடுக்கிறமேலோன், நாரிபாகன் - பெண்பாகன், பசு ஏறும் - இடபமேறுகின்ற, எங்கள் பரமன் - எமதுபரமன், சலமகளோடு - கங்காதேவியோடு, எருக்கும் - எருக்கமலரையும், முடிமேல் அணிந்து - திருமுடிமீதணிந்து, என் உள்ளம் - என்மனத்தில், புகுந்த அதனால் - புகுந்ததனால், மலர்மிசையோனும் - தாமரைமலர்மேலிருப்பவனாகிய பிரமனும், மாலும் - திருமாலும், மறையோடு - வேதங்களுடன், தேவர் - தேவர்கள், வருகாலம் ஆனபலவும் - வருகிற காலமும் ஆகிய பலவும், அலைகடல் - அலைசயா நின்ற கடலும், மேரு - மேருமலையும், அடியார் அவர்க்கு——, நல்ல நல்ல——, எ - று.



வி - ரை. நாரி வடசொல், தமிழ்ச் சொல்லாகக்கொண்டு அன்புடையவன் என்றுரைப்பினுமாம். நார் - அன்பு, பசு - பொதுப்பெயராயினும் இவ்விடத்து ஏறும் என்றுங் குறிப்பால் விடையைக்குறித்தது. (கூ)

கொத்தலர்குழலியோடுவிசயற்குநல்கு
குணமாயவேடவிகிர்தன்
மத்தமுமதியுநாகமுடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனாற்
புத்தரொடமணைவாதிலழிவிக்குமண்ண
றிருநீறுசெம்மைதிடமே
யத்தகுநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

ப - ரை. கொத்து அலர் குழலியோடு - பூங்கொத்துக்கள் மலர்கின்ற கூந்தலையுடையவளாகிய உமாதேவியோடு, விசயற்கு நல்கு - அருச்சுனனுக்கு அருள்செய்த, குணம் ஆய - நற்குணத்தையுடைய, வேடவிகிர்தன் - வேடனாகிய மெய்யன், மத்தமும் - ஊமத்தமலரையும், மதியும் - பிறையையும், நாகமும் - பாம்பையும், முடிமேல் அணிந்து - திருமுடிமீது அணிந்து, என் உள்ளம் புகுந்த அதனால் - என் மனத்தில் புகுந்ததனால், புத்தரொடு - புத்தருடனே, அமணை - அமணரை, வாதில் அழிவிக்கும் - வாதில் அழியச்செய்யும், அண்ணல் - பெரியோனது, திருநீறு - திருநீறானது, செம்மைதிடம் - செம்மையும் உறுதியுமாம், அத்தகு - அந்தத்தகுதியான, அடியார் அவர்க்கு——, நல்ல நல்ல——, எ - று.

வி - ரை. மத்தமும்மதியும் என்பதற்கேற்ப நாகத்துக்கும் உம்மை சேர்க்கப்பட்டது. (௧0)

தேனமர்பொழில்கொளாலைவிளைசெந்நெறுன்னி
வளர்செம்பொனெங்குநிகழ
நான்முகனாதியாயபிரமாபுரத்து
மறைஞானஞானமுனிவன்
றானுறுகோளுநாளுமடியாரைவந்து
நலியாதவண்ணமுரைசெய்
யானசொன்மாலையோதுமடியார்கள்வானி
லரசாள்வராணைநமதே.

ப - ரை. தேன் அமர் - தேன்பொருந்திய, பொழில் கொள் - சோலைகளைக்கொண்ட, ஆலை-கரும்புகளும், விளை செந்நெல்-விளைந்த செந்நெல்லும், துன்னி வளர்-நெருங்கி வளர்கின்ற, செம்பொன் எங்கும் திகழ - செம்பொற் குவியல்கள் எவ்விடத்தும்விளங்க, நான்முகன் ஆதியாய - நான்முகன் முதலாகிய, பிரமாபுரத்து - பிரமபுரத்தில் அவதரித்த, மறைஞானம் - வேதவுணர்ச்சியையுடைய, ஞானமுனிவன் - ஞானசம்பந்தன், தான் - தான், உறு-மிகுக்க, கோளும் நாளும் - கிரகங்களும் நட்சத்திரங்களும், அடியாரை - அடியவரை, வந்து நலியாதவண்ணம் - வந்து வருத்தாதபடி, உரைசெய் - சொல்லிய, ஆன - இதமாகிய, சொல்மாலை - சொல்மாலையை, ஓதும் அடியார்கள் - ஓதுகின்ற அடியவர்கள், வானில் - மேலுலகத்தில், நமது ஆணை - எம்மீது ஆணைப்படி, அரசாள்வர் - அரசுசெய்யக் கடவர், எ - று.

வி - ரை. ஆலைவிளை செந்நெல் என்பதற்கு கரும்புபோல விளைகின்ற செந்நெல் என்றுரைப்பினுமமையும், துன்னல் - நெருங்கல், சொல்மாலை - பாடல். (கக)

திருச்சிற்றம்பலம்

---

திருநாவுக்கரசுநாயனார்

## திருவாரூர்த்திருவிருத்தம்.

---

பண்-கொல்லி.

---

அ டி மை.

---

திருச்சிற்றம்பலம்,

குலம்பலம்பாவருகுண்டர்முன்னேநமக்குண்டுகொலோ
அலம்பலம்பாவருதண்புனலாரூரவிர்சடையான்
சிலம்பலம்பாவருசேவடியான்றிருமூலட்டானம் [மே.
புலம்பலம்பாவருதொண்டர்க்குத்தொண்டாம்புண்ணிய



ப - ரை. அலம்பல் - ஒலித்தலோடு, அம் பாவரு - அழகாகப் பாவிவருகிற, தண் புனல் - குளிர்ச்சியாகிய கங்கையானது, அவிர் சடையான் - விளங்குகின்ற சடையையுடையவன், சிலம்பு - சிலம்புகள், அலம்பாவரு - சத்திக்கிற, சேவடியான் - திருவடியையுடையவன், (அவனது) ஆரூர் - திருவாரூரிலுள்ள, திருமூலட்டானம் - திருமூலட்டானத்தில், புலம்பு - ஐம்புலத்துன்பத்தை, அலம்பாவரு-ஒழித்துக்கொண்டே வருகிற, தொண்டர்க்கு-அடியார்க்கு, தொண்டர் ஆம்-அடியாராதற்குரிய, புண்ணியம் - புண்ணியமானது, குலம்-கூட்டமாகவும், பலம் - திண்ணியராகவும், பாவரு - பரவிவருகிற, குண்டர்முன்னே - சமணருக்கெதிரே, நமக்கு-எமக்கு, உண்டுகொலோ - உண்டாகுமோ, எ - று.

வி - ரை. புனல் - நீர், அது இனையாகுபெயராய்க் கங்கையை யுணர்த்திற்று. சிலம்பு - காற்சிலம்பு (சிறு சதங்கை), அலம்பல்-ஒலித்தல், கழுவலுமாம். புலம்பலம் பாவரு தொண்டர் என்பதற்கு ஐம்புலன்களின் வலி பொருந்துதலில்லாத என்றுரைப்பினு மமையும். ஐம்புலன்கள்: சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், என்பன. புலம் என்பதற்குப் பொறியென்று பொருள் கூறுதலுமுண்டு. அப்பொருட்கு ஐம்பொறிகளின் வலியெனக் கொள்க. (க)

மற்றிடமின்றிமனைதுறந்தல்லுணாவல்லமணர், சொற்றிடமென்றுதுரிசுபட்டேனுக்குமுண்டுகொலோ, விற்றிடம்வாங்கிவிசயனொடன்றொருவேடுவனாய்ப், புற்றிடங்கொண்டான்றன்றொண்டர்க்குத்தொண்டாம்புண்ணியமே.

ப - ரை. மற்று இடம் இன்றி - வேறு இடமில்லாமல், மனை துறந்து - வீட்டைவிட்டு, அல் உணா - இரவில் உண்ணாத, வல் அமணர் - வலிய அமணருடைய, சொல்-சொல்லானது, திடம் என்று - உறுதியைத்தருவதென்று, துரிசுபட்டேனுக்கும் - குற்றத்தை யடைந்தவனுக்கும், வில் - வில்லை, திடம்வாங்கி-உறுதியாகவளைத்து, விசயனொடு - அருச்சுனனோடு, அன்று-அக்காலத்தில், ஒருவேடுவனாய் - ஒரு வேடனாகி, புற்றிடங் கொண்டான்றன் - புற்றிடங்கொண்டவனது, தொண்டர்க்குத் தொண்டர் ஆம்-அடியார்க்கடியராகிற, புண்ணியம் - புண்ணியமானது, உண்டுகொலோ-உண்டாமோ, எ - று,

வி - ரை. இரவு வருமுன்பே அந்திப்போதிலுண்பவராதலால் அமணரை 'அல்லுணாவல்லமணர்' என்றார். (உ)

ஒருவடிவின்றிநின்றுண்குண்டர்முன்னமக்குண்டுகொலோ, செருவடிவெஞ்சிலையாற்புரமட்டவன்சென்றடையாத்,

திருவுடையான் திருவாரூர்த் திருமூலட் டானன் செங்கட்
பொருவிடையா னடித்தொண்டர்க் குத்தொண்டாம் புண்ணி
யமே.

ப - ரை. செரு - போரில், வடி - தேர்ந்தெடுத்த, வெம் சிலையால் - கொடிய வில்லினால், புரம் அட்டவன் - முப்புரத்தை அழித்தவன், சென்று அடையா - போய் அடையவொண்ணாத, திருவுடையான் - முத்திச்செல்வத்தையுடையவன், திருவாரூர் - திருவாரூரிலுள்ள, திருமூலட்டானன் - திருமூலட்டானத்தை யுடையவன், செங்கண் - சிவந்த கண்களையுடைய, பொரு - போர்செய்கின்ற, விடையான் - இடபத்தையுடையவன், (அவனது) அடி - திருவடிகளுக்கு, தொண்டர்க்குத் தொண்டர் ஆம் - அடியார்க்கடியராகின்ற, புண்ணியம் - புண்ணியமானது, ஒருவடிவு இன்றி நின்று - ஒருவுருவமில்லாமல்நின்று, உண் - உண்ணுகின்ற, குண்டர்முன் - அமணர்க்கு எதிரே, நமக்கு உண்டு கொலோ - நமக்கு உண்டாகுமோ, எ - று.

வி - ரை. பொன் யாவர்க்கும் விருப்பத்தை யுண்டாக்குவதாதலாலும், திரிபுரசங்காரகாலத்தில் இறைவற்கு வில்லாயிருந்தது பொன்மலையாகிய மேருவாதலாலும், 'வெம்சிலை' என்றார் எனினுமாம். வெம்மை - விருப்பம். அட்டவன் என்பதற்குப் பகுதி அடு. (௯)

மாசினையே றியமேனியர் வன்கண்ணர் மொண்ணரைவிட்
டீசனையே நினைத்தேசறு வேனுக்குமுண்டுகொலோ
தேசனையாரூர்த் திருமூலட்டானனைச் சிந்தைசெய்து
பூசனைப்பூசுரர் தொண்டர்க்குத் தொண்டாம் புண்ணியமே. (௰)

ப - ரை. தேசனை - ஒளியுருவானவனை, ஆரூர் - திருவாரூரிலுள்ள, திருமூலட்டானனை - திருமூலட்டானத்தை யுடையவனை, சிந்தைசெய்து - சிந்தித்து, பூசனை - பூசனைசெய்கின்ற, பூசுரர் தொண்டர்க்கு - வேதியராகிய அடியார்களுக்கு, தொண்டர் ஆம் - அடியராகின்ற, புண்ணியம் - புண்ணியமானது, மாசினை ஏறிய மேனியர் - அழுக்கையுடைய வுடம்பையுடையவர், வன் கண்ணர் - வன்கண்மையுடையவர், (ஆகிய) மொண்ணரைவிட்டு - அமணரைவிட்டு, ஈசனையே நினைத்து - சிவபிரானையே நினைந்து, ஏசறுவேனுக்கும் - பழிப்பற்றவனாகிய எனக்கும், உண்டுகொலோ - உண்டாமோ, எ - று.

வி - ரை. வன்கண்ணர் - வைராக்கியசாலிகள்; வன்கண்மை - வைராக்கியம், ஏச - முதனிலைத் தொழிற்பெயர். (௰?)



அருந்தும்பொழுதுரையாடா வமணர் திறமகன்று
வருந்தி நினைந்தரனேயென்று வாழ்த்துவேற் குண்டுகொலோ
திருந்திய மாமதிலாரூர்த் திருமூலட்டானனுக்குப்
பொருந்துந் தவமுடைத் தொண்டர்க்குத் தொண்டாம்புண் [ணியமே.

ப - ரை. திருந்திய - திருத்தமாகிய, மாமதில் - பெரிய மதில் சூழ்ந்த, ஆரூரில் - திருவாரூரிலுள்ள, திருமூலட்டானனுக்கு - திருமூலட்டானனாகிய சிவபெருமானை, பொருந்தும் - அடைதற்குரிய, தவம் உடை - தவத்தையுடைய, தொண்டர்க்கு - அடியார்க்கு, தொண்டர் ஆம் - தொண்டராகின்ற, புண்ணியம் - புண்ணியமானது, அருந்தும்பொழுது - உண்ணும்பொழுது, உரையாடா - பேசாத, அமணர் திறம் அகன்று - அமணர் கூட்டத்தினின்றும் நீங்கி, வருந்தி நினைந்து - வருந்தி தியானித்து, அரனே என்று வாழ்த்துவேற்கு - அரனே என்று துதிப்பவனாகிய எனக்கு, உண்டுகொலோ - உண்டாமோ, எ - று.

வி - ரை. உரையாடல் - ஒருசொல், பேசல் என்பது பொருள். திருந்திய என்றது சிற்பத்தொழில் திருத்தமாகச் செய்யப்பட்டது என்றபடி. மாமதில் - அழகாகிய மதில் எனினுமாம். (௧௧)

வீங்கிய தோள்களுந் தாள்களுமாய் நின்று வெற்றரையே
மூங்கைகள் போலுண்ணு மூடர்முன் னேநமக் குண்டுகொலோ
தேங்கமழ் சோலைத் தென்னாரூர்த் திருமூலட்டானன் செய்ய
பூங்கழலானடித் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே.

ப - ரை. தேம் கமழ்சோலை - தேன் பரிமளிக்கின்ற சோலைகள் சூழ்ந்த, தென் ஆரூர் - அழகிய திருவாரூரிலுள்ள, திருமூலட்டானன் - திருமூலட்டானத்தை யுடையவன், செய்ய பூ கழலான் - செந்தாமரை மலர்போன்ற திருவடியையுடையவன், (அவனது) அடித்தொண்டர்க்கு - திருவடித்தொண்டு செய்வார்க்கு, தொண்டர் ஆம் - தொண்டராகின்ற, புண்ணியம் - புண்ணியமானது, வீங்கிய தோள்களும் தாள்களும் ஆய் நின்று - பெருத்த தோள்களும் அடிகளுமாய் நின்று, வெற்றரையே - வெற்றரையாகவே, மூங்கைகள் போல் - ஊமைகள்போல, உண்ணும் - உண்ணுகின்ற, மூடர் முன்னே - மூடர்களுக்கு எதிரே, நமக்கு உண்டுகொலோ - நமக்குண்டாமோ, எ - று.

வி - ரை. தோள்களும் தாள்களுமாய் - கைகளும் கால்களுமாய், வெற்றரை - ஆடையுடுக்காத அரை, தேம்கமழ் - மணம் வீச

நின்ற வெனினுமமையும், தென்னாரூர் - தென்றிசையிலுள்ள திருவாரூர்என்றது மொன்று. (சு)

பண்ணியசாத்திரப்பேய்கள்பறிதலைக்குண்டரைவிட்
டெண்ணில்புகழீசன்றன்னருள்பெற்றேற்குமுண்டேகொலோ
திண்ணியமாமதிலாரூர்த்திருமூலட்டானனெங்கள் [யமே.
புண்ணியன்றன்னடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணி

ப - ரை. திண்ணிய - உறுதியான, மாமதில் - பெரியமதில் சூழ்ந்த, ஆரூர் - திருவாரூரிலுள்ள, திருமூலட்டானன் - திருமூலட்டானத்தையுடையவன், எங்கள் புண்ணியன் - எங்கள் புண்ணிய வடிவன், தன் - அவனது, அடித்தொண்டர்க்கு - திருவடித்தொண்டு செய்வார்க்கு, தொண்டர் ஆம் - தொண்டராகின்ற, புண்ணியம் - புண்ணியமானது, பண்ணிய - உண்டாக்கப்பட்ட, சாத்திரம் - சாத்திர ஆராய்ச்சியுள்ள, பேய்கள் - பிசாசங்களாகிய, பறிதலைக்குண்டரை - பறிதலையையுடையசமணரை, விட்டு - நீங்கி, எண் இல் புகழ் - அளவற்றபுகழையுடைய, ஈசன்றன் - சிவ பெருமானது, அருள்பெற்றேற்கும் - அருள்பெற்ற எனக்கும், உண்டேகொலோ - உண்டாகுமோ, எ - று.

வி - ரை. ஈசன்றன் என்பதில் தன் சாரியை, பறிதலை - மயிர் பறித்ததலை. இறைவன் புகழளவறுக்க வொண்ணாமையால் 'எண்ணில் புகழீசன்' என்றார். (எ)

கரப்பர்கண்மெய்யைத்தலைபறிக்கச்சுகமென்னுங்குண்ட
ருரைப்பனகேளாதிங்குய்யப்போந்தேனுக்குமுண்டேகொலோ
திருப்பொலியாரூர்த்திருமூலட்டானன்றிருக்கயிலைப் [யமே.
பொருப்பன்விருப்பமர்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணி

ப - ரை. திருப்பொலி - செல்வம்மிகுந்த, ஆரூர் - திருவாரூரிலுள்ள, திருமூலட்டானன் - திருமூலட்டானத்தையுடையவன், திருக்கயிலைப் பொருப்பன் - திருக்கயிலைமலையையுடையவன், (அவனது) விருப்பு அமர் தொண்டர்க்கு - விருப்பம் அமைந்த தொண்டருக்கு, தொண்டர் ஆம் - தொண்டராகின்ற, புண்ணியம் - புண்ணியமானது, மெய்யை - உடம்பை, கரப்பர்கள் - மறைப்பவர்களாய், தலைபறிக்க - தலைமயிரைப்பறிக்க, சுகம் என்னும் - சுகமென்று சொல்லுகின்ற, குண்டர் - சமணர், உரைப்பன கேளாது - சொல்லுவனவற்றைக் கேட்காமல், இங்கு - இவ்விடத்தில், உய்யப்போந்தேனுக்கும் - உய்யவந்த எனக்கும், உண்டேகொலோ - உண்டாமோ, எ - று.



வி - ரை. கரத்தல் - மறைத்தல், சுகம் - இன்பம், உய்தல் - கடைத்தேறுதல். (அ)

கையிலிடுசோறுநின்றுண்ணுங்காதலமணரைவிட்
டுய்யுநெறிகண்டிங்குய்யப்போந்தேனுக்குமுண்டேகொலோ
வையனணிவயலாரூர்த்திருமூலட்டானனுக்குப் [யமே.
பொய்யன்பிலாவடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணி

ப - ரை. ஐயன் - ஐயனாகிய, அணிவயல் - அழகியவயல்கள் சூழ்ந்த, ஆரூர் - திருவாரூரிலுள்ள, திருமூலட்டானனுக்கு - திருமூலட்டானத்தை யுடையவனுக்கு, பொய் அன்பு இல்லா - பொய் அன்பு இல்லாதவராய், அடித்தொண்டர்க்கு - அடித்தொண்டு செய்வார்க்கு, தொண்டர் ஆம் - தொண்டராகின்ற, புண்ணியம் - புண்ணியமானது, கையில் இடுசோறு - கையிலிட்டசோற்றை, நின்று உண்ணும் - நின்றபடியே உண்ணுகின்ற, காதல் அமணரை விட்டு - ஆசைப் பெருக்கத்தையுடைய அமணரை நீங்கி, உய்யும் நெறிகண்டு - பிழைக்கும் வழியைக்கண்டு, இங்கு - இவ்விடத்தில், உய்யப்போந்தேனுக்கும் - பிழைக்கவந்த எனக்கும், உண்டேகொலோ - உண்டாமோ, எ - று.

வி - ரை. பொய்யன்பில்லா என்றதனால் மெய்யன்புள்ள எனப்பொருள்கொள்க. ஐ - தலைமையானால் தலைவன் என்றும் ஐ அழகாதலால் அழகனென்றும், ஐ ஐந்தாதலால் பஞ்சகிருத்தியங்களையும் நடத்துவோனென்றும் பொருளுரைத்துக்கொள்க. (கூ)

குற்றமுடையவமணர்திறமதுகையகன்றிட்
டுற்றகருமஞ்செய்துய்யப்போந்தேனுக்குமுண்டேகொலோ
மற்பொலிதோளானிராவணன்றன்வலிவாட்டுவித்த [யமே.
பொற்கழலானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணி

ப - ரை. மல்பொலி - மற்போரால் விளங்குகின்ற, தோளான் - தோள்களையுடையவனாகிய, இராவணன்றன் - இராவணனது, வலி - வலிமையை, வாட்டுவித்த - அழித்த, பொன்கழலான் - பொன்போலும் திருவடியையுடையவனது, அடித்தொண்டர்க்கு - திருவடித்தொண்டு செய்வார்க்கு, தொண்டர் ஆம் - தொண்டராகின்ற, புண்ணியம் - புண்ணியமானது, குற்றம் உடைய - குற்றத்தையுடைய, அமணர் திறமது - அமணர்மதத்தை, கையகன்றிட்டு - கைவிட்டு நீங்கி, உற்ற கருமம் செய்து - அடுத்த கருமங்களைச்செய்து, உய்யப்போந்தேனுக்கும் - பிழைக்கவந்த எனக்கும், உண்டேகொலோ - உண்டாமோ, எ - று.

வி - ரை. கையகன்றிட்டு - ஒருசொல், விட்டு என்பதனோ டொன், இதற்குப் பகுதிகையகல். திறமது என்பதில் அது பகுதிப் பொருள்விகுதி. உற்ற கருமம் - செய்யத்தகுந்த காரியம், அதாவது அடியார் தொண்டுசெய்தல். (௧௦)

திருச்சிற்றம்பலம்

---

சுந்தரமூர்த்திநாயனார்

## திருத்தொண்டத்தொகை.

பண்கொல்லிக்கௌவாணம்.

---

அ டி மை.

---

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்
றிருநீலகண்டத்துக்குயவனார்க்கடியே
னில்லையேயென்னாதவியற்பகைக்குமடியே
னிளையான்றன்குடிமாறனடியார்க்குமடியேன்
வெல்லுமாமிகவல்லமெய்ப்பொருளுக்கடியேன்
விரிபொழில்சூழ்குன்றையார்விறன்மிண்டற்கடியே
னல்லிமென்முல்லையந்தாரமர்நீதிக்கடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே.

ப - ரை. தில்லைவாழ் அந்தணர்தம் - தில்லைவாழ் அந்தணரு டைய, அடியார்க்கும் அடியேன் - அடியவருக்கும் அடியேன், திரு நீலகண்டத்துக்குயவனார்க்கு - திருநீலகண்டக்குயவருக்கு, அடியேன் - அடியேன், இல்லை என்னாத - இல்லை என்று சொல்லாத, இயற் பகைக்கும் - இயற்பகையாருக்கும், அடியேன் - அடியேன், இளை யான்றன் குடிமாறன் அடியார்க்கும் - இளையான்குடிமாறனது அடி யவருக்கும், அடியேன் - அடியேன், வெல்லுமா மிகவல்ல - வெல் லும் வழியில் மிக வல்லவராகிய, மெய்ப்பொருளுக்கு - மெய்ப்பொ



நாயனார்க்கு, அடியேன் - அடியேன், விரிபொழில்சூழ் - விரிந்த சோலைகள் சூழ்ந்த, குன்றையார் - குன்றையூரிலுள்ள, விறல் மிண் டற்கு - விறல் மிண்டநாயனார்க்கு, அடியேன் - அடியேன், அல்லி - அகவிதழ்களையுடைய, மெல் - மெல்லிய, அம் - அழகாகிய, முல்லைத் தார் - முல்லை மாலையணிந்த, அமர்நீதிக்கு - அமர்நீதிநாயனார்க்கு, அடியேன் - அடியேன், ஆரூரன் - ஆரூரன், ஆரூரில் அம்மானுக்கு ஆள் - ஆரூரில் எழுந்தருளிய அம்மானுக்கு அடிமை, எ - று.

வி - ரை. தில்லைவாழந்தணர் - தில்லை மூவாயிரவர், இளை யான்றன் என்பதில் தன் சாரியை, (௧)

இலைமலிந்தவேனம்பியெறிபத்தற்கடியே
னேனாதிநாதன்றனடியார்க்குமடியேன்
கலைமலிந்தசீர்நம்பிகண்ணப்பற்கடியேன்
கடவூரிற்கலயன்றனடியார்க்குமடியேன்
மலைமலிந்ததோள்வள்ளன்மானக்கஞ்சாற
னெஞ்சாததாயனடியார்க்குமடியே
னலைமலிந்தபுனன்மங்கையானாயற்கடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே.

ப - ரை. இலைமலிந்த - இலைவடிவினைப் பொருந்திய, வேல் - வேற்படையைத்தாங்கிய, நம்பி - குணபூர்த்தியுள்ள, எறிபத்தற்கு - எறிபத்தநாயனார்க்கு, அடியேன் - அடியேன், ஏனாதிநாதன் - ஏனாதி நாதனுடைய, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், கலைமலிந்தசீர் - ஞானாராய்ச்சி மிகுந்த சிறப்பினையுடைய, நம்பி - குணபூர்த்தியுள்ள, கண்ணப்பற்கு - கண்ணப்பநாயனார்க்கு, அடி யேன் - அடியேன், கடவூரில் - திருக்கடவூரிலுள்ள, கலயன் - கலய நாயனாரது, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், மலைமலிந்ததோள் - மலைபோல் பருத்த தோள்களையுடைய, வள்ளல் - உதாரகுணமுள்ள, மானக்கஞ்சாறன் - மானக்கஞ்சாறநாயனார், எஞ் சாத - குறையாத, வாள் தாயன் - வாளையுடைய தாயநாயனார், (இவர்களு டைய) அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், அலைமலிந்த - அலைகள் மிகுந்த, புனல் - நீர்சூழ்ந்த, மங்கை - மங் கை நகரத்தையுடைய, ஆனாயற்கு - ஆனாயநாயனார்க்கு, அடியேன் - அடியேன், ஆரூரன் - ஆரூரில் அம்மானுக்கு ஆள், எ - று.

வி - ரை. ஏனாதிநாதன்றன் என்பதில் தன் சாரியை, கலயன் றன் என்பதிலும் தன் சாரியை. (௨)

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்குமடியேன்
முருகனுக்குமுருத்திரபசுபதிக்குமடியேன்
செம்மையேதிருநாளைப்போவார்க்குமடியேன்
திருக்குறிப்புத்தொண்டர்தம்மடியார்க்குமடியேன்
மெய்ம்மையேதிருமேனிவழிபடாநிற்க
வெகுண்டெழுந்ததாதையைமழுவினாலெறிந்த
அம்மையானடிச்சண்டிப்பெருமானுக்கடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே.

ப - ரை. மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் - மூன்றினால் உலகத்தையாண்ட மூர்த்திநாயனார்க்கும், அடியேன்-அடியேன், முருகனுக்கும்-முருகநாயனார்க்கும், உருத்திர பசுபதிக்கும் - உருத்திரபசுபதி நாயனார்க்கும், அடியேன் - அடியேன், செம்மையே - செவ்வையாகவே, திருநாளைப்போவார்க்கும் - திருநாளைப்போவார் நாயனார்க்கும், அடியேன் - அடியேன், திருக்குறிப்புத்தொண்டர் - திருக்குறிப்புத்தொண்ட நாயனாருடைய, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், மெய்ம்மையே - மெய்ம்மையாகவே, திருமேனி - தன் திருமேனியினால், வழிபடாநிற்க-சிவலிங்கத்தை வழிபடாநிற்க, வெகுண்டு எழுந்த தாதையை - கோபித்தெழுந்த தன் தந்தையை, மழுவினால் எறிந்த - மழுவினால் வெட்டின, அம்மையான் - அழகுள்ளவனாகிய, அடி - அடித் தொண்டு பூண்ட, சண்டிப்பெருமானுக்கு - சண்டேசுரநாயனார்க்கு, அடியேன்-அடியேன், ஆரூரன் ——, எ - று.

வி - ரை. மும்மை - மூன்று, அவை, விபூதி, உருத்திராக்கம், சடை என்பன. திருக்குறிப்புத்தொண்டர்தம் என்பதில் தம் சாரியை. திருமேனி-சிவபிரானது திருவுருவாகிய சிவலிங்கத்தையென்றுரைத்தலுமாம். (௯)

திருநின்றசெம்மையேசெம்மையாக்கொண்ட
திருநாவுக்கரையன்றனடியார்க்குமடியேன்
பெருநம்பிகுலச்சிறைதனடியார்க்குமடியேன்
பெருமிழலைக்குறும்பற்கும்பேயார்க்குமடியே
னொருநம்பியப்பூதியடியார்க்குமடியே
னொலிபுனல்சூழ்சாத்தமங்கைநீலநக்கற்கடியே
னருநம்பிநமிநந்தியடியார்க்குமடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே.



ப - ரை. திருநின்ற செம்மையே - திருவருளாகிய நிலைபெற்ற செல்வத்தையே, செம்மையாக்கொண்ட - செல்வமாகக்கொண்ட, திருநாவுக்கரையன் - திருநாவுக்கரசு நாயனாரது, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், பெருநம்பி - பெரியகுண பூர்த்தியுள்ள, குலச்சிறை - குலச்சிறை நாயனாரது, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன்-அடியேன், பெருமிழலைக் குறும்பற்கும்-பெருமிழலைக்குறும்ப நாயனார்க்கும், பேயார்க்கும்-பேயுருவாகிய காரைக்காலம்மையார்க்கும், அடியேன் - அடியேன், ஒரு - ஒப்பற்ற, நம்பி - குணபூர்த்தியுள்ள, அப்பூதி-அப்பூதிநாயனாரது, அடியார்க்கும்-அடியவர்க்கும், அடியேன் - அடியேன், ஒலி புனல் சூழ் - சத்திக்கின்ற நீர் சூழ்ந்த, சாத்தமங்கை - சாத்தமங்கையிலுள்ள, நீலநக்கற்கு - திருநீலநக்க நாயனார்க்கு, அடியேன் - அடியேன், அரு - அருமையாகிய, நம்பி-குணபூர்த்தியுள்ள, நமிநந்தி - நமிநந்தி நாயனாரது, அடியார்க்கும்-அடியவர்க்கும், அடியேன் - அடியேன், ஆரூரன் ——, எ - று.

வி - ரை. செம்மையாக்கொண்ட - செந்நெறியாகக் கொண்டவெனினுமாம், திருநாவுக்கரையன்றன் குலச்சிறைதன் என்பவற்றிலுள்ள தன் சாரியை. (௰)

வம்பறாவரிவண்டுமணநாறமலரு
மதுமலர்நற்கொன்றையானடியலாற்பேணா
வெம்பிரான்சம்பந்தனடியார்க்குமடியே
னேயர்கோன்கலிக்காமனடியார்க்குமடியே
னம்பிரான்றிருமூலனடியார்க்குமடியே
னாட்டமிகுதண்டிக்குமூர்க்கற்குமடியே
னம்பரான்சோமாசிமாறனுக்குமடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே.

ப - ரை. வம்பு அறா - வாசனை நீங்காத, வரிவண்டு - கீற்றுகளையுடைய வண்டுகள், மணம் நாற - மணம் வீசும்படி, மலரும் - மலர்கின்ற, மது - தேனையுடைய, நல் - அழகாகிய, மலர் கொன்றையான் - கொன்றைமலர் மாலையையணிந்தவனாகிய சிவபெருமானது, அடி அல்லால் - திருவடியல்லது, பேணா - வேறொன்றை விரும்பாத, எம்பிரான் - எம்பிரானாகிய, சம்பந்தன் - சம்பந்தரது, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், ஏயர்கோன் கலிக்காமன் - ஏயர்கோன் கலிக்காமநாயனாரது, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், நம்பிரான் - நம் பெருமானாகிய, திருமூலன்-

திருமூலநாயனாரது, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன்-அடியேன், நாட்டம் மிகு - தியானம் மிகுந்த, தண்டிக்கும் - தண்டிநாயனார்க்கும், மூர்க்கற்கும் - மூர்க்கநாயனார்க்கும், அடியேன்-அடியேன், அம்பரான் - அம்பரில் அவதரித்த, சோமாசிமாறனுக்கும்-சோமாசிமாற நாயனார்க்கும், அடியேன் - அடியேன், ஆரூரன் ——, எ-று.

வி - ரை. வம்பு-சண்டை (தேன்காரணமாக வுண்டாகுஞ் சண்டை). வரிவண்டு - பாட்டுப்பாடுகிற வண்டு எனினுமாம். (௫)

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கு மடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கு மடியே
னார்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

ப - ரை. வார்கொண்ட - கச்சணிந்த, வனமுலையாள் - அழகாகிய ஸ்தனங்களை யுடையவளாகிய, உமைபங்கன் - உமைபங்காளனாகிய சிவபெருமானது, கழலே - திருவடியையே, மறவாது - மறவாமல், கல் எறிந்த - கல்லாலெறிந்த, சாக்கியற்கும் - சாக்கிய நாயனார்க்கும், அடியேன் - அடியேன், சீர்கொண்டபுகழ்-சிறப்பைக்கொண்ட புகழினையுடைய, வள்ளல் - உதாரகுணமுள்ள, சிறப்புலிக்கும்-சிறப்புலிநாயனார்க்கும், அடியேன் - அடியேன், செங்காட்டங்குடி மேய - செங்காட்டங்குடியில் வாழ்ந்த, சிறுத்தொண்டற்கு-சிறுத்தொண்டநாயனார்க்கு, அடியேன் - அடியேன், கார்கொண்ட கொடை-மேகம் போன்ற கொடையினையுடைய, கழறிற்றறிவார்க்கும் - கழறிற்றிவார்நாயனார்க்கும், அடியேன்-அடியேன், கடல் காழி-கடல் சூழ்ந்த சீகாழியிலுள்ள, கணநாதன் - கணநாத நாயனாருடைய, அடியார்க்கும்-அடியவர்க்கும், அடியேன் - அடியேன், ஆர் கொண்ட - கூர்மையைக் கொண்ட, வேல் கூற்றன் களந்தைக்கோன்-வேற்படையையுடைய களந்தைக்கோனாகிய கூற்றுவநாயனாருக்கு, அடியேன் - அடியேன், ஆரூரன் ——, எ - று.

வி-ரை. வனம்-நிறம் எனினும் சந்தனக்கோலம் எனினுமமையும், கார்கொண்ட கொடை-கைம்மாறு வேண்டாத கொடை. (௬)

பொய்யடிமையில்லாத புலவர்க்கு மடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சியபுகழ்ச்சோழற் கடியேன்



மெய்யடியான் நரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியே
னையடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

ப - ரை. பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் - பொய்யடிமையில்லாத புலவர்கட்கும், அடியேன் - அடியேன், பொழில் - சோலைகள் சூழ்ந்த, கருவூர் துஞ்சிய - கருவூரில் தங்கிய, புகழ் சோழற்கு - புகழ்ச்சோழ நாயனார்க்கு, அடியேன் - அடியேன், மெய் அடியான் - மெய்யடியவனாகிய, நரசிங்கமுனை அரையற்கு - நரசிங்கமுனையரைய நாயனார்க்கு, அடியேன் - அடியேன், விரி திரை சூழ்கடல் - விரிந்த அலைகள் சூழ்ந்த கடலால் வளைக்கப்பட்ட, நாகை - திருநாகையில் அவதரித்த, அதிபத்தற்கு - அதிபத்தநாயனார்க்கு, அடியேன்-அடியேன், கைதடிந்த - கைவெட்டின, வரி சிலையான் - நீண்ட வில்லையுடையவனாகிய, கலிக்கம்பன் - கலிக்கம்பநாயனார், கலியன் - கலியநாயனார், கழற்சத்தி - வீரக்கழலையணிந்த சத்திநாயனாராகிய, வரிஞ்சையர்கோன்-வரிஞ்சையர்க்கரசன், (ஆகிய இவர்களுடைய), அடியார்க்கும்-அடியவர்க்கும், அடியேன் - அடியேன், ஐயடிகள் காடவர்கோன் - ஐயடிகள் காடவர்கோன்நாயனாரது, அடியார்க்கும்-அடியவர்க்கும், அடியேன் - அடியேன், ஆரூரன் ——, எ - று.

வி - ரை. பொய்யடிமையில்லாத என்றமையால் மெய்யடிமை எனப் பொருள் கூறுக. தடிதல் - வெட்டுதல். (௭)

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியே
னிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியே
னறைக்கொண்ட வேனம்பி முனையடுவார்க் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

ப - ரை. கறைக்கண்டன் - விஷகண்டத்தை யுடைய சிவபெருமானது, கழல்-வீரக்கழலணிந்த, அடியே-திருவடியையே, காப்பு கொண்டு இருந்த-காவலாகக்கொண்டிருந்த, கணம்புல்லநம்பிக்கும்-கணம்புல்லநாயனார்க்கும், காரிக்கும் - காரிநாயனார்க்கும், அடியேன்-

அடியேன், *நிறைக்கொண்ட சிந்தையான்-நிறைவைக்கொண்ட மனத்தையுடையவனாகிய, நெல்வேலிவென்ற-நெல்வேலி என்னும் ஊரில் மேம்பட்ட, நின்றசீர்-நிலைபெற்ற சிறப்பினையுடைய, நெடுமாறன் - நெடுமாற நாயனார்க்கு, அடியார்க்கும்-அடியவர்க்கும், அடியேன்-அடியேன், துறைக்கொண்ட-துறைகளிலுள்ள, செம்பவளம்-சிவந்த பவளம், இருள் அகற்றும்-இருளை நீக்குகின்ற, சோதி-ஒளியுள்ள, தொல்மயிலை-பழமையதாகிய திருமயிலையில் அவதரித்த, வாயிலான் - வாயிலார் நாயனார்க்கு, அடியார்க்கும்-அடியவர்க்கும், அடியேன்-அடியேன், அறைக்கொண்ட வேல்-அறுத்தலைத் தன்னிடத்தே கொண்டிருக்கின்ற வேற்படையையுடைய, நம்பி - குணபூர்த்தியுள்ள, முனையடுவார்க்கு-முனையடுவார் நாயனார்க்கு, அடியேன்-அடியேன், ஆரூரன்——, எ - று.

வி-ரை. நிறை - வரம்புகடவாமை, அறை - அறுத்தல், பகுதி அறு, ஐ-தொழிற்பெயர் விகுதி. (அ)

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் னடியார்க்கு மடியேன்
புடைசூழ்ந்த புலியதண்மே லரவாட வாடி [யே
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கு மடி
யடல்சூழ்ந்த வேனம்பி கோட்புலிக்கு மடியே
னாரூர னாரூரி லம்மா னுக்காளே.

ப - ரை. கடல்சூழ்ந்த உலகு எல்லாம் - கடல்வளைந்த உலக முழுதும், காக்கின்றபெருமான் - காக்கின்ற பெருமையுடையோனாகிய, காடவர்கோன் - காடவர்கோன், கழற்சிங்கன் - கழற்சிங்கன், (இவருடைய) அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், மடல் சூழ்ந்த தார்-இதழ்களையுடைய பூமாலை யணிந்த, நம்பி-குணபூர்த்தியுள்ள, இடங்கழிக்கும்-இடங்கழி நாயனார்க்கும், தஞ்சை மன்னவனாம்-தஞ்சைக்கு அரசனாகிய, செருத்துணைதன்-செருத்துணை நாயனாருடைய, அடியார்க்கும்-அடியவர்க்கும், அடியேன்-அடியேன், புடைசூழ்ந்த - பக்கத்திலே வளர்ந்த, புலி அதன்மேல் - புலித்தோலின் மீது, அரவு ஆட - பாம்பாட, ஆடி - நடனஞ்செய்வோனாகிய சிவபெருமானது, பொன் அடிக்கே-பொன்போலுந் திருவடியினிடத்தே, மனம் வைத்த - மனத்தை வைத்த, புகழ்த்துணைக்கும் - புகழ்த்துணை நாயனார்க்கும், அடியேன் - அடியேன், அடல் சூழ்ந்த - வெற்றிபொ



ருந்திய, வேல் - வேற்படையையுடைய, நம்பி - குணபூர்த்தியுள்ள, கோட்புலிக்கும் - கோட்புலி நாயனார்க்கும், அடியேன் - அடியேன் ஆரூரன்ஆரூரி——, எ - று.

வி - ரை அடல் - கொல்லுதற் றொழில் எனினுமாம். (க)

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசியமுனிவர்க்கு மடியே
னப்பாலு மடிசார்ந்த வடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மா னுக்காளே.

ப - ரை. பத்தர் ஆய் - பத்தர்களாகி, பணிவார்கள் எல்லார்க்கும் - வணங்குவோரெல்லார்க்கும், அடியேன் - அடியேன், பரமனையே பாடுவார்-பரமனையே பாடுவோருடைய, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியேன், சித்தத்தை சிவன் பாலே வைத்தார்க்கும், மனத்தைச் சிவனிடத்தே வைத்தவர்க்கும், அடியேன் - அடியேன், திருவாரூர் பிறந்தார்கள் எல்லார்க்கும் - திருவாரூரில் பிறந்தவர்களெல்லாருக்கும், அடியேன் - அடியேன், முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு-முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு, அடியேன் - அடியேன், முழுநீறு பூசிய முனிவர்க்கும் - முழுநீறு பூசிய முனிவருக்கும், அடியேன் - அடியேன், அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும்-அப்பாலு மடிசார்ந்த அடியவர்க்கும், அடியேன் - அடியேன், ஆரூரனாரூரி——, எ - று.

வி - ரை. பத்தர் - அன்பர், பரமன் - மேலானவன். (க0)

மன்னியசீர் மறைநாவன் னின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கு நேசனுக்கு மடியேன்
றென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
றிருநீல கண்டத்துப் பாணனார்க் கடியே
னென்னவனாம் அரனடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் றிருநாவ லூர்க்கோ
னன்னவனாம் ஆரூர னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் கன்பரா வாரே.

ப - ரை மன்னியசீர் - நிலைபெற்ற சிறப்பினையுடைய, மறை - வேதத்தில் வல்ல, நாவல் நின்றவூர் - நாவலூரையுடைய, பூசல் - பூசலார்க்கும், வரிவளையாள் - வரிவளையையணிந்தவளாகிய, மானிக்கும் - மானிக்கும், நேசனுக்கும் நேசனார்க்கும், அடியேன் - அடியேன், தென்னவனாய் - பாண்டியனாகி, உலகு ஆண்ட - உலகத்தையாண்ட, செங்கணார்க்கு - செங்கணார்க்கு, அடியேன் - அடியேன், திருநீலகண்டத்துப் பாணனார்க்கு - திருநீலகண்டத்துப் பாணனாருக்கு, அடியேன் - அடியேன், என்னவனாம் - என்னவனாகிய, அரன் அடியே - சிவனடியையே, அடைந்திட்ட - சரணாகவடைந்த, சடையன் - சடையனார், இசைஞானி - இசைஞானியார், (இவர்களுக்கு) காதலன் - புதல்வன், நாவலூர்க்கோன் - நாவலூருக்கதிபன், அன்னவன் ஆரூரன் - அத்தன்மையனாகிய ஆரூரன், (அவனது) அடிமை - அடிமைத்திறத்தை, கேட்டு உவப்பார் - கேட்டு மகிழ்வோர், ஆரூரில் - திருவாரூரி லெழுந்தருளிய, அம்மானுக்கு - சிவபெருமானுக்கு, அன்பர் ஆவார் - அன்பராவார்கள், எ - று.

வி - ரை. வரிவளை - கீற்றுக்களையுடைய வளையல். அரன் என்பதற்கு அன்பரது பாவத்தை யறுப்பவனென்றும், இறுதிக் காலத்தில் எல்லாப் பொருள்களையும் சங்கரிப்பவன் என்றும் பொருளுரைத்துக் கொள்க. ௰. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

அகத்தியமகாமுனிவர் திரட்டியருளிய

தேவாரத்திரட்டு மூலமும் உரையும்

முற்றுப்பெற்றன.

N23.H1 N06
118736

அகத்தியர் தேவாரத்திரட்டின்

# செய்யுள் முதற்குறிப் பகராதி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அகத்தியர் தேவாரத்திரட்டின்

# செய்யுள் முதற்குறிப்பகராதி.


| செய்யுள். | பக்கம். |
|---|---|
| அ. | |
| அஞ்சினார்க் | 45 |
| அடர்செவி | 100 |
| அட்டானமெ | 50 |
| அணியனவு | 109 |
| அண்ணாமலை | 49 |
| அந்தணனை | 110 |
| அந்தமில்லா | 135 |
| அந்தாமரை | 109 |
| அம்மானை | 54 |
| அரவனை | 103 |
| அருத்தம | 26 |
| அருநெறி | 11 |
| அருந்தும் | 147 |
| அருப்போட்டு | 90 |
| அரும்பித்த | 105 |
| அரைசெழு | 98 |
| அலைவளர் | 100 |
| அறப்பள்ளி | 50 |
| அறிவிலான் | 116 |
| ஆ. | |
| ஆங்கணைந்த | 90 |
| ஆனைப்பெ | 85 |
| ஆருருவ | 91 |
| ஆரூரத்தானை | 62 |
| ஆரூர்தில்லை | 48 |
| ஆரூர்மூலட் | 55 |
| ஆறைவடமா | 51 |
| ஆற்றவடல் | 28 |
| இ. | |
| இடுக்கண்பட் | 40 |
| இடைமருதி | 56 |
| இட்டறும்படி | 43 |
| இமையவரு | 129 |
| இயக்கர்கின் | 114 |
| இயமன்றூத | 35 |
| இராவணன்மே | 27 |
| இலங்கைமன்ன | 37 |
| இலைமலிந்த | 151 |
| இல்லடைவிளக்க | 41 |
| இறங்கிச்சென் | 132 |
| இறைகின்றில | 75 |
| ஈ. | |
| ஈடவிடபமி | 75 |
| உ. | |
| உஞ்சேனைமா | 58 |
| உண்ணாதுறங் | 131 |
| உயர்ந்தேன் | 15 |
| உயர்வரையொ | 101 |
| உருவனர் | 138 |
| உரைமாலை | 107 |
| ஊ. | |
| ஊராகின்ற | 127 |
| ஊனத்தை | 82 |
| ஊனமில்லா | 135 |
| ஊனுயிரா | 21 |
| ஊனிலுயிர்ப் | 80 |
| எ. | |
| எச்சிலிளம | 56 |
| எயிலதுவட் | 2[illegible] |
| எல்லையில்புக | 44 |
| என்பொடு | 138 |
| ஏ. | |
| ஏடுவானிளந்தி | 45 |
| ஏதமின்னில | 112 |
| ஏற்றூர்புர | 22 |
| ஒ. | |
| ஒருகாலத் | 106 |
| ஒருமைபெண் | 7 |
| ஒருவடிவின் | 145 |
| ஓ. | |
| ஓருருவாயினை | 65 |
| ஔவுகாணுணர் | 44 |
| க. | |
| கஞ்சிமண்டை | 37 |
| கடல்சூழ்ந்த | 156 |
| கம்பமால்களி | 117 |
| கரப்பர்கள் | 148 |
| கரியவனான் | 101 |
| கலவமாமயி | 123 |
| கல்லாவினீழ | 86 |
| கல்லுயர்மா | 103 |
| கறைக்கண்ட | 155 |
| கனமலர்க்கொ | 99 |
| கா. | |
| காசைசேர் | 122 |
| காட்டேர்க்கட | 60 |
| காணவினிய | 25 |
| காதலாகிக் | 34 |
| காத்தாள்பவர் | 14 |
| காயும்புலியி | 93 |
| காரார்கடலி | 95 |
| காருலாவிய | 121 |
| காரூர்புன | 23 |
| கார்வணனான் | 32 |
| காவியங்கருங் | 118 |
| கு. | |
| குண்டமணர் | 10[illegible] |
| குண்டிகைக் | 28 |
| குத்தங்குடி | 53 |
| குருவருவும் | 1 |
| குலம்பலம்பா | 144 |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| குலாவுதிங்க | 52 |
| குற்றமுடை | 149 |
| கூ. | |
| கூற்றுவினை | 11 |
| கை. | |
| கைம்மாவுரிவை | 64 |
| கையிலிடு | 149 |
| கொ. | |
| கொக்கவர் | 31 |
| கொக்கிற்கு | 61 |
| கொங்குசேர் | 122 |
| கொடிக்கோ | 57 |
| கொடுவினை | 104 |
| கொத்தலர் | 143 |
| கொத்தார்க் | 94 |
| கொல்லா | 35 |
| கொன்று | 132 |
| கோ. | |
| கோணியபிறை | 47 |
| கோலமால் | 113 |
| ச. | |
| சடைமுயங்கு | 8 |
| சமயிலன் | 40 |
| சம்புவொடு | 15 |
| சா. | |
| சாரணன் | 47 |
| சி. | |
| சித்தத்தொழு | 83 |
| சில்லுருவாய் | 127 |
| சு. | |
| சுற்றுமமர் | 83 |
| செ. | |
| செப்பிளமுலை | 141 |
| செம்பொனேர் | 47 |
| செய்குன்ற | 81 |
| செறிகழு | 89 |
| செற்றவரக்க | 77 |
| சொ. | |
| சொற்றுணை | 33 |
| த. | |
| தண்ணார்மதி | 21 |
| தருக்குமிகு | 83 |
| தன்னடியார்க் | 59 |
| தா. | |
| தாக்கர்பிணி | 57 |
| தானுதல்செய் | 9 |
| தாரிடுகொ | 99 |
| தி. | |
| திண்டச்சா | 59 |
| திருநின்ற | 152 |
| திருமகட்கு | 107 |
| தில்லைச்சிற்றம் | 55 |
| தில்லைவா | 150 |
| து. | |
| துஞ்சலுக் | 29 |
| துணிவார் | 95 |
| தும்மலிரும | 31 |
| துருத்திச்சுட | 63 |
| தூ. | |
| தூயவிடை | 78 |
| தெ. | |
| தெரித்தகணை | 82 |
| தே. | |
| தேம்பனுண் | 123 |
| தேனமர் | 143 |
| தேனைக்காவல் | 63 |
| தொ. | |
| தொடுத்தமலை | 80 |
| தோ. | |
| தோடுகூற்றுப் | |
| தோடுடைய | 4 |
| ந. | |
| நஞ்சணிக | 139 |
| நந்திநாம | 38 |
| நம்புவார் | 34 |
| நகைமேழ்புக | 26 |
| நல்லவர்தீய | 31 |
| நறுமலராய் | 108 |
| நன்றநேர் | 94 |
| நறையூரிற் | 59 |
| நற்றமிழ்ஞான | 33 |
| நற்றமிழ்வல்ல | 113 |
| நா. | |
| நாயேன்பல | 19 |
| நி. | |
| நிறைக்காட் | 61 |
| நீ. | |
| நீர்பரந்த | 6 |
| நீளநின்று | 133 |
| நெ. | |
| நெக்குளார்வ | 35 |
| நெஞ்சம் | 12 |
| நெடியவிசும் | 130 |
| நெற்குன்ற | 53 |
| ப. | |
| படைமலி | 86 |
| பணிந்தாரன | 13 |
| பண்ணியசா | 148 |
| பண்ணியன் | 120 |
| பண்ணினிசை | 123 |
| பத்தராய்ப் | 157 |
| பத்துசேர்வி | 117 |
| பலபலவேட | 142 |
| பல்லில்வெ | 130 |
| பா. | |
| பாசமான | 77 |
| பாதம்பணி | 20 |
| பாராழிவட்டத் | 88 |
| பாலையுடை | 79 |
| பி. | |
| பிச்சாடல் | 125 |
| பித்தாபிறை | 18 |
| பிறைதடர | 133 |
| பு. | |
| புத்தரோடு | 10 |
| புத்தர்சமண் | 33 |
| புலியூர்ச்சிற் | 64 |
| புல்வலம் | 60 |
| புலைகடத் | 134 |
| பூ. | |
| பூசவிலியது | 26 |
| பூணெர்க | 98 |
| பூவினுக்கரு | 39 |
| பை. | |
| பையராவரு | 119 |





| செய்யுள். | பக்கம். |
|---|---|
| பொ. | |
| பொடியுடை | 97 |
| பொய்யடிமை | 154 |
| பொருவிடை | 80 |
| பொன்போல | 17 |
| பொன்றுதிரு | 76 |
| போ. | |
| போதன்போ | 87 |
| போர்த்தநீர் | 115 |
| போர்த்தாயல் | 17 |
| ம. | |
| மங்கையர்கண | 74 |
| மடமுடைய | 134 |
| மண்ணிப்படி | 57 |
| மறிதருகன் | 139 |
| மந்தரமமன | 80 |
| மந்திரநான் | 30 |
| மந்திரமாவது | 24 |
| மயலறுக் | 87 |
| மரவம்பொழில் | 79 |
| மருகலுறை | 62 |
| மருவார்கொ | 92 |
| மருவார்புர | 126 |
| மழுவாள்வல | 22 |
| மறைகலந்த | 8 |
| மற்றிடமி | 145 |
| மற்றுப்பற்று | 43 |
| மனைவருந் | 51 |
| மன்னியசீர் | 157 |
| மன்னோமற | 19 |
| மா. | |
| மாசிலனேயே | 146 |
| மாடமல்கு | 96 |
| மாட்டூர்மட | 52 |
| மாடப்பிறைத | 42 |
| மாதொடைய | 27 |
| மு. | |
| முடியேவெள்ளி | 20 |
| முத்திசருவ | 25 |
| முன்னமவர்து | 152 |
| முன்னரிக்கன் | 119 |
| முத்தமைம | 5 |
| முன்னைமம்மய | 13 |
| முன்னென்றியா | 42 |
| மூ. | |
| மூவாயப்பிற | 129 |
| மூவெயில்செ | 115 |
| மெ. | |
| மெய்தேடுணி | 84 |
| வண்டம | 82 |
| வம்பலரு | 153 |
| வரிமைமக | 74 |
| வருகாக்கரி | 78 |
| வலித்தேதன் | 16 |
| வா. | |
| வாடாமுலை | 95 |
| வாணிலாமதி | 120 |
| வார்கொண் | 154 |
| வான்கரிய | 140 |
| வானத்தார் | 126 |
| வி. | |
| விண்ணுற | 39 |
| விண்மகிழ் | 6 |
| விண்ணோர் | 93 |
| வியரிலங்கு | 9 |
| விருப்பின் | 46 |
| வீ. | |
| வீக்கிய | 147 |
| வீடுறுகுலை | 41 |
| வீடுபிறப்பை | 31 |
| வீழிமிழலை | 53 |
| வெ. | |
| வெந்தநீறுந் | 40 |
| வெளிறுதீர | 193 |
| வெள்ளெருக் | 76 |
| வே. | |
| வேதத்திறு | 24 |
| வேயுறுதோளி | 137 |
| வேழமுரிப்பர் | 96 |
| வேள்பட | 141 |
| வேற்றுமி | 124 |
| வை. | |
| வைச்சபொரு | 81 |
| வைதெழுவார் | 105 |
| வையகமுற்று | 111 |


செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.